உருபனியல்

(Morphology)

Prof. Rajendran Sankaravelayuthan

பேராசிரியர் இராசேந்திரன் சங்கரவேலாயுதன்

(பணிநிறைவுற்ற பேராசிரியர், மொழியியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்)

அமிர்தா விஷ்வ வித்யா பீடம்

கோயம்புத்தூர் 641 112

rajushush|@gmail.com

கோயப்புத்தூர்

ஜூன் 2018

என்னுரை

தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் 1989-சனவரியில் மொழியியியல் துறையில் உதவிப்பேராசிரியாகச் சேர்ந்ததிலிருந்து ஜூன் 2011-இல் பேராசிரியராகப் பணிநிறைவு பெற்றது வரையிலான எனது நீண்டகாலப் பயணத்தில் மொழியியல் மாணவர்களுக்கு மொழியியல் கற்பிப்பதற்கு வேண்டி நான் எழுதிய மொழியியல் பாடக் குறிப்புகள் எனது மடிக்கணியில் குப்பைகளாகச் சேர்ந்திருந்தன. அவற்றை வெளியே கொட்டும் முகத்தான் "உருபனியல்" என்ற தலைப்பில் அமையும் இம்மின்னேட்டை பதிவேற்றம் செய்கின்றேன். மாணவர்களுக்குப் பனுள்ளதாக இருந்தால் rajushush@gmail.com என்ற என் மின்னஞ்சலுக்கு எழுதவும். தேவை என்றா; இதன் விரிவான பதிப்பை பின்னர் வெளியிடுகிறேன்

இராசேந்திரன் சங்கரவேலாயுதம்

பொருளடக்கம்

வ.எண்	தலைப்பு	பக்க எண்
1.	1: **அடிப்படைக் கருத்துக்கள்**	4
1.1.	உருபனியல்	4
1.2.	சொல்லும் சொல்வடிவமும் சொல்லனும்	5
1.3.	உருபன், உருபு, மாற்றுருபு	7
2	உருபனியல் ஆய்வு	9
2.1.	பகுப்பாய்வும் கூட்டிணைப்பும்	10
2.2.	பகுப்பாய்வுக் கொள்கைகள்	12
3.	உருபனின் வகைகளும் **வருகைமுறைகளும்**	30
4.	உருபனியல் கிளைகளும் **மாதிரிகளும்**	52
5	**தமிழ் உருபனியல் அமைப்பு**	81
5.1.	பெயர்ச்சொற்களின் உருபனியல் அமைப்பு	81
5.2.	வினைச்சொற்களின் உருபனியல் அமைப்பு	110
5.3.	சொல்லாக்கம்	153
5.4.	உருபொலியனியல்	182
5.5.	சொல்வகுப்புகள்	190

1. அடிப்படைக் கருத்துகள்

1.1. உருபனியல்

Morphology என்பது பொதுவாகப் பத்தொன்பதாவது நூற்றாண்டின் தொடக்கதில் உயிரியல் சூழலில் இதைப் புனைந்த ஜெர்மன் கவி, நாவலாசிரிர், நாடகாசிரியர், தத்துவவியலார் ஜோன் வொல்ஃப்காங் வொன் கொதெ (Johann Wolfgang von Gothe (1749-1832) என்பவருக்குச் சிறப்பீடாக அமையும். இதன் சொற்பிறப்பியல் கிரேக்க மொழியைச் சாரும்: Morph என்பதன் பொளுள் 'வடிவம், உருவம்' என்பதாகும்; Morphology/உருபனியல் என்பது வடிவத்தை அல்லது வடிவங்களைப் பற்றி படிப்பதாகும்/ஆய்வதாகும். உயிரியலில் Morphology/உருபனியல் என்பது உயிரினங்களின் வடிவத்தையும் அமைப்பையும் பற்றி படிப்பதாகும்/ஆய்வதாகும்'; புவியலில் இது நில வடிவங்களின் கட்டமைப்பு மற்றும் பரிமாண வளர்ச்சியைப் பற்றி படிப்பதாகும்/ஆய்வதாகும். மொழியியலில் Morphology/உருபனியல் என்பது சொல்லாக்கத்துடன் தொடர்புடைய உள ஒழுங்குமுறையைக் குறிப்பிடும். வேறுவிதமாகக் கூறினால் Morphology/உருபனியல் என்பது சொற்கள், அவற்றின் அக அமைப்பு மற்றும் அவை எவ்வாறு ஆக்கப்படுகின்றன என்பதை விளக்கும் மொழியியலின் ஒரு கிளையாகும்.

ஒரு மொழியின் உருபன்களைக் கண்டு பிடித்து அவற்றின் பட்டியலை உருவாக்குவதும் உருபுகளை உருபன்களின் கீழ் மாற்றுருபுகளாக அடையாளங் கண்டு பட்டியலிடுவதும் உருபனியலின் நோக்கமாகும். மொழி அமைப்பின் இரண்டாவது மட்டமாக வருவது உருபனியல் ஆகும். சொற்களின் அக அமைப்பைப் பற்றிக் கூறுவது உருபனியலாகும். உருபனியல் ஆய்ஞர் சொல் வடிவுகளை அவற்றின் ஆக்கக்கூறுகளாகப் (உருபன்களாகப்) பிரித்து அவை ஒவ்வொன்றின் அமைப்பொழுங்கைக் கூற முயல்வர். சொல்வகைப்பாட்டிற்கு ஏற்ப உருபன்களின் இணைப்பு முறைகளும் வருகை முறைகளும் வேறுபடும். எடுத்துக்காட்டாக *வருகிறான்* என்ற சொல்லை வரு + கிற் + ஆன் எனப் பிரித்து *வரு* என்பது தொடர்புள்ள வினைச்சொல்லின் அடி என்றும் *கிற்* என்பது நிகழ்கால ஒட்டு என்றும் ஆன் என்பது ஆண்பால் ஒருமை வினைமுற்று என்று பகுத்தாய்வது உருபனியல் ஆய்வு எனப்படும்

ஒருவரது பேச்சு ஒலியன்களின் அடுக்காக மட்டுமே அமையுமானால் அவர் பேசுவதும் அப்பேச்சினை மற்றவர்கள் கேட்பதும் வீண்வேலையாகும். பேசுவதாலும் கேட்பதாலும் கருத்துப்பரிமாற்றம் நிகழ்வதனாலேயே பேச்சினை ஆராய்வது தேவையாகின்றது.

கருத்துக்களைப் பரிமாற முடிகிறது என்றால், அதற்குக் காரணம் உருபனமைப்பு ஆகும். வேறுவகையில் சொன்னால் உருபன்களே பொருளை வெளிப்படுத்துகின்றன. பொருளுக்கும் ஒலியனுக்கும் நேரடித் தொடர்பில்லை. ஓர் ஒலியன் தனித்தோ வேறு ஒலியன்களோடு சேர்ந்தோ ஓர் ஒலியக்கூறு ஆகின்றது. இந்த ஒலியக்கூற்றையே உருபன் என்கின்றோம். இது பொருளுடையது. சான்றாகத் தமிழில் ஆ என்னும் ஒலியனுக்குப்' பொருள் இல்லை. அதுவே தனித்து ஒரு உருபனாய் (ஓரெழுத்து ஒரு மொழியாய்) வரும்போது இலக்கியத்தில் 'பசு' என்பதைக் குறிக்கின்றது. இவ்வாறே ஆ என்பதும் ண் என்பதும் சேர்ந்து *ஆண்* என்னும் உருபனாக வரும்போதுதான் 'ஆண் தன்மையுடையவன்' என்னும் பொருள் தோன்றுகின்றது. இவ்வாறு பொருள் தருகின்ற மிகச்சிறிய ஒலியக்கூறே உருபன் எனப்படுகின்றது. இங்கு 'மிகச்சிறிய' என்பது 'மேலும் பிரிக்கவியலாத' என்னும் கருத்தில் வழங்கப்படுகின்றது. *நாய்கள்* என்னும் சொல்லை நாய் + கள் என்று பிரித்து பொருள் கொள்ளலாம். ஆனால் *நாய்* என்பதையோ *கள்* என்பதையோ மேலும் பரித்து பொருள் கொள்ளவியலாது. எனவே *நாய், கள்* ஆகிய இரண்டும் உருபன்களாகும்.

மேலே கூறிய எடுத்துக்காட்டே உருபனியலின் மற்றொரு பயன்பாட்டையும் விளக்குகின்றது. *நாய்* என்பது ஒரு விலங்கினையக் குறிக்கின்றது. *கள்* என்பது பன்மையைக் குறிக்கின்றது. அதாவது கள் என்ற சொல்லுக்குச் சொற்பொருள் (lexical meaning) இல்லை, இலக்கணப் பொருள்தான் (grammatical meaning) இருக்கின்றது. வேறுவகையில் சொன்னால் உருபன்கள் தான் இலக்கண உறவுகளையும் வெளிப்படுத்துகின்றன. இவ்வாறு ஒரு புறம் ஒலியனியலுக்கும் பொருண்மையியலுக்கும் பாலமாகவும் மறுபுறம் ஒலியனியலுக்கும் இலக்கணத்திற்கும் பாலமாகவும் உருபனியல் அமைகின்றது. சொற்களின் அக அமைப்பைப் பற்றிக் கூறுவது உருபனியலாகும். உருபனியல் ஆய்ஞர் சொல்வடிவுகளை அவற்றின் ஆக்கக் கூறுகளாகப் பிரித்து அவை ஒவ்வொன்றின் வருகை முறையைக் கூற முயல்வர்.

1.2. சொல்லும் சொல்வடிவும் சொல்லனும் (word, word form and lexeme)

சுருக்கமாகச் சொல்லின் அமைப்பைப் பற்றி ஆய்வது உருபனியல் எனலாம். அவ்வாறென்றால் எல்லா மொழிகளிலும் சொற்கள் இருக்கின்றனவா? சொல் என்ற கருத்துரு இல்லாத மொழிகள் உண்டா? சொல் என்றால் என்ன? சொல்லுக்கு ஒரு பொதுவான வரையறை விளக்கம் தரமுடியுமா? என்ற கேள்விகள் எழலாம்.

சொல்லைப் பற்றி ஒரு முன்னோடியான கருத்து நம்மிடம் உள்ளது. அது நம்மை எல்லா மொழிகளிலும் சொல்லைத் தேடத் தூண்டுகின்றது. சொல்லின் வரையறை விளக்கம்

மொழியியலில் நீண்ட நாட்களாக இருந்துவரும் சிக்கலாகும். எப்படி சொல்லுக்கு வரையறை விளக்கம் தந்தாலும் சில வேளைகளில் சில மொழிகளில் அதைப் பேசுபவோர் 'சொல்' என்று குறிப்பிடுவது, தந்துள்ள வரையறை விளக்கத்தில் அடங்காமல் போகும். சொல்லுக்கு வரையறை விளக்கம் தருவது கடினமாக இருந்தபோதிலும் 'சொல்' என்ற கருத்துருச் சாயலை அடிப்படையாகக் கொள்வதற்கு நல்ல நியாயங்கள் உள்ளன. அவையாவன:

- சொல்லின் உட்கூறுகளின் நிரல் தொடரின் உட்கூறுகளின் நிரலிலிருந்து வேறுபடுகின்றது.
- சொல்லின் அசை அழுத்த அமைப்பொழுங்கு தொடரின் அசை அழுத்த அமைப்பொழுங்கிலிருந்து வேறுபடுகின்றது.
- சொற்களுக்கிடையே இடம் விட்டு எழுதும் மரபு இருக்கின்றது.
- கூட்டுச்சொற்களை ஆக்கும் சொற்களுக்கிடையே '-' என குறி இடும் மரபு இருக்கின்றது.
- சொல்லின் உட்கூறுகளுக்கிடையே பொருண்மைப் பற்றாசு (semantic cohesion) காணப்படுகின்றது.

அவன் பூனையைப் பார்த்தான் என்றவாக்கியத்தில் வரும் பார்த்தான் என்ற சொல்லின் பொருளை பார் என்ற அகராதிச் சொல் வடிவைப் பார்த்து அறிகின்றோம். பார்த்தான் என்ற சொல் வரும் திரிபு அடிக்கில் பார் என்பது முக்கிய அங்கமாகும். பார் என்ற சொல்லைப் பற்றி இக்கருத்துப்புலனில் பேசும் போது அது ஒரு குறிப்பிட்ட இடத்தில் வரும் ஒரு குறிப்பிட்ட வடிவைக் கூறுவதாக அமையாமல் வேறு வடிவுகளையும் கூறுவதாக அமையும். இக்கருத்தில் 'சொல்லன்' (lexeme) என்ற கலைச்சொல் பயன்படுத்தப்படுகின்றது. பார்த்தான், பார்க்கிறான், பார்ப்பான் என்ற சொற்கள் பார் என்ற சொல்லனின் கீழ் அடங்கும். இச்சொற்கள் பார் என்ற சொல்லனைக் கொண்டிருப்பதுடன் அச்சொல்லுடன் தொடர்புடைய பல திரிபு வகைபாடுகளின் மாதிரிகளாக அமையும். சொல்லன் அல்லாது ஒரு குறிப்பிட்ட 'சொல்வடிவு' (word form) என்ற கலைச்சொல் பயன்படுத்தப்படுகின்றது. சொல் வடிவுக்கு ஒலியனியல் மற்றும் எழுத்து வடிவு உண்டு. ஆனால் சொல்லன் என்பது நுண்மையானா அலகாகும். ஒரு சொல்லின் திரிபு அடுக்கிலிருந்து எடுக்கப்பட்டு அகராதியில் பயன்படுத்தப்படும் சொல்வடிவு மேற்கோள் வடிவாகும் (clinent form). எடுத்துக்காட்டாக பார் என்ற சொல்லனின் மேற்கோள் வடிவு மரபு அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது. இலக்கணச் சொல் (grammatical word) என்பதையும் 'சொல்' என்பதன் வேறு கருத்துப்புலனாகக் கொள்ள வேண்டி இருக்கின்றது.

எடுத்துக்காட்டாக, பார்க்கும் என்பது வினை எச்சம், ஒன்றன்பால் வினைமுற்று என்ற இலக்கணச் சொற்களைக் குறிக்கும் ஒரு சொல் வடிவாகும்.

1.3. உருபன், உருபு, மாற்றுருபு (Morpheme, Morph,and Allomorph)

உருபனியலார் சொற்களையும் அவற்றின் அக அமைப்பையும் அவை எவ்வாறு ஆக்கப்படுகின்றன என்பதை ஆயும் முக்கியமான வழி உருபன்களைக் கண்டுபிடிப்பது அவற்றை ஆய்வதும் ஆகும். உருபன் என்பது இலக்கணச் செயல்பாட்டை கொண்ட மிகச்சிறிய மொழியியல் கூறு ஆகும். ஒரு உருபன் கை, கால் போன்ற ஒரு சொல்லைக் கொண்டிருக்கலாம் அல்லது *கையை (<கை+ஐ), காலை* (<கால்+ஐ) என்பதில் உள்ள –ஐ போன்ற ஒரு சொல்லின் அர்த்தமுள்ள கூறைக் கொண்டிருக்கலாம். உருபனை விளக்கும் மற்றொரு வழி அதை ஒலிக்கும் அர்த்ததிற்கும் இடையே இணைகாண்பதாகும். ஒலிகள் தனித்து நின்றோ பல சேர்ந்து நின்றோ சொற்பொருளையோ அல்லது இலக்கணப்பொருளையோ தருமாயின் அதனை உருபன் எனலாம். உருபன் என்பது மொழியில் காணப்படும் ஒரு பொருள்தரும் சிறிய அலகு ஆகும். சொல் என்பது ஒரு உருபனையோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட உருபன்களையோ கொண்டிருக்கும். உருபனியலின் அடிப்படைக்கூறு உருபன் ஆகும். ஒரு கூற்றை அல்லது சொல்லை பொருள் தரும் அலகுகளாகப் பிரிப்பது உருபனியல் ஆய்வாகும். இவ்வலகை மேலும் பிரிக்க இயலாது. இத்தகைய மேலும் பிரிக்க இயலாத பொருண்மை தரும் அலகுகளை உருபன்கள் என்று அழைக்கலாம்.

உருபு என்பது உருபனின் ஒலியனியல் சார் மெய்ப்படுத்தத்தை குறிப்பிட சில வேளைகளில் பயன்படுத்தப்படும். எடுத்துக்காட்டாக ஆங்கிலத்தில் -ed என்று எழுதப்படுகின்ற இறந்தகால உருபனுக்கு பல உருபுகள் உண்டு. இது jump என்பதிலுள்ள குரலிலா ஒலி [p] என்பதன் பின்னர் [t] என மெய்ப்படுத்தம் பெறும் (எ.கா jumped); repel என்பதிலுள்ள குரலொலி [l] என்பதன் பின்னர் [d] மெய்ப்படுத்தம் பெறும் (எ.கா. jumped); root என்பதிலுள்ள குரலிலா ஒலி [t] என்பதன் பின்னரோ wed என்பதிலுள்ள [d] என்பதன் பின்னரோ [əd] என மெய்ப்படுத்தம் பெறும் (எ.கா. rooted and wedded). [t], [d], [əd] என்ற உருபுகள் ed என்று எழுதப்படுகின்ற இறந்தகால உருபனின் மாற்றுருபுகள் (allomorphs) எனப்படும்.

எவ்வாறு ஒலியன்களுக்கு மாற்றொலிகள் உள்ளனவோ அது போலவே உருபனுக்கும் மாற்றுருபுகள் உள்ளன. எடுத்துக்காட்டாக *மரம், மரங்-கள். மர-த்தை* என்ற சொற்களை எடுத்துக்கொண்டால் *மரம்* என்பது *மரங், மர* என்ற மாற்றுவடிவுகளில் வருவதை உணரலாம்.

மரம், மரங், மர என்ற வடிவங்களை/உருபுகளை *மரம்* என்ற உருபனின் மாற்றுருபுகள் எனலாம். ஒரு சொல்லை பொருண்மை தரும் கூறுகளாகப் பிரிக்கையில் அவற்றை உருபுகள் என்றுதான் அழைக்க வேண்டும். இவ்வுருபுகள் அவற்றின் செயல்பாடு மற்றும் வருகைமுறை அடிப்படையில் உருபன்களாகக் குழுமப்படும்.

2. உருபனியல் ஆய்வு

மொழியியல் ஆய்வுகளின் தொடக்க காலகட்டத்தில், அதாவது இருபதாம் நூற்றாண்டின் இடைப்பட காலகட்டத்தில் இலக்கணம் எழுதப்படாத மொழிகளுக்கு இலக்கணம் எழுதுவது முக்கியமான செயலாய் அமைந்தது. நைடா, பைக் போன்ற கிறிந்த்தவ சமயத் தொண்டர்கள் பைபிளை மொழிபெயர்ப்பதற்காகவும் அவர்கள் ஆப்பிரிக்கா போன்ற இடங்களில் எதிர்கொண்ட புதிய மொழிகளை அறியவும் வேண்டி மொழி ஆய்வுகள் நடத்தி அதன் விளைவாக மொழியியல் கொள்கைகளை வரையறுத்து மொழியியல் நுல்களை வெளியிட்டனர். அத்தகைய ஒரு நூல் யுகெனெ எ. நைடா (Eugene A. Nida) எழுதி 1946-இல் வெளியிட்ட "உருபனியல்: சொற்களின் வர்ணனை ஆய்வு (Morphology: The descriptive Analsyis of Words). இந்நூல் குறிப்பகச் சொல்லப்போனால் இலக்கண எழுதப்படாத மொழிகளின் தரவுகளைத் திரட்டி அம்மொழியின் உருபுகளையும் மாற்றுருபுகளையும் உருபன்களையும் கண்டறிந்து சொற்களில் அவற்றின் வருகை அமைப்பைப் பற்றிக் கூறும் உருபனியல் கொள்கைகளையும் விரிவாக விளக்குகின்றது.

2.1. பகுப்பாய்வும் கூட்டிணைப்பும்

உருபனியல் ஆய்வில் (morphological analysis) இரண்டு சமகால மற்றும் அடிப்படையிலான அணுகுமுறைகள் உள்ளன. அவை பகுப்பாய்வும் (analysis) கூட்டிணைப்பும் (synthesis) ஆகும். பகுப்பாய்வு அணுகுமுறை சொற்களைக் கூறுகளாகப் பிரிப்பதாகும். இது இரண்டாம் நூற்றாண்டின் முதற்பகுதியில் பிரபலமாய் இருந்த அமேரிக்கன் அமைப்பு மொழியியலுடன் தொடர்புள்ளது. இதற்குத் தகுந்த காரணம் உண்டு. மொழியியலார் பெரும்பான்மையும் முன்னால் நேரிடாத மொழிகளைக் கையாள வேண்டி வந்தது. அவர்களுக்கு வழிகாட்டுவதற்கு இம்மொழிகளுக்கான எழுத்தப்பட்ட இலக்கணங்கள் இல்லதிருந்தன. எனவே அவர்களுக்கு மொழியியல் ஆய்வுக்கு வெளிப்படையான வழிமுறைகள் தேவைப்பட்டது. நாம் எந்த மொழியை உற்றுநோக்கினாலும் நமக்கு மொழி அமைப்பு சுதந்திரமான பகுப்பாய்வு முறை தேவை. முன்கூடியே கருத்தில் கொள்ளப்பட்ட கருத்துச்சாயல்கள் புறவயமான அறிவியல் ஆய்வில் தலையிடும். இது குறிப்பாக பழக்கமில்லாத மொழிகளுகளைக் கையாளும் பொது உண்மையாகும்.

இரண்டாவது அணுகுமுறை நெறிமுறையை (methodology) விட கோட்பாட்டுடன் பொரும்பாலும் தொடர்புடையது. இது கூட்டிணைப்பாக்க அணுகுமுறையாகும் (synthetic approach). இது அடிப்படையில் நம்மிடம் பாகங்கள் இருந்தால் அவற்றை எவ்வாறு

ஒன்றுசேர்க்க வேண்டும் என்ற கேள்விக்குப் பதிகூறுவதாக அமையும். இக்கேள்வி பாகங்கள் எவை என நாம் அறிந்திருப்பதை முன்மொழியும். எனவே பகுப்பாய்வு கூட்டிணைப்பாக்கதிற்கு முன்னர் வரும்.

நம்மிடம் உடைந்த கடிகாரம் இருந்தால் உடைந்த பாகங்களை எவ்வாறு மீண்டும் சேர்த்து கடிகாரம் உண்டாக்குவது என்பதை நாம் அறியவேண்டும். நமக்கு எவ்வாறு பாகங்களை சேர்ப்பது என்பது தெரியாது. முயற்சி-பிழை (trial and error) என்ற அணுகுறையை நாடுவோம். ஆனால் அதிகத் திறமையான வழி எவ்வாறு கடிகாரத்தை ஒன்று சேர்க்கவேண்டும் என்ற கோட்பாட்டைக் கைக்கொள்வதாகும்.

உருபனியல் நோக்கு அடிப்படையில் நாம் பின்வரும் கூட்டிணைப்பாக்கக் கேள்வியை கேட்போம்: எவ்வாறு பேசுபவர் இலக்கண அடிப்படையில் அவர்களுக்குத் தேவையான கலவைத்தன்மையான சொற்களை உருவாக்குகின்றனர்? இந்தக் கேள்வி நாம் கலவைத்தன்மையான சொற்களை உருவாக்க எந்தத் தொடக்கப் பாகங்களின் வகைகள் தேவை என்பதை அறிவோம் என்று கருதுகின்றது. உருபனியல் கோட்பாட்டின் உண்மையான சிக்கல் இந்த பாகங்கள் எவை என்பது பற்றி நல்ல எண்ணம் நமக்கு எப்பொழுதும் இருப்பதில்லை. தொடரியலார் (Syntacticians) நமக்குச் சில கருவிகளைத் தர இயலும்: எடுத்துக்காட்டாக வேற்றுமை, எண் என்ற பழங்கால தொடரியல் கருத்துச்சாயல்களை நாம் நமது நெறிமுறையில் பயன்படுத்தலாம். ஆனால் உருபனியலார் அவர்கள் கையாளும் பாகங்களை நிர்ணயிப்பதற்கு பயன்படுத்தும் முதன்மையான வழி மொழித்தரவை பரிசோதிப்பதாகும். அவர்கள் சொற்களை கவனமாகப் பிரித்தெடுக்க வேண்டும். அந்த பாகங்கள் எங்கிருந்து வந்தன என்பதில் கவனம் வேண்டும்.

பகுப்பாய்வு என்பதும் கூட்டிணைப்பாக்க்கம் என்பதும் உருபனியலார் மொழியைப் பற்றிப் படிப்பதன் அடிப்படையில் விளக்கப்பட்டன. ஆனால் இந்த இரண்டு கருத்துச்சாயலும் பேசுபவரால் ஒருபோலவே பயன்படுத்தப்படும்.

2.2.உருபன்களைக் கண்டுபிடித்தல்

ஒரு புதிய மொழியைக் கண்டறிந்து அதன் கட்டமைப்பை விவரிக்கும் நோக்கில் ஆய்வு செய்வதில் மொழியியலாளர் எதிர்கொள்ளும் முதல் பணிகளில் ஒன்று, மொழி உருவாக்கப்படும் குறைந்தபட்ச அர்த்தமுள்ள அலகுகளை அடையாளம் காண்பதாகும். இந்த குறைந்தபட்ச அலகுகள் "உருபன்கள்" என்று அழைக்கப்படுகின்றன, மேலும் பல நிகழ்வுகளில் அவை உடனடியாக அங்கீகரிக்கப்படுகின்றன. நடைமுறையில் எந்தச் சிக்கலும் இல்லாமல்,

எடுத்துக்காட்டாக, boyish, maddening, condense, receive, and up, என்ற ஆங்கில வார்த்தைகளில் பல்வேறு கூறு அலகுகளை அடையாளம் காண்பதில் நமக்கு சிறிய சிரமே உள்ளது: boy, -ish, mad, -en, -ing, con-, -dense, re-, -ceive, up. நீண்ட வெளிப்பாடுகளை (அதாவது வார்த்தைகளை) அவற்றின் தொகுதிப் பகுதிகளாக "உடைத்துள்ளோம்". இது நிறைவேற்றப்படும் செயல்முறை முதலில் கிட்டத்தட்ட உள்ளுணர்வாகத் தோன்றுகிறது, ஆனால் நாம் என்ன செய்தோம் என்பதை நாம் கூர்ந்து கவனித்தால், நாம் சொற்களை ஒப்பிட்டுப் பார்த்தோம் அல்லது குறைந்தபட்சம் அத்தகைய ஒப்பீடுகளைப் பற்றிய நமது அறிவைப் பயன்படுத்திக் கொள்கிறோம். உருபன்களை அடையாளம் காண, நாம் மீண்டும் வரும் பகுதிகளை அடையாளம் காணக்கூடிய சில பகுதியளவு ஒத்த வடிவங்களைக் கொண்டிருக்க வேண்டும். ஒப்பிடுவதற்கு நமக்குத் தேவையானது பின்வரும் தொடரின் மூலம் வழங்கப்படும்: boy, girlish, mad, fatten, fattening, constrain, density, return, deceive, start up.

வடிவங்களை ஒப்பிடுவதன் மூலம் உருபன்களை தனிமைப்படுத்துதல்

நாம் ஒரு வெளிநாட்டு மொழியை ஆராயும்போது ஒப்பிடுவதன் அவசியம் முற்றிலும் தெளிவாகிறது. குவாத்தமாலாவின் மாயன் மொழியான கெக்கியில், டின்பெக் என்ற வடிவம் 'நான் நடப்பேன்' என்று பொருள்படும். அத்தகைய வடிவத்தைப் பார்ப்பதன் மூலம், ஆங்கில மொழிபெயர்ப்பால் பரிந்துரைக்கப்பட்ட பொருளின் எந்தப் பகுதிக்கு வார்த்தையின் எந்தப் பகுதி ஒத்துப்போகிறது என்பதை அறிய முடியாது. இந்த வடிவத்தில் எத்தனை உருபன்கள் உள்ளன, அல்லது வடிவத்தின் எந்தப் பகுதிகள் அத்தகைய உருபன்களை உருவாக்குகின்றன என்பதை அறிய நமக்கு வழி இல்லை. இருப்பினும், ஒப்பிடுகையில், இந்த வார்த்தையை உருவாக்கும் அலகுகளை விரைவில் கண்டறியலாம். tatbeq 'நீ நடப்பாய்/you (sg.) will walk' மற்றும் ninbeq 'நான் நடந்துகொண்டிருக்கிறேன்/I am walking' ஆகிய வடிவங்கள் முதல் வடிவமான tinbeq இல் மூன்று உருபன்களை தனிமைப்படுத்த உதவுகிறது. இவை t- 'எதிர்காலம்' (இது n- 'நிகழ்கால முற்போக்கு காலம்' க்கு முரணானது), -in- ‘தன்மையிட ஒருமை எழுவாய்/first person singular subject' (-at- முன்னிலையிட ஒருமை எழுவாய்/'second person singular subject' என்பதற்கு மாறாக), மற்றும் -beg , 'நடப்பது.' பகுதி -beq ஒன்றுக்கு மேற்பட்ட பகுதிகளால் ஆனது என்பதை நிரூபிக்கலாம். இது ஒரு ஒற்றை உருபன் என்று தோன்றுகிறது, ஆனால் பல வடிவங்களுடன் ஒப்பிடுவதன் மூலம் மட்டுமே இதை நாம் அறிய முடியும்.

இப்போது கொடுக்கப்பட்ட எடுத்துக்காட்டுகளிலிருந்து தீர்மானிக்க, உருபன்களை அடையாளம் காண்பதற்கான செயல்முறை ஒப்பீட்டளவில் எளிதானது, ஆனால் இது மொழிகளில் உண்மை இல்லை. தோராயமான அர்த்தங்களுடன் ஒரே மாதிரியான

வடிவங்களைத் தேடுவது பயனுள்ளதாக இருக்கும் மற்றும் மொழியியலாளர்களின் செயல்முறையின் ஒரு பகுதியாகும், ஆனால் கடினமான சூழ்நிலைகளில் அத்தகைய அப்பாவியான அணுகுமுறை திருப்திகரமாக இருக்காது.

உருபனின் வரையறை

மிகவும் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் பயன்பாட்டில் மிகவும் நடைமுறைக்குரிய உருபனின் வரையறை ப்ளூம்ஃபீல்ட் கூறியது "ஒரு மொழியியல் வடிவம் வேறு எந்த வடிவத்திற்கும் பகுதியளவு ஒலிப்பு-பொருண்மை ஒற்றுமையைக் கொண்டிருக்காதது ... ஒரு உருபன்." இந்த வரையறை புதுமையான வார்த்தைகளாகத் தெரிகிறது. வடிவங்கள் ஒரே மாதிரியானவை மற்றும் ஒத்த அர்த்தங்களைக் கொண்டவை பற்றிய நேர்மறையான அறிக்கையாக இருப்பதற்குப் பதிலாக (எ.கா. boyish, mannish, piggish, girlish என்பனவற்றில் ish, மற்றும் -fatten, broaden, widen, deepen என்பனவற்றில் en) வரையறையானது உறவுகளை எதிர்மறையான பாணியில் விவரிக்கிறது. அதன் பொருள் என்னவென்றால், ஒரே உருபனைச் சேர்ந்த வடிவங்கள் ஒரே மாதிரியான ஒலிப்புகளைக் கொண்டிருக்காமல் இருக்கலாம் மற்றும் அவை துல்லியமாக சமமான அர்த்தங்களைக் கொண்டிருக்காமல் இருக்கலாம், ஆனால் இந்த மாறுபட்ட வடிவங்கள் அதற்கேற்ப வெவ்வேறு அர்த்தங்களைக் கொண்டு, அந்தந்த அர்த்தங்களைக் கொண்ட பிற வடிவங்களுடன் மேலுறவில்லை என்றால் அவை ஒரு ஒற்றை உருபனை உருவாக்குவதாகக் கருதப்படலாம், ஏனென்றால், வரையறை கூறுவது போல, அவை மற்ற வடிவங்களுடன் பகுதியளவு ஒலிப்பு-பொருண்மை ஒற்றுமையைக் கொண்டிருக்கவில்லை. இந்த எதிர்மறை வகை வரையறையின் முக்கியத்துவம் உருபனின் அடையாளத்தை தீர்மானிக்கும் பல்வேறு கொள்கைகளை நாம் கருத்தில் கொள்ளும்போது இன்னும் தெளிவாகிறது

2.2. பகுப்பாய்வுக் கொள்கைகள்

தொடக்ககாலப் பகுப்பாய்வுக் கொள்கைகள் யுகெனெ நைடா என்பவரால் தரப்பட்டுள்ளன (Eugene Nida's (1949; revised edition 1965) textbook Morphology).

2.2.1. உருபன்களைக் கண்டறிதல்

நாம் பேசும் போது உருன்களைப் பிரித்துப் பேசுவதில்லை. இன்னும் சொல்லப்புகுந்தால் நாம் சொற்களைக் கூடப் பரித்துப் பேசுவதில்லை. எடுத்துக்காட்டாக *நீங்கள் என் கூட வருகிறீர்களா?* என்ற வாக்கியத்தைப் பேச்சுவழக்கில். நீங்களங்கூடவர்ரீங்களா? என்று சேர்த்துத் பேசுவோம். இக்கூற்றைப் உருபன்களாகவோ சொற்களாகவோ பிரிக்க முயன்றால் *நீங்க-எங்-கூட-வர்-ர்-ஈங்கள்-ஆ* என்றுதானே பிரிப்போம். நமக்குத் தமிழ்த் தெரிவதால் இதைச் செய்யமுடிகின்றது. சில வட்டார வழக்குக் கூற்றுகளை நாம் உருபன்களாகப் பகுக்கப்

புகுந்தால் அந்த முயற்சி மிகக் கடினமாக இருக்கும். அதுமட்டுமல்லாமல் நாம் இலக்கணம் எழுத்தப்படாத கிளை மொழிகளை மட்டுமன்றி பழங்குடி மக்களின் மொழிகளையும் ஆய வேண்டிவரும். இதற்காக நாம் தரவுகளைச் சேகரித்துப் பின்னர் அதை ஆயவேண்டும். எனவே நாம் எந்த மொழிக்கும் உருபன்களைக் கண்டுபிடிக்கும் கொள்கைகளைப் பற்றி அறியவேண்டும். சொற்களை அல்லது கூற்றுக்களை முதலில் உருபுகளாகப் பிரிக்வேண்டும். பின்னர் சில கொள்கைகள் அல்லது கோட்பாடுகள் அடிப்படையில் இந்த உருபுகளை உருபன்களின் மாற்றுருபுகளாகக் குழம வேண்டும். மட்டுமன்றி இம்மாற்றுருபுகள் வரும் இடங்களையோ அல்லது அவ்வடிவை ஆக்கும் விதிகளையோ தரவேண்டும். யூஜீன் நைடா என்பவர் தான் எழுதிய உருபனியல் என்ற புத்தகத்தில் உருபன்களைக் கண்டறிய ஆறு விதிகளைக் கூறுகின்றார்.

உருபன்களை அடையாளம் காண்பதில் பயன்படுத்தப்படும் கொள்கைகள்

உருபன்களை தனிமைப்படுத்தி அடையாளம் காண்பதில் நாம் பயன்படுத்தக்கூடிய ஆறு கொள்கைகள் உள்ளன. எந்தக் கொள்கையும் முழுமையில்லை; ஒவ்வொன்றும் அடிப்படை வரையறைக்குத் துணையாக இருக்கும் மற்றும் அவ்வாறு கருதப்பட வேண்டும். ஒவ்வொன்றும் கொள்கையில் குறிப்பிடப்படாத அனைத்து சூழ்நிலைகளிலும் பிரத்தியேகமாக விளக்கப்பட்டால், கூற்றுக்கள் முரண்பாடாக இருக்கும். .

நைடாவின் முதல் விதி

பொதுவான பொருண்மை தனித்துவமும் அவற்றின் எல்லா நேர்வுகளிலும் ஒரே மாதிரியான ஒலிப்பு வடிவம் கொண்ட வடிவங்கள் ஒரு ஒற்றை உருபனை உருவாக்குகின்றன.

இதைப் பின்வரும் எடுத்துக்காட்டால் விளங்கிக்கொள்ளலாம். *ஓட்டு-நர், இயக்கு-நர், அனுப்பு-நர்* என்ற சொற்களில் *-நர்* என்று வரும் வடிவங்கள் யாவும் ஓர் உருபனாகும் என்பது மேற்சொன்ன விதியால் அறிந்துகொள்ளலாம். கொள்கை 1 அடிப்படையில் ஆங்கிலத்தில் worker, dancer, runner, walker, and flier போன்ற வினைச்சொற்களில் சேர்க்கப்படும் -er போன்ற ஒரு வடிவம் ஒரு உருபன் ஆகும். இது எப்பொழுதும் ஒரே ஒலிப்பு வடிவத்தைக் கொண்டுள்ளது, மேலும் எப்போதும் அடிப்படையில் ஒரே பொருண்மையைக் கொண்டுள்ளது, அதாவது 'செயலை செய்பவர்' ('வினைமுதல்' என்றும் அழைக்கப்படுகிறது). கொள்கையானது "பொதுவான பொருண்மை தனித்துவம்" என்ற சொற்றொடரைப் பயன்படுத்துகின்றது. -er என்ற பின்னொட்டின் அனைத்து நேர்வுகளுக்கும் பொதுவான அர்த்தம் மற்ற அனைத்து ஒத்த வடிவங்களின் அர்த்தத்துடன் முரண்படுகிறது (அல்லது தனித்தனியாக அமைக்கப்பட்டுள்ளது) என்பதைக் குறிக்கிறது. உருபனின் வரையறையிலும், இந்த முதல் கொள்கையின் கூற்றிலும்,

இந்த எல்லா நிலைகளிலும் -er இன் "பொருண்மை" ஒரே மாதிரியாக இருக்க வேண்டிய அவசியமில்லை என்பதைக் குறிப்பிடுவதில் நாம் மிகவும் கவனமாக இருந்தோம். உண்மையில், எந்த அறிவியலும் நமக்கு பொருண்மை வேறுபாட்டின் அளபுகளைப் பரிசோதிக்கும் கருவிகளை நமக்குக் கிடைக்கச் செய்யவில்லை. எவ்வாறாயினும், பொருண்மை வகைகளுக்கு இடையில் சில வேறுபாடுகளை நாம் செய்வது அவசியம். எடுத்துக்காட்டாக, ஆங்கிலத்தில் -er என்ற வடிவத்துடன் மற்றொரு பின்னொட்டு உருபன் உள்ளது; அதாவது wider, broader, smaller, deeper, cleaner போன்ற ஒப்பீட்டு பெயரடைகளில் வரும் -er. ஆனால் worker, dancer, runner, wider, broader, smaller என்பனவற்றில் வரும் பின்னொட்டு வடிவங்களின் தொடரில் பொதுவான பொருண்மை தனித்தன்மை இல்லை. எனவே, வடிவத்தின் ஒற்றுமை இருந்தபோதிலும், அர்த்தத்தின் அடிப்படையில் இரண்டு உருபன்களை நாம் வேறுபடுத்தி அறியலாம். இதுபோன்று தமிழில் முதலாளி, தொழிலாளி, வில்லாளி, கடனாளி, பாட்டாளி, படைப்பாளி இவற்றில் வரும் -ஆளி என்பதை 'பொதுவான பொருண்மை தனித்துவம்' என்பதன் அடிப்படையில் ஒரு உருபனாகக் கருதலாம். ஆனால் பெருச்சாளி என்பதில் வரும் ஆளி வேறு உருபனைச் சாரும்.

சில சமயங்களில், எந்தவொரு வடிவத்திலும் தனித்தன்மையின் பொதுவான பொருண்மைப் பண்புக்கூறுகளை துல்லியமாகவும் விரிவாகவும் வரையறுப்பதில் சிரமம் மிகவும் கடுமையானதாக இருக்கலாம். எடுத்துக்காட்டாக, பாரம் தூக்கி, இடிதாங்கி, காரோட்டி, ஓட்டைப்பல்லி, கோள்சொல்லி/கோள்மூட்டி, தொட்டால்சுருங்கி, ஆள்மயக்கி போன்றவற்றில் வரும் -இ என்பதற்கு இடையில் பொதுவான பொருண்மை தனித்துவத்தைக் காண்பது கடினம்.

நைடாவின் இரண்டாம் விதி

பொதுவான பொருண்மைத் தனித்தன்மையைக் கொண்ட ஆனால் ஒலியன் வடிவத்தில் வேறுபடும் வடிவங்களின் (அதாவது ஒலியன்கள் அல்லது ஒலியன்களின் வரிசைமுறை) முறையான வேறுபாடுகளின் விநியோகத்தை ஒலியனியல் அடிப்படையில் வரையறுக்க இயலுமென்றால் அவை ஒரு உருபனாக இருக்கலாம்.

அதாவது தமக்கென ஒரு தனிப்பொருண்மையப் பெற்ற வடிவுகள் ஒலியன் வடிவத்தால் வேறுபட்டிருந்தாலும் (அதாவது ஒலியன்களிலோ ஒலியன்களின் வரிசைமுறையிலோ வேறபட்டிருந்தாலும்) அவ்வேறுபாடுகள் ஒலியச் சூழலால் ஏற்படுகின்றன என்று காட்ட முடியுமானால், அவ்வடிவுகள் எல்லாம் ஒரே உருபனாக அமைத்துக்கொள்ளப்படலாம்.

இவ்விதியைப் பின்வரும் எடுத்துக்காட்டால் விளங்கிக்கொள்ளலாம். intolerable, indecent, impossible, impatien என்ற ஆங்கிலச் சொற்களை எடுத்துக்கொள்ளுங்கள். இவற்றை முறையே in-tolerable, in-decent, im-possible, im-patient என்று பிரிக்க இயலும். *in-* என்ற

உருபும் *im-* என்ற உருபும் எதிர்மறைப் பொருளைக் குறித்து நிற்கின்றன. இவை வரும் இடங்களை அனுமானித்து விளக்க இயலும். *im-* என்பது ஈரிதழ் அடைப்பொலிக்கு முன்னரும், *in-* என்பது இது அல்லாத பிற இடங்களிலும் வரும் என்பதைக் கண்டுபிடித்துக் கூற இயலும். இவ்வேறுபாடு சூழல் தொடர்பான வேறுபாடு எனவே இவ்வுரு உருபுகளும் நைடாவின் இரண்டாவது விதியின் படி ஒரே உருபனின் இரு மாற்றுருபன்களாகக் கருதப்படவேண்டும். இதே விதியின் அடிப்படையில் தமிழில் *மரம்* என்பதையும் *மரங்-கள்* என்பதில் வரும் *மரங்* என்பதையும் ஒரே உருபனின் மற்றுருபுகளாக எடுத்துக்கொள்ள இயலும்.

நைடாவின் மூன்றாம் விதி

தமக்கென ஒரு தனிப்பொருளைப் பெற்ற உருபுகள் ஒலியவடிவத்தால் வேறுபடும்போது, அவ்வேறுபாடுகள் ஒலியச் சூழலால் ஏற்படுகின்றன என்று காட்ட இயலாவிட்டாலும், அவ்வுருபுகள் கீழ்வரும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டுத் துணைநிலை வழக்கில் வருமொன்றால், அவை ஒரே உருபனாகக் கொள்ளப்படலாம்:

1. வேறுபட்ட வகை அமைப்பு வரிசையில் வருவதைவிட ஒரே வகை அமைப்பு வரிசையில் வருதே உருபனாகும் தகுதியை வரையறுப்பதில் முக்கியமானது.

எடுத்துக்காட்டாக rose-s, *boy-s, lip-s, ox-en, sheep* என்ற சொற்களை எடுத்துக்கொண்டால் இவற்றின் பன்மை வடிவங்கள் பெயர்சொல்லின் ஒருமை வடிவம் + பன்மை உருபு என்ற வரிசை முறையில் அமைகின்றது. ஆனால் உடமைப்பொருள் வேற்றுமையை உருபனைக் கொண்ட சொற்களாகிய *man's, men's* போன்ற சொற்கள் வேறோர் அமைப்பு வரிசையாகும். உடைமையுருபு பெயர்சொல்லின் ஒருமை வடிவத்தோடும் பன்மை வடிவத்தோடும் இணைகின்றது. இவ்வாறு ஆங்கிலத்தில் பன்மை உருபுகளும் உடைமை உருபுகளும் ஒரே வடிவம் உடையவை என்றாலும் அவை அமைப்பு வரிசையால் வேறுபடுகின்றன. இதுபோலவே தமிழில் கருவிவேற்றுமைப் பொருளில் வரும் *ஆல்* (எ.கா. *கத்தியால், கம்பால்*) என்பதும் நிபந்தனைப் பொருளில் வரும் *ஆல்* (எ.கா. *வந்தால், படித்தால்*) என்பதும் அமைப்பு வரிசையில் வேறுபடுகின்றன. எனவே அவை இரண்டும் இரு உருபன்களாகும்.

2. வேறுவகை அமைப்பு வரிசையில் துணைநிலை வருகைமுறையில் வரும் உருபுகளைக்கூட ஒரே உருபன் என்று கொள்ளலாம். ஆனால் அவ்வேறுவகை அமைப்பு வரிசையில் வரும் ஓர் உருபனாவது மேற்குறித்த உருபுகள் வரும் இடங்களில் எல்லாம் வருவதாகவும் தனக்கு ஒரேயொரு மாற்றுருபையோ ஒலியன்களால் கட்டுண்ட மாற்றுருபுகளையோ பெற்றதாக

இருக்கவேண்டும். எடுத்துக்காட்டாக, தமிழ் வினைமுற்றுகளில் திணை, பால், எண், இடம் உணர்த்தும் உருபுகளாய் (விகுதிகளாய்) வருவனவற்றை மூவிடப்பெயர்களோடு தொடர்புபடுத்தலாம்.

	மூவிடப்பெயர்	வினைமுற்றுவிகுதி
தன்மை ஒருமை	நான்	ஏன்
முன்னிலை ஒருமை	நீ	ஆய்
ஆண்பால் ஒருமை	அவன்	ஆன்
பெண்பால் ஒருமை	அவள்	ஆள்
பலர்பால் ஒருமை	அவர்	ஆர்
ஒன்றன்பால் ஒருமை	அது	அது

ஒன்றன்பால் ஒருமை வெவ்வேறுவகை அமைப்பு வரிசைகளில் *அது* என ஒரே உருபுவடிவில் வருவாதால் *நான், ஏன்* என்பனவற்றை ஒரே உருபனாயும் *நீ, ஆய்* என்பனவற்றை ஒரே உருபனாகவும் *அவன், ஆன்* என்பனவற்றை ஒரே உருபனாகவும் *அவள், ஆள்* என்பனவற்றை ஒரே உருபனாகவும் *அவர், ஆர்* என்பவற்றை ஒரே உருபனாகவும் கருதவியலும்.

3. அடுத்து வராத தொடரமைப்புச் சூழலை விட அடுத்து வரும் தொடரமைப்புச் சூழலே உருபனாகும் தகுதியை வரையறுப்பதில் முக்கியமானது.

எடுத்துக்காட்டாக *ஆண்கள்* என்பதில் *ஆண்* என்னும் உருபனும் *கள்* என்னும் உருபனும் அடுத்து வந்து ஒரு தொடரமைப்பாக உள்ளன. எனவே *ஆண்* என்னும் உருபனைப் பொறுத்தவரையில் *கள்* என்பது அடுத்துவரும் தொடரமைப்புச் சூழலாகும். *அறிவுள்ள ஆண்கள்* என்பதில் *ஆண்* என்பதற்கு அடுத்துவரும் தொடரமைப்புச் சூழல் *கள்* என்பதேயன்றி *அறிவுள்ள* என்பதாகாது.

4. ஒத்த சூழ்நிலைகளில் இரண்டு உருபுகள் வேற்றுநிலை வழக்கில் வந்தாலும், அவற்றின் பொருள் வேறுபாட்டினை வருகை முறைகளோடு தொடர்புபடுத்த முடியுமென்றால், அப்பொருள் வேறுபாடு உருபநிலை பெறாது என்றே கருதப்படும்.

எடுத்துக்காட்டாக hang என்ற ஆங்கிலச் சொல்லுக்கு hanged, hung என்ற இரண்டு இறந்தகால வடிவங்கள் உண்டு. அவ்விரண்டும் பொருளில் வேறுபடுகின்றன. ஒன்று இயங்குவினையாகவும் மற்றது இயக்கு வினையாகவும் பொருள்படுகின்றன.

இது போன்று *கிளை* (ஒடி-ந்த்-அது <) *ஒடிந்தது*, *அவன் கிளையை* (ஒடி-த்த்-ஆன் <) *ஒடித்தான்* என்ற வெளிப்பாடுகளில் வரும் *ஒடி* என்பது முதல் வெளிப்பாட்டில் செயப்படு பொருள் குன்றிய வினைப் பொருளையும் இரண்டாவது வெளிப்பாட்டில் செயப்படு பொருள் குன்றா வினைப் பொருளையும் குறிப்பிடும்.

நான்காம் கட்டுப்பாட்டின்படி இப்பொருள் வேறுபாடுகள் மட்டும் அவையிரண்டும் வெவ்வேறு உருபன்கள் என்று கூறுவதற்குச் சான்றாகாது. ஏனென்றால் அவை துணைநிலை வருகைமுறையில் வருகின்றன. அதனால் அவ்விரண்டு உருபன்களையும் வெவ்வேறு உருபன்களாகக் கருதவேண்டியதில்லை.

நைடாவின் நான்காம் விதி

பொருளாலும் வடிவாலும் வேறுபட்டு ஒரே அமைப்பு வரிசையில் வரும் இரண்டு உருபுகளுக்கிடையே வேறுபாட்டடிற்குக் காரணமாய் வெளிப்படையான வடிவவேறுபாடும் உருவிலா அமைப்பு வேறுபாடும் மட்டுமே காணப்படுமானால் அந்த வெளிப்படையான வடிவ வேறுபாட்டினையும் ஓர் உருபனாகக் கொள்ளலாம்.

எடுத்துக்காட்டாக ஆங்கிலத்தில் பன்மையைக் காட்டுவதற்கு வெளிப்படையான உருபு சேர்ப்பது மரபு (boy-boys). ஆனால் sheep என்ற சொல்லில் பன்மையைக் காட்ட உருபு இல்லாததால் அதில் வெற்றுருபு (zero morph) பன்மையைக்காட்டுகின்றது எனக் கொள்ளவேண்டும். foot [fut] - feet [fi:t] என்பவைகளுக்கிடையில் உள்ள வடிவ வேறுபாட்டை (u -> i:) உருபனாகக் கொள்ளவேண்டும். இத்தகைய உருபனை பதிலி உருபன் (replacive morpheme) என்பர்.

நைடாவின் ஐந்தாம் விதி

ஒரே ஒலி வடிவமுடைய சொற்கள் ஒரே உருபனா வெவ்வேறு உருபன்களா என்பதைக் கீழ்வரும் கட்டுப்பாடுகளைப் பொறுத்து முடிவுசெய்யவேண்டும்:

1. ஒரே ஒலி வடிவமுடையவை என்றாலும் தொடர்பில்லாத வெவ்வேறு பொருள்களைக் குறிக்கின்ற சொற்கள் வெவ்வேறு உருபன்களாகும்.

எடுத்துக்காட்டாக, *படி* என்ற வடிவத்தை எடுத்துக்கொண்டால் *படி* என்பது படித்தலாகிய செயலையும் *படி* என்ற ஏறுவதற்கான தளங்களையும் குறிக்கும். எனவே பொருள் அடிப்படையில் *படி* என்ற வடிவத்தை இரு உருபன்களாகக் கொள்ளவேண்டும்.

2. ஒரே ஒலிவடிவம் பெற்றுத் தொடர்புடைய வெவ்வேறு பொருளைக் குறிக்கின்ற சொற்களைப் பொறுத்தவரை, பொருள் வேறுபாட்டினை அச்சொற்கள் வரும் சூழ்நிலை வேறுபாட்டினை வைத்து விளக்க முடியுமென்றால் அவை உருபனாகும். இல்லையெனில் தனித்தனி உருபனாகும்.

எடுத்துக்காட்டாக, *அடி* என்ற சொல் *நான் அவனை அடித்தேன்* என்ற சூழலிலும் *நான் அவனுக்கு ஒரு அடி கொடுத்தேன்* என்ற சூழலிலும் சிறிது வேறுபட்ட பொருள்களைக் குறித்தாலும் இவ்வேறுபாட்டை அவை வரும் சூழல் அடிப்படையில் விளக்க இயலும். எனவே இந்த இரு நேர்வுகளிலும் வரும் *அடி* என்பதை ஒரே உருபனாகத்தான் கொள்ளவேண்டும்.

நைடாவின் ஆறாவது விதி

கீழ்வரும் மூன்று சூழல்களில் வருமானால் ஒரு சொல் வடிவத்தை உருபனென்று கொள்ளலாம்:

1. தனித்து வருதல்

2. பல்வேறு உருபுகளோடு இணைந்து வருதல். அவ்வாறு வரும்போது அச்சொல் வடிவம் எவ்வுருபுகளோடு இணைந்து வருகின்றதோ அவ்வுருபுகளில் ஒன்றாவது தனித்தோ வேறு உருபுகளோடு இணைந்தோ வரவேண்டும்.

3. ஒரேயொரு உருபோடு இணைந்து வருதல். இவ்வாறு வரும்போது, அச்சொல் வடிவம் எவ்வுருபோடு இணைந்து வருகிறதோ அவ்வுருபு தனித்தோ வேறு உருபுகளோடு இணைந்தோ வரவேண்டும். அவ்விணைப்பும் தனியொன்றாய் இருக்கலாகாது.

எடுத்துக்காட்டாக, ஆங்கிலத்தில் *berry* என்ற அலகை எடுத்துக்கொள்வும். இது cran என்ற சொல்லோடு இணைந்து cranberry என்று வரும். *berry* என்பது தனித்தும் வேறு உருபுகளோடு இணைந்தும் வரலாம் (எ.கா. *strawberry, gooseberry*). எனவே *berry* என்பதுடன் மட்டும் இணைகிற *cran* என்பதையும் ஒரு உருபனாகக் கொள்வேண்டும்.

உருபனியல் கட்டுப்பாடு (Morphological Condition)

கட்டுப்பாடு என்பது விதிகளை மீறாமல் வரையறை செய்வது என்று பொருள்படும். உருபுகளால் விதிக்கப்படும் கட்டுப்பாடு உருபனியல் கட்டப்பாடு எனப்படும். எடுத்துக்கட்டாக தமிழ் மொழியில் *ஒரு* என்ற அடை மெய்யெழுத்தில் தொடங்கும் சொல் முன்னரும் (ஒரு பெண்), *ஓர்* என்ற அடை உயிரெழுத்தில் தொடங்கும் சொல் முன்னரும் (ஓர் அசை) வருதல் உருபனியல் கட்டுப்பாடு ஆகும். *செய்தனர்* என்பதில் *அர்* என்ற விகுதிக்கு முன்னர் -*அன்* சாரியையை வருவது உருபனியல் கட்டுப்பாடாகும்

உருபன் கட்டு மாற்றுருபு (morphologically conditioned allmorph)

ஒரு உருபனின் பொருள் வேறுபாடில்லாத உருபுகள் மாற்றுருபுகள் எனப்படும். இவை துணைநிலை வருகை முறையில் வரும். ஒரு மொழியில் ஒரு உருபன் வந்தால் மட்டுமே வரக்கூடிய ஒரு மாற்றுருபு உருபன் கட்டு மாற்றுருபு எனப்படும். எடுத்துக்காட்டாக, பழந் தமிழில் மொழியில் ஆண்பால் ஒருமை விகுதியான *அன், ஆன்* ஆகியவை மாற்றுருபுகள். இவற்றுள் *அன்* விகுதி *அன்* சாரியை வந்தால் மட்டுமே வரும். *வந்தனன்* (*வந் + அன் + அன்*); *ஆன்* பிற இடங்களீல் வரும் (வந் + ஆன்). *அன்* என்ற விகுதி *அன்* என்ற சாரியையுடன் மட்டும் வருவதால் இது உருபன் கட்டு மாற்றுருபு எனப்படும்.

3. உருபன்களின் வகைகளும் வருகைமுறைகளும்

முந்தைய பகுதியில் உருபன்களைக் கண்டுபிடிப்பது பற்றி கூறப்பட்டது. உருபன்களை அவற்றை ஆக்கும் ஒலியன்கள், அவற்றிற்கு இடையிலான முறைசார் உற்றவுகள், அவற்றின் விநியோகம் என்பதன் அடிப்படையில் வகைப்படுத்தி உருபன்களின் வகைகளையும் (types of morpheme) வருகைமுறைகளையும் (distribution of morphemes) விளக்குவது உருபனியலில் செய்யப்படும் அடுத்தகட்ட நடவடிக்கை ஆகும்.

நைடா உருபன்கள் அவற்றை ஆக்கும் ஒலியன்கள் அடிப்படையிலும் அவைகளுக்கு இடையே உள்ள உறவுகள் அடிப்படையிலும் அவை ஒவ்வொன்றும் முறைப்படி எவ்வாறு ஒன்றுடன் ஒன்று தொடர்பு படுத்தப்பட்டுள்ளன என்பதன் அடிப்படையில் வேறுபடுத்தி வகைப்படுத்துவார். நைடாவின் விளக்கப்படி நமது விளக்கத்தை இரண்டாகப் பிரித்துக்கொள்ளலாம்: (1) உருபன்களின் அக இணைப்பாக்கம் (internal composition), (2) உருபன்கள் ஒன்றுடன் ஒன்று காட்டும் முறையான உறவு (formal relationship). உருபன்களின் அக இணைப்பாக்கத்தைப் பின்வரும் விதிமுறைகள் அடைப்படியில் கையாள இயலும்: (1) உருபன்களை உருவாக்கும் ஒலியன்களின் வகைகள், (2) உருபன்களின் ஒலியனியன் சார் வடிவம் மற்றும் உருபன்களின் உருவங்கள் (3) உருபன்களின் பகுதிகளின் முறையான உறவுகள். உருபன்களை ஆக்கும் ஒலியன்களின் வகைகள் அடிப்படையில் உருபன்களை வகைப்படுத்தலாம். உருபன்கள் பின்வரும் ஒலியன்வகைகளைக் கொண்டிருக்கும்: (1) கூறு ஒலியன்கள், (2) மீக்கூறு ஒலியன்கள் (3) கூறு ஒலியன்கள் மற்றும் மீக்கூறு ஒலியன்கள் இவற்றின் கலவைகள்.

கோட்பாடு அடிப்படையில் உருபன்களின் வடிவம் மற்றும் உருபன் மீது எந்தக் கட்டுப்பாடும் இல்லை. எடுத்துக்காட்டாக உருபன்களை ஓரொலியன் உருபன், ஈரொலியன் உருபன், மூவொலியன் உருபன் எனப்பகுக்கலாம்; ஆ 'பசு' என்பது ஓரொலியனுள்ள உருபனாகும்; பூ என்பது ஈரொலியன் கொண்ட உருபனாகும்; கண் என்பது மூவொலியனுள்ள உருபனாகும். இது இவ்வாறு ஒரு எல்லை வரைப் போகும். உருபன்களை அவற்றை ஆக்கும் உயிர்கள் (V) மற்றும் மெய்கள் (C) அடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத்தலாம்: ஆ – V, பூ – VC, கண் – CVC, மூக்கு – CVCCV. இவ்வாறு ஒரு எலை வரை நீண்டுகொண்டே போகும். தமிழில் பொதுவாக பொருளடக்க உருபன்கள் வடிவிலும் உருவிலும் சிறிதாகவும் பெரிதாகவும் வரும்; ஒட்டுக்களாக வரும் உருபன்கள் (இலக்கணம்சார் உருபன்கள்) பெரும்பான்மையும் சிறிதாகத்தான் இருக்கும். எடுத்துக்காட்டாக வேற்றுமையை குறிக்கும்

உருபன்கள் தமிழில் ஒன்றிரண்டு ஒலியன்களையே கொண்டிருக்கும்: இரண்டாம் வேறுமை உருபு- ஐ (V), மூன்றாம் வேற்றுமை உருபு –ஆல் (VC), நன்காம் வேறுமை உருபு – கு (CV). Mayan மொழிகளில் வேர்கள் அதிகமாக CVC வகையைச் சாரும்; ஒட்டுக்கள் எப்போதும் சிறியனவாக இருக்கும்; பெரும்பான்மையும் CV வகையைச் சாரும். Bantu மொழிகளில் வேர் அமைப்பு பெரும்பான்மையும் CVCV என வரும்; ஒட்டுகள் எப்போதும் சிறிதாக இருக்கும் மற்றும் பெரும்பான்மையும் CV வகையைச் சாரும்.

வடிவ அடிப்படையில் வேறுபடும் உருபன்கள் வாய்ப்பாட்டு வடிவங்கள் (canonical form) எனப்படும். எல்லா மொழிகளிலும் வாய்ப்பாட்டு வடிவங்களின் வேறுபட்ட வகுப்புகள் காணப்படும். முதன்மையான வேறுபாடு பெரும்பான்மையும் வேர்கள் (roots), ஒட்டுகள் (affixes) இவற்றிற்கு இடையில் இருக்கும். சில மொழிகளி சொல் வகுப்புகள் ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபடும். எடுத்துக்காட்டாக Ngbaka என்ற மொழியில் வினை வேர்கள் முற்றிலும் கூறு ஒலியன்களைக் கொண்ட வாய்ப்பாட்டு வடிவங்களைக் கொண்டிருக்கும்; ஆனால் பெயர் வேர்கள் கூறு ஒலியன்களையும் மீக்கூறு ஒலியனகளையும் கொண்டிருக்கும். எ.கா. lí ‘முகம்’, lī ‘பெயர்’, lì ’தண்ணீர்’.

உருபன்களின் பாகங்களுக்கிடையே உள்ள முறைசார் உறவுகள்

உருபன்களின் பகுதிகளை ஆக்கும் ஒலியன்கள் கூறு ஒலியன்களாக இருந்தால் அவை இயல்பாக தொடர்ச்சியான வரிசையில் வரும்; அவை கூறு ஒலியன்களாகவும் மீக்கூறு ஒலியன்களாகவும் இருந்தால் அவை மேலுறலாக வரும். சில சமயங்களில் கூறு ஒலியன்களைக் கொண்ட உருபன்களின் பகுதிகள் அண்மை வரிசையாக வராது.

தொடரா உருபன்/தொடரல் உருபன் (Discontinuous Morpheme)

உருபனானது தொடர்ந்து வராமல் இடைவெளி விட்டு இரண்டு, மூன்று பிரிவாக அமையுமானால் அது தொடரா உருபன் என்று வழங்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, *இராமனும் கண்ணனும்* என்ற தொடரில் -*உம்*...-*உம்* என்பன தொடரா உருபனாகும். இது போன்று *சீதாவோ இராமனோ* என்ற தொடரில் -*ஓ*...-*ஓ* என்பன தொடரா உருபனாகும்.

செருகல் உருனைப் பிரிக்கும். இத்தகைய உருபன்கள் செருகல் உருபன்கள் எனப்படும். (பார்க்க செருகல் உருபன்) பதிலி உருபன்களும் ஒரு உருபனைப் பிரிக்கும் (பார்க்க பதிலி உருபன்கள்).

உருபன்களுக்கு இடையேயுள்ள முறைசார் உறவுகள்

உருபன்களுக்கிடையிலான முறைசார் உறவுகள் அமைப்புசார் உறவுகளும் இடம் சார் உறவுகளாகும்.

உருபன்களுக்கு இடையேயுள்ள அமைப்புசார் உறவுகள்

அமைப்புசார் உறவுகள் அடிப்படையில் நைடா மூன்று வேறுபட்ட உருபன் வகைகளாகப் பகுப்பார்: (1) சேர்க்கை உருபன்கள் (additive morphme), (2) பதிலி உருபன்கள் (replacive morpheme) (3) குறைப்பு உருபன்கள் (substrative morpheme). இவை முறையே கூடுதல் (addition), குறைதல் (substractive), பதிலாய் வருதல் என்ற மூன்று இணைப்புச் செயல்பாடுகளைக் குறிப்பிடும்.

சேர்க்கை உருபன்/கூட்டுருபன் (Additive Morpheme)

வேர்ச்சொல்லுக்கு அடிச்சொல்லுக்கு முன்னரோ பின்னரோ அல்லது அடிச்சொல்லிலோ சேர்க்கப்படுகின்ற உருபன் சேர்க்கை உருபன் அல்லது கூட்டுருபன் எனப்படும். எடுத்துக்காட்டாக, அ + நீதி > அநீதி, வாழ் + க்கை > வாழ்க்கை, im + possible > impossible, in + tolerable > intolerable. un+happy > unhappy என்ற எடுத்துக்காட்டுகளை எடுத்துகொண்டால் நீதி என்பதற்கு முன் சேர்க்கப்படும் அ என்பதும் வாழ் என்பதற்குப் பின்னர் சேர்க்கப்படும் க்கை என்பது possible என்பதற்கு முன்னர் சேர்க்கப்படும் im என்பதும் tolerable என்பதுடன் சேர்க்கப்படும் in என்பதும் happy என்பதுடன் சேர்க்கப்படும் un என்பது சேர்க்கை உருபன்களாகும்.

ஒன்றோடொன்று கூடும் நிலையை உடைய உருபன்பகள் சேர்க்கை உருபன்கள்/கூட்டுருபன்கள் எனப்படும். வேர் உருபன்கள் (roots), முன்னொட்டுகள் (prefixes), பின்னொட்டுகள் (suffixes), உள்ளொட்டுகள் (infixes), மேலொட்டுகள் (suprafixes), இரட்டை உருபன்கள் (reduplicatives) முதலியவை கூடுநிலை உருபன்களாகும். இவற்றில் நால்வகை ஒட்டுகளும் கட்டுண்ட உருபன்கள் (bound morphmes) ஆகும். கட்டுண்ட உருபன்கள் தனிச்சொல்லாக வரவியலாத உருபன்களாகும். தனிச்சொல்லாக வரவியலும் உருபன்கள் (எ.கா. தமிழில் கை, கால் என்பன) தனி உருபன்களாகும் (free morphemes),

வேர்கள் (roots)

சொற்களின் அடிப்படை மையப்பகுதி வேர்கள் ஆகும். (இதைப்பற்றி பின்னர் வினியோகத்தால் நிறுவப்படும் உருபன்களின் வகைகள் என்ற தலைப்பில் விரிவாகத் தரப்பட்டுள்ளது.) முன்னொட்டுகள் வேர்களுக்கு முன்னர் வரும் கட்டுருன்களாகும் (அதாவது அவை தனியாக வருவதில்லை. பின்னொட்டுகள் வேர்களைத் தொடர்ந்துவரும் கட்டுருபனகளாகும். உள்ளொட்டுகள் வேருக்குள் வரும். மேலொட்டுகள் முவதும் மீக்கூறு ஒலியன்களைக் கொண்டிருக்கும் மற்றும் அவை வேருடனோ அடியுடனோ சேர்க்கப்படும். இதுபோன்று சுரங்களும் மூக்கினமாக்கமும் மேலொட்டுகளாகும்.

முன்னொட்டு (Prefix)

அடிச் சொல்லுக்கு முன்னால் இணைக்கப்படும் ஒட்டுக்கு முன்னொட்டு என்று பெயர். un- + faith-ful 'நம்பிக்கையான' > un-faithful 'நம்பிக்கையற்ற' im + possible 'முடியும் > im-possible 'முடியாது', un + necessary 'தேவை' > unnessary 'தேவையற்ற' இவற்றில் un-, im- என்ற எதிர்மறை ஒட்டுக்கள் அடிச் சொல்லுக்கு முன்னால் சேர்க்கப்பட்டுள்ளதால் அவை முன்னொட்டுகள் எனப்படுகின்றன. தமிழில் அடிப்படையில் முன் ஒட்டுக்கள் இல்லை. ஆனால் கடன் சொற்களில் முன்னொட்டுகள் சேர்ந்து இன்று தமிழில் வழங்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக அ + நீதி > அநீதி, அ+நியாயம் > அநியாயம், அன்+ஆவசியம் >அனாவசியம் இவற்றில் அ-, அந் என்பன என்ற எதிர்மறை ஒட்டாகவும் துர்+நாற்றம் > துர்நாற்றம், துர்- என்பது 'கெட்ட' என்ற பொருளுடைய முன்னொட்டாகவும் அமைந்துள்ளன.

பின்னொட்டு (Suffix)

அடிச் சொல்லுக்கு முன்னரும் பின்னரும் வரும் சொல்லைத் தான் ஒட்டுக்கள் என்கிறோம். அடிச் சொல்லுக்குப் பின்னால் சேர்க்கப்படும் ஒட்டுக்குப் பின்னொட்டு என்று பெயர். இன்றைய தமிழில் பெரும்பான்மையான ஒட்டுகள் பின்னொட்டுகளாகவே அமைந்துள்ளன. வேற்றுமை உருபன்கள், பால் உருபன்கள், எச்ச உருபன்கள், கால உருபன்கள் எல்லாம் தமிழில் பின்னொட்டுகளாகவே அமைந்துள்ளன. எடுத்துக்காட்டு, படி+த்த்+ஆன்> படித்தான், வா+ந்த்+உ> வந்து, பார்+வை > பார்வை, நட+ ந்த்+ஆல் > நடந்தால்.

ஓரஒட்டுகள் (circumfixes)

circumfix என்ற ஆங்கிலச் சொல்லுக்குத் தமிழ் நிகரன் ஓர ஒட்டுகள் ஆகும். முன்னொட்டும் பின்னொட்டும் இணைந்து ஒரு அடியுருபனை சூழ்ந்து ஒரு உருபனாகச்

செயல்படும். எடுத்துக்காட்டாக ஜெர்மன் மொழியில் உள்ள பின்வரும் ஓர ஒட்டுகளைக் கூறலாம்:

film-en ‘to film’ ge-film-t ‘filmed

frag-en ‘ to ask ge-frag-t ‘asked’

lob-en ‘to praise’ ge-lob-t ‘parised’

zeig-en ‘to snow’ ge-zeig-t ‘shown’

ge- என்பதும் -t என்பதும் இணைந்து இறந்தகாலத்தைக் குறிப்பிடும். இவை ஓர ஒட்டுக்களுக்கு எடுத்துக்காட்டாகும்.

உள்ளொட்டுகள் (Infixes)

உள்ளொட்டுகள் ஒரு தொடரா அடியை (தொடரா உருபனை= discontinous morpheme) உருவாக்கும். வியட்நாமில் பேசப்படும் சரவ் என்ற மொழியில் உள்ளொட்டுகள் காணப்படுகின்றன.

(Charau, a language of Vietnam)

sulat ‘write’

s-um-ulat ‘wrote

s-in-ulat ‘was written’

-um-, *-in-* என்ற ஒட்டுகள் *sulat* என்ற உருபனை இரண்டாகப் பிரித்து உள்ளே செருகப்பட்டுள்ளன. இவை உள்ளொட்டுக்களுக்கு எடுத்துக்காட்டாகும்.

செருகு ஒட்டுகள் (interfixes)

தொடரா ஒட்டுகளையும் தொடரா அடிகளையும் உள்ளடக்கிய ஒரு தனித்தன்மையான உள்ளொட்டுகள் செருகு ஒட்டுகள் (interfixes) எனப்படும். இஜிப்சியன்-அரேபிய (Egyptian Arabic) மொழியில் இவ்வகையிலான ஒட்டுகள் காணப்படும். இதில் அடிகள் மெய்யெழுத்துகளின் சட்டகங்கள் போல இருக்கும். இதில் உயிரெழுத்துகள் ஒட்டுகளாகச் செருகப்படும்.

Egyptian Arabic

ktb ‘write’

‘katab ‘he wrote’

‘jiktib ‘he will write’

mak’taba ‘bookshop

ma’kaatib ‘book shops’

kaatib ‘clerk’

இடையொட்டு (Infix)

அடிச் சொல்லுக்கு உள்ளே அதாவது அதனுடைய வடிவத்திற்கு இடையில் சேர்க்கப்படும் ஒட்டுக்கு இடையொட்டு என்று பெயர். தமிழில் இடையொட்டு இல்லை, அராபிய மொழியில் இடையொட்டுகள் உள்ளன. எடுத்துக்காட்டு: katab ‘to write’, kitab ‘book’. என்ற எடுத்துக்கட்டுகளில் மெய்யெழுத்துக்களுக்கிடையில் (ktb) செருகப்படும் உயிரெழுத்துக்கள் a, i என்பன இடையொட்டுகள் எனப்படும்.

மேலொட்டு (superfix/suprafix/Simulfix)

கூறு ஒலியன்களுக்கும் மீக்கூறு ஒலியன்களுக்கும் இடையே உள்ள வேறுபாட்டைப் பார்த்தோம். இசைமை, அசையழுத்தம், விட்டிசை, இச்சையோட்டம் என்பவற்றை மீக்கூறுகள் எனப்பார்த்தோம். இம்மீக்கூறுகள் உருபன்கள் போன்று பொருண்மையை உணத்தினால் இவற்றை மீக்கூறு உருபு அல்லது மேலொட்டு என்போம். (superfix/suprafix என்பதற்குப் பதிலாக suprasegmental என்பது அண்மைக்காலத்தில் பயன்படுத்தப்படுகின்றது.) அழுத்தம் (stress), சுரம் (pitch) போன்றவற்றை உருபனாகக் கொள்ளும் போது அவை மேலொட்டு அல்லது இணையொட்டு என்று வழங்கப்படும். *கண்ணன்* என்ற சொல்லை எந்தவித அழுத்தமும் இல்லாமல் கூறும் போது இயல்பான பொருளையும் *கண்ணன்* என்று ஒரு வித அழுத்தத்தோடு கூறும் போது 'கண்ணனா' என்ற பொருளையும் தருகிறது. இந்த அழுத்தம் பொருள் வேறுபாட்டிற்குக் காரணமாக அமைவதால் இது இணையொட்டு என்று வழங்கப்படுகிறது.

இரட்டையுருபன் (reduplicative morpheme)

வேரின் அல்லது அடியின் ஒரு பகுதி இரட்டுவதால் விளையும் உருபன் இரட்டையுருபன் எனப்படும். முழு அடியும் இரட்டித்தால் அது கூட்டாக்கத்தை ஒக்கும்.

எ.கா. Afrikaans மொழியிலிருந்து

sumulat 'to write su-sulat 'will write'

bumasa 'to read' ba-basa 'will read'

?umaral ' to teach ?a-?aral 'will teach'

இரட்டைக்கிளவி (Reduplicative Morpheme)

இரட்டைக்கிளவி என்பதன் ஆங்கில நிகரன் reduplicative morpheme என்பதாகும். பிரித்தால் பொருள் தராததுமான ஒலிக்குறிப்பு போன்ற சொல் கிளவி எனப்படும். ஒரு குறிப்பிட்ட ஒலியன் வடிவம் அல்லது ஒலியன் சேர்க்கை இருமுறையோ அல்லது அதற்கு மேலோ வந்து ஒரு குறிப்பிட்ட பொருளை வெளிப்படுத்துமாயின் அது இரட்டைக்கிளவி எனப்படும். இவ்வாறு இரட்டித்து வரும் உருபனின் ஒரு பகுதியை அதிலிருந்து பிரித்தால் அவ்வடிவம் பொருளற்றதாகி விடுகிறது. எடுத்துக்காட்டாக, தமிழில் *சலசல* (சலசலத்தது), *பளபள* (*பளபளத்தது*), *படபட* (*படபடவென்று வெடித்தது*) என்பன இரட்டைக்கிளவிகள் ஆகும்.

பதிலி உருபன் (replacive morpheme)

பதிலி உருபன் என்பது அடிச்சொல்லின்/வேரின் ஒரு பகுதிக்குப் பதிலாய் வரும் உருபனாகும். அவை சேர்க்கை உருபன்களிலிருந்து அமைப்பு அடிப்படையில் வேறுபட்டனவாகும்.பதிலி உருபன்கள் எந்த ஒலியன் வடிவத்திலும் வரலாம். அதாவது உயிரொலிகள், மெய்யொலிகள், சுரங்கள், மூக்கினமாக்கம் அல்லது கூறு மற்றும் மீக்கூறு பண்புக்கூறுகளாகவும் வரலாம். எடுத்துக்காட்டாக ஆங்கிலத்தில் ஒருமை-பன்மை வடிவுகளான foot [fut] - feet [fi:t] என்பதிலுள்ள u -> i: பதிலி உருபனாகும். ஆங்கில மொழியில் வினைகளில் இறந்தகால வடிவ மாற்றத்திற்காக நிகழ்கால வடிவுகளில் உள்ள அசைகள் இடப்பெயர்ச்சி செய்யப்படும் (எ.கா. run > ran, take > took, shake> shook, flow > flew, fight > fought, think > thought, ride > rode, swim >swam, buy > bought, bind > bound, meet > met, ring > rang, sleep >slept). இத்தகைய இடப்பெயர்ச்சி செய்யும் உருபன்கள் பதிலி உருபன்கள் எனப்படும்.

பதிலி உருபன்களாகவரும் மீக்கூறுகள் மீக்கூறு பதிலி உருபன்கள் (suprasegmental replacive morphemes) எனப்படும். காங்கோவில் பேசப்படும் Mongbandi மொழியில் இத்தகைய மீக்கூறு பதிலி உருபன்கள் காணப்படும் ((Nida, 1976: 63): ŋbò 'swam (ஒருமை எழுவாயுடன்)' - ŋbó 'swam (பன்மை எழுவாயுடன்)', gwè went (ஒருமை எழுவாயுடன்)'- gwé 'went (பன்மை எழுவாயுடன்).

பதிலி உருபன் அடிப்படையிலன உருபனியல் விளக்கம் சேர்க்கைமுறை மாதிரி (Item and arrangement) அடிப்படையில் அமையும். இதற்குப் பதிலாக விதிமுறை மாதிரியில் (Item and process) இது வேறுவிதமாகக் கையாளப்படுகின்றது (பார்க்க சேர்க்கை முறை மாதிரியும் விதிமுறை மாதிரியும்).

குறைப்பு உருபன் (Subtractive Morpheme)

ஒலியன்கள் பகுதிகளில் இருந்து குறைக்கப்படலாம், மேலும் அர்த்தத்தில் சில வேறுபாட்டைக் குறிக்க அவற்றுடன் சேர்க்கப்படலாம். இருப்பினும், அத்தகைய குறைத்தல் சேர்த்தல்களை விட மிகவும் அரிதானது. அவை பொதுவாக ஒலி மாற்றத்தின் வரலாற்று செயல்முறையின் விளைவாக உருவாகின்றன, இது உருபொலியனியல் அடிப்படையில் அர்த்தமுள்ளதாக மாறும். ஒரு மொழியில் உருபன்கள் குறைக்கப்படுவதைத் தான் உருபன் குறைப்பு என்கின்றோம். சில மொழிகளில் அடிச்சொல்லில் உள்ள சில ஒலியன்கள் குறைக்கப்படுவதன் மூலமும் பொருண்மை வேறுபாடு கொண்ட புதிய உருபன்கள் உருவாக்கப்படலாம். குறைப்பு உருபன்கள் மொழியில் மிக அருகியே காணப்படுகின்றன. பொதுவாக வரலாற்று ரீதியில் பொருளை வேறுபடுத்துகின்ற ஒலி மாற்றம் ஏற்படுவதின் மூலம் இக்குறைப்பு உருபன்கள் நிலவுகின்றன. பின்வரும் எடுத்துக்காட்டில் ஆண்பால் உருபனை பெண்பால் உருபனிலிருந்து இறுதி ஒலியன் அலகு குறைக்கப்பட்டு ஆக்கப்படதாகும். எனவே ஆண்பால் உருபன்களைப் பெண்பால் உருபன்களின் குறைப்பு உருபன் எனலாம். பிரஞ்சு மொழியில் பெயரடை ஒவ்வொன்றிற்கும் ஆண்பால் பெண்பால் என இரு வடிவங்கள் உண்டு. 'கெட்ட' என்னும் பொருளில் வரும் உருபன் ஆண்பாலில் /movez/ என்றும் பெண்பாலில் /movɛ/ என்றும் வருகின்றன. இவ்வாறே கீழ்வருவனவும் உள்ளன:

ஆண்பால்	பெண்பால்	
/movɛz/	/move/	'கெட்ட'

/cerΦz/ /cerΦ/ ‘மகிழ்ச்சியான’

/šod/ /šo/ ‘சூடான’

/gras/ /gra/ ‘கொழுத்த’

/frɛš/ /frɛ/ ‘புதிய’

உருபன்களுக்கிடையிலான இடம்சார் உறவுகள்

உருபன்களுக்கிடையிலான இடம்சார் உறவுகளையும் (positional relationships of morphemes to each other) நாம் காணலாம். உருபன்கள் பின்வரும் இடம்சார் வகைகளைக் கொண்டுள்ளன: அடுத்தடுத்த (successive), உட்படுத்தப்பட்ட (included), உடனிகழ்வான (simultaneous).

உருபன்கள் ஒன்றையொன்று அடுத்துவரும் என்பதை முன்னர் பார்த்தோம். சில உருபன்கள் உட்படுத்தப்பட்ட இடத்தில் வரும்; இது பகுதி நிலையிலோ முழு நிலையிலோ நேரும். எடுத்துக்காட்டாக ஸோக்யு (Zoque) மொழியில் hay ’பயன்/benefactive’ என்ற உருபனும் pa ‘நிகழ்காலம்’ என்ற உருபனும் hapya என்ற வரிசையில் வரும். இங்கு ஒவ்வொரு உருபனும் ஒன்றிற்குள் ஒன்று பகுதிநிலையில் உட்படுத்தப்பட்டு வருகின்றன. மாறாக உள்ளொட்டுகள் பிற உருபன்களில் முழுவதும் உட்படுத்தப்பட்டு வரும். (பார்க்க செருகல் ஒட்டுகள், உள்ளொட்டுகள், ஓர ஒட்டுகள்).

மீக்கூறு உருபன்கள் எப்போதும் சில கூறு அலகுகளுடன் ஒரே நேரத்தில் நிகழும். சில சமயங்களில் கூறு ஒலியன்களைக் கொண்ட உருபன்கள் பகுதி அல்லது முழுமையான ஒரே நேரத்தில் நிகழ்வைக் கொண்டிருக்கலாம். எடுத்துக்காட்டாக, ஆங்கில வடிவத்தில் /miyčuw/, /miyt yuw/ meet you என்பதன் விருப்ப மாறுபாடாக வரும், ஒலியன்/č/ என்பது உண்மையில் இரண்டு உருபன்களின் ஒரு பகுதியாகும், அதில் /t/ மற்றும் /y/ உருபன்களின் அடிப்படை வடிவங்கள் ஒன்றிணைந்து, மற்றொரு ஒலியன் அவற்றின் இடத்தைப் பிடித்துள்ளது. /kišuw, hičuw, bəžuw, liyǰuw/ kiss you, hit you, buzz you, lead you போன்ற தொடர்களை விவரிப்பதில், நாம் வழக்கமாக /kis = kiš, hit = hič-, bəz = bəž-, liyd = liyǰ-/ மற்றும் /yuw = -uw/ போன்ற மாற்றுக்களைப் பட்டியலிடுவோம், பின்னர் அவை நிகழும் சூழ்நிலைகளை விவரிப்போம். நாம் கோட்பாட்டளவில், மாற்றுருபன்களை /kis = ki-, hit =hi-, bəz, = bə-, liyd = liy-/ மற்றும் /yuw = -šuw = čuw = -žuw =-ǰuw/ என பட்டியலிடலாம், ஆனால் நாம் வழக்கமாக இந்த வகை பிரித்தலைத் தவிர்க்கிறோம், ஏனெனில் இது மிகவும் மோசமான விளக்கத்தை உருவாக்குகிறது.

மாற்றுருபன்களின் குறியீட்டில் நாம் சரியாக இருக்க வேண்டும் என்றால், அவற்றை /kis = kiš̲-, hit = hič̲-, bəz = bəž̲-, liyd <= liyǰ̲ -/ மற்றும் /yuw = (-šuw ~ -čuw ~ -žuw ~ -ǰuw)/ எனப் பட்டியலிடவேண்டும்; அடிக்கோடிடுதல் இரண்டு வெவ்வேறு உருபன்களின் மாரற்றுருபன்களால் பகிரப்பட்ட ஒலியன்களைக் குறிக்கிறது. இருப்பினும், பொதுவாக, பகுதியளவு ஒரே நேரத்தில் நிகழ்வது போன்ற விஷயங்களைக் குறிப்பிடாமல், மாரற்றுருபன்களை பட்டியலிடுவதை எளிதாகக் காண்கிறோம்.

முழுப்பிறழ்ச்சி /பதிலீடு

இது உருபனியலில் பயன் படுத்தப்படும் கலைசொல்லாகும். கேள்விக்குரிய உருபனியல் வடிவங்கள் பொருண்மை அடிப்படையில் உறவுள்ளவை என்றாலும் அவற்றின் ஒலியனியல் வடிவங்கள் முற்றிலும் வேறுபட்டு வேறு வேர்சொற்களிலிருது உருவாக்கப்படவை போல தோன்றும். எடுத்துக்காட்டாக ஆங்கிலத்தில் போ என்ற பொருண்மை கொண்ட go, went என்ற சொற்கள் ஒலியனியல் அடிப்படையில் முற்றிலும் வேறுபட்டவை. ஆனால் go என்பது நிகழ்காலத்தையும் went என்பது இறந்தகாலத்தையும் உணர்த்தி நிற்கும். இவற்றிகு இடையே walk, walked என்பனவற்றிற்கு இடையேயுள்ள ஒலியனியல்சார் வடிவ ஒற்றுமையைக் காண இயலாது. இத்தகைய முமையான மாற்றத்தை முழுப்பிறழ்ச்சி என்று கூறுவர். இது போன்று good, better, best என்பனவும் முழுப்பிறழ்ச்சிக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

ஆக்க ஒட்டு (Derivational Affix)

வர்ணனை மொழியியலில் ஒரு விகுதி இணைந்து ஒரு சொல்லிலிருந்து மற்றொரு சொல்லை உருவாக்குதல் ஆக்கம் எனப்படும். எடுத்துக்காட்டு ஆள் + சி > ஆட்சி: *சி* என்ற ஒட்டு *ஆள்* என்ற வினை அடியுடன் இணைந்து ஆட்சி என்ற பெயரை ஆக்கம் செய்யும். எனவே சி என்பது ஆக்க ஒட்டு என்று அழைக்கப்படும். இது போன்று பாடு என்ற அடிச் சொல்லுடன் *தல்* என்ற ஒட்டு இணைந்து *பாடுதல்* என்ற சொல் உருவாகிறது; *செய்* என்ற வினையிலிருந்து *செய்கை* என்ற பெயரை ஆக்குவதற்கு *கை* என்ற ஒட்டு பயன்படுகிறது. எனவே *தல், கை* என்பன பெயராக்க ஒட்டுகளாகும். பொதுவாக ஒரு சொல் வகையிலிருந்து மற்றொரு சொல் வகையை ஆக்குவதற்கு ஆக்க ஒட்டு பயன்படும்.

பூஜிய உருபு

உருபனியல் ஆய்விற்காக உருப்படுத்தம் செய்யப்படும் ஒரு வகை அருவத்தன்மையான உருபை பூஜிய உருபு என்பார். இதற்கு பொருண்மை உண்டு என்றாலும் வெளிப்படையான வெளிப்படுத்தம் இருக்காது. எடுத்துக்காட்டாக cat, cats, sheep என்ற சொற்களை எடுத்துக்கொள்வோம். cats என்பது cat என்பதன் பன்மை வடிவம். sheep என்பதன் பன்மை வடிவமும் sheep என்பதுதான். உருபனியல் சீரமைவுக்காக sheep என்ற பன்மை வடிவம் பூஜிய பன்மை உருபைக் கொண்டிருப்பதாக ஆயப்படும் (sheep+ϕ). (ϕ என்பது பூஜிய உருபின் குறியீடு) இத்தகைய வெளிப்படையாக உணர்த்தப்படாத ஆனால் உருபனியல் ஆய்வுக்குத் தேவையான உருபை பூஜிய உருபு என்கின்றோம். ஆங்கில மொழியில் நிகழ்கால வடிவத்தை ஒக்கும் put, hit, cut போன்ற இறந்தகால வடிவங்களை இறந்தகாலதைக் காட்டும் பூஜிய உருபைக் கொண்டிருப்பதாக ஆய இயலும்: put+ϕ, hit+ϕ, cut+ϕ.

உருபன்களின் வருகைமுறை

உருபன்களின் வருகைமுறையின் முக்கியத்துவம்

மொழியின் ஆய்வில் நாம் இரண்டு பண்புக்கூறுகளைக் கருத்தில் கொள்கின்றோம்: (1) உருபன் தெரிவடைவு (morphemic inventory) (இருக்கிற உருபன்கள்) (2) அவற்றின் வருகைமுறை (distribution). ஒரு மொழியில் இலக்கணம் எவ்வகையிலான உருபன்கள் சேர்ந்துவரும் என்பதை விளக்கும். பொதுவாக இந்த இணைப்பாக்கங்கள் சொற்களால் அமைததென்றால் அவை உருபனியலில் விளக்கப்படும். அவை தொடர்களால் அமைந்ததென்றால் அவை தொடரியலில் விளக்கப்படும். ஒரு மொழியில் உருபன்களின் வகைகளின் விளக்கம் ஒத்தறி அடிப்படையில் இந்த உருபன்கள் வரும் பொருண்மைசார் கட்டுமானங்களின் விளக்கத்தை விட எளிது.

ஒவ்வொரு மொழிக்கும் உருபன்களைச் சேர்ப்பதற்கு வேறுபட்ட ஒழுங்குமுறைகள் உள்ளன; ஒழுங்குமுறைக்குள் கடினமான கட்டுப்படுகள் உள்ளன. தொடரியரில் ஒழுங்குமுறையில் இந்தக் கட்டுப்பாடுகள் ஒத்தறி அடிப்படையில் நெகிழ்வானவை. நாம் கண்ணன் புத்தகம் படித்தான், புத்தகம் கண்ணன் படித்தான் என்று வேறுபட்ட வரிசைமுறையில் கூற இயலும். ஆனால் பெரும்பாலான மொழிகளில் உருபனியல் ஒழுங்குமுறையில் உருபன்களின் வரிசைமுறை கலவைத்தன்மையான அமைப்பைக் கொண்டிருக்கின்றது. ஆங்கிலத்தில் formalizers > form-al-iz-er-s என்பது form, al, iz, er, s என்ற ஐந்து உருபன்களைக் கொண்டுள்ளது. இவற்றில் ஒன்றின் வரிசைமுறையை மாற்றினல் பொருண்மையில்லாது போகும். எடுத்துக்காட்டாக *formizalers என்பது எந்த பொருளையும்

தராது. தமிழில் *படிப்பித்தான்* (*படி-ப்பி-த்த்-ஆன்*) என்ற சொல் *படி, ப்பி, த்த், ஆன்* என்ற நான்கு உருபன்களைக் கொண்டுள்ளது; இதில் ஒரு உருபனை மாற்றினாலும் சொல் பொருளற்றுவிடும்: எ.கா. *படித்த்ப்பிஆன்*, *படிஆன்ப்பித்த்*. சில மொழிகளில், எடுத்துக்காட்டாக எஸ்கிமோ, டர்கிஷ், தமிழ் போன்ற மொழிகளில் வேர்கள் முதலாவது வரும் மற்றும் எல்லா கட்டுருபனும் பின்னொட்டாக வரும். வேறு சில மொழிகளில் கட்டுருபன்கள் பொரும்பான்மையும் முன்னொட்டுகளாக வரும். நவஹொ என்ற மொழியில் முற்றுவினையில் வரும் எல்லா கட்டுருபன்களும் முன்னொட்டுகளாக வரும். முக்கியமாக அல்லது பிரத்தேகமாக முன்னொட்டு அல்லது பின்னொட்டு அமைப்பைக் கொண்ட ஒட்டுமொழிகள் முன்னொட்டுகளையோ பின்னொட்டுகளையோ கொண்டிருக்கும். முன்னொட்டுகளையோ பின்னொட்டுகளையோ கொண்ட மொழிகளில் சில குறிப்பிட்ட வகைப்பாடுகள் முன்னொட்டுகளாலும் பிற பின்னொட்டுகளாலும் வெளிப்படுத்தப்படும். (நைட்டா, 1946:80).

உருபன்களின் வருகையின் விளக்கம் எளிதல்ல மற்றும் இதில் பல காரணிகள் உள்படும். அவை பின்வரும் பகுதிகளில் விளக்கப்படும்: வருகைமுறை அடிப்படையில் நிறுவப்படும் உருபன்களின் வகைகள், (2) உருபன்கள் முறையாக இணையும் வழிகள், (3) அண்மை உறுப்புகள் அடிப்படையில் வருகைமுறை சூழலின் பொருத்தம்/இயைபு (4) வேறுபட்ட அண்மை உறுப்புகளில் இணைப்பாக்கங்களிலிருந்து விளையும் உருபனியல்சார் அமைப்புகள், (5) தொடக்கநிலை அமைப்பு அடுக்குகள்,(6) உருபனியல் அமைப்புகளின் எல்லைகள்.

வருகைமுறை அடிப்படையில் நிறுவப்படும் உருபன்களின் வகைகள்

உருபனின் வருகைமுறைகள் உருபன்களின் பல வகுப்புகளையும் மற்றும் உருபன்களின் இணைப்பாக்கங்களையும் வேறுபடுத்துகின்றது: (1) கட்டுருபன்களும் (bound morphemes) அதற்கு மாறான கட்டிலா உருபன்களும் (free morphemes), (2) வேர்களும் (roots) அதற்குமாறான வேரல்லாதவைகளும் (non-roots) (3) வேர்களும் அதற்கு மாறான அடிகளும் (stems), (4) மைய உருபன்களும் (nuclear morpheme) அதற்கு மாறான புற உருபன்களும் (peripheral morphemes), (5) ஒரேவரிசைமுறைகளும் (same order) அதற்கும் மாறான வேறுபட்ட வரிசைமுறைகளும் (different order), (6) ஒன்றுக்கொன்று/பரஸ்பரம் தனித்துநிற்பவை (mutually exclusive) (7) கட்டாயமானவையும் (obligatory) அதற்கு மாறான கட்டாயமல்லாதவையும் (non-obligatory), (8) ஈற்று உருபன்களும் (closing) அதற்கு மாறான ஈறல்லா உருபன்களும் (non-closing).

கட்டுருபன்களும் (Bound Morpheme) தனி/கட்டில்லா உருபன்களும் (Free Morpgheme)

கட்டுருபன்கள் தனித்து வராது அதாவது இயல்பான கருத்தாடலில் தனியாக கூறப்படுவதில்லை. கட்டுருபன் என்பது தனித்து இயங்காமல் அதற்கு முன்னரோ பின்னரோ வரும் உருபன்களைச் சார்ந்தே மொழியில் வரும். அதாவது இதன் வருகை பிற உருபன்களால் கட்டுப்படுத்தப்படும். எடுத்துக்காட்டாக, இறந்காலத்தைக் குறிப்பிடும் *-த்த்-*, *-ந்த்-* (*படி-த்த்-ஆன், வ-ந்த்-ஆன்*) என்ற ஒட்டுக்களும் நிகழ்காலத்தைக் குறிப்பிடும் *-கிற்-, -கின்ற்-* (*படி-க்கிற்-ஆன், படி-க்கின்ற்-ஆன்*) என்ற ஒட்டுக்களும் எதிர்காலத்தைக் குறிப்பிடும் *-வ், -உம்* (*வரு-வ்-ஆன், வர்-உம்*) என்ற ஒட்டுக்களும், *அ* என்ற பெயரெச்ச ஒட்டும் (எ.கா. *ஓடிய* (*குதிரை*)) தனியாக வராது; ஒரு வினையுடன் சேர்ந்தே வரும். எனவே அவை கட்டுருபன்கள் எனப்படும். இவ்வகையிலான கட்டுருபன்கள் முன்னொட்டுகள், பின்னொட்டுகள், மேலொட்டுகள், இடையொட்டுகள், பதிலி உருபன்கள், குறை உருபன்கள், சில வேர்கள், இவற்றை உள்ளடக்கும்.

தனி அல்லது கட்டில்லா உருபன்கள் தனியாக வரும். அவை ஒரு கூற்றில் தனித்து பயின்று வரும். அவை அதற்கு முன்னரோ பின்னரோ வரும் உருபன்களைச் சார்ந்து வராமல் தனித்து வரும். அதாவது இதன் வருகை பிற உருபன்களால் கட்டுபடுத்தப்படாமல் தனிச் சொல்லாக வரும். இவை பிற உருபன்களின் துனையின்றி தனித்து இயங்கி வருவதால் தனி அல்லது கட்டில்லா உருபன்கள் எனப்படும். எடுத்துக்காட்டாக *நட, போ, வா, செல், மரம், செடி, மண், பூ* போன்ற சொற்கள் கட்டில்லா உருபன்களாகும். இவ்வுருபன்கள் தனித்து மொழியில் பயின்று வரும். அவை எப்போதும் ஒரு வேரைக் கொண்டிருக்கும்.

வேரை மட்டும் அல்லது வேரையும் வேறு உருபன்களையும் கொண்டுள்ள அடிகள் வரையறை விளக்கப்படி கட்டுண்டவை ஆகும். எடுத்துக்காட்டாக ஆங்கிலத்தில் –ceive (from receive), recep- (from reception), *manli-* (from *manliness*), *formalize-* (from *formalizer*) என்பன அடிகளாகும் மற்றும் கட்டுண்டவைகளாகும். /mænliness/ என்பதிலுள்ள /mænli-/, /*fowrmǝlyzer*/ என்பதிலுள்ள /*fowrmǝlyz-*/ என்பன அவற்றுடன் தொடர்புடைய தனிவடிவங்களிலிருந்து வேறுபடும்; ஏனென்றால் அவை பின்னர் வரும் விட்டிசையைக் (-) கொண்டிருக்கும். /*mænli-*/, /*fowrmǝlyz-*/ என்பன சாத்திய அளவில் கட்டில்லாதவை/தனியானவை; ஆனால் இணைப்பாக்கங்களில் (/*mænliness*/, /*fowrmǝlyzer*/) அவை உண்மையில் கட்டுண்டவை. எனவே சாத்திய அடிப்படையில் தனியானவை (potentially free), உண்மையில் தனியானவை (truly free), கட்டுண்டவை (bound)

என்பதற்கிடையில் வேறுபாடு செய்யவேண்டும். எடுத்துக்காட்டக *பூ* என்பது *அது பூ* என்ற கூற்றில் தனியானது; ஆனால் *அது பூக்கள்* என்ற கூற்றில் சாத்திய அடிப்படையில் தனியானது. நாம் தனி உருபன்களை கட்டு உருபன்களிடமிருந்து வேறுபடுத்துவதால் குறிப்பிட விரும்புவது வடிவங்களின் சாத்தியமான கட்டில்லமை; அவற்றின் உண்மையான கட்டில்லா/தனியான வருகை அல்ல. சில உருபன்கள் எப்பொதும் கண்டுண்டவை; எடுத்துக்காட்டாக *வருதல்* என்பதிலுள்ள *வரு-*, *–தல்*, *வருகை* என்பதிலுள்ள *கை*. *செந்தாமரை* என்பதிலுள்ள *செம்*, *நல்வாழ்த்து* என்பதிலுள்ள *நல்* என்பன கட்டுருபன்களாகும். *நான்* என்பது 'நான்' என்பதன் கட்டிலா மாற்றுருபு; (எனக்கு என்பதிலுள்ள) *என* கட்டு மாற்றுருபு.

வேர்களும் வேரல்லாதனவும் (roots and non-roots)

வேர்கள் சொற்களின் கருக்களைக் (மையங்களைக் (cores)) கொண்டிருக்கும். ஒரு சொல்லில் ஒன்றிற்கும் மேற்பட்ட வேர்கள் இருக்கலாம். எடுத்துக்காட்டாக வரிக்குதிரை, காட்டுப்பூனை, ஆண்குழந்தை என்பன இரண்டிரண்டு வேர்களைக் கொண்டுள்ளன. சில வேர்கள் பிரத்தேகமான நேர்வுகளைக் கொண்டிருக்கும். எடுத்துக்காட்டாக cranberry என்பதிலுள்ள cran எந்த பிற சொற்களின் கருவையும் கொண்டிருக்கவில்லை; ஆனால் இது வேர்கள் இருக்கும் இடத்தில் வரும்; எடுத்துக்காட்டாக redberry, blueberry, blackberry, strawberry என்பனவற்றில் இரண்டு கருக்கள் வரும்; முதல் கரு வரும் இடத்தில் cran என்பது வருகின்றது. உருபன்களின் பிற வருகைமுறைசார் வகைகள் வேரல்லாதன ஆகும்.

வேர்களுக்கும் வேரல்லாதனவற்கும் இடையில் வேறுபாட்டைக் காண்பது எப்போதும் எளிதன்று. இதன் காரணம் என்னவென்றால் சில வேர்கள் வேரல்லாதனவாக மாறும்; வேரல்லாதன வேர்களாகவும் மாறும். எடுத்துக்காட்டாக formalism, pragmatism, facism, communism என்ற சொற்களில் காணப்படும் வேரல்லா உருபனான -ism என்பது முழு வேராக மாறியுள்ளது: எ.கா. I'm disgusted with all these isms. மறுதலையாக like என்பது -ly என்ற கட்டுருபனாக மாறியுள்ளது. வரலாற்று அடிப்படையில் man-like என்பது manly என்று மாறியுள்ளது; இருப்பினும் man-like என்பது திரும்பவும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றில் சிக்கல் இல்லை ஏனென்றால் like என்பதற்கும் –ly என்பதற்கும் இடையில் கருத்தக்க ஒலியியல்சார்-பொருண்மையியல்சார் ஒற்றுமை இல்லை; எனவே அவை இரண்டு உருபன்களாகக் கருதப்படும். ஆனால் disgraceful, bucketful என்ற சொற்களை எடுத்துக்கொண்டால் அவற்றிலுள்ள -ful என்பது வேருருபனான full என்பதுடன் ஒலியியல்சார்-பொருண்மையியல்சார் ஒற்றுமையைக் கொண்டுள்ளதை காண்கின்றோம்.

உண்மையில் மூன்று மாற்றுருபுகள் உள்ளன: (1) full /fə́l/ (2) pailful /péyl-fə̀l/, bucketful /békət-fə̀l/ என்ற எடுத்துக்காட்டுகளில் உள்ளது போன்று முன்னர் வரும் திறந்த விட்டிசை கொண்ட சொல்லுடன் இணையும் இரண்டாம் உருபனியல்சார் அழுத்தம் உள்ள /fə̀l/ (3) disgraceful /disgrésfəl/ போன்ற எடுத்துக்காட்டுகளில் உள்ளது போன்று மூடிய விட்டிசை கொண்ட சொல்லுடன் இணையும் பூஜிய அழுத்தம் கொண்ட /fəl/. முதல் மாற்றுருபு தொடரியல் கட்டுமானங்களில் வருகின்றன; இரண்டாவது மாற்றுருபு கூட்டாக்க வேர்கள் இணைவது போன்று இணைகின்றன. ஆனால் மூன்றாவது மாற்றுருபு பின்னொட்டுகள் செய்யும் முறையான மற்றும் அமைப்பு பாணியில் இணைகின்றன; எனவே அது பின்னொட்டாகும். இரண்டாம் மாற்றுருபின் இணைப்பாக்கங்கள் பெயர்களாக விளையும்: எ.கா. bucketful, handful, cupful, spadeful (எடுத்துக்காட்டான வேர்+வேர் இணைப்பாக்கம்); மாறாக மாற்றுருபு மூன்றின் இணைப்பாக்கங்கள் பெயரடைகளாக விளையும்: எ.கா. plentiful, bountiful, careful, tasteful, spiteful (எடுத்துக்காட்டான வேர்+வேரல்லாதன இணைப்பாகம்).

வேர்களை கண்டுபிடிக்கும் காரணிகள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

1. வரும் இடங்கள்: எ.கா. எஸ்கிமோ, டர்கிஷ் போன்ற மொழிகள்
2. சில மீக்கூறுசார் பண்புக்கூறுகளுடன் வருவது: வேர்கள் பெரும்பாலும் பிற உருபன்களிலிருந்து வேறுபட்ட அழுத்தம் அல்லது சுரம் இவற்றின் சிறப்பான மீக்கூறுசார் பண்புக்கூறுகளைக் கொண்டிருக்கும்.
3. வேறுபட்ட விட்டிசை எல்லைகளுடன் வருவது: full மற்றும் disgraceful என்ற சொல்லில் வரும் பின்னொட்டு –ful.
4. புள்ளியியல் அடிப்படையிலான நிகழ்வெண்: கட்டு வடிவங்களை விட வேர்கள் அதிகமாக இருக்கும்; அதாவது உருபனியல் அடிப்படையிலான பட்டியல்; சூழல்களில் வருவதால் அல்ல.
5. அமைப்பின் இணையான தன்மை: பெரும்பாலான உருபனியல்சார் கட்டுமானங்களைக் கண்டுபிடித்துவிட்டு, ஐயம் உள்ளவற்றை இதே அமைப்பொழுங்குகளை வேர்களையும் வேரரல்லாதவனவற்றையும் கண்டுபிடிக்கப் பயன்படுத்தலாம்.
6. பொருண்மை: வேர்கள் (அல்லது கூட்டுகளில் உள்ள வேர்கள்) பெரும்பான்மையும் (ஆனால் எப்போதும் அல்ல) முக்கியமான அர்த்தத்தைக் கொண்டிருக்கும்.

வேர்களும் அடிகளும் (roots and stem)

எல்லா கட்டுண்ட வேர்களும் அடிகளாகும்; ஆனால் எல்லா அடிகளும் (அவை எல்லாம் கட்டுண்டவை) வேர்கள் அல்ல. ஒரு அடி ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட கருக்களைக் கொண்டிருக்கும் அல்லது ஒரு கருவையும் 'அமைப்பு அடிப்படையில் சேர்க்கப்பட்ட' ஒரு சொல்லை விளைவிக்கும் இறுதி உருபன் தவிர பிற வேரல்லாத உருபன்களைக் கொண்டிருக்கும். அடிச்சொல் வேர்ச்சொல்லாகவும். எடுத்துக்காட்டாக தமிழில் *படித்தான்* என்பதிலுள்ள *படி-* என்பதும் *வாங்குகிறான்* என்பதிலுள்ள *வாங்கு* என்பதும் ஒரே நேரத்தில் வேராகவும் அடியாகவும் இருக்கும். *படிப்பித்தான்* என்பதில் *படிப்பி* என்பதும் *வருவித்தான்* என்பதிலுள்ள *வருவி* என்பதும் வேரும் இயக்குவினையாக்கி உருபனும் (*பி, வி*) சேர்ந்த அடியாகும், ஆனால் ஒரு தனி வேரல்ல. *வைரக்ககம்மல்* என்பது *வைரக்கம்மலை* என்பதன் அடியாகும்; ஆனால் இது ஒரு தனி வேர் அல்ல; *வைரம், கம்மல்* என்ற இரு வேர் உருபன்களைக் கொண்டுள்ளது. ஆங்கிலத்தில் manly என்பதிலுள்ள man- என்பது ஒரே நேரத்தில் ஒரு வேராகவும் அடியாகவும் வரும். breakwater என்பது breakwaters என்பதன் அடியாகும்; ஆனால் இது ஒரு தனி வேர் அல்ல; break, water என்ற இரண்டு வேர் உருபன்களைக் கொண்டுள்ளன. ability என்பதில் /əbíl-/ என்பது வேர் உருபனின் ஒரு கட்டுண்ட மாற்றுருபாகும்: /éybəlᵊ əbíl-/. men's என்பது ஒரு அடியாக வராது; ஏனென்றால் -s என்ற கிழமை வேற்றுமை உருபன் ஆங்கில மொழியில் எந்த உருபனியல் கட்டுமானத்தையும் மூடிவிடும் (இறுதியுறச்செய்யும்).

சில கருக்கள் இரு கூறுகள் கொண்டதாக உள்ளன, அவை சார்ந்த கரு-கருஅல்லாத உட்கூறுகளை உள்ளடக்கியது. எடுத்துக்காட்டாக, /hippopotamos/ 'hippopotamus (lit. horse-river)' என்ற கிரேக்க வார்த்தையின் கரு, (l) வேர் /hipp-/ (cf. /hippikos/ 'horsey') மற்றும் அதன் பகுதி உருவாக்கி -o மற்றும் (2) வேர் /potam-/ (cf. /potamios/ adj. 'ஒரு நதி') மற்றும் அதன் பகுதி உருவாக்கி - o. இறுதி பின்னொட்டு -s கலவையில் சேர்க்கப்பட்டது. ஒரு வேர் மற்றும் வேரல்லாதது (ஒரு கரு மற்றும் அணு அல்லாத) ஆகியவற்றைக் கொண்ட கட்டுமானம் /hippo-/ ஒரு கரு அல்ல. கட்டுமானம் /potamo-/ இதேபோல் ஒரு கரு அல்ல, ஆனால் /hippopotamo-/ கலவையானது இருதரப்பு அணுக்கருவை உருவாக்குகிறது. பிரிவு 4.4 இல், அண்மை உறுப்புகளை நாம் பரிசீலித்த பிறகு, அத்தகைய பிரிவின் முக்கியத்துவம் இன்னும் தெளிவாகத் தெரியும்.

கருவும் கருவல்லாதனவும் (nuclei and non-nuclei)

ஒரு உருபனியல்சார் கட்டுமானத்தில் கரு என்பது ஒரு வேரையோ வேர்களின் (சம்பந்தப்பட்ட வேர்களுக்கு அடைமொழியாய் வரும் சாத்தியமான வேரல்லாதனவையையும் உட்படுத்திய) இணைப்பாக்கத்தையோ கொண்டிருக்கும். கருவல்லாதன வேரல்லதனவற்றால் ஆனதாகும். *குழந்தைதனம்* என்ற கட்டுமானத்தில் *குழந்தை* என்ற கூறு கருவாகும் *-தனம்* என்பது கருவல்லாததாகும். *தங்கக்கம்பிகள்* என்பதில் *தங்கக்கம்பி* என்பது கருவாகும்; இது *தங்கம்*, *கம்பி* என்ற இரண்டு வேர்களைக் கொண்டது.

சில கருக்கள் இருபகுதிகளைக் கொண்டன; சார்திருக்கும் கரு-கருவல்லாதது உட்படுத்திய உறுப்புகளைக் கொண்டிருக்கும். எடுத்துக்காட்டாக கிரேக்கச் சொல்லான /hippopotamos/ 'hippopotamus' ('horse-river') என்பது /hipp/ என்ற வேரையும் அதன் அடி வடிவாக்கி -o என்பதையும் /potam/ என்ற இரண்டாவது வேரையும் அதன் வடிவாக்கி -o என்பதையும் , -s என்ற இறுதி பெயர்திரிபாக்கப் பின்னொட்டையும் கொண்டிருக்கின்றது. ஒரு வேரையும் ஒரு வேரல்லாததையும் (அதாவது ஒரு கருவையும் கருவல்லாததையும் கொண்டிருக்கின்ற /hippo/ என்பது கருவல்ல. இதுபோன்று /potamo/ ஒரு கருவல்ல; ஆனால் /hippopotamo/ என்ற இணைப்பாக்கம் ஒரு இரண்டாகப் பிரிக்கவியலும் கருவைக் கொண்டிருக்கின்றது. இந்தக் கூறுபடுத்தலின் முக்கியத்துவம் நாம் அண்மை உறுப்பாய்வைக் கருத்தில் கொள்ளும்போது வெளிப்படையாகத் தெரியும். தமிழில் *செடிகொடிகள்* என்பது *செடி*, கொடி என்ற இரு வேர்கள் கொண்ட கரு ஆகும். இதில் –கள் என்ற ஒட்டு வேரல்லாதது ஆகும்.

ஒரு கரு மூப்பகுதிகள் கொண்டதாகவும் இருக்கலாம். எடுத்துக்காட்டாக mu.amu.amu.a 'தொடர்ச்சியாகவும் விரைவாகவும் உயர்ந்து தாழ்' என்ற ஸான் ப்ளாஸ் சொல் மூன்று ஒத்த வேர்களைக் கொண்டது. இங்கு கரு ஒரு சொல்லாகும். ஒற்றுமையலாத வேர்கள் கொண்ட முப்பகுதிக் கருக்கள் அரிதானவை: எ.கா. foot-pound-sedond 'அளவு அலகு' fanco-anglo-américaine 'பிரஞ்சு ஆங்கில அமேரிக்க அறிவிப்பு' rouge-blanc-bleu 'சிவப்பு வெள்ளை நீலக் கொடி', suouetaur(illa) (லத்தீன் மொழி) 'பன்றி ஆடு காளை பலி'. தமிழில் *சேரசோழபாண்டியர்* ('மூவேந்தர்') என்பது முப்பகுதிகள் (மூன்று வேர்கள்) கொண்ட ஒரு கருவாகும் .

கருசார் அமைப்புகளும் புற அமைப்புகளும் (nuclear and peripheral structures)

கருசார் அமைப்பு கருவைக் கொண்டிருக்கும்; அல்லது ஒரு துணைநிலை உள்வட்டக்கட்டின் (subordinate endocentric construction) தலைமையாக அமையும். புற உருபன் பெரும்பான்மையும் ஒரு வேரல்லாத்ததைக் கொண்டிருக்கும் மற்றும் கருசார் உறுப்பின் வெளியே இருக்கும். formal என்ற சொல்லில் form என்பது கருசார் கூறாகும் al என்பது புற உறுப்பாகும்; formalize என்ற சொல்லில் கருசார் அமைப்பு formal என்பதாகும்; ize என்பது புற உறுப்பாகும். இது போன்று formalizer என்பதில் formalize என்பது கருசார் உறுப்பாகும்; er என்பது புறக் கூறாகும். 'கருசார்', 'புற' என்பன அண்மை உறுப்புகளின் பெரியர்களாகும்.

/hippopotamos/ என்ற சொல் [(N+P) + (N+P) = N]+P என குறியீடுகளால் குறிப்பிட இயலும் அமைப்பைக் கொண்டுள்ளது; இதில் N என்பது கருசார் என்பதையும் P என்பது புற என்பதையும் குறிப்பிடும். Nஇன் முதல் இரு நேர்வுகளில் கருசார் கூறு கருவாகவும் வேராகவும் அமையும்; இது தற்போதைய சிக்கலுக்கு ஏற்புடையதல்ல.

ஒரே நிரலின் உருபன் மற்றும் வேறு நிரலின் உருபன் (Morpheme of the same order and morpheme of the different order)

சொற்களின் அமைப்பில் நாம் ஒரே நிரலில் வரும் உருபன்களையோ வேறுபட்ட நிரலில் வரும் உருபன்களையோ கண்டுகொள்வோம். பின்வரும் வாக்கியங்களைக் கருத்தில் கொள்ளவும்

நான் கண்ணாடியில் என்னப் பார்த்தேன் (பார்-த்-ஏன்)

நீ கண்ணாடியில் உன்னப் பார்த்தாய் (பார்-த்-ஆய்)

அவன் கண்ணாடியில் அவனைப் பார்த்தான் (பார்-த்-ஆன்)

அவள் கண்ணாடியில் அவளைப் பார்த்தாள் (பார்-த்-ஆள்)

அவர் கண்ணாடியில் அவரைப் பார்த்தார் (பார்-த்-ஆர்)

மேற்கண்ட வாக்கியங்களில் எழுவாய் மாற்றுப்பெயர்கள் *நான், நீ, அவன், அவள், அவர்* என்பன ஒரே நிரலைச் சார்ந்தன. எனவே அவை ஒரு குறிப்பிட்ட சொல் வகுப்பைச் சாரும். அவை ஒரே நிரலைச் சாரும் இறந்தகால உருபன்களோடும் ஒரே நிரலைச் சாரும் செயப்படுபொருள்சார் மாற்றுப்பெயர்களோடும் முரண்பட்டு வரும். *நான், நீ, அவன், அவள்,*

அவர் என்ற எழுவாய் மாற்றுபெயர்கள் ஒரே நிரலைச் சாரும். இது போன்று *என்-, உன்-, அவன்-, அவள்-, அவர்-* என்ற செயப்படுபொருள்சார் மாற்றுப்பெயர்கள் ஒரே நிரலைச் சாரும். இது போன்று *ஏன், ஆய், ஆன், ஆள், ஆர்* என்பன ஒரே நிரலைச் சாரும். *நான், நீ* என்பன ஒரே நிரலைச் சாரும்; ஆனால் *நான்* என்பதும் -த்- 'இறந்தகாலம்'-உம் வேறுபட்ட நிரலைச் சாரும். இதுபோன்று *நீ* என்ற எழுவாய் மாற்றுப்பெயர் செயப்படுபொருள் மாற்றுப்பெயர் *உன்* என்பதிலிருந்து நிராலால் வேறுபடுவன.

ஒன்றுக்கொன்று தனிப்பட்ட உருபன்கள் (mutually exclusive morphemes)

ஒரே நிரலைச் சார்ந்த உருபன்கள் எப்போதும் ஒன்றுக்கொன்று தனிப்பட்டவை. வேறுபட்ட நிரலைச்சார்ந்த உருபன்களும் ஒன்றுக்கொன்று தனிப்பட்டவை. எடுத்துக்காட்டாக *நான், நீ, அவன், அவள், அவர்* என்பன ஒன்றுக்கொன்று தனிப்பட்டவை. இது போன்று *என்-, உன்-, அவன்-, அவள்-, அவர்-* என்பன ஒன்றுக்கொன்று தனிப்பட்டவை. இது போன்று *ஏன், ஆய், ஆன், ஆள், ஆர்* என்பன ஒன்றுக்கொன்று தனிப்பட்டவை.

ஒன்றுக்கொன்று கட்டாய உருபன்கள் (Mutually obligatory morphemes)

ஒரு உருபனின் வருகை/நேர்வு மற்றொரு உருபனின் வருகையை/நேர்வை வேண்டினால் அவை ஒன்றுக்கொன்று கட்டாய உருபன்கள் எனலாம். ஓர் உருபனியல் அமைப்பில் கட்டாயமாக அமைய வேண்டிய உருபன் கட்டாய உருபன் (Obligatory Morpheme). எனப்படும். எடுத்துக்காட்டாக, *நான் படித்தேன்* (*படி+த்த்+ஏன் + படித்தேன்*) என்ற வாக்கியத்தில் *ஏன்* என்ற உருபன் கட்டாயமாக வரவேண்டும். எனவே *-ஏன்* என்பது கட்டாய உருபன் என அழைக்கப்படும். இது போன்று *நாங்கள் செய்தோம்* (*செய்+த்+ஓம்= செய்தோம்*) என்ற வாக்கியதில் *-ஓம்* என்பது கட்டாய உருபனாகும். வடிவுகள் எல்லா சூழல்களிலும் ஒன்றுக்கொன்று கட்டாய உருபன்கள் என்றால் அவை ஒரு தனியான தொடரா உருபனை உருவாக்கும். எடுத்துக்காட்டாக தமிழில் சமைநிலை இணப்புக் கிளவியான *-உம்* சமநிலைக் கட்டுமானத்தின் உறுப்புகளின் இறுதியில் கட்டாயமாக வரும். இது போன்று பிரிநிலை கிளவியான *-ஓ* என்பதும் பிரிநிலைக் கட்டுமானத்தின் உறுப்புகளின் இறுதியில் கட்டாயமாக வரும். உம்...உம், ஓ...ஓ என்பன தொடரா உருபன்களாகும்.

அவனும் (<அவன்-உம்) அவளும் (<அவள்-உம்) வருவார்கள்.

அவனோ (<அவன்-ஓ) அவளோ (<அவள்-ஓ) வருவார்கள்.

இருப்பினும் சில வடிவங்கள் ஒன்றுகொன்று கட்டாயமாக சில கட்டுமானங்களில் வரும், ஆனால் எல்லாவற்றிலும் அல்ல.

கட்டாய உருபன்களும் (obligatory morphemes) கட்டாயமில்லா உருபன்களும் (Nonobligatory Morpheme)

ஒரு அமைப்பு வகுப்பில் குறிப்பிட்ட சில உருபன்கள் கட்டாயாமாகவும் சில கட்டாயமில்லாமலும் வரும். ஒரு உருபனியல்சார் அமைப்பில் ஓர் உருபன் வர வேண்டும் என்று கட்டாயம் எதுவும் இல்லாமல் இருப்பது கட்டாயமில்லாமை எனப்படும். இத்தகைய உருபன்கள் வந்தாலும் வராவிட்டாலும் பொருள் மாறுபாடு எதுவும் தோன்றுவதில்லை. எனவே இதனை கட்டாயமில்லா உருபன் என்று கூறலாம். *எடுத்துக்காட்டாக அது எனது(<என்+அது) புத்தகம், அது என்னுடைய (<என்+உடைய) புத்தகம், அது என் புத்தகம்* என்ற வாக்கியங்களை எடுத்துக்கொண்டால், மூன்றாவது வாக்கியம் உடைமை வேற்றுமை உருபு *உடைய என்பதோ அது* என்பதோ இல்லாது வருகின்றது. இவ்வாறு கட்டாயமின்றி வரும் உருபன் கட்டாயமில்லா உருபன் எனப்படும்.

ஈற்று உருபன்களும் ஈறலா உருபன்களும் (Closing and non-closing morphemes)

சில உருபன்கன்கள் மேலும் வடிவாக்கத்தை (ஒட்டாக்கத்தை) அனுமதிக்காமல் கட்டுமானத்தை மூடிவிடும்/முற்றுறச்செய்யும். அவை ஈற்று உருபன்கள் என்று அழைக்கப்படும். மாறாக சில உருபன்கள் மேலும் ஒட்டாக்கத்தை (வடிவாக்கத்தை) அனுமதிக்கும். அவை ஈறல்லா உருபன்கள் எனப்படும். எடுத்துக்காட்டாக ஆங்கிலத்தில் கிழமை வேற்றுமை பின்னொட்டு தொடர்புடைய பெயரை மேலும் பின்னொட்டாக்கம் செய்ய இயலாமல் மூடிவிடும் (எ.கா. boy's, men's). எந்த பின்னொட்டும் கிழமை வேற்றுமைப் பின்னொட்டிற்குப் பின் வராது. எனவே கிழமை வேற்றுமைப் பின்னொட்டு ஈற்று உருபனாகும். ஆனால் ஒருமை வடிவங்களான boy, girl என்பான பன்மை ஒட்டாக்கத்தை (boys, girls) அனுமதிக்கும். எனவே இவை ஈறல்லா உருபன்களாகும். தமிழ் வினைமுற்று வடிவங்களான *படித்தேன்* (*படி-த்த்-ஏன்*), *படித்தாய்* (*படி-த்த்-ஆய்*), படித்தான் (படி-த்த்-ஆன்), படித்தாள் (*படி-த்த்-ஆள்*), *படித்தார்* (*படி-த்த்-ஆர்*) என்பதை எடுத்துக்கொண்டால் வினைமுற்று விகுதிகளான *-ஏன்* (தன்மை ஒருமை வினைமுற்று விகுதி), *-ஆய்* (முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி), *-ஆன்* (ஆண்பால் படர்க்கை வினைமுற்று விகுதி), *-ஆள்* (பெண்பால் படர்க்கை வினைமுற்று விகுதி), *-ஆர்* (பலர்பால் படர்க்கை வினைமுற்று விகுதி) என்பன ஈற்று

உருபன்களாகும். படி என்ற வினை வேரும், -த்த்- என்ற இறந்தகாலப் பின்னொட்டும் ஈறல்லா உருபன்களாகும்.

சில மொழிகளில் ஈற்று உருபனின் வேறுபட்ட இரண்டு வகைகள் உள்ளன. எடுத்துக்காட்டாக *formalize*, *legalize* என்பன கூடு சொல்லாக்கத்திற்கு வேண்டி சொல்வடிவை இறுதியுறச்செய்யாது (எ.கா. *formalizer*, *legalization*) . ஆனால் பன்மை ஒட்டு –s சொல்லை *-ment*, -ity, *-ence*, *-ion*, *-ian*, *-ize*, *-er* என்பனவற்றால் கூடுதலான ஆக்கத்திற்கு அனுமதிக்காது.

உருபன்களின் முறையான இணைப்பாக்கம் (formal combination of morphemes)

உருபன்களியின் முறையான இணைப்பாக்கம் இரண்டு காரணிகளை உட்படுத்தும்: நிரல் (order), விட்டிசை எல்லை (juncture). வேறுபட்ட சாத்தியமான நிரல்கள் பற்றி ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளது. 'விட்டிசை எல்லை' உருபன்களுக்கு இடையில் வரும் விட்டிசை எல்லகள் இரண்டு வகையானது: (1) ஒலியனியல் சார்ந்தது (phonemic), (2) அமைப்புசார்ந்தது (structural).

உருபன் அடிப்படையில் ஏற்புடைய ஒலியனியல்சார் விட்டிசை எல்லைகளின் இரண்டு அளபுகள் உள்ளன: (1) திறந்த விட்டிசை எல்லை (open juncture), (2) மூடிய விட்டிசை (close juncture) எல்லை. திறந்த விட்டிசை எல்லை சொற்களுக்கு இடையில் வரும் இடைவெளியாகும்; மூடிய விட்டிசை எல்லை சொல்லுக்குள் வரும் இடைவெளியாகும். ஆங்கிலத்தில் recover 'மீள்', re-cover 'மீண்டும் மூடு' என்ற இரு சொற்கள் உள்ளன. அவை ஒலியனியல் அடிப்படையில் வேறுபட்டன. இந்த வேறுபாட்டை பின்வருமாறு குறியீட்டாக்கம் செய்யலாம்: (1) /rikə́vər/, (2) /rìy-kə́vər/. துல்லியமான ஒலியழுத்தம் முதன்மை அசையழுத்தத்தைக் காட்டும். கடும் துணைநிலை அசையழுத்தமும் இணைப்புக்குறியும் (-) திறந்த புடைப்பெயர்வைக் (open transition) குறிப்பிடும். உண்மையிலான ஒலியியல்சார் இடைவெளி (அதாவது ஒலியின் நிறுத்தம்) /rìy-kə́vər/ என்பதில் இல்லை; ஆனால் இணைப்புக்குறிக்கு முன்னர் வரும் ஒலியன்கள் /iy/ அதிக வலுவுடனும் சிறிது காலநீட்சியுடனும் உச்சரிக்கப்படும்; அதைத் தொடரும் மெய்யொலி வேறுபட்ட 'தாக்கத்தை' வெளிப்படுத்தும். நாம் ஒலியியல்சார் திறந்த மற்றும் மூடிய புடப்பெயர்வின் வகைகளுக்கும் திறந்த மற்றும் மூடிய விட்டிசை எல்லைகளுக்கும் இடையில் ஒன்றுக்கு ஒன்றான பொருத்தத்தைக் கருத இயலாது.

அமைப்பு அடிப்படையிலான விட்டிசை எல்லைகளுக்கு இரண்டு வகைகள் உள்ளன: (1) வெளிப்படையிலானது (overt), (2) உட்படையிலானது (covert).

வெளிப்படையான கட்டமைப்பு விட்டிசைகள் (Overt structural junctures) வரிசைகளின் வகைகளில் முறையான முரண்பாடுகளால் குறிக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, kingdom என்ற ஆங்கிலச் சொல்லில் /nd/ வரிசையானது கட்டமைப்பு அடிப்படையில் தனித்துவமானது, ஏனெனில் அது ஒரு ஒற்றை உருபனுக்குள் நிகழாது; மாறாக /nd/ வரிசை உருபனுக்குள் நிகழ்கிறது, எ.கா. sandy, landed. nn போன்ற ஒரு வரிசையும் கட்டமைப்பு அடிப்படையில் தனித்துவமானது. அத்தகைய கிளஸ்டருடன் எந்த ஒரு உருபனும் ஏற்படாது என்பதால், அது எப்போதும் ஒரு உருபன்சார் விட்டிசையை குறிக்கிறது, எ.கா. unnatural /ənnæčərəl/ and meanness /miynnes/.

உட்படையான கட்டமைப்பு விட்டிசைகள் சாத்தியமான மற்றும் சாத்தியமற்ற இடைநிறுத்தங்களை (pauses) உள்ளடக்கியது. சொல் மற்றும் சொற்றொடர் அலகுகளின் பகுப்பாய்விற்கு இசையோட்ட இடைநிறுத்தங்களின் சாத்தியமான நிலை முக்கியமானது. இந்த இடைநிறுத்தத்தின் சாத்தியமான நிலைகளும் தொடரியல் பகுப்பாய்வில் மிகவும் குறிப்பிடத்தக்கவை. இத்தகைய உள்ளுணர்வான இடைநிறுத்தங்கள் சொற்களுக்குள் நிகழவில்லை என்பது ஒரு சொல்லின் உருபனியல் மற்றும் ஒலியனியல் ஒற்றுமையின் மறைமுகமான சான்றுகளை வழங்குகிறது. blackbird /blæk-bərd/ போன்ற ஒரு வடிவம் உருபன்களுக்கு இடையே ஒரு ஒலியன் திறந்த விட்டிசையையும், இரண்டு கட்டமைப்பு விட்டிசைகளையும் கொண்டுள்ளது. வெளிப்படையான கட்டமைப்பு விட்டிசை (ஒலியன் /-/ க்கு முற்றிலும் அப்பால்) கிளஸ்டர் /kb/ ஐக் கொண்டுள்ளது, இது ஒரு உருபனுக்குள் ஒருபோதும் நிகழாது, மேலும் மறைவான கட்டமைப்பு விட்டிசை இந்த கட்டமைப்பு உறவில் நேரும்போது உருபன்களுக்கு இடையில் ஒரு இசையோட்ட இடைநிறுத்தம் வராது என்ற உண்மையைக் கொண்டுள்ளது.

அண்மை உறுப்புகள்

அண்மை உறுப்புகளின் முக்கியத்துவம்

எந்தவொரு உருபனின் விநியோகமும் அதன் சூழலின் அடிப்படையில் கொடுக்கப்பட வேண்டும், ஆனால் அதன் சூழலில் சில முக்கியமானதாகவும் மற்றவை ஒப்பீட்டளவில் முக்கியமற்றதாகவும் இருக்கலாம். இது முழுக்க முழுக்க உண்மை. விட்டிசைகள் ஒலிப்பு அடிப்படையில் ஒரே மாதிரியானவை, ஆனால் ஒரு இசையோட்ட இடைநிறுத்தம் ஒருபோதும் அதனுடன் ஒத்துப்போவதில்லை என்ற கட்டமைப்பு அடிப்படையிலான பொருத்தமான உண்மையைக் குறிக்க ஒரு ஹைபனைக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. /-/ வகையின் ஒரு திறந்த விட்டிசை ஒலியனியல் அடிப்படையில் இரண்டு தொடர்ச்சியான உருபன்களின் ஒரு

பகுதியாகும். (முன்வரும் மற்றும் பின்வரும் திறந்த விட்டிசையின் வரிசையானது ஒற்றை திறந்த விட்டிசையாகக் குறைகிறது.) night-rate என்பதற்கும் nitrate என்பதற்கும் உள்ள வேறுபாடு என்னவென்றால், night- மற்றும் -rate திறந்த விட்டிசை ஒலிப்புகளைக் கொண்டுள்ளது. அத்தகைய விட்டிசை ஒலியன் nitrate-இல் உள்ள nit--இன் வடிவத்தைச் சேர்ந்தது அல்ல. full மற்றும் -ful பற்றிய விவாதத்தில் விட்டிசை என்பது உருபனின் ஒரு பகுதியாகும் என்ற உண்மை ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் ஒரு உருபன் ஆனது ஒரு தொடர்ச்சியற்ற திறந்த விட்டிசையைத் தூண்டும் பண்பைக் கொண்டுள்ளது. efigy /éfĭjiy/ மற்றும் refugee /refyuw-ĭjiy/ ஆகியவற்றை ஒப்பிடுக. இரண்டாவது சொல்லில் உள்ள பின்னொட்டு உருவம் /-ĭjiy/~ என அடையாளப்படுத்தப்படலாம். உருபன்களின் அனைத்து மாற்றுருபுகளின் விளக்கத்தின் ஒரு பொருத்தமான பகுதியானது, முன்னும் பின்னும் வரக்கூடிய விட்டிசை வகையாகும்.

பொதுவாக சொற்களுக்கு இடையில் மட்டுமே நிகழும் இசையோட்ட இடைநிறுத்தங்கள் உருபன்கள் ஆகும் மற்றும் இசையோட்ட கட்டமைப்பைச் சேர்ந்தவை; இது தொடரியல் அடிப்படையில் பொருத்தமானது.

அடுத்து என்ன சொல்வது என்பதில் பேச்சாளரின் உறுதியற்ற தன்மையைக் குறிக்கும் தயக்கங்கள் இவை அல்ல, ஏனெனில் இதுபோன்ற தயக்கங்கள் சொற்களுக்குள்ளும், அதே போல் சொரற்களுக்கு இடையேயும் ஏற்படலாம், இருப்பினும் அவை மிகவும் குறைவாகவே செய்கின்றன.

ஒரு சொற்றொடர் அமைப்பில் (phrase structure), அத்தகைய இடைநிறுத்தத்தைக் கண்டறிய முடியும். எடுத்துக்காட்டாக, உருபனியல் மற்றும் தொடரியல் இரண்டிலும்; கூடுதலாக இது தொடரியல் மூலம் எளிதாக விளக்கப்படலாம். எடுத்துக்காட்டாக, *சீனா முழுவதிலும் விவசாயிகள் மிகவும் கடினமாக உழைக்கிறார்கள்* என்ற வாக்கியத்தில், *மிகவும்* என்பதன் சூழலை அதன் பின்னர் வரும் *கடினமாக* மற்றும் *உழைக்கிறார்கள்* என்பதால் கட்டுப்படுத்தப்பட்டதாகவும் மற்றும் *சீனா* என்பதன் சூழல் அதன் பின்வரும் *முழுவதிலும் மற்றும் அதன்* பின்னர்வரும் *விவசாயிகள்* ஆகியவற்றால் கட்டுப்படுத்தப்பட்டதாகவும் விவரிக்க முடியும், ஆனால் இந்த வகையான சூழல் விளக்கம் மிகவும் பொருத்தமானதாகத் தெரியவில்லை. நாம் *மிகவும்* என்பது *கடினமாக* என்பதுடன் முதலில் செல்கிறது மற்றும் *மிகவும் கடினமாக* என்பது பின்னர் வினைச்சொல்லுடன் செல்கிறது என்று "உணர்கிறோம்". இதேபோல், சீனா மரற்றும் முழுவதிலும் "ஒன்றாகச் செல்ல" தோன்றுகிறது, மேலும் இவை விவசாயிகள் என்பதை "அடைசெய்யும்". *சீனா முழுவதிலும் விவசாயிகள்* என்பதை எழுவாயாகவும் *மிகவும் கடினமாக உழைக்கிறார்கள்* என்பதை பயனிலையாகவும் கொண்டு அவற்றை இணைக்கின்றோம். இந்த எளிய வாக்கியத்தில் நாம் செய்திருப்பது, ஒவ்வொரு சொல் அல்லது சொற்களின் குழுவிற்கும் பொருத்தமான சூழலைக் கண்டறிவதாகும். இந்த

பொருத்தமான சூழல்களின் தொகுப்புகள், நாம் அண்மை உறுப்புகள் என்று அழைக்கின்றவற்றுடன் அதாவது எந்த அர்த்தமுள்ள கலவையிலும் உடனடியாக நுழையும் உறுப்பு கூறுகளுடன் பொருந்தும். மேலே உள்ள வாக்கியத்தின் அடிப்படையில், விவசாயிகள் சீனா முழுவதிலும் மிகவும் கடினமாக உழைக்கிறார்கள் என அண்மை தொகுதிகளின் மிக உள்ளடக்கிய தொகுப்பை விவரிப்போம். அண்மை உறுப்புகளின் தொகுதிகளின் தொடர்ச்சியான தொகுப்புகள் பின்வருமாறு குறிக்கப்படலாம்: விவசாயிகள் || சீனா III முழுவதிலும் | மிகவும் III கடினமாக II உழைக்கிறார்கள். இது சற்றே வித்தியாசமாக வரையப்படலாம்:

விவசாயிகள் இந்தியா முழுவதிலும் மிகவும் கடினமாக உழைக்கிறார்கள்



உருபனியல் அமைப்பில் உள்ள சூழ்நிலையானது தொடரியல் அமைப்பில் நாம் காணும் நிலைமைக்கு ஒப்பானது, இருப்பினும் அண்மை உறுப்புகள் பொதுவாக அவ்வளவு ஈடுபாடு கொண்டிருக்கவில்லை மற்றும் குறைவான அடுத்தடுத்த தொகுப்புகளே உள்ளன. கரு கூறுகள் வெவ்வேறு அளவுகளில் இருக்கலாம் என்று ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். பின்வரும் தொடரில், புற -er உடன் நிகழும் கருக் கூறு உருபன் அளவில் மாறுபடும்: 1. dancer 2. condenser 3. formal!zer

-er-இன் விநியோகத்தை விவரிப்பதில், பொருத்தமான சூழலை நாம் அறிந்து கொள்ள வேண்டும். நிச்சயமாக, -er 1-இல் dance- என்ற வேரைப் பின்தொடர்கிறது என்றும், 2-இல் அது -dense- என்ற மற்றொரு வேரைப் பின்தொடர்கிறது என்றும், 3-இல் -ize /-ayz/ என்ற பின்னொட்டைப் பின்தொடர்கிறது என்றும் கூறலாம். ஆனால் இந்தச் சூழல்கள் குறிப்பாகப் பொருத்தமானவை அல்ல. முக்கியமானது என்னவென்றால், புற -er நிகழும் அனைத்துக் கருக் கூறுகளும் வினைச்சொற்கள். -er முழுக் கருக் கூறுடன் கட்டமைப்பு அடிப்படையில் ஒருங்கிணைக்கிறது, முந்தைய உருபனுடன் மட்டும் அல்ல. அதன்படி, -er என்பது புற அண்மை உறுப்பு (peripheral immediate constituent) என்றும் அதற்கு முந்தைய அனைத்து வடிவங்களும் கரு அண்மை உறுப்புகள் (nuclear immediate constituents) என்றும் கூறலாம்.

கரு அண்மை உறுப்புகள் என்பது கரு மற்றும் புற கூறுகளைக் கொண்டிருக்கலாம் என்பதை நினைவில் கொள்க. எடுத்துக்காட்டாக, condense என்பது கரு அண்மை உறுப்பு -dense மற்றும் புற con- என்பதைக் கொண்டுள்ளது. இதேபோல், formalize என்பது கரு formal- மற்றும் புற -ize ஆகியவற்றைக் கொண்டுள்ளது. Formal என்பது கரு form- மற்றும் புற -al ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

இந்த கரு மற்றும் புற உறுப்புகளை நிறுவுவதில், ஒவ்வொரு உருபனின் பொருத்தமான சூழலை நாம் அடையாளம் கண்டு வருகிறோம். Formalizer போன்ற அனைத்து சொற்களையும உருபன்களின் சரங்களாக, ஒவ்வொன்றும் மற்ற அனைத்து உருபன்களுக்கும் சமமான தரம் அல்லது இணைப்புடன் இருக்கும் என விவரிப்பது மிகவும் நம்பிக்கையற்றதாக இருக்கும். அத்தகைய விளக்கம் முற்றிலும் நீண்டதாகவும் சம்பந்தப்பட்டதாகவும் இருக்கும், மேலும், இது அத்தியாவசிய கட்டமைப்பை வெளிப்படுத்தாது. Formalizer-இல் /-ayz/ /-əl/-இன் பின்வரும் மற்றும் /-ər/-க்கு முன்னர் வரும் என்பது ஒரு உண்மை, ஆனால் அது நாம் தெரிந்து கொள்ள வேண்டிய பொருத்தமான உண்மை அல்ல. பின்னர் வரும் பகுதியில் உள்ள இலக்கணத்தின் அமைப்பைக் கருத்தில் கொள்ளும்போது அண்மை உறுப்புகளாகப் பிரிக்கப்பட்ட இந்த பிரிவுகள் இன்னும் அர்த்தமுள்ளதாக மாறும், ஏனென்றால் formalizer-ஐ உருவாக்கும் சேர்க்கைகள் இலக்கணத்தின் வெவ்வேறு பகுதிகளில் விவாதிக்கப்படுவதைக் காண்போம். எடுத்துக்காட்டாக, form என்ற வேர் பெயர்ச்சொல் மற்றும் வினைச்சொல் என இரண்டு வகுப்பு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு உருபனாக விவாதிக்கப்படுகிறது. formal என்ற சேர்க்கையானது, பெயர்ச்சொல் மற்றும் பெயரடை என இரண்டு வகுப்பு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு ஆக்கப்பட்ட வடிவமாக வேறு இடங்களில் விவாதிக்கப்படுகிறது. formalize என்ற சொல் வினைச்சொல்லின் ஆக்கத்தின் கீழ் கையாளப்படுகிறது, மேலும் formalizer பெயர்ச்சொல்லின் ஆக்கத்தின் கீழ் மற்றொரு பிரிவில் கருதப்படுகிறது. இலக்கணத்தில் எந்த இடத்திலும் formalizer போன்ற பெயர்கள் அடுக்கடுக்காக "இழுத்து பிரிக்கப்பட்டது" (அல்லது "ஒன்றாக இடப்பட்டது") இல்லை, ஆனால் பல்வேறு அடுக்குகள் (அண்மை உறுப்புகளின் தொகுப்புகள்) எல்லா ஒத்த ஆக்கங்களும் விவாதிக்கப்படும் இலக்கணத்தின் அந்த பகுதிகளில் விவாதிக்கப்படுகின்றன.

அண்மை உறுப்புகளுக்கு இடையிலான இடம்சார்ந்த உறவுகள்

கரு மற்றும் புற அண்மை உறுப்புகளுக்கு இடையே பல சாத்தியமான இடம்சார் உறவுகள் உள்ளன. இவை இரண்டு அண்மை உறுப்புகள் மற்றும் இரண்டுக்கும் மேற்பட்ட அண்மை உறுப்புகள் கொண்ட கட்டுமானங்களின் அடிப்படையில் வகைப்படுத்தப்படலாம். முதல் வகுப்பை கரு மற்றும் புற அண்மை உறுப்புகள் ஒவ்வொன்றும் தொடர்ச்சியாக இருக்கும் மற்றும் ஒன்று தொடர்ச்சியற்று இருக்கும் கட்டுமானங்களுக்கிடையில் உட்பிரிவு செய்யலாம்.

A. இரண்டு அண்மை உறுப்புகளின் சேர்க்கைகள்

1. தொடர்ச்சியான அணு மற்றும் புற அண்மை உறுப்புகள்

அ. கருவின் ஒரு பக்கத்தில் அனைத்து அடுத்தடுத்து வரும் புறக் கூறுகளுடன்

எஸ்கிமோ, கெச்சுவா மற்றும் துருக்கியில் புற கூறுகள் அனைத்தும் கருவைப் பின்தொடர்கின்றன. formalizers என்ற ஆங்கிலச் சொல்லில், அடுத்தடுத்த புற உறுப்புகள் அனைத்தும் கருவின் ஒரு பக்கத்தில் உள்ளன, மேலும் ஒவ்வொரு அடுத்தடுத்த உருபனும் முந்தைய உறுப்பு அல்லது உறுப்புகளுடன் இணைந்து ஒரு கட்டுமானத்தை உருவாக்குகிறது. இது வழக்கமான சூழ்நிலை, ஆனால் சில விதிவிலக்குகள் உள்ளன. எடுத்துக்காட்டாக, இரண்டு புற கூறுகள் ஒன்றிணைந்து ஒரு அலகு உருவாகலாம், பின்னர் இந்த அலகு மற்றவற்றுடன் இணைக்கப்படும்.

ஆ. ஒன்றுக்கு மேற்பட்ட பக்கத்தில் அல்லது கருவுக்குள் அடுத்தடுத்த புற உறுப்புகளுடன்

கருவின் பக்கம் அல்லது அதற்குள் பல கட்டுண்ட வடிவங்களைக் (bound forms) கொண்ட மொழிகளில் கருவின் ஒன்றுக்கு மேற்பட்ட பக்கங்களில் கரு அல்லாத தனிமங்களைக் காணலாம். முன்னொட்டுகள், பின்னொட்டுகள், உள்ளொட்டுகள் மற்றும் மேலொட்டுக்கள் உள்ளன என்பதைத் தவிர, இரண்டு பக்கங்களையும் நாம் கூறலாம். அதன்படி, நான்கு உறவு நிலைகள் உள்ளன. Condenser 'மின்தேக்கி' என்ற சொல் dense 'அடர்த்தியான' என்ற கரு மற்றும் con- மற்றும் -er என்ற இரண்டு கரு அல்லாதவற்றைக் கொண்டுள்ளது. Condenser என்பதை அண்மை உறுப்புகளாகப் பிரிக்கும் விதம், வெளிப்படையான பகுதிகள் condense மற்றும் denser இரண்டும் அர்த்தமுள்ளதாக இருக்கலாம், ஆனால் denser வடிவத்தில் முற்றிலும் மாறுபட்ட உருபன் இருப்பதை நாம் உடனடியாக அறிகிறோம், அதாவது, ஒப்புருமொழிகள் ஒப்பீட்டு -er (cf. fuller , meaner, darker, blacker). நாம் con- என்பதை -dense என்பதுடன் சேர்த்து condense என்பதைப் பெற்று பின்னர் -er என்ற பின்னொட்டை "சேர்த்தால்", அத்தகைய அர்த்தமுள்ள உறவை நாம் மீற மாட்டோம், எனவே இந்த பிந்தைய பிரிவு சரியானது என்று "உணர்கிறோம்". அர்த்தம், நிச்சயமாக, ஒரு மிக முக்கியமான வழிகாட்டி, ஆனால் அது மட்டும் அல்ல, சில சந்தர்ப்பங்களில், இது மிகவும் நம்பகமானதாக இல்லை. கணக்கிடுவது இடம்பெயர்ப்பு (substitutability)ஆகும். condense போன்ற வினைச்சொல் ஒரு ஒற்றை உருபன் வினையால் இடம்பெயர்க்கப்படலாம், எ.கா. dance, மற்றும் dancer இரண்டு உருபன்களை மட்டுமே கொண்டிருப்பதால், அண்மை உறுப்புகளின் தொகுப்பைத் தீர்மானிப்பதில் சிரமம் இல்லை. நமக்கு உதவ ஒரு கட்டமைப்பு உண்மையும் உள்ளது, அதாவது, மற்ற ஒப்பீட்டு பெயரடை வடிவங்களுடன் இணைவதில்லை, எ.கா. * conbetter, »confuller, and *conmeaner.

தீர்மானம் எப்போதும் அவ்வளவு எளிதானது அல்ல. எடுத்துக்காட்டாக, disgraceful என்பதன் அண்மை உறுப்புகளைத் தீர்மானிப்பதில் (அதனால் உருபன்களின் பொருத்தமான

சூழல்), நாம் மாற்று வழிகளைத் தேர்ந்தெடுக்கலாம் (l) disgrace + -ful மற்றும் (2) dis- + graceful. கருக்கள் disgrace மற்றும் graceful என்பன அர்த்தமுள்ள சேர்க்கைகள் என்பதாலும், dis- ஒற்றை உருபன்களுடன் நேர்வதாலும், எ.கா. discount 'தள்ளுபடி', இரண்டு பிரிப்புகளும் சாத்தியம் என்று முதலில் தோன்றுகிறது, மற்றும் -ful ஒற்றை உருபன்களுடன் நேரலாம், எ.கா. faithful 'உண்மையுள்ள'. இந்த வெளிப்படையான முரண்பாட்டைத் தீர்க்க இரண்டு வழிகள் உள்ளன (l) அர்த்தமுள்ள உறவுகளை பகுப்பாய்வு செய்வதன் மூலம் மற்றும் (2) கட்டமைப்பு இணைகளைப் ஆய்வதன் மூலம்.

அர்த்தமுள்ள உறவுகளைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம், அதாவது disgraceful என்பதை dis- + -graceful 'அழகானது அல்ல' என்று பொருள்படுமாறு பிரிப்பதை விட, disgrace- + -ful என -ful என்பது disgrace- என்பதை அடைசெய்வதாகப் பிரிப்பது disgraceful 'அவமானம் நிறைந்தது' என்ற மொத்தப் பொருண்மையைப் பெறுவதற்கு ஏதுவாக அமைகின்றது என்று நாம் தீர்மானிக்கலாம்.

மாற்றீடுகளின் (substitutes) கட்டமைப்புப் பகுப்பாய்வு நமக்கு அதே முடிவுகளைத் தரும். dis- நிகழும் பல்வேறு வகையான சேர்க்கைகள் மற்றும் -ful நிகழும் அனைத்து சேர்க்கைகளையும் ஒப்பிடுவதன் மூலம், dis- மற்றும் -ful இரண்டும் முதன்மையாகப் பெயர்ச்சொற்கள் மற்றும் வினைச்சொற்களுடன் இணைவதைக் காண்கிறோம், எ.கா. discolor, discord, discount, disfigure, bountiful, plentiful, careful, tasteful. இருப்பினும், dis- உடன் விளையும் சேர்க்கைகள் பொதுவாக பெயர்ச்சொற்கள் அல்லது வினைச்சொற்கள் ஆகும் மற்றும் -ful உடன் விளையும் சேர்க்கைகள் பெயரடைகள் ஆகும். இந்த கட்டமைப்பு இணைகள் பாதுகாக்கப்படுவதற்கான ஒரே வழி, -ful என்பதை disgrace என்பதுடன் சேர்ப்பதைவிட dis- என்பதை grace என்பதுடன் இணைப்பதாகும்.

2. தொடர்ச்சியற்ற அண்மைக்கூறுகள்-கரு, புற, அல்லது இரண்டும்

கரு அல்லாத உறுப்புகள் ஒன்றிணைந்து ஒரு தொடர்ச்சியற்ற புற அண்மை உறுப்பை உருவாக்கலாம். எடுத்துக்காட்டாக, Kekchi தரவுகளில், படர்க்கையிட பன்மை உடையவர் முன்னொட்டு மற்றும் பின்னொட்டு ஆகியவற்றைக் கொண்டிருப்பதை நாம் கவனிக்கலாம், எ.கா. ročočeɔp 'அவர்கள் வீடு', r-...-eɔp 'அவர்கள்' மற்றும் očoč 'வீடு' என்ற உறுப்புகளைக் கொண்டுள்ளது. இரண்டு புற உருபன்களும் qočoč 'நமது வீடு' என்ற வடிவத்தில் உள்ள ஒற்றை உருபனுக்கு கட்டமைப்பு அடிப்படையில் சமமானவை. இந்த காரணத்திற்காக நாம் r-...eɔp-ஐ ஒரு தொடர்ச்சியற்ற அண்மை உறுப்பாகக் கருதுகிறோம்.

கரு அண்மை உறுப்பு ஒரு தொடர்ச்சியற்ற வடிவத்திலும் ஏற்படலாம். எடுத்துக்காட்டாக, sons-in-law என்ற சொல்லில் கரு அண்மை உறுப்பு son...-in-law மற்றும் புற அண்மை உறுப்பு -s என்பன உள்ளன. கருவிற்குள் புற அண்மை உறுப்பை உட்படித்துவது பொதுவானது அல்ல, மேலும் ஆங்கிலத்தில் உள்ள கட்டமைப்பு வடிவத்தின் "அழுத்தம்", இதில் கரு மற்றும் புற அண்மை உறுப்புகள் உட்படுத்தப்படாமல் வரிசையாக இருப்பதால், மாற்று son-in-laws உருவாகும்.

அண்மை உறுப்புகளைத் தீர்மானிப்பதில் நடைமுறையின் கொள்கைகள்

அண்மை உறுப்புகளைத் தீர்மானிப்பதில் பயன்படுத்தப்படும் நடைமுறைக் கொள்கைகள் முந்தைய பிரிவுகளில் ஏற்கனவே தொடப்பட்டுள்ளன. கொள்கைகள் பல இல்லை மற்றும் அவை ஒப்பீட்டளவில் எளிமையானவை, ஆனால் அவற்றின் பயன்பாடு எளிதானது அல்ல. ஏனென்றால், உருபன்களின் ஒரு பிரிவு இயல்பிலேயே சரியானது, மற்றொன்று தவறானது என்று நாம் கூற முடியாது, ஆனால் ஒரு பிரிவு மட்டுமே ஒரு மொழியின் ஒப்பீட்டளவில் எளிமையான, ஒத்திசைவான விளக்கத்தை உருவாக்குகிறது மற்றும் மற்றொரு பிரிவு மிகவும் சிக்கலான மற்றும் முரண்பாடான விளக்கத்தை உருவாக்குகிறது. இந்த சிரமம் கொள்கைகள் கூறப்படும் விதத்தில் பிரதிபலிக்கிறது:

1. பிரிவுகள் அர்த்தமுள்ள உறவுகளுக்கு இணங்க வேண்டும்.

2. பெரிய அலகுகள் ஒரே அல்லது வேறு வெளிப்புற விநியோக வகுப்பைச் சேர்ந்த சிறிய அலகுகளால் இடம்பெயர்க்கும் தன்மையின் அடிப்படையில் பிரிவுகள் செய்யப்படுகின்றன.

3. பிரிவுகள் முடிந்தவரை குறைவாக இருக்க வேண்டும்.

4. மொழியின் மொத்த கட்டமைப்பால் பிரிவுகள் ஆதரிக்கப்பட வேண்டும்.

5. மற்ற விஷயங்கள் சமமாக இருக்கும்போது, தொடர்ச்சியான அண்மை உறுப்புகளாகப் பிரிப்பது தொடர்ச்சியற்ற அண்மை உறுப்புகளாகப் பிரிப்பதை விட முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

கொள்கை 1

பிரிவுகள் அர்த்தமுள்ள உறவுகளுக்கு இணங்க வேண்டும்.

condenser ‘மின்தேக்கி’ மற்றும் disgraceful ‘அவமானகரமான’ பற்றிய முந்தைய விவாதங்களில் இந்தக் கொள்கை ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளது. நடைமுறை பகுப்பாய்வில் இது மற்றவற்றை விட அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது. ஏனென்றால், கட்டமைப்பு

அலகுகளை விட அர்த்தமுள்ள அலகுகளின் அடிப்படையில் சிந்திக்க நாம் அதிகம் பழகிவிட்டோம். எவ்வாறாயினும், இது கட்டமைப்பு உறவுகளுக்கு முரணாக இருக்கும்போது, சரியான அர்த்தமுள்ள உறவாகத் தோன்றுவதைக் கண்மூடித்தனமாகப் பின்பற்ற நாம் அனுமதிக்கக் கூடாது. மேலும், அர்த்தமுள்ள உறவுகளிலிருந்து திருப்திகரமான வழிகளை நாம் பெற முடியாத சில சொற்கள் உள்ளன எ.கா. untruly 'உண்மைக்குப் புறம்பாக'.

கொள்கை 2

பெரிய அலகுகளை அதே அல்லது வேறு வெளிப்புற விநியோக வகுப்பைச் சேர்ந்த சிறிய அலகுகளால் இடம்பெயர்க்கும் தன்மையின் அடிப்படையில் பிரிவுகள் உருவாக்கப்படுகின்றன.

இடம்பெயர்ப்பின் அடிப்படையில் பிரிக்கும் கொள்கை முதன்மை முக்கியத்துவம் வாய்ந்தது. எடுத்துக்காட்டாக, formalizer என்ற சொல்லில், மூன்று-உருபன் வினைச்சொல்லான formalize என்பதற்கு, ஒற்றை உருபன் வினைச்சொல்லான dance என்பதை இடம்பெயர்ப்பது சாத்தியம் என்பதை நாம் கண்டறிந்தோம். உருபன்களின் மொத்த எண்ணிக்கையை இரண்டாகக் குறைப்பதன் மூலம், அண்மை உறுப்புகளை எங்கு பிரிப்பது என்பதைத் தீர்மானிப்பதில் உள்ள சிரமத்தை நீக்குகிறோம்.. formalize என்ற வினைச்சொல்லை dance என்ற வினைச்சொல்லால் இடம்பெயர்ப்பதில், ஒரே பொது வெளிப்புற விநியோக வகுப்பின் சொல்லைப் பயன்படுத்துகிறோம் என்பதை நினைவில் கொள்க. சில சந்தர்ப்பங்களில், வேறு வெளிப்புற விநியோக வகுப்புச் சொல்லை இடம்பெயர்க்க நாம் பயன்படுத்தலாம், இருப்பினும் ஒரே சூழலில் நிகழும் வெவ்வேறு வெளிப்புற விநியோக வகுப்புகள் ஒரு மொழியின் தொடரியல் விட உருபன் அமைப்பில் மிகவும் அரிதானவை. எவ்வாறாயினும், snobbism என்ற வடிவத்தின் காரணமாக, நாம் naturalism என்பதை natural மற்றும் -alism என்றல்லாமல் natural மற்றும் -ism எனப் பிரிக்க நாம் முடிவு செய்யலாம். Snob என்பது ஒரு பெயர்ச்சொல்; இது natural 'இயற்கையான' என்ற பெயரடையிலிருந்து வேறுபட்ட வெளிப்புற விநியோக வகுப்பைச் சேர்ந்தது. purism என்ற சொல்லானது அதே வெளிப்புற விநியோக வகுப்பின் natural 'இயற்கையான' என்ற சொல்லை இடம்பெயர்ப்பாகக் கொண்டுள்ளது, மேலும் இது இடம்பெயப்பு முறை மற்றும் பிரிவின் செல்லுபடியை உறுதிப்படுத்துகிறது. வேறு வகுப்புகளின் உறுப்பினர்களை இடம்பெயர்ப்பதை விட ஒரே வெளிப்புற விநியோக வகுப்பின் உறுப்பினர்களால் இடம்பெயர்ப்பது மிகவும் முக்கியமானது, ஏனெனில் ஒரே வகுப்பிலிருந்து இடம்பெயர்ப்பது ஒரே அர்த்தமுள்ள உறவுகளைப் பாதுகாப்பதற்கான அதிக வாய்ப்பு உள்ளது.

கொள்கை 3

பிரிவுகள் முடிந்தவரை குறைவாக இருக்க வேண்டும்.

மொழியியல் அமைப்பு இருமை (அதாவது இரு-பிரிவு கட்டுமானங்களைக் கொண்டது) என்பதை அனுபவத்திலிருந்து நாம் கண்டறிவதால், அத்தகைய பிரிவைச் சாத்தியமாக்கும் இடப்பெயர்ப்பு அமைப்பொழுங்குகளை நாம் கண்டுபிடிக்க முடியாவிட்டால், ஒரு குறிப்பிட்ட கட்டுமானம் இரண்டு அண்மை உறுப்புகளைக் கொண்டுள்ளது என்று பகுப்பாய்வில் கருதுகிறோம். எடுத்துக்காட்டாக, rouge-blanc-bleu 'சிவப்பு-வெள்ளை-நீலம்' என்ற பிரெஞ்சு பெயரடையை மூன்று அண்மை உறுப்புகளைத் தவிர வேறு எதையும் விவரிக்க போதுமான முறை இல்லை. ஆங்கில foot-pound-second அடி-பவுண்ட்-செகண்ட் மற்றும் லிங்கோம்பே kpíkpíkpí, 'துடிப்பு' ஐடியோஃபோன் ஆகியவற்றிலும் இதுவே உண்மை. இந்தத் தொகுதிகளின் இரண்டு கூறுகள் மூன்றாவதிலிருந்து கட்டமைப்பு அடிப்படையில் முந்தியது கருதப்படக்கூடாது.

கொள்கை 4

மொழியின் மொத்த கட்டமைப்பால் பிரிவுகள் ஆதரிக்கப்பட வேண்டும்.

மொழியின் மொத்தக் கட்டமைப்பால் எந்தப் பிரிவையும் ஆதரிக்க வேண்டும் என்ற இந்தக் கொள்கையைப் பயன்படுத்துவது மிகவும் கடினமானது, ஏனெனில் அதற்குப் பல்வேறு கட்டமைப்புகள் பற்றிய விரிவான அறிவு அவசியம். Condenser ‘மின்தேக்கி’ மற்றும் disgraceful ‘அவமானகரமான’ என்பனவற்றின் விவாதத்தில் நாம் பயன்படுத்திய கொள்கை இதுவாகும். பிற ஒத்த மற்றும் வேறுபட்ட கட்டமைப்புகளைக் கருத்தில் கொள்ளாமல் எந்தத் தரவையும் பிரிக்க முடியாது. எடுத்துக்காட்டாக, காங்கோ ஸ்வாஹிலியில் (நைடா, சிக்கல் 5 ஐப் பார்க்கவும்) உள்ள செயப்படுபொருள் பிரதிபெயர்களை அவற்றின் கால முன்னொட்டுகள் அல்லது எழுவாய் முன்னொட்டுகளுடன் உள்ள உறவுகளின் அடிப்படையில் நாம் விளக்கவேண்டும், நம் விளக்கம் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ அர்த்தமற்றதாக இருக்கும். செயப்படுபொருள் பிரதிபெயர்களின் வேர்களுடன் உள்ள தொடர்பை நாம் விவரித்தாலும், அது இன்னும் போதுமானதாக இருக்காது. முழு வினைச்சொல் பகுதியுடன் இணைந்து செயப்படுபொருள் பிரதிபெயர்களின் விநியோகத்தை நாம் விவரிக்க வேண்டும், ஏனெனில் ஒரு செயப்படுபொருளின் பிரதிபெயரின் நிகழ்வு அல்லது நிகழாதது வினைச்சொல் பகுதி (stem) ஒரு எளிய செயப்பாட்டு பின்னொட்டைக் கொண்டுள்ளதா இல்லையா என்பதைக் கொண்டு தீர்மானிக்க முடியும். எனவே, இது எந்த வகையான வேரின் விஷயம் மட்டுமல்ல, வேர் -iw என்ற பின்னொட்டுடன் வருமா என்பதும் முக்கியம். காங்கோ ஸ்வாஹிலியில் ஒட்டுமொத்த கட்டமைப்பு உறவுகள், முன்னொட்டு வடிவங்களை எடுப்பதற்கு

முன் அதில் உள்ள அனைத்து பின்னொட்டு அமைப்புகளையும் விளக்குவது மதிப்புமிக்கதாக ஆக்குகிறது (இவை வேரில் தொடங்கும் அண்மை உறுப்புகளை உருவாக்குகின்றன),.

கொள்கை 5

மற்ற விஷயங்கள் சமமாக இருகையில், தொடர்ச்சியான அண்மை உறுப்புகளாகப் பிரிப்பது தொடர்ச்சியற்ற அண்மை உறுப்புகளாகப் பிரிப்பதை விட முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

தொடர்ச்சியான மற்றும் தொடர்ச்சியற்ற அண்மை உறுப்புகளுக்கு இடையே ஒரு சரியான சமநிலை இருக்கும் சூழ்நிலை எப்போதாவது உண்டா என்பது சந்தேகமே. எவ்வாறாயினும், இந்த கொள்கையின் நோக்கம், விசித்திரமான மொழிகளின் கட்டமைப்புகளைப் பகுப்பாய்வு செய்வதில், அண்மையில் வராத வடிவங்களை விட அண்மையில் வரும் வடிவங்கள் ஒன்றாகச் செல்லும் என்று நாம் கருத வேண்டும். ஆங்கிலத்தில் ஒரு மொழிபெயர்ப்பானது, அத்தகைய உறுப்புக்களின் வரிசை அமைப்பை அடிக்கடி மீறுகிறது, ஆனால் ஒரு மொழியின் எந்தப் பகுப்பாய்வும் மற்றொரு மொழியில் அதன் மொழிபெயர்ப்பின் அடிப்படையில் இருக்க முடியாது.

போர்ட்மென்டொ உருபன் (portmanteau morpheme)

ஒன்றுக்கு மேற்பட்ட பொருளுணர்த்தும் ஒரு கலவைத்தன்மையான உருபனை போர்ட்மென்டொ உருபன் (**portmanteau morpheme**) என்று கூறவர். எடுத்துக்காட்டாக இலத்தீன் மொழியில் ஒருமை, பன்மை பெருண்மைகளும் வேற்றுமை பொருண்மைகளும் கலந்த ஒரு கலவைத்தன்மையான உருபன்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றை போர்ட்மெனடோ உருபன் என்பர். எடுத்துக்காட்டாக இலத்தீன் மொழியிலுள்ள ANNUS ‘year’ என்பதன் திரிபு பின்வருமாறு அமையும்:

	ஒருமை	**பன்மை**
எழுவாய் வேற்றுமை (Nominative)	ann-us	ann-i:
விளிவேற்றுமை (Vocative)	ann-e	ann-i:
செயப்படுபொருள் வேற்றுமை (Accusative)	ann-um	ann-o:s
உடைமை வேற்றுமை (Genitive)	ann-i:	ann-o:rum

கு-வேற்றுமை (Dative)	ann-o:	ann-i:s
நீங்கல் வேற்றுமை (Ablative)	ann-o:	ann-i:s

மேற்கண்ட எடுத்துக்காடுகளில் வரும் பின்னொட்டுகள் யாவும் ஒருமை அல்லது பன்மையையும் வேற்றுமையையும் ஒரே சமயத்தில் குறிப்பிட்டு நிற்பதை உணரலாம். இவ்வாறு ஒன்றுக்கும் மேற்பட்ட இலக்கணக் கூறுகளை அல்லது செயல்பாடுகளை வெளிப்படுத்தி நிற்கும் உருபன்களை போர்ட்மென்டொ உருபன் எனலாம். இதுபோன்று படித்தான் = படி-த்த்-ஆன், படித்தாள் = படி-த்த்-ஆள் என்ற சொற்களில் வரும் ஆன், ஆள் என்பன பால் (ஆண்பால் பெண்பால்) வேறுபாட்டையும் ஒருமையையும் குறித்து நிற்கின்றன. இவ்வுருபன்களை போர்ட்மென்டொ உருபன்கள் எனலாம்.

நிறைவு செய்யா உருபன் (Non-completive Morpheme)

உருபன் நிறைவு பெறாமல் வந்தால் அது நிறைவு செய்யா எனப்படும். அமைப்பில் முழுமை பெறாமல் வரும் உருபன் 'நிறைவு செய்யா உருபன்' எனப்படும். எடுத்துக்காட்டாக, வ–ந்த் > வந்த்-, செய்-ஆ > செய்யா- என்பன நிறைவு செய்யா உருபன்களாகும்.

நிறைவு செய்யும் உருபன் (completive Morpheme)

ஓர் உருபனியல் அமைப்பில் சில உருபன்கள் நிறைவு செய்யும் உருபன்களாக அமைகின்றன. அப்பொழுது தான் அவ்வமைப்பு முழுமை பெற்று விளங்கும். அதனையே நிறைவு செய்யும் உருபன்கள் என்று கூறுகின்றோம். எடுத்துக்காட்டாக, வ–ந்த்-ஆன் > வந்தான், செல்-ன்ற்-ஆர் > சென்றார், நட–ந்த்-அது > நடந்தது என்பனவற்றில் *ஆன், ஆர், அது* என்பன நிறைவு செய்யும் உருபன்களாகும். தமிழ் மரபிலக்கணம் இவற்றை வினைமுற்று விகுதி எனக் கூறும்.

உருபனியல் மாற்றம் (Morphological Change)

ஒரு மொழியின் உருபுகளையும் மாற்றுருபுகளையும் உருபன்களையும் கண்டறிந்து சொற்களில் அவற்றின் வருகை அமைப்பைப் பற்றிக் கூறும் பாடம் உருபனியல் எனப்படும். change என்ற ஆங்கிலச் சொல்லிற்கு 'மாற்றம்' என்பது நிகரான சொல்லாகும். மாற்றம் என்பது இதுவரை இருந்து வந்த நிலை வேறுபட்டு அமைவது அதாவது மாறி அமைவது நிலை எனப் பொருள்படும். காலப்போக்கில் ஒரு மொழியின் உருபனியலில் தோன்றும் மாற்றம் உருபனியல் மாற்றம் எனப்படும். எடுத்துக்காட்டாக பழந்தமிழில் வழக்கில் இருந்த தன்மை

வினைமுற்று விகுதிகளான *-என், -அல், -அன்* (எ.கா. பெயர்க்குவென், மறப்பென், உரைப்பல், வருவல், அகழ்க்குவன், மாற்றுவன்) போன்றவைத் தற்காலத் தமிழில் இல்லாமல் இருப்பதைக் கூறலாம்.

உருபனியல் வகைப்பாட்டுக் கூறு (Morphological Cateory)

உருபன்களை வகை வகையாகப் பிரித்தலைத் தான் வகைப்பாடு எனலாம். உருபனியல் வகைப்பாட்டுக் கூறு என்பது சொற்பொருள் அற்ற, இலக்கணப் பொருள் கொண்ட உருபன்கள் எனப்படும். எடுத்துக்காட்டாக தமிழ் மொழியில் பன்மை விகுதி -கள். வேற்றுமை உருபுகள் -ஐ-, கு பேன்றவைகளைக் கூறலாம்.

4. உருபனியலின் கிளைகளும் மாதிரிகளும்

உருபனியலைச் சொல் திரிபு உருபனியல், சொல்லாக்கம் (சொல்வழி உருபனியல்) என்று இரு கிளையியல்களாகப் பகுக்கலாம். சொல் திரிபு உருபனியல் சொல்லன்களின் (lexemes) பலவடிவங்களைப் பற்றிக் கூறுகின்றது. ஆனால் சொல்லாக்கம் தந்துள்ள அடியிலிருந்து புதிய சொற்களை ஆக்குவது பற்றிக் கூறுகின்றது. சொல்லாக்கத்தை ஆக்கப்பாடு (derivation) என்றும் கூட்டாக்கம் (compounding) என்றும் வகைப்படுத்தலாம். ஆக்கப்பாடு ஒட்டாக்கத்தால் புதிய சொல்லன்களை உருவாக்குவதைப் பற்றிக் கூறுகின்றது. கூட்டாக்கம் இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட தகுதி வாய்ந்த பகுதிகள் சேர்ந்து புதிய சொல்லன்களை உருவாக்குவது பற்றிக் கூறுகின்றது. ஆக்கப்பாட்டை வகுப்பு மாறா ஆக்கப்பாடு, வகுப்பு மாறும் ஆக்கப்பாடு என இரு வகுப்புகளாகப் பிரிக்கலாம். அடியிலிருந்து அதே வகுப்பைச் சார்ந்த சொல்லன்களை ஆக்குவது வகுப்பு மாற்றாஆக்கப்பாடாகும் (எ.கா. *வேலை + ஆள் > வேலையாள்*); அடியிலிருந்து வேறுபட்ட சொல் வகுப்பைச் சார்ந்த சொல்லன்களை ஆக்குவது வகுப்பு மாற்றும் ஆக்கப்பாடாகும் (*அன்பு + ஆக> அன்பாக, வாழ்+கை> வாழ்க்கை*). கூட்டாக்கத்தையும் ஆக்கப்பட்ட கூட்டுகளின் வடிவ வகுப்பு அடிப்படையில் கூட்டுப் பெயர், கூட்டுவினை எனப் பிரிக்கலாம். ஆக்கப்பாடுகளைப் பொருண்மையியல் அடிப்படையில் உள்வட்டக்கூட்டு, வெளிவட்டக்கூட்டு, நேரியைபுக் கூட்டு, உம்மைத் தொகைக் கூட்டு எனப் பிரிக்கலாம். கீழே தந்துள்ள படம் உருபனியலின் அடிப்படையான பாகுபாடுகளைக் காட்டும். ஆக்கப்பட்டக் கூட்டு தலைச் சொல்லின் துணைவகையாக அமைந்தால் அது உள்வட்டக்கூட்டு எனப்படும். கூட்டாக்கச் சொல்லின் பொருள் அதில் வரும் சொற்களில் இருந்தே பெறப்படுவதால் அது உள்வட்டக்கூட்டு எனப்படுகின்றது. எ.கா. மாம்பழம், மாமரம். மாம்பழம், மாமரம் என்பனவற்றின் பொருள்கள்

அவற்றை ஆக்கும் *மா. மரம், பழம்* என்ற சொற்களிலிருந்தே பெறப்படுகின்றது. *மாம்பழம்* என்பது ஒரு வகைப் *பழம்* ஆகும்; அதுபோன்று *மாமரம்* என்பது ஒருவகை மரம் ஆகும். கூட்டாக்கச் சொல்லின் பொருள் அவற்றை ஆக்கும் சொற்களிலிருந்து பெறப்படாமல் வெளியிலிருந்து பெறப்படுமானால் அது வெளிவட்டக்கூட்டு எனப்படும். எ.கா. *கால்நடை*. *கால்நடை* என்பதன் பொருள் அதை ஆக்கும் *கால்*, *நடை* என்பனவற்றிலிருது பெறப்படுவதில்லை. *கால்நடை* என்பது 'cattle' என்று பொருள்படும். *கால்நடை* என்பதை ஒருவகை நடை என்று கூற இயலாது. கூட்டக்கச்சொல்லில் வரும் சொற்கள் இரண்டும் ஆக்கப்பட்டக் கூட்டுச்கொல்லின் தலைச்சொல்லாக அமைந்தால் அது நேரியைபுக் கூட்டு எனப்படும். எடுத்துக்காட்டாக ஆங்கிலத்தில் கூட்டுச் சொல்லாக வரும் lady doctor என்ற சொல்லின் பொருளை lady doctor என்பது ஒருவகை doctor-ஐக் குறிப்பிடும் என்றும் ஒருவகை lady-ஐக் குறிப்பிடும் என்றும் பொருள் விளக்கம் தரலாம். தமிழில் பெண்வக்கீல், பெண்வைத்தியர், பெண் அதிகாரி என்பனவற்றை நேரியைபுக்கூட்டிறுகு எடுத்துக்காட்டாய் தரலாம். பெண்வைத்தியர் என்பதை ஒருவகை வைத்தியர் என்றோ ஒருவைப் பெண் என்றோ பொருள் விளக்கம் தரலாம். *உம்* என்ற இணப்பு இடைச்சொல் மறைந்து உருவாக்கப்படும் கூட்டு உம்மைத் தொகைக் கூட்டு எனப்படும் எ.கா. செடி கொடிகள். *செடியும் கொடிகளும்* என்ற தொடரில் முதல் சொல்லோடு வரும் உம் மறைய விளையும் *செடிகொடிகள்* என்ற கூட்டு உம்மைத் தொகைக் கூட்டு எனப்படும். இரண்டாவது சொல் –கள் என்ற பன்மை உருபேற்று வருகின்றது. இக்கூட்டு செடிகளையும் கொடிகளையும் உள்ளடக்கிய தாவரவகையைக் குறிப்பிட்டுக் கூட்டுப் பொருளாக்கம் செய்யும்.



திரிபும் ஆக்கமும் (Inflection and derivation)

சொல் திரிபு (Inflection)

சொல் திரிபு என்பதைச் சொல் + திரிபு எனப்பிரித்து ஆயலாம். பொருள் குறிக்கும் ஒலி அல்லது ஒலிகளின் தொகுதி சொல் எனப்படும். வேற்று வடிவம் அல்லது மாற்று வடிவத்தைத்

தான் திரிபு என்கிறோம். ஓர் அடிச் சொல் பல்வேறு உருபனியல் அமைப்புகளில் இடம் பெற்று அதனோடு பல்வேறு உருபன்கள் சேர்ந்து வரும் நிலையில் அதன் மூலம் பெறப்பட்ட இறுதி வடிவமானது அது எந்த வகை அடிச் சொல்லிலிருந்து பெறப்பட்டதோ அவ்வடிச் சொல் சார்ந்துள்ள இலக்கணப் பெரும் பிரிவைச் சார்ந்தே அமையும். பின்வரும் எடுத்துக்காட்டாக *படி* என்ற வினையுடன் பின்னொட்டுக்கள் சேர்க்கப்பட்டும் கால ஒட்டுக்களும், வினைமுற்று விகுதிகளும், எச்ச ஒட்டுகாளும் *படி* என்பதை வினையாகவே வைத்திருக்கும். அத்தகைய ஒட்டுக்கள் திரிபு ஒட்டுட்கள் எனப்படும்; இச்சொல்லாக்கம் சொல் திரிபு அல்லது திரிபு எனக்கூறப்படும்: படி 'read': படி+த்த்-ஆன்> படித்தான், படி + த்த் + உ > படித்து 'having read' , படி +த்த் +அ > படித்த 'that which is read', படி +க்க் +ஆ+மல் > படிக்காமல் 'without reading'.

சொல்லாக்கம் (Derivation)

சொல்லாக்கம் என்பதைச் சொல் + ஆக்கம் எனப் பிரித்து ஆயலாம். பொருள் குறிக்கும் ஒலி அல்லது ஒலிகளின் தொகுதி சொல் எனப்படும். சொற்களைப் புதிதாக உருவாக்குதலைத் தான் ஆக்கம் என்கிறோம். ஓர் அடிச் சொல் சில உருபனியல் அமைப்புகளில் இடம் பெற்று அதனோடு சில உருபன்கள் சேர்ந்து வரும் நிலையில் பெறப்படும் இறுதி வடிவமானது, அது எந்த வகை அடிச் சொல்லிலிருந்து பெறப்பட்டதோ அதிலிருந்து மாறுபட்டு வேறு இலக்கணப் பெரும் பிரிவைச் சார்ந்ததாக அமையும். இத்தகைய அமைப்பில் முழு மாற்றம் காணப்படுகிறது. அதாவது அடிச் சொல் ஓர் இலக்கணப் பிரிவைச் சார்ந்தாகவும் பெறப்படும் உருபனியல் அமைப்பானது மற்றொரு வகை இலக்கணப் பிரிவைச் சார்ந்ததாகவும் அமைகிறது. எடுத்துக்காட்டாக, தமிழில், வினை + பெயராக்க ஒட்டு > பெயர் என ஆக்கம் பெறும்: பார் + வை > பார்வை, வாழ் + க்கை > வாழ்க்கை, படி + ப்பு > படிப்பு. எனவே வை, க்கை, ப்பு என்பன சொல்லாக்க/ஆக்க ஒட்டுகள் எனப்படும். இச்செயல்பாடு சொல்லாக்கம் எனப்படும்.

உருபனியல் பாகுபாடு (Morphological Classification)

ஒரு மொழியின் உருபுகளையும் உருபன்களையும் மாற்றுருபுகளையும் பட்டியலிட்டு அவற்றின் வருகை அமைப்பையும் பற்றிக் கூறும் பாடம் உருபனியல் எனப்படும். classification என்ற ஆங்கிலச் சொல்லிற்குத் தமிழ் நிகரன் பாகுபாடு என்பதாகும். பாகுபாடு என்பது வேறுபாடு தெரியும் வகையில் பிரிக்கும் பிரிவு ஆகும். உருபனியல் பாகுபாடு என்பது சொற்களை அவை ஏற்று வரக்கூடிய விகுதிகளின் அடிப்படையில் வேறுபடுத்திக் காட்டி பாகுபடுத்துவது என்று பொருள்படும்.

இலக்கண வர்ணனையின் மூன்று மாதிரிகள்

இலக்கணப் பகுப்பாய்வாளர் ஒரு மொழியின் இலக்கணத்தை ஆயவும் தம்முடைய முடிவுகளைத் தெரிவிக்கவும் வேண்டி பயன்படுத்தும் சட்டக அமைப்பை இலக்கண விளக்க மாதிரி என்று ஹாக்கெட் விளக்குகிறார் ஹாக்கெட் தனது Two Models of Grammatical Description என்ற கட்டுரையில் இலக்கண வர்ணனையின் மூன்று மாதிரிகளைக் குறிப்பிட்டு முதல் இரண்டு மாதிரிகளை விரிவாக விளக்குகிறார்.

- சேர்க்கைமுறை மாதிரி /கூறும் வரிசைமுறையும் மாதிரி) (Item and Arrangement (IA) Model)
- விதிமுறை மாதிரி /அலகும் செயற்பாங்கும் மதிரி) (Item and Process (IP) Model)
- சொல்லும் அடுக்கும் மாதிரி (Word and Paradigm (WP) Model)

ஹாக்கெட் சொல் அடுக்கு மாதிரியைப் பற்றி அவருடைய கட்டுரையில் குறிப்பிட்டாலும் விரிவாக விளக்கவில்லை. ராபின்சன் என்பவர் சொல் அடுக்கு மாதிரியைப் பற்றி விரிவாக் விளக்குகின்றார். சொல்லும் அடுக்கும் மாதிரி பிற இரு மாதிரிகளில் இருந்து வேறுபடும். இந்த மாதிரி லத்தின், சமஸ்கிருதம், கிரேக்கம் போன்ற மொழிகளில் மரபு இலக்கண மாதிரிகளாகும். இது முழுவதும் பரிபூரணமான மாதிரி அல்ல. சேர்க்கைமுறை மாதிரி, விதிமுறை மாதிரி இவைகளில் சேர்க்கைமுறை மாதிரி பழமையானது. விதிமுறை மாதிரியில் முக்கியமான சொல் “செயற்பாங்கு” (process) என்பதாகும். சேர்க்கைமுறை மாதிரியில் முக்கியமான சொல் “வரிசை முறை” (arrangement) என்பதாகும்.

சேர்க்கை முறை மாதிரி, விதிமுறை மாதிரி என்ற இருமாதிரிகளில் விதிமுறை மாதிரி பழமையானதாகும். விதிமுறை மாதிரியின் முக்கியமான கலைச்சொல் “செயற்பாங்கு” (process) என்பதாகும். இரண்டு பகுதி ஒத்த வடிவங்களுக்கிடையே உள்ள வேறுபாடு பெரும்பாலும் ஒன்றிலிருந்து மற்றொன்று செயற்பாங்கால் விளைந்ததாய்க் கருதப்படும். எடுத்துக்காட்டாக அடி என்பதற்கும் அடி+பன்மை என்பதற்கு இடையில் உள்ள வேறுபாடு முன்னொட்டாக்கம் என்ற செயற்பாங்கால் விளைந்ததாகக் கருதப்படும். எடுத்துக்காட்டாக *கை* என்பதற்கும் *கைகள்* என்பதற்கும் *hand* என்பதற்கும் *hands* என்பதற்கும் உள்ள வேறுபாடு முன்னொட்டாக்கம் என்ற செயற்பாங்கால் விளைந்ததாகக் கருதப்படும். இது வரலாற்று அடிப்படையிலான மாற்றத்துடன் தொடர்புடையதல்ல. இது கட்டமைப்பு வழியான

செயற்பாங்காகும்; அமைப்பொழுங்கில் ஒன்றிலிருந்து மற்றொன்றிற்கு அல்லது பெரிய பகுதிக்குச் செல்வதாகும்.

இளைய மாதிரியான சேர்க்கைமுறை மாதிரி விதிமுறை மாதிரியில் உள்ளார்ந்திருக்கும் 'நகரும் பாகம்' (moving part), 'வரலாறு' (historical) என்ற ஒப்புமையில் (analogy) மீது ஏற்பட்ட அதிருப்தியின் காரணமாக முறைப்படுத்தப்பட்டதாகும். இந்த ஒப்புமைகள் சில தீர்மானங்களைத் தன்னிச்சையான வழியில் எடுக்கும் தேவையைக் குறிப்பாக உணர்த்தும்.

எடுத்துக்காட்டாக ஆங்கில மொழியின் இறந்தகால வடிவமான *baked* என்பது *bake* என்பதிலிருந்து ஒட்டாக்கம் என்ற செயற்பாங்கால் உருவாக்கப்பட்டது என்று கூறினால் bake என்பதற்கு baked, முன்னொட்டு என்பனவற்றிலிருந்து முன்னுரிமை அளிக்கப்பட்படவில்லை என்று முடிவு செய்ய இயலாது. இந்த முன்னுரிமை வரலாற்று அடிப்படையிலானது அல்ல என்றால் அது என்ன? என்ற கேள்வி எழும். விதிமுறை மாதிரிக்கு ஆதரவு அளிப்போர் இந்த கேளிவிக்கு விடை அளிக்கவில்லை.

சேர்க்கைமுறை மாதிரியின் சாரம் உறுப்புகளும் அவை வரும் வரிசை முறையும் ஆகும். ஒரு மொழியில் எந்த கூற்றும் உருபன்கள் என்று கூறப்படுகின்ற குறைந்த இலக்கண அடிப்படையில் தொடர்புடைய உறுப்புகளின் வரிசை முறையாகும். ஒரு கூற்றின் அமைப்பை உருபன்களையும் அவற்றின் வரிமுறைகளையும் பட்டியலிட்டு விளக்கலாம். நாம் உருபனகளையும் அவற்றின் வரிசைமுறைகளையும் அவை கூற்றில் ஒன்றையொன்று எவ்வாறு சார்ந்து வருகின்றன என்பதையும் விளக்கி மொழியின் அமைப்பொழுங்கை விளக்கலாம்.

சேர்க்கை மாதிரிக்கும் விதிமுறை மாதிரிக்கும் இடையில் ஒரு பகுதி மாற்றச்சாத்தியம் (partial translation) இருக்கின்றது.

சேர்க்கைமுறை மாதிரி (IA model)

சேர்க்கை மாதிரியின் பின்வரும் சுருக்கவுரை பகுதி முறையானது;

1. ஒரு மொழி வடிவம் (Linguistic form) தனியாகவோ (single) கலவை வடிவமாகவோ (composite) வரும்.

2. ஒரு தனி வடிவு உருபன் ஆகும்.

3. ஒரு கலவை வடிவில் ஒன்றோ அதற்கு மேற்பட்ட அண்மை உறுப்புகள் (Immediate constituents) ஒரு கட்டுமானத்தில் (construction) வந்து ஒரு உறுப்பியை (constitute) உருவாக்கும். உறுப்புகளும் கட்டுமானமும் பிற கலவை வடிவில் திரும்பவும் வரும். ஒவ்வொரு அண்மை உறுப்பும் கட்டுமானத்தில் ஒரு இடத்தில் வரும். ஒவ்வொரு உறுப்பும் மற்றதன்/மற்றவைகளின் இணையாகும் (partner).

4. சில சமயங்களில் ஒரு உருபனை எந்தக் கட்டுமானத்திலும் பங்கெடுப்பதாகக் கருதாமல் அடுத்துவரும் வடிவங்கள் நிற்கும் ஒரு கட்டுமானத்தின் குறியாகக் (marker) கருதலாம்.

இம்மாதிரியான எந்த சலுகையும் இந்த பொருள்விளக்கம் ஏற்றுகொள்ளப்படும் கட்டுப்படுகளின் ஒரு கூற்றை வேண்டும். இம்மாதிரியான கட்டுப்பாடுகளின் மூன்று கூற்றுகள் உள்ளன. இதில் முதலாவது முக்கியமலாதது; ஒட்டுமொத்தமக பொருள்கோளைத் தவிர்க்கும் ஒன்றாகும்.

இரண்டாவது குறிப்பான் ஒரு கட்டுமானத்தில் பங்கெடுப்பவைகளுக்கு இடையே உள்ள எல்லையைச் சுட்டுக்காட்டும் போதுதான் பொருள்கோளை அனுமதிக்கும்; கூடுதலாக ஒன்றுமில்லை. இதன் படி பைபிங் சைனீஸ் (Pieping Chinese) விட்டிசை எல்லை உருபன்கள் (junctural morpheme) /;/, /,/ என்பன குறிகளாக அனுமதிக்கப்படலாம்; ஏன்றால் jue^{3} lai^{2}, ni^{3} zieu^{4} cy^{4}./ 'When I come, you go right away', என்ற கூற்றில் /,/ என்பது அதன் முன்னர் மற்றும் பின்னர் வரும் கூறுசார் தொடர்ச்சி (segmental sequence) ஒரு கட்டுமானத்தில் பங்கெடுப்பவைகள் என்பதைத் தெரிவிக்கும். அதாவது முழுத் தொடர்ச்சியின் பகுப்பு மற்றொன்றைக் காட்டிலும் சரியான ஒன்று ஆகும்; இருப்பினும் இது எந்த கட்டுமானங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிப்பதில்லை.

இந்த வரையறை (எல்லை) men and women என்பதை and என்பதைக் கொண்ட இருபகுதிகள் கொண்ட கட்டுமானம் (bipartite construction) என்று பொருள்கொள்வதை அனுமதிக்காது; எனென்றால் and என்பது வெளிப்படையாக குறிப்பிடப்படதைவிட அதிக அளவிலான தகவலைத் தரும். இந்நேர்வில் பொருள்கோளை அனுமதிக்கும் கட்டுப்பாடுகளின் ஒரு தொகுப்பு பின்வரும் குறிப்புகள் வழி அமைய வேண்டும்: (1) சிறிய வடிவங்களில் ஒன்றான B (அது நடுவில் இருக்கவேண்டியதில்லை) ஒரு தனி உருபனாகும்; (2) பிற இரண்டும், Aயும் Cயும் அமைப்பு அடிப்படையில் ஒன்றையொன்று ஒத்திருபன (எதோ

பொருத்தமான அர்த்தத்தில்); ஆனால் B-உடன் அல்ல; (3) A|BC அல்லது AB|C எனப் பொருள்கோளை வற்புறுத்துவதற்கு செய்வதற்கு ஆதாரம் இல்லை.

இதைவிட அதிகத் தாராளமான கட்டுப்பாடுகளின் தொகுப்பை முறைப்படுத்த இயலும்.

5. ஒரு மொழியின் நிரல்முறை (ஒழுங்குமுறை) சார்ந்த அமைப்பொழுங்கை (tactical pattern) பின்வரும் மொழிபுகளின் குழுமத்தில் அடக்கலம்.

(1) கட்டுமானங்களின் பட்டியல்

(2) ஒவ்வொரு கட்டுமானத் தலைப்பிலும்,

(2.1.) கட்டுமானத்தில் வரும் இடங்களைக் கணக்கிடுதல்

(2.2.) அந்த கட்டுமானத்திற்கு ஏதாவது குறியை (marker) குறிப்பிடுதல்

(2.3.) ஒவ்வொரு இடத்திற்கும்,

(2.3.1.) அதில் வரும் உருபன்களைப் பட்டியலிடுதல்

(2.3.2.) அங்கே வரும் கட்டுமானங்கள், கலவை வடிவுகள் இவற்றின் பட்டியல்

6. ஒரு உருபன் ஒன்றிற்கு மேற்பட்ட ஒலியன் வடிவில் வரலாம். ஒரு உருபனின் ஒரு தனி வடிவு உருபு (morph) ஆகும். ஒரு உருபனின் உருவங்களாகவோ உருப்படுத்தங்களாகவோ வரும் பல உருபுகள் ஒரு உருபனின் மாற்றுருபுகள் (allomorphs) ஆகும்.

7. ஒரு உருபனின் உருவத்தின் பிறழ்ச்சிகளை அவை வரும் சூழல் அடிப்படையில் வருவதுரைக்க இயலும் (மேலும் உருபொலியனியல் கூற்றும் இதனுடன் சேரும்).

இது 'சூழல்' என்பதன் வரையறையை தேவையாக்குகிறது: ஒரு உருபன் நேர்வின் சூழல் அந்த நேர்வின் அமைப்பாகும்; அந்த அமைப்பை முற்றிலும் கட்டமைப்பு (அதாவது, பொருண்மையியல் அல்லாத) விதிகளால் விவரிக்க இயலும். குறுகலான வரையறைகள் சாத்தியம்; நம்முடையது வேண்டுமென்றே அகன்றது.

8. ஒரு கூற்றில் உள்ள அனைத்து ஒலியனியல் உட்கூறுகளும் அந்தக் கூற்றை உருவாக்கும் உருபன்களின் அடிப்படையிலும் அவை ஒன்றை ஒன்று சார்ந்து வரும் வரிசைமுறை

அடிப்படையிலும் பொறுப்புள்ளதாகும். (மேலும் உருபொலியனியல் கூற்றும் இதனுடன் சேரும்).

9. 6-இலிருந்து 8-வரை கூறப்பட்ட கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு அம்மாதிரியான உபாயங்களை அவை வசதியாக நிறுவும் பின்வருபவைகளாக அனுமதிக்க இயலும்:

(1) நாம் பூஜியத்தை சாத்தியமான உருபு வடிவாக அடையாளங்காண இயலும். இது கவனமாக முறைப்படுத்தப்பட்ட அளவீடுகளை வேண்டும். குறைந்தது இரண்டு வெளிப்படையான சிரான வரையறை எல்லைகள் முன்மொழியப்பட்டுள்ளன.

(1.1) ஒரு உருபன் எல்லா இடங்களிலும் பூஜியமாக வருவதில்லை.

(1.2) உருபன் ஒரு ஒழுங்குமுறைசார்ந்த பொருத்தமான வகுப்பைச் (சில பொருத்தமான வரையறை விளக்கத்தின் கீழ்) சார்ந்திருந்திருக்க அதன் பிற அங்கத்தினர்கள் சார்ந்திருக்கவில்லை என்றால் உருபன் எல்லா இடங்களிலும் பூஜியமாக வரும்.

(2) நாம் ஒரு உருபை ஒரு உருபனையும் சாராததாக அடையாளங் காண இயலும். அல்லது இதற்குப் பதிலாக சில கூற்றுகளிலுள்ள சில ஒலியனியல் உட்கூறுகளை உருபன் அல்லாதவையாக வகைபடுத்த இயலும்.

(3) நாம் ஒரு நிலையான வரிசைமுறையில் ஒரு உருபை இரண்டோ அதற்கு மேற்பட்ட உருபன்களைச் சார்ந்ததாக அடையாளங்காண இயலும் (ஒரு கட்டுமானதின் பங்காளிகளாகவோ பங்காளிகள் அல்லாதவையாக இருந்தாலும்) . சம்பந்தப்பட்ட உருபன் பிற சூழல்களில் தனியான வடிவுகளில் வந்தால் கேள்விக்குரிய உருபு உருபன் கூட்டத்தின் போர்ட்மாண்டோ உருப்படுத்தம் (portmanteau representation) ஆகும். சம்பந்தப்பட்ட உருபன்கள் போர்ட்மாண்டோ உருப்படுத்தங்களில் மட்டும்வந்தால், பொதுவான கலைச்சொல் சிறிது வேறுபட்டதாகும்: உருப்படுத்தங்கள் 'உருபன்கள்' என்று அழைக்கப்படும்; மற்றும் உருப்படுத்தம் செய்யப்பட்ட தனியான உறுப்புகள் 'உருபனியல் உட்கூறு' (morphemic component) என்று அழைக்கப்படும்.

(4) நாம் ஒரு குறிப்பிட்ட ஒலியனை அல்லது ஒலியன்களின் தொடர்ச்சியை ஒரே நேரத்தில் முன்வரும் சில ஒலியன்களை உட்படுத்தும் ஒரு உருபோடும் (ஒரு உருபனை உருப்படுத்தம் செய்யும்) மற்றும் பின்வரும் சில ஒலியன்களை உட்படுத்தும் ஒரு உருபோடும் (மற்றொரு உருபனை உருப்படுத்தம் செய்யும்) சேர்ந்தவையாக அனுமதிக்க இயலும்; பகிர்ந்துகொள்ளப்படும் ஒலியன்/ஒலியன்கள் பிணைப்பாக இருப்பதால் அது பிணைப்பு உருபு எனப்படும்.

10. உருவங்கள் (shapes), பிறழ்ச்சிகள் (alternations), பிறழ்ச்சிகளின் கட்டுபாடுகள் ஒரு மொழியின் உருபொலியனியல் அமைப்பொழுங்கை (morphophonemic pattern) விளக்குகின்றது.

11. உருபொலியன், நிரல்முறை ஒழுங்கமைப்பு (tactical pattern) என்ற இரண்டும் சேர்ந்து இலக்கண அமைப்பொழுங்கு (grammatical pattern) எனப்படும். இது ஒலியன் அமைப்பொழுங்குடன் (phonological pattern) சேர்ந்து ஒருகால அமைப்பொழுங்கை (synchronic pattern) முழுமையாக்கும். ஒலியனியலுக்கும் இலக்கணத்திற்கும் இடையிலுள்ள பிளவு சிலரால் இலக்கணத்திற்குள் உருபொலியனியலுக்கும் உத்திகளுக்கும் (tactics) இடையிலுள்ளதை விட கூடுதல் அடிப்படையானதாக் கருதப்படுகின்றது; சில நோக்கத்திற்கு பிற அடுக்கமைவுகள் (stratifications) சாத்தியமாகும். எடுத்துக்காட்டாகச் சிலசமயங்களில் உருபொலியனியல் மற்றும் ஒலியனியல் உண்மைகளைச் சேர்த்து நிரால்முறைக்கு (tactics) கூட்டு முரணாக 'இயக்கவியல்' (mechanics) எனப் பகுப்பது வசதியானதாகும். அல்லது இயல்பு உருபொலியனியலுக்கும் (automatic morphophonemics) இயல்பல்லா உருபொலியனியலுக்கும் (non-automatic morphophonemics) வேறுபாடு செய்யப்பட்டால் இயல்பு உருபொலியனியல் உண்மைகளை ஒலியனியலுடனும் இயல்பல்லா உருபொலியனியலை நிரல்முறையுடனும் இணைத்துப் பகுப்பது நல்ல விவேகமாகும்.

சேர்க்கைமுறை மாதிரியின் சிக்கல்கள்

முன்னர் சுருக்கவுரையில் தரப்பட்ட திட்டம் அடிப்படையில் உருவாக்கப்பட்ட இலக்கண வர்ணனை ஒரு மொழியில் எந்தக் கூற்றையும் உருவாக்க இயலும் கோட்பாடுகளை நிர்ணயிக்கின்றது. இந்த அர்த்ததில் இது ஒரு மொழியில் கூற்றுக்களை உருவக்க இயலச்செய்யும் மனித இனத்தின் அப்பகுதியின் அமைப்புடன் செயல்பாட்டு ரீதியாக ஒப்பிடத்தக்கது. இது ஒரு சமையல் புத்தகத்துடன் ஒப்பிடத்தக்கது. ஒழுங்கமைப்பு வர்ணனையில் உள்ள பட்டியியலிருந்து எதாவது இயைபுள்ள ஆக்ககூறுகளைத் தெரிந்தெடுக்கவும்; அவற்றை ஒன்றாகச் சேர்க்கவும்; தற்காலிகமாக ஒன்றுசேரும் படிக்கு இரண்டிரண்டாகவோ சிறிது சிறிதாகவோ (அண்மை உறுப்புகளாகச்) சேர்க்கவும். பின்னர் உருபொலியனியல் கூற்றுகள் அடிப்படையில் கையாளவும்; இந்த செயல்பாடுகளின் சுவடுகளை நீக்கவும்; மொழியின் கூற்று கிடைக்கும். சமையலில் கூட்டுப்பொருள்களைச் சேர்க்கும் வரிசைமுறையின் வேறுபாடு வேறுபட்ட விளைவுப் பொருள்களை உருவாக்க இயலும். மொழியியலில் இறுதியான ஒரே உறுப்புகளின் மீது செய்யப்படும் செயல்பாடுகளின்

வேறுபட்ட தொடர்ச்சிகள் ஒரேபோன்றதை அல்லது மேம்போக்கான ஒரே இறுதி உற்பத்திப் பொருளை விளைவிக்காதிருக்கலாம் என்பதை உறுதி செய்ய இயலாது.

சேர்க்கைமுறை மாதிரியின் வருணனை "உட்கூறு" (item) மற்றும் "வரிசைமுறை" (arrangement) என்ற கருத்துச்சாயல்கள் மீதான நமது அசல் வலியுறுத்தலிருந்து ஓரளவுக்கு அதிகக் கலவைத் தன்மையனது. இந்த இரண்டைவிட சாத்திய அடிப்படையில் சுந்திரமான காரணிகள் உள்ளன. குறிப்பாக வடிவுகள், (வரிசை) ஒழுங்கு, கட்டுமானங்கள், அண்மை உறுப்புகள் அல்லது படியமைப்பு என்பன உள்ளன. ஒன்றையொன்று தொடர்புள்ள இக்காரணிகளின் நிலையை நாம் ஆய்வு செய்யவேண்டும். அவைகள் ஒழுங்குமுறையில் பழமையானவைகளா அல்லது சில பிறவற்றிலிருந்து ஆக்கப்பட்டவைகளா?

வடிவுக்கும் நிரலுக்கும் இடையிலுள்ள உள்ள சுதந்திரம் செயல்முறை விளக்கம் இல்லமலேயே தெளிவாகத் தெரிகின்றது. எத்துக்காட்டாக John hit Bill என்பதற்கு எதிரான John hit Dick நிரலின் சுந்திரத்தை செயல்முறை விளக்கம் செய்கின்றது. John hit Bill என்பதற்கு எதிரான Bill hit John வடிவிலிருந்து நிரலின் சுதந்திரத்தை செயல்முறை விளக்கம் செய்கின்றது; ஏனென்றால் இவ்விரண்டும் இவற்றின் இறுதி உறுப்புகளின் நிரலால் மட்டுமே வேறுபடுவதாகக் கூறலாம்.

கட்டுமான ஒருபோன்மை (constructional homonymy)

நாம் படிநிலை அமைப்புப் பொருண்மை மயக்கத்தைக் (hierarchical ambiguity) கருத்தில் கொள்வோம். பின்வரும் கூற்றை எடுத்துக்கொள்ளவும்: *The old men and women stayed at home* 'வயதான ஆண்களும் பெண்களும் வீட்டில் தங்கினார்கள்'. இக்கூற்றைக் கேட்டவர்களில் சிலர் இது வயதான ஆண்களையும் எல்லா பெண்களையும் குறிப்பிடுவதாக முடிவு செய்யலாம்; பிறர் இக்கூற்று இருபாலரையும் சார்ந்த எல்லா மக்களையும் குறிப்பிடுவதாக முடிவு செய்யலாம். பொருண்மை அடிப்படையில் *old men and women* 'வயதான ஆண்களும் பெண்களும்' என்பது ஒன்றோ அல்லது மற்ற படிநிலைக் கொண்டிருப்பதாகக் கருதலாம். இது பேசுபரின் விருப்பப்படி அமையும்.

The old men and women 'வயதான ஆண்களும் பெண்களும்' போன்ற பகுதி வேறுபட்ட குழுமச் சூழல்களிலும் இடம்பெயர்க்கலாம்.

நாம் இதே உத்தியை பல்பொருளொருமொழிய உருபன்களை (homonymous morphemes) வேறுபடுத்த பயன்படுத்தலாம். *Old men and women* 'வயதான ஆண்களும் பெண்களும்' என்பதைப் பெரிய குழுமச் சூழல்களில் வரும் (எ.கா. *old people belong at home*, *old men and women belong at home*) *old people* 'வயதான மக்கள்' என்பதால் இடம்பெயர்க்கலாம்; இதை மற்றொன்றில் *women and old men* என்பதால் பகுதி வேறுபட்ட குழுமச் சூழல்களிலும் இடம்பெயர்க்கலாம் (எ.கா. *The women and old men stayed at home while young men went to war* 'பெண்களும் வயதான ஆண்களும் வீட்டில் தங்கினார்கள், இளமையான ஆண்கள் போருக்குப் போனார்கள்', *The old men and women...* 'வயதான ஆண்களும் பெண்களும்...'), ஆனால் *old people* 'வயதான மக்கள்' என்பதும் *women and old men* 'பெண்களும் வயதான ஆண்களும்' என்பதும் சுதந்திரமாக ஒன்றையொன்று இடம்பெயர்க்காது. இந்தச் செயல்முறையை *the sun's rays meet* என்பதையும் *the souns raise meat* வேறுபடுத்த பயன்படுத்தலாம். ஓரொலின்களை (ஒலியொன்றிகளை) (வேறுபடுத்திய பின்னர் நாம் தொடர்புடைய உள்கட்டமைப்பு வேறுபாடுகளுக்கு (correlated internal structural differnces) முயலாம். பிந்தைய இணைகளில் வேறுபாடுகள் இறுதி உறுப்புகளில் (ultimate constituents) உள்ளன; முந்தைய இணைகளில் வேறுபாடுகள் படிநிலை அமைப்பில் உள்ளன.

இருப்பினும் ஆழமான கருதலும் உண்டு. *Old men and women stayed at home* என்பதைக் கேட்பது பின்வரும் படத்தை நேரிடுபவர் அதை மூன்று வழிகளில் பார்பதை ஒக்கும். சாதாரண தனிப்பட்டவர் A, B, C என்ற இம்மூன்றையும் பார்க்கையில் B என்பது A, C என்பனவற்றிலிருந்து வேறுபட்டிருப்பதையும் B என்பது A போன்று அதிக அளவில் இருப்பதையும் உணர்வார். பெரும்பாலும் நமது கட்புலன் அனுபவம் ஆழப் புலனுணர்வாக இருப்பதால் நாம் ஆழத்தை இரு பரிமாணச் சித்தரிப்பாகக் கருதுகின்றோம்.



B என்பது பொருண்மைமயக்கம் உள்ளதாகும். பொருண்மை மயக்கம் அவருத்தில் இருக்காது; அது பொருள்களுக்கிடையில் (things) இருக்கவேண்டும். காட்சி நேர்வில் பிறழ்ச்சிகள்/மாற்றுகள் Aயும் Cயும் அல்ல; அவை முறையே Bயின் Aயை அல்லது

Cயைப்போன்றதாகும். 'Aயைப் போன்றது' அல்லது ' Cயைப் போன்றது' இரண்டு வேறுபட்ட ஒன்றையொன்று விலக்கிவைக்கும் விஷயமாகும்: B என்பது ஒரே சமயத்தில் Aயைப் போன்றோ Cயைப் போன்றோ இருப்பதாகக் கொள்ள இயலாது. Bயின் Aயைப் 'போன்றதாகும்' என்பது ஒரு படிநிலை அமைப்பாகும்; Bயின் Cயைப் போன்றதாகும் என்பது மற்றொன்றாகும். ஒரு படிநிலை அமைப்பு ஒரு குறிப்பிட்ட வழியில் ஒன்றுபோல் இருக்கின்ற வடிவுகளின் ஒரு வகுப்பாகும்; எனவே அது ஒரு கட்டுமானமாகும். உருபன்களின் ஒரு தனி வரிசை ஒரு தனி கேட்பவருக்கு ஒரே நேரத்தில் ஒன்றையொன்றை விலக்கிவைக்கும் இரண்டு பிற வரிசைகளைப் போன்று இருக்காது; ஆனால் சில நேர்வில் ஒப்புமையின் இரண்டு திசைகளுக்கு இடையில் மாறுபடும். *old men and women* என்பதை உருபன்களின் ஒரு நேரான வரிசையாக பொருள்கோள் செய்வது மிகவும் செயற்கையானது; மொழியிலார் தமது சிறப்பு நோக்கத்திற்காக அவ்வாறு செய்யும் திறனை வளர்க்கவேண்டும்.

படிநிலை அமைப்பு வடிவங்கள் மற்றும் வரிசை (forms and order) எனப் 'பழமை' (primitive) ஆனதாகும் என்பது நமது முடிவு. சான்றுவிளக்கம் இரண்டு கருதல்கள் மீதானதாகும்: (1) படிநிலை அமைப்பு பொருண்மை மயக்கம் காட்டாத பல கூற்றுகள் இருக்கவேண்டும்; (2) படிநிலை அமைப்பு பொருண்மை மயக்கம் காட்டுகின்ற கூற்றுகள் சில இருக்கவேண்டும்; ஏனென்றால் படிநிலை அமைப்பு ஒவ்வொரு நேர்விலும் வடிவுகள் மற்றும் வரிசையால் தீர்மானிக்கப்படவேண்டும்; எனவே அது 'அடிப்படை' ஆனது அல்ல.

தொடரா அண்மை உறுப்புகள் (Discontinuous ICs)

சமீபத்தில் முன்மொழியப்பட்ட உருபனியல் பகுப்பாய்வின் வகை, படிநிலை அமைப்பின் 'பழமை' தகுதிநிலையைத் தெளிவாக்கவில்லை. இந்த வகைப் பகுப்பாய்வு கவர்ச்சியாகத் தெரிகிறவர்களுக்கு இந்தச் சார்பு ஒரு சமயத்தில் நிரூபிக்கப்படவேண்டும்; இது அண்மை உறுப்பு அமைப்பை 'அடிப்படை'ஆனதாக அடையாளம் கண்டுகொள்ளும் விருப்பத்திற்கு ஆதரவு சேர்க்கும். பகுப்பாய்வாளர் அண்மைப்படாத/தொடரா உருன்களைப் பயன்படுத்துவதற்கு கட்டாயப்படுத்தபடுன்கிற நிலைமை இல்லாததன் காரணமாக அண்மை உறுப்பு அமைப்பின் மீதான சார்பை பிந்தையதின் தகுதிநிலைக்குச் சான்றாக எந்த விதத்திலும் எடுக்க இயலாது.

பின்வரும் இரண்டு லத்தீன் வாக்கியங்களைக் கருத்தில் கொள்ளவும்: (a) *parter bonus filium amat*, (b) *pater bonum filium amat*. பிந்தையது இயல்பில்லாதது/அசாதாரணமானது

என்றாலும் நிச்சயமாகச் சாத்தியமானதாகும்; அதிக கலவைத்தன்மையான மற்றும் யதார்த்தமான எடுத்துக்காட்டுகளைவிட இதைக் கையாளுவது எளிதாகும்.

வழக்கமான நடைமுறைப்படி தொடரா அண்மை உறுப்புகளை நிராகரிப்பது - (a) என்பதன் இறுதி உறுப்புகள் ஒரு உருபனின் இரண்டு நேர்வுகளை உட்படுத்தும்; நாம் அவற்றை {எழுவாய்வேற்றுமை} மற்றும் {செயப்படுபொருள் வேற்றுமை} ஒரு நேர்வு என்று அழைக்கலாம்; (b) {எழுவாய்வேற்றுமை} என்பதன் ஒன்றையும் {செயப்படுபொருள் வேற்றுமை} என்பதன் இரண்டையும் உட்படுத்தும். (a)யில் எழுவாய்வேற்றுமை என்பதன் இரண்டு நேர்வுகளின் விநியோகம்/பகிர்வு *pater* , *bonus* என்பன ஒரு கட்டுமானத்தில் பங்காளிகளாகச் சேர்ந்து வரும் என்று குறிப்பிடும்; (b)யில் {செயப்படுபொருள் வேற்றுமை} என்பதன் இரண்டு நேர்வுகளின் விநியோகம் அதே வழியில் *bonum*, *filium* என்பதனை குறிப்பிடும். இந்த எடுத்துக்காட்டுகளில் படிநிலை அமைப்பு சுதந்திரமான பழமையாக இருக்கத் தேவையில்லை.

தொடரா உருபன்களைப் பயன்படுத்துவது விளைவுகளை வேறுபடுத்தும். (a) என்பதன் இறுதி உறுப்புகள் இந்நேர்வில் {எழுவாய்வேற்றுமை}, {செயப்படுபொருள் வேற்றுமை} என்ற ஒவ்வொன்றின் ஒரு நேர்வை உட்படுத்தும்; (b)யில் இந்த உருபன்கள் ஒவ்வொன்றின் ஒரு நேர்வு காணப்படும். (a) யில் {எழுவாய்வேற்றுமை} என்பதன் ஒரு நேர்வு தொடராவடிவில் இருக்கும் நேர்வாகும்; பிரிக்கப்பட்ட உருப்படுத்தங்கள் இரண்டு அடுத்தடுத்து வருகின்ற சொற்களின் இறுதிகளில் வரும்; (b)யில் {எழுவாய்வேற்றுமை} உருபனுக்கும் அதுபோன்று வரும்.

தொடரா உருபன்களை அடையாளங் காணும்போது அது அம்மாதிரியான உருபனின் ஒவ்வொரு உருப்படுத்தத்தின் குறிப்பிட்ட வடிவுக்கு மட்டுமல்லாமல் எந்த நேர்விலும் உட்படும் பல உருப்படுத்தங்களுக்கும் தேவையாகும்; மேலும் அந்த உருப்படுத்தங்களின் துல்லியமான இடம் உருபொலியனியல் நிலையில் ஊகிக்கக்கூடியதாக் இருக்கவேண்டும். *patr என்பது* அடிச்சொல்லாகவும் எழுவாய்வேற்றுமை உருபனுடன் இணைந்தும் வந்தால் முழுவடிம் *pater* ஆகும் என்று யூகிக்க முடிந்தால் மட்டும் போதாது; அடிச்சொற்களின் வரிசை *part-…bon-…* ஆகவும் {எழுவாய்வேற்றுமை} உடன் இணைந்தும் வந்தால் முழுவடிவமும் *pater bonum* என்று நாம் ஊகிக்க இயலவேண்டும். இப்போது நம்மிடம் பகுதி *part-…bon-… fili- amat* என்பதும் {எழுவாய்வேற்றுமை}, {செயப்படுபொருள் வேற்றுமை} என்ற ஒவ்வொன்றின் ஒரு நேர்வு இருப்பதாகக் கொள்ளவும். சூழல் அடிப்படையிலான

பொருத்தமான உண்மைகளிலிருந்து *bon-… fili-* என்பதற்கு மாறாக *part-, bon-* என்பன பங்காளிகள் என்று தரப்பட்டல் ஒழிய முழு வடிவும் *parter bonus filium amat* அல்லது *pater bonum filium amat* அல்லது ஏதாவது ஒன்று என அறிந்துகொள்ள வழி இல்லை. உருபொலியனியல்சார் அடிப்படையில் பொருத்தமான சூழலின் பகுதியாக படிநிலை அமைப்பு அனுமதிக்கப்பட்டால் ஒழிய தொடரா உருபன்களின் உருப்படுத்தங்களின் பகிர்வை/விநியோகத்தை இலத்தீன் மொழியில் ஊகிக்கக்க இயலாது. நாம் தொடரா உருபன்களைப் பயன்படுத்தினால் (a) என்ற (b) இலத்தீன் வரிசைமுறைகள்/தொடர்ச்சிகள் அவற்றின் வெளிப்படையான ஒலியனியல் வேறுபாடைத் தவிர்த்து *Old men and women* என்ற வடிவம்கொண்ட இரண்டு ஆங்கிலத் தொடர்கள் போன்று அமைப்பு அடிப்படையில் ஒப்பானவை.

அண்மை உறுப்பு அமைப்பை பொருத்தமான சூழலாகக் கொள்வது வழக்கமானதல்ல; தொடரா உருபன்கள் என்ற முழுக் கருத்துச்சாயலுக்கு எதிராகச் சிலரை மாற்ற தேவையாகச் சேர்க்கப்பட்ட சிக்கல்கள் போதுமானதாகும்.

இனி அடுத்தது கட்டுமானங்களின் தகுதிநிலை ஆகும். Bake என்ற வினை அடியும் இறந்தகால உருபனும் அவை சேர்க்கப்படவேண்டும் என்ற அறிவுறுத்தலுடன் தரப்படுகையில் அவற்றை baked எனச் சேர்க்க இயலும். ஒவ்வொரு உறுப்பும் இறுதியானது ஆகையால் படிநிலை அமைப்பு பற்றிய சிக்கல் இல்லை. வரிசை ஒழுங்கு நிறுவப்பட்டது.

John என்பதையும் *saw* என்பதையும் சேர்த்தால் விளைவு *John saw* என்றோ John saw என்றோ *saw John* அமையும். இங்கு விருப்பத்தேர்வு செயல்முறை இருக்கின்றது. John, saw என்பதற்குள் வரிசை ஒழுங்கின் விவரக்குறிப்பை தந்தால் கட்டுமானக்களுக்கிடையில் விருப்பத்தேர்வு இல்லை: ஒரு வரிசை ஒழுங்கில் செயலி-செயல் (actor-action) கட்டுமானதில் *John saw* என்பது மட்டும் சாத்தியமானதாகும்; மற்றொரு வரிசை ஒழுங்கில் (செயல்-இலக்கு கட்டுமானதில்) *saw John* என்பது மட்டும் சாத்தியமானதாகும். விஷயத்தை இவ்வாறு அணுகுவதற்குப் பதிலாக நாம் வரிசை ஒழுங்கைக் கட்டுமானத்தால் உறுதிசெய்யப்பட்ட ஒன்றாகக் கருத இயலும்: *John, saw* மற்றும் எழுவாய்-பயனிலை கட்டுமானம் தேவைப்படி ஒரு வரிசை ஒழுங்கில் விளையும்; அதே வடிவங்களும் செயல்-இலக்கு கட்டுமானமும் தேவைப்படி மற்ற வரிசை ஒழுங்கில் விளையும். எந்த வழியைப் பின்பற்றினாலும் நாம் சுதந்திரமானது என்று கருத இயலும் அதிகபட்ச எண்ணிக்கை விட கூடுதாலான ஒரு மாறியை நேரிகின்றோம் என்பது தெளிவானதாகும்: வடிவங்கள் பங்காளிகளாக இருக்க கட்டுமானமும்

வரிசை ஒழுங்கும் அம்மாதிரியான நேர்வில் ஒன்றுக்கொன்று சுதந்திரமானவையாக இருக்க இயலாது.

இந்த மூன்று விஷயங்களிலிருந்தும் முற்றிலும் சுதந்திரமான மிக நெருங்கிய எடுத்துக்காட்டு சீன மொழியில் உள்ளது. சீனச் சொற்கள் chau^{3} 'வறு' and fan^{4} 'அரிசி' என்பன தரப்படுகையில் முதலாவது இரண்டாவதற்கு முன்வரும் என்ற அடுக்கமைவில் கட்டுமான விருப்பத்தேர்வு உள்ளது; ஆனால் வரிசைக்குள் எந்த வித வெளிப்படையான வழியிலும் இது வெளியிடப்படவில்லை. ஒரு சாத்தியமான கட்டுமனம் வினை-செயப்படுபொருள் ஆகும். இது chau^{3} fan^{4} 'to fry rice, fry rice' என்பதைத் தரும்; மற்றொன்று அடை-தலைமை கட்டுமானம் ஆகும்; இது chau^{3} fan^{4} 'fried rice'' என்பதைத் தரும். இவைகள் வேறுபட்டவைகள்: முதலாவதும் chr^{1} fan^{4} 'to eat rice, eat rice' என்ற பொருண்மை மயக்கமில்லாத வினை-செயப்படு பொருள் கட்டுமானம் ஆகும்; இரண்டாவது கட்டுமானமும் hau^{3} fan^{4} 'good rice' என்ற மயக்கமில்லாத அடை-தலைமை கட்டுமானமாகும்.

old men and women என்பது பற்றிய நமது விவாதம் அதே விகித்தில் chau^{8} fan^{4} என்பதற்கும் பொருந்தும். *old men and women* என்பது படிநிலை அமைப்பில் மயக்கமில்லாமல் வரும் பெரிய சூழல்கள் இருப்பது போன்று chau^{3} fan^{4} என்பதும் பொருண்மை மயக்கமில்லாமல் ஒரு கட்டுமானமாகவொ மற்றொரு கட்டுமானமாகவோ குறிக்கப்படும் சில பெரிய சூழல்களும் உள்ளன. ஆனாலும் பொருண்மை மயக்கம் நிலைத்திருக்கும் பெரிய சூழல்களும் உள்ளன. எனவே கட்டுமானத்தை வடிவுகளிலிந்தும் வரிசைமுறையிலிருந்தும் ஆக்க இயலாது. மறுதலை சாத்தியமாகும்: இரண்டு வடிவங்களும் கட்டுமானமும் தரப்பட்டுள்ளபோது வரிசைமுறை தீர்மானிக்கப்படதாகக் கருதப்படுகின்றது; ஒரே உறுப்புகள் உள்ள இரண்டு கட்டுமானங்கள் ஒரே வரிசைமுறையில் விளையும்.

சில மொழிகளில் குறைந்தது சில நேர்வுகளில் கட்டுமானத்தின் விருப்பத்தேர்வு அடிப்படையானதாகும் என்ற தீர்மானத்திற்கு நாம் கட்டாயப்படுத்தப்படுகின்றோம்.

இணைப்புத் தொடர்கள் (Co-ordinate phrases)

சேர்க்கை முறையின் ஒரு குறிப்பிட்ட பெயர்ப்பு (particular version) அடையாளப்படுத்தப்பட்ட கட்டுமானங்களின் அங்கீகாரத்தை அனுமதித்தால் அடிப்படை அல்லது ஆக்கப்பட்டவை என்ற கட்டுமானங்களின் தகுதிநிலை பற்றிய கேள்வி அற்பமானதாய் ஆகிவிடுகின்றது: குறைந்தது அடையாளங்களைக் கொண்ட அம்மாதிரியான

கட்டுமானங்கள் அடிப்படை தகுதிநிலையைக் கொண்டிருக்கவேண்டும். *John and Bill* என்ற *and* என்ற அடையாளம் உள்ள இருபகுதிகள் கொண்ட கட்டுமானத்தைக் கருத்தில் கொள்ளவும். இந்த வடிவம் *Bill and John* என்பதுடன் வரிசைமுறையில் மட்டும் *John and Mary* (or *Tom and Mary)* என்பதுடன் வடிவத்தில் மட்டும் *John or Bill* என்பதுடன் கட்டுமானம் மட்டும் முரண்படும்; *or* என்பது வேறுபட்ட கட்டுமானத்தின் அடையாளம் ஆகும். இந்த நேர்வில் எல்லா மூன்று காரணிகளும் சுதந்திரமானவை. *old men and women* என்பதில் எல்லா நான்கு காரணிகளும் சுதந்திரமானவை; ஏனென்றால் *X and Y* என்ற கட்டுமானத்துடன் பிற காரணிகளிலிருந்து சுதந்திரமாது என்று நிரூபிக்கப்பட்ட படிநிலை அமைப்பு என்ற விஷயமுமுள்ளது.

நாம் தகுதிநிலையை ஆய்வு செய்வதற்குக் கருதிய நான்கு காரணிகள் சாத்திய அடிப்படையில் சுதந்திரமானதாகத் அறியப்படுகின்றது; எனவே அடிப்படையானதாகக் கருதப்படுகின்றது. சாத்தியமான விதிவிலக்கு இருந்தால் இரண்டு காரணிகளில் ஒன்றான வெளிப்படையாக அடிப்படையானதாகத் தோன்றும் வரிசை ஒழுங்கு (linear order) (மற்றது வடிவம்) போதுமானதாகும். பிற எல்லா காரணிகளிலிருந்தும் சுதந்திரமானதாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டிய வரிசை ஒழுங்கு (linear order) மேலே வாதித்த ஒரே சூழ்நிலை *John and Bill* போன்ற அடையாளப்படுத்தப்பட்ட கட்டுமானங்களின் நேர்வு ஆகும்; அடையாளப்படுத்தப்பட்ட கட்டுமானங்களை மொத்தமாக தடைவிதிக்க இயலும்.

உருபொலியனியல் சிக்கல்கள்

பெரும்பாலும் உருபொலினியல் சிக்கல்கள் சேர்க்கைமுறை மாதிரியில் எளிய விடைகளைக் காண்கின்றது. எனென்றால் சேர்க்கைமுறை மாதிரியின் எல்லைக்குள் பல்வேறு உருபொலியன் உத்திகள் உள்ளன. இருப்பினும் ஒத்திசைவற்ற மிச்சம் உள்ளது. அவை சிக்கலை விளைவிப்பன; ஆனால் தீர்வுகாண இயலாத சிக்கல் அல்ல; பல தீர்வுகள் காணப்பலாம்; ஒரு தீர்வு மற்றொன்றைவிட நல்லதாகத் தோன்றலாம்; அல்லது உள்ளுணர்வு அடிப்படையில் நல்ல தீர்வு சேர்க்கைமுறை மாதிரியின் நடத்தை அமைப்பை மீறுவதாக அமையலாம். இந்த மிச்சம் ஆங்கிலத்தில் *took, put* (இறந்தகாலம்), *children* என்பனவற்றையும் பிரஞ்சுமொழியில் *bon* and *bonne* என்பதையும், சீனமொழியில் *lya*^{3} மற்றும் *lyang*^{3} 'two' என்பனதையும் உட்படுத்தும். நாம் இவற்றில் ஒன்றான *took* என்பதைப் பற்றி விரிவாக நடவடிக்கை எடுப்போம்.

took என்பதற்குப் பின்வரும் உருபொலியனியல் தீர்வுகள் முன்மொழியப்பட்டுள்ளன:

(1) took ஒரு தனி உருபன் எனவே எந்தவித உருபொலியனியல் சிக்கலுமில்லை.

(2) took என்பது இரு உருபன்களின் (take & ed) போர்ட்மென்டோ உருப்படுத்தம்.

(3) took என்பது பிற இடங்களில் take எனத் தோன்றும் + /ed/ என்பதன் பூஜிய மாற்றுருபு மாற்றுருபு (allomorph).

(4) took என்பது take என்பதன் ஒரு தொடரா மாற்றுருபன் /t…k/ மற்றும் /ed/ என்பதன் இடை மாற்றுரு (infix allomorph) /u/.

(5) took என்பது take +பதிலீடு உருபு /u/ ← /ey/ (/u/ என்பது /ey/ என்பதை பதிலீடுசெய்கின்றது)

நாம் ஒவ்வொன்றாகக் கருத்தில் கொள்வோம்:

(1)ஐ ஏற்றுக்கொள்ள இயலாது; ஏனென்றால் இது took என்பதற்கும் baked மற்றும் பிற வெளிப்படையான கலப்புவடிவங்களுக்கும் இடையே உள்ள நிரல்முறைசார் இணைத்தன்மையையும் மற்றும் ளையும் மாற்றும்.

(2) என்பது ஒரு பொதுவான தீர்வு; ஏனென்றால் உருவில் உள்ள பகுதி ஒற்றுமையை அடையாளங்காணும் சிக்கலை தவிர்க்கின்றது. ஆனால் இந்த தவிர்ப்பு இடுகுறித்தன்மையானது: took என்பதும் take என்பதும் bake என்பதும் baked என்பதும் போன்று ஒலியன் வடிவில் பகுதி ஒற்றுமையானவை; மற்றும் பொருண்மை அடிப்படையிலும் ஒரே வழியில் ஒற்றுமையானவை. இந்த உண்மை தெளிவற்றாக மாறக்கூடாது.

(3) என்பது இடுகுறித் தன்மையானது; ஏனென்றால் அது ஒலியனியல் அடிப்படையில் இல்லாத ஒன்றிற்கு ஒப்படைக்கின்றது.

(4) என்பது ஏதோ வழியில் கவர்ச்சியானது. ஆனால் இதுவும் இதுவரை மாற்று வழிக்கு எழுப்பியுள்ள ஆட்சோபனைகளை நேரிடுகின்றது. take என்பதை மாற்றுருபு /t…k/ + இடைமாற்றுருபு /ey/ என விளக்குவது கண்டனத்திற்கு உள்ளனது; ஏனென்றால் take என்பது bake, rake, catch என்பன போன்றதாகும். சேர்கை முறை மாதிரிச் சட்டகத்தில் இது ஒரு மிக நல்ல தீர்ப்பாகும்.

(5)ஆவது சேர்க்கை முறை மாதிரி சட்டகத்திற்கு ஏற்கத்தக்கதல்ல. இது மாற்றுரு என்று அழைப்பது அந்த கலைச்சொல்லின் பொதுவான வரையறைவிளக்கத்திற்கு ஏற்புடையதல்ல.

விதிமுறை மாதிரி (IP Model)

பின்வரும் கூற்றுகள் சேர்க்கைமுறை மாதிரிக்குக் கூறப்பட்டுள்ள கூற்றுகளுக்கு இணையானதாக தர முயற்சிக்கப்பட்டுள்ளது.

1. ஒரு மொழி வடிவு தனியானது (simple) அல்லது ஆக்கப்பட்டது (derived).

2. தனி வடிவு ஒரு வேராகும் (root).

3. ஒரு ஆக்கப்பட்ட வடிவு ஒன்றோ அல்லது அதற்கு மேல் உள்ளுறை வடிவுகளை (underlying form) கொண்டிருக்கும். அதில் செயற்பாங்கு (process) நடைமுறைப்படுத்தப்படும் உள்ளறை வடிவும் செயற்பாங்கும் பிற வடிவுகளிலும் திரும்பவும் நிகழும். உள்ளுறை வடிவம்(கள்) ஆக்கப்பட்ட வடிவின் அண்மை உறுப்பு(கள்) ஆகும். அது உறுப்பி (contitute) என்றும் அழைக்கப்பெறும். ஒவ்வொரு உள்ளுறை வடிவும் தந்துள்ள இடத்தை ஆக்கிரமிக்கும். ஒன்றிற்கும் மேற்பட்ட வடிவுகள் இருந்தால் ஒவ்வொன்றும் மற்றதன் இணையாகும் (partner).

4. ஆக்கவடிவில் உள்ள சில ஒலியன்கள் எந்த உள்ளுறை வடிவின் பாகமாக வராது இருக்கலாம். ஆனால் மாறாக செயற்பாங்கின் உருப்படுத்தம் (representation) அல்லது குறியாக (marker) இருக்கலாம்.

5. ஒரு மொழியின் நிரல்முறை சார்ந்த அமைப்பொழுங்கு (tactical pattern) பின்வரும் கூற்றுகளின் குழுமத்தால் அடக்கப்படும்:

(1.) செயற்பாங்கின் (விதிமுறையின்) பட்டியல்

(2.) ஒவ்வொரு விதிமுறையின் தலைப்பிலும்,

(2.1.) பங்கெடுக்கும் இடம் அல்லது இடங்களின் (pடிளவைiடிஇள) எண்ணிக்கை

(2.2.) ஒவ்வொரு இடத்திற்கும்,

(2.2.1.) அந்த இடத்தில் வரும் வேர்களின் பட்டியல் மற்றும்

(2.2.2.) அந்த இடத்தில் வரும் வடிவுகளை உருவாக்கும் செயல்முறைகளின் பட்டியல்

6. ஒரு வேர் ஒன்றுக்கும் மேற்பட்ட ஒலியன் உருவில் வரும். ஒரு வேரின் தனி உருவம் அதன் வேர்ப்-பிறழ்ச்சி (root-alternant) ஆகும்.

ஒரு செயற்பாங்கிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட உருப்படுத்தம் இருக்கலாம். ஒரு செயற்பாங்கின் தனிநிலை உருப்படுத்தம் குறியாகும் (marker). ஒரு குறி ஒரு ஆக்கப்பட்ட வடிவின் ஒலியன் உருவத்திற்கும் உள்ளுறையும் வடிவு அல்லது வடிவுகளின் ஒலியன் உருவத்திற்கும் (உருவங்களுக்கும்) இடையே உள்ள வேறுபாட்டைக் கொண்டிருக்கும். அதாவது ஒரு குறி உள்ளுறையும் வடிவுடன் ஒன்றி வரும் ஒலியன்களின் கூறுடன் (phonemic material) ஒத்தறி அடிப்படையில் ஏதாவது குறிப்பிட்ட இடத்தில் ஒலியன்களின் கூறுகளைக் கொண்டிருக்கும் அல்லது உள்ளுறை வடிவிலிருக்கும் ஒன்றிற்குப் பதிலாக ஆக்க வடிவில் ஏதாவது இருப்பதைக் கொண்டிருக்கும்.

7. வேர்களின் உருவத்தின் மாற்று வடிவங்கள் மற்றும் ஒரு செயற்பாங்கின் ஒன்றின் அல்லது மற்றதின் குறிப்பிட்ட நிகழ்வுகளின் தேர்வு அவை வரும் சூழல் (environment) அடிப்படையில் வருவதுரைக்கப்படும் (predictable). சூழல் என்பது பின்வருமாறு விவரணை செய்யலாம்.

8. ஒரு கூற்றின் (utterance) எல்லா ஒலியன்களின் கூறும் அந்த கூற்றில் வரும் வேர்கள் மற்றும் அவை உள்ளாக்கப்படும் செயற்பாங்கு (விதிமுறை) இவற்றின் அடிப்படையில் கணக்கிடப்படும்.

9. காலிவேர்பிறழ்ச்சிகள் (empty root-alternents), போர்ட்டோமன்டோ வேர்-பிறழ்ச்சிகள், மற்றும் தொடர்புகள் (links) சேர்க்கைமுறை மாதிரியில் உள்ளது போல் விவரணை செய்யவும் அனுமதிக்கவும் செய்யப்படும். செயற்பாங்கின் பூஜிய பிறழ்ச்சி வேர்கள் (zero alternent roots) மற்றும் பூஜியக்குறிகள் (zero markers) இதேபோல் அனுமதிக்கப்படும்.

10. உருவங்கள், மொழிபுகள், மாற்றுவடிவுகள், மற்றும் மாற்றங்களின் கட்டுப்பாடுகள் பற்றிய கூற்றுகள் மொழியின் உருபொலியனியல் அமைப்பொழுங்கை விளக்கும்; பிற கருதல்கள் சேர்க்கைமுறை மதிரி போன்று அமையும்.

ஒப்பீடு

முதலில் விதி முறை மாதிரி எவ்வாறு கையாளுகின்றது என்பது தரப்படுகின்றது.

(1) baked என்பது bake என்பதன் ஒற்றைப்பட்ட அண்மையுறுப்பு கொண்ட ஒரு ஆக்கப்பட்ட வடிவம் ஆகும். bake வேராக இருக்கின்றது; இது இறந்தகால ஆக்கம் என்று புலக்குறிப்பு செய்யவியலும் ஒற்றைச் செயற்பாங்கிற்கு (singulary process) ஆளாக்கப்பட்டுள்ளது. இந்தச் செயற்பாங்கிற்கு பல்வேறுபட்ட குறியீடுகள் (markers) உண்டு; இது bake என்பதில்

பிரயோகிக்கப்படுகையில் /t/ என்ற குறியீடு உள்ளுறை வடிவத்தின் ஒலிகளைத் தொரடர்த்துவரும்.

(2) took என்பது take என்ற உள்ளுறைவடிவம் கொண்டது; இது நிரல்முறை அடிப்படையில் baked போன்றது. உருபொலியனியல் வேறுபடு என்னவென்றால் இங்கு கேள்விக்குரிய ஒற்றைச் செயற்பாங்கு உள்ளுறையும் வடிவின் அடி உயிரான /ey/ என்பதை /u/ என்பதால் பதிலீடுசெய்யும் குறியீட்டைக்கொண்டுள்ளது.

(3) பயனிலையாக்கம் (PREDICATION) என்பதன் ஈரிணை செயற்பாங்கிற்கு ஆளாக்கப்படும் John மற்றும் saw என்பது தேவையான அதே வரிசையுடன் மற்றும் பூஜியக் குறியீட்டுடன் John saw என்பதைத் தரும். தீர்மானத்தின் (RESOLUTION) செயற்பாங்கிற்கு ஆளாக்கப்படும் இதே வடிவங்கள் தீர்மானிக்கப்பட்ட வரிசை முறையுடன் பூஜியீட்டுடன் saw John என்பதைத் தரும். வரிசைமுறை மாதிரியைப் போன்று நாம் இதற்கு மாறாக வரிசையை முதன்மையானதாகவும் செயற்பாங்கை தீர்மானிக்கப்பட்டதாகவும் எடுக்கலாம். முதல் பிறழ்ச்சிக்கு ஆதரவாகக் கணித்ததில் ஒப்பிடத்தக்க நேர்வுகளைத் தரலாம்.

(4) சீனமொழி வெளிப்பாடான chau^{3} மற்றும் fan^{4} என்பன தீர்மானத்தின் ஈரிணை செயற்பாங்கிற்கோ அல்லது மாறியமைத்தலின் (MODIFICATION) ஈரிணை செயற்பாங்கிற்கோ ஆளாக்கப்பட்டு chau^{3} fan^{4} என்பது முறையே 'அரிசியை வறு', 'வறுத்த அரிசி' என்பனவற்றைத் தரும். பெரிய வடிவங்களில் நேர்வின் இருப்பிடங்களின் வேறுபாடும் பொருண்மையின் வேறுபாடும் செயற்பங்கில் உள்ள வேறுபாட்டுடன் தொடர்புடையது.

(5) John and Bill என்பதன் உள்ளுறை வடிவுகள் John மற்றும் Bill என்பன சேர்க்கையின் (ADDITION) செயற்பாங்கிற்கு ஆளாக்கப்படும்; அதற்கு ஒரே குறியீடு and என்பதாகும். Bill and John என்பது அதே உள்ளுறையும் வடிவுகளையும் அதே செயற்பாங்கையும் ஆனால் வேறுபட்ட வரிசைமுறையை உட்படுத்தும் ஒரு வேறுபட்ட ஆக்கவடிவம் ஆகும். மற்றும் அதே செயற்பாங்கு 'சேர்க்கை' என்று இங்கு அழைக்கப்படுகின்ற செயல்பாடு இதே பெயரில் வரும் கணிதம்சார் செயல்முறைகளின் பண்புகளைக் கொண்டிக்காது என்பதைக் கவனித்தில் கொள்ளவும். இலக்கணச் சேர்க்கை கணித் சேர்க்கை அல்ல. எந்த இலக்கணச் செயல்பாடும் கணிதச் சேர்க்கை அல்ல.

விதிமுறை மாதிரி சேர்க்கை முறை மாதிரியின் முக்கிய நிரல்முறைசார் மற்றும் உருபொலியனியல் சிக்கலை நீக்குகின்றது. baked அலது took என்பதன் நேர்வில் மிதமிஞ்சிய செயலாக்க முறைகளைக் நேரிடவில்லை: உட்படுத்தப்பட்ட செயற்பாங்கு ஒற்றையாயனது; காரணிகள் முறையே உள்ளுறையும் வடிவங்கள் மற்றும் செயற்பாங்கு ஆகும். took என்பதை ஆய சேர்க்கைமுறை நேரிட்ட உருபொலியனியல் சிக்கல் விதிமுறை மாதிரி மாதிரியில் நீக்கப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் முழுச்சட்டகமும் *took* என்பதற்கும் *take* இடையே உள்ள வேறுபட்டை baked என்பதற்கும் bake இடையே செயற்பாங்கு குறியீட்டால் விளக்குவது போன்று ஏற்கத்தக்கது.

மாறாக சேர்க்கை முறையால் தவிர்க்கப்பட்ட குறிப்பிட்ட இக்கட்டுகளை நேரிடுகின்றது.

முதலாவது சுத்தமான சேர்ர்கை முறை அணுகுறை (இது எந்த உருபன்களையும் கட்டுமாங்களின் குறியீடுகளாகப் பொருள்கோள் செய்வதைத் தடைசெய்கின்றது) குறைந்த சுத்தமான சேர்க்கை முறை அல்லது விதிமுறை அணுகுமுறைகளைவிடச் சீரானதாகும்/ஒருப்படித்தானதாகும். இந்த ஒருப்படிதானது எண்ணுவது போன்று அவ்வளவு எளிதானதல்ல; 'ஐடங்கள்/கூறுகள்' உருபன்களாகவோ உருபன்கன்களின் வரிசையாகவோ அமையும்; இருப்பினும் ஒருவர் வரிசைமுறை, கட்டுமாங்கள், படிநிலை அமைப்பு என்பனவற்றின் சுதந்திரமான தரநிலைக்காக முயற்சிக்கவேண்டும். அவ்வாறாயினும் சேர்க்கைமுறைக்கு ஏற்றவாறு சில ஒலியனியல்சார் மூலக்கூறை 'வேர்' எனக் கொள்வதிலும் விதிமுறைக்கு ஏற்றவாறு சில ஒலியனியல்சார் மூலக்கூறை செயற்பாங்குகளின் 'குறியீடுகள் ' எனக் கொள்வதிலும் மற்றும் எல்லா ஒலியனியல் மூலக்கூறுகளையும் உருபன்களாகவோ அல்லது பிற இடங்களில் உருபனியல் அடிப்படையில் தேவையற்றது மற்றும் உருபனியல் அடிப்படையில் ஊகிக்கக்கூடியது எனக் கொள்வதன் எளிய செயல்முறையிலும் தெளிவான வேறுபாடு இல்லை.

சேர்க்கைமுறையால் தவிர்க்கப்பட்ட முன்னுரிமைச் சிக்கல் மீண்டும் கவனத்திற்கு வருகின்றது. எந்தக் கட்டுப்பாடுகளின் கீழ் ஒரு ஆக்கப்பட்ட வடிவத்தை இரண்டோ அல்லது அதற்கு மேற்பட்ட உள்ளுறையும் வடிவங்களை மற்றும் ஒரு ஈரிணையான அல்லது உயர்ந்த வரிசைமுறைச் செயற்பாங்கை உள்படுத்தியது என்றோ மற்றும் எந்தக் கட்டுப்பாடுகளின் கீழ் அதை (ஆக்கப்பட்ட வடிவை) உள்ளுறையும் வடிவம் மற்றும் ஒரு ஒற்றைச் செயற்பாங்கை உட்படுத்தியது என்றோ நம்மால் எவ்வாறு கூறவியலும்? ஒரு அர்த்ததில் இது சேர்க்கைமுறையில் காணப்படும் இரண்டு அதற்கு மாறாக ஒன்று என்ற சிக்கலின் நேர்வின் நீட்சியாகும்: எப்போது நாம் இரண்டு அதற்கு மாறாக மூன்று அண்மை உறுப்புகளை அல்லது n-1 உக்கு மாறாக *n* என்பதை அடையாளங்காண்கின்றோம்? .

இதற்கான விடையின் பகுதி சேர்க்கை முறையை விட விதிமுறையால் எளிதில் சிக்கலைத் தீர்க்க இயலும் நேர்வுகளில் இருக்கின்றது. baked மற்றும் took என்பன ஒற்றைச் செயற்பாங்கால் (singulary process) பொருள்கோள் செய்யப்படுகின்றன. ஏனென்றால் இதற்கு மாறாகச் செய்வது இவ்விரு நேர்விலும் நிரல்முறைசார் மற்றும் பொருண்மையியல் சார் பிரச்சனைக்கும் இரண்டாவதில் உருபொலியனியல் பிரச்சைனைக்கும் கொண்டுசெல்லும். இவற்றைவிட கடிமான நேர்வுகளைக் காண இயலும். இதன்படி விதிமுறை அதன் பயனற்ற எச்சத்தை நேரிடும்; இது சேர்க்கை முறையிலிருந்து உள்ளடக்க வடிவில் வேறுபடும், ஆனால் சேர்க்கை முறையுடன் ஒத்த உட்கோளைக் கொண்டிருக்கும்.

சேர்க்கைமுறைக்கும் விதிமுறைக்கும் இடையில் உள்ள மற்றொரு முரண்பாடு சேர்க்கை முறையின் கீழ் ஒரு மொழிக்கு ஏற்றுக்கொள்ளவேண்டிய கட்டுமானங்களின் எண்ணிக்கை மற்றும் அதற்கு மாறாக விதிமுறையின் கீழ் அதே மொழிக்குத் தேவையான செயற்பாங்கின் எண்ணிக்கை. உருபன்களின் எண்ணகைப் பொறுத்தவரையில் சிக்கனம் என்ற அளவுகோல் சேர்க்கை முறையில் கொண்டுவரக்கூடாது என்று தோன்றுகின்றது: பல அதிக எண்ணிக்கையிலான உருபன்கள் உள்ளன மற்றும் கொஞ்சம் கூடுதல் குறைவு பெரிய விஷமல்ல. ஆனால் சிக்கனம் உருபன்களின் வகுப்புகளின் எண்ணிக்கையைக்

குறைப்பதற்கோ முக்கியமான வடிவ வகுப்புகளின் அல்லது கட்டுமானங்களைக் எண்ணிக்கையை குறைப்பதற்கோ அல்ல. எனவேதான் brothers மற்றும் brethren என்ற இரட்டைப் பன்மைகளை நோிடுகையில் நாம் brother பெயர்-பன்மை உருபனின் வேறுபட்ட மாற்றுருபுகளை அவசியப்பட, இரண்டு ஒத்தொலிய அடி உருபன்களை (homophonous stem-morphemes), ஏற்கவோ அல்லது தேவை என்றால் brethren இல் உள்ள பன்மை உறுப்பை ஏற்கவோ விருப்பம் உடையவராய் உள்ளோம். உறுப்புகள் அதேதான் ஆனல் கட்டுமானம் வேறுபட்டது என்று சந்தேகிக்க நமக்குத் தோன்றவில்லை.

இலக்கண விளக்கத்தின் மதிபீட்டிற்கு அளவுகோல் இருந்தால் நான் மாதிரிகளின் மதிப்பீட்டிற்கு நமக்கு தேவை சரியானபடி உறவுள்ள கருவி அளவுகோல் (metacriteria) ஆகும். பின்வரும் பட்டியல் முழுமையானது அல்ல என்றாலும் முதல் நான்கையும் உட்படுத்தாத எந்த குழுமமும் முழுமையானதல்ல.

(1)ஒரு மாதிர் பொதுமையானதாக (GENERAL) இருக்கவேண்டும்: ஒரு மாதிரி குறிப்பிட்ட வகைகளைச் சார்ந்த மொழியை மட்டுமல்லாமல் எந்த மொழிக்கும் பொருந்தவேண்டும்.

(2) ஒரு மாதிரி திட்டவட்டமானதாய் (SPECIFIC) இருக்கவேண்டும்: தரப்பட்ட மொழிக்குப் பயன்படுத்தப்படுகையில் விளைவு மாதிரியின் இயல்பு அடிப்படையில் தீர்மானிக்கப்படவேண்டும்; ஆய்வாளரின் தற்போக்கான எண்ணத்தால் தீர்மானிக்கப்படலாகாது.

(3) மாதிரி உளப்படுத்துவதாக (INCLUSIVE) இருக்கவேண்டும்:தரப்பட்ட மொழிக்குப் பயன்படுத்தப்படுகையில் விளைவுகள் உற்றுநோக்கப்பட்ட தரவை உட்படுத்தவேண்டும் மற்றும் உட்கோள் அடிப்படையில் குறைந்தது அதிக சதவீதமான உற்றுநோக்காத தரவை உட்படுத்த வேண்டும்.

(4) மாதிரி விளைவாக்கமுள்ளதாக (PRODUCTIVE) இருக்கவேண்டும்: தரப்பட்ட மொழிக்குப் பயன்படுத்தப்படுகையில் விளைவுகள் எல்லையற்ற எண்ணிக்கையிலான சரியான புதிய கூற்றுகளை உருவாக்க இயலச் செய்யவேண்டும்.

(6) மாதிரி ஆற்றலுள்ளதாக (EFFICIENT) இருக்கவேண்டும்: எந்த தரப்பட மொழிக்கும் இதன் பயன்பாடு குறைந்த செயற்கருவிகளைக் கொண்டு தேவையான விளைவை அடையவேண்டும்.

நாம் மேற்கண்ட இரு மாதிரிகளையும் நேரிடும் போது ஒன்று மேற்சொன்ன எல்லா தேவைகளையும் பூர்த்திசெய்ய மற்றது பூர்த்திசெய்யாதிருக்கும் போது விருப்பத்தேர்வு எளிதாகும். நமது எல்லாத் தேவைகளையும் பூர்த்திசெய்கின்ற இரண்டை நேரிடும் போது நாம் அவைப் புள்ளியியல் அடிப்படையில் மட்டும் வேறுபடுகின்றன என்று முடிசெய்யவேண்டும். இரண்டு சூழல்களும் தற்போதைய நேர்வில் இல்லை. தற்போது இருக்கும் சேர்க்கை முறை மாதிரியோ விதிமுறை மாதிரியோ எல்லா கருவி அளவுகோல்களையும் நேரிடவில்லை. விஷயத்தை அளவு அடிப்படையில் பார்த்தால் விதிமுறை மாதிரி சேர்க்கை மாதிரியைப் போன்று தேவைகளைத் திருப்தி செய்வதில் நெருங்கி வந்துள்ளது. வேறுவிதமாகச் சொன்னால் நம்மிடம் மாதிரிகளின் இரண்டு முக்கியமான வகைகள் உள்ளன; இரண்டும் முழுவதும் திருப்திகரமாக இல்லை.

சொல்லும் அடுக்கு மாதிரி

சொல்லும் அடுக்கும் மாதிரி ஆங்கிலத்தில் Realizational morphology அல்லது "word-and-paradigm என்று அழைக்கப்படுகின்றது. இம்மாதிரி சொற்களின் கூறுகள் மீது அல்லாமல் சொல்வடிவில் கவனம் செலுத்துகின்றது. சொல்லடுக்கு உருபனியல் மாதிரி உருபன்கள் குறிகள் (signs) (வடிவம்-உள்ளடக்க இணைகள்) (form-content pairs) ஆகும் என்பதை மறுக்கின்றது. அதற்குப் பதிலாகத் திரிபுகள் அடி மாற்றங்கள் (stem modifications); அவை உருபனியல் பண்புக்கூறு கணங்களின் (morphological feature sets) படி அடுக்காகும் (exponents) எனக் கருதுகின்றது.

கோட்பாடு அடுக்குகளை (மேற்கோள் வாய்ப்பாடுகளை) (paradigms) ஒரு மையக் கருத்துச்சாயலாகக் கொள்கின்றது. உருபன்களைச் சொல்வடிவங்களாக இணைக்கும்

விதிகளைக் கூறுவதற்கோ அடிச்சொற்களிலிருந்து சொல்வடிவங்களை ஆக்குவதற்கோ பதிலாகச் சொல் அடிப்படையிலான உருபனியல், திரிபு அடுக்குகளின் வடிவங்களுக்கு இடையில் இருக்கும் பொதுமையாங்களைக் கூறுகின்றது. இந்த அணுகுறைக்குப் பின்னணியில் இருக்கும் முக்கியமான செய்தி அம்மாதிரியான பொதுமை ஆக்கங்கள் பிற இரண்டு அணுகு முறையிலும் கூறுவதற்குக் கடினம். எடுத்துக்காட்டுகள் பொதுவாகக் கூட்டிணைவு மொழிகளிலிருந்து (fusional languages) எடுக்கப்பட்டுள்ளன. இதில் ஒரு உருபன் அடிப்படையிலான கோட்பாடு திரிபு உருபன் என்று அழைக்கும் ஒரு சொல்லின் தரப்பட்ட 'கூறு' (piece) இலக்கண வகைபாடுகளின் சேர்க்கையுடன் பொருந்தும்; எடுத்துக்காட்டு 'படர்க்கையிடப் பன்மை' (third person plural).

உருபனியல் அடிப்படையிலான கோடுப்பாடுகள் அம்மாதிரியான நேர்வுகளை ஒரு தனி உருபனை இரண்டு வகைப்பாடுகளுடன் இணைத்து ஆய்கின்றது. இதற்கு மாறாகச் கூறு செயற்பாங்கு/விதிமுறை கோட்பாடுகள் (Item-and-Process theories) இம்மாதிரியான நேர்வுகளைப் பெரும்பான்மையும் பிரிக்கும்; ஏனென்றால் அவை பெரும்பாலும் இரண்டு தனியான விதிகள் இங்குள்ளது என்று அனுமானிக்கின்றன; ஒன்று படர்க்கை இடத்திற்கு மற்றொன்று பன்மைக்கு; ஆனால் அவற்றிற்கு இடையிலான வேறுபாடு செயற்கையானது. சொல்லும் அடுக்கும் அணுகுமுறைகள் இவற்றை ஒப்புமைசார் விதிகளால் (analogical rules) ஒன்றுக்கொன்று உறவுள்ள முழுச் சொற்களாகக் கொள்ளும்.

சொற்களை அவை பொருந்தும் ஒழுங்கமைப்பு அடிப்படையில் வகைப்பாடு செய்ய இயலும். இது இருக்கும் சொற்களுக்கும் புதிய சொற்களுக்கும் பொருந்தும். வரலாற்று அடிப்படையில் பயன்படுத்தப்பட்ட ஒன்றிலிருந்து வேறுபட்ட அமைப்பொழுங்கின் பிரயோகம் புதிய சொற்களை உருவாக்கும்; எடுத்துக்காடாக *older* என்பதை elder என்பதால் இடம் பெயர்ப்பது (இங்கு older பெயரடைசார் ஒப்பு அளபுகளின் (adjectival comparatives) இயல்பான அமைப்பொழுங்கைப் பின்பற்றுகின்றது) மற்றும் *cows* என்பது *kine* என்பதால்

இடம்பெயர்ப்பது (இங்கு *cows* ஒழுங்கான பன்மை ஆக்கத்தைப் பின்பற்றுகின்றது). சொல்லும் அடுக்கும் அணுகுமுறை இதை எளிதாக விளக்க இயலும்; பிற அணுகுமுறைகள் இதுபோன்ற நேர்வுகளை விளக்குவது கடினம் ஆகும்.

சொல்ஆக்கமும் விளைவாக்கமும் (Word formation and productivity)

சொல்லாக்கம் விளைவாக்கம் உள்ளது என்று நாம் மறைமுகமாய் ஏற்றுக்கொண்டுள்ளோம். இருப்பினும் விளைவாக்கம் சொல்லாக்கத்தில் சர்ச்சைச்குரியதாய் இருந்து வருகின்றது. இது குறித்து பல ஆய்வுக்கட்டுரைகளிலும் நூல்களிலும் எழுதப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட சொல்லாக்கம் விளைவாக்கம் நிறைந்ததா என்பதல்ல பிரச்சினை. எந்த அளவுக்கு சொல்லாக்கத்தைப் பொதுவாக விளைவாக்கமாய் கருத இயலும் என்பதே வாதத்திற்குரிய விஷயம். சில சொல்லாக்கச் செயல்முறைகள் விளைவாக்கமுள்ளவை என்பது தெளிவு. எடுத்துக்காட்டாக *தல்~த்தல்* என்பதை எந்த வினைச்சொல்லுடனும் சோ;த்து பெயராக்கம் செய்யலாம்: *போ + தல் > போதல், வரு+தல் > வருதல், செய்+ தல், படி+த்தல் > படித்தல்*. இது போலவே *அல், கை, ஆமை* என்பனவற்றறையும் எந்த வினைச்சொல்லுடனும் இணைத்துப் பெயராக்கம் செய்யலாம்: *ஓடல், ஓடுகை, ஓடாமை*; *ஆடல், ஆடுகை, ஆடாமை.* சொல்லாக்கத்தின் விளைவாக்கம் தான் தமிழில் பெரிய சொற்றொகை இருப்பதற்குக் காரணமாய் அமைகின்றது. செய்தித்தாள்களில் பதிய சொல் வடிவங்கள் பயன் படுத்தப்படுகின்றன; செய்தித்தாளின் தலைப்புகளிலும் விளப்பரங்களிலும் இந்த போக்கைக் காணலாம். எனவே சொல்லாக்கம் குறித்த எந்த கோட்பாடும் விளைவாக்கம் குறித்து விளக்கம் தரவேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது.

விளைவாக்கமும் படைப்பாக்கமும் (productivity and creativity)

விளைவாக்கம் என்பது மனித மொழியை விளக்கப் பயன்படுத்தப்படும் பண்புகளில் ஒன்றாகும். இந்தப் பண்புதான் எண்ணிக்கை வரையறையில்லா வாக்கியங்களை உருவாக்க மொழி பேசுபவரை அனுமதிக்கின்றது. விளைவாக்கம் ஆக்கமுறை இலக்கணத்தில் விதிகளால் கணிக்கப்படவேண்டும் என்று கருதப்படுகின்றது. ஆனால் படைபாக்கம் (creativity) என்பது மொழி பேசுபவர் மொழியை எவ்வாறு செயல்நோக்கத்துடன் ஊகிக்க இயலாத வழியில் (விதிக்கட்டுப்பாடின்றி) மொழியை விரிவாகப் பயன்படுத்த இயலும் என்பதாகும்.

சொல்லாக்கத்தில் எடுத்துக்காட்டாக *வெட்டுக்கத்தி* என்பது வெட்ட உதவும் ஒரு கருவியைக் குறித்து நிற்கும். ஆனால் *வெட்டுக்கத்தி* என்பதை 'சண்டைசச்சரவுகளில் ஈடுபடுபவர் என்று உருவகமாகப் பயன்படுத்துவது படைப்பாக்கமாகும். *கத்தி* என்ற சொல்லுக்குச் 'சண்டை சச்சரவாளர்' என்ற பொருள் இல்லை. மட்டுமன்றி *வெட்டுக்கத்தி* என்பது இரண்டாவது பொருளான 'சண்டைசச்சரவுகளில் ஈடுபடுபவர்' என்ற பொருளில் பயன்படுத்தப்படலாம் என்றோ இந்த முடிவு இவ்வகைப்பட்ட பொருளில் விரிவுபடுத்தப்படும் என்றோ ஊகிக்க இயலாது. விளைவாக்கமும் படைப்பாக்கமும் பல புத்தாக்கங்களை (neologisms) உருவாக்கும். ஆனால் விதிக் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட புது வழியாக்கங்கள் (innovations) தான் விளைவாக்கங்களாகும். படைப்பாக்கத்தைப் பொதுநெறிப்படுத்துவதோ வகைப்பாடு செய்வதோ சிரமமான செயலாகும். ஒத்தியைவில் செயல்படும் எல்லைக்கட்டுப்பாடு எந்த ஒரு ஆக்கமும் எவ்வகையைச் சார்ந்தது என்ற பட்டியலில் தணிக்கை செய்யப்படுகிறது. அது இந்த நிகழத்தக்க ஆக்கங்களிலிருந்து வேறுப்பட்டு நிற்குமானால் அது வேண்டாமென்று தள்ளப்படும். திட்ட வட்டமாக இவ்வெல்லைக்கட்டுப்பாடுகள் எவ்வாறு செயல்படுகிறது என்பதை நிருபிக்கத் தேவையான தரவுகளை கண்டுபிடித்து மிகக் கடினமானதாகும் என்றாலும் முடியாதது அல்ல. இவ்வாறு இவ்விசியத்தை அணுகுவது சுடுதல் எளிமைப்படுத்துவதாய் அமையும். சில எல்லைக் கட்டுப்பாடுகளைக் கவனித்திற் கொள்ள வேண்டாம் என்று தோன்றும். ஒரு நிலையில் பல எல்லைக் கட்டுப்பாடுகள் ஒரு சொல்லின் ஆக்கத்தின் போது மீறப்படவேண்டி வரும். இதனால் ஒரு நிகழத்தக்க ஆக்கம் காரணிகளின் ஒன்று திரட்டலால் தடை செய்யப்படலாம். அதாவது ஒரு நிகழத்தக்க ஆக்கத்தைப் பொருத்த வரையில் எல்லைக் கட்டுப்பாடுகள் ஒத்தியையில் செயல்படும் என்பதாகும். கருத்தியல் அடிப்படையில் வேறுபட்ட எல்லைக் கட்டுப்பாடுகளை முக்கியத்துவங்கள் அடிப்படையில் பேச முடியும். ஆனால் தற்போதைய நிலையில் இது ஒரு ஊகமாகவே அமையும்.

விளைவாக்கம் பற்றிய சுருக்கம்

இந்தப் பகுதியில் கூறிய வாதங்களின் படி விளைவாக்கம் என்பதற்கு ஒரு வரையறை வர்ணனை தர இயலும். ஒரு ஒட்டை விளைவாக்கம் உள்ளது என்று கூறவேண்டுமானால் அடிப்படையான வழி அந்த ஒட்டு புதிய சொற்களில் வர வேண்டும் என்பதாகும். இந்த சொற்கள் புதிய வடிவங்கள் என்பதைத் தவிர கூடுதலாக வளர்ச்சி அடையாது. இல்லாவிட்டால் அவை நாளடைவில் நிலைநாட்டப்பட்டவைகளாகி விடும். மாறாக ஒரு விளைவாக்கம் இல்லாத ஒட்டு அது வரும் இடங்களில் அது இணைந்து வரும் அடிகளின்

பட்டியலின் அடிப்படையில் தான் கணக்கிட்டு கூறும்படியாக அமையும். விளைவாக்கம் இல்லாத ஒட்டுகள் தான் ஓரினமாதல் (assimilation) அசையழுத்த அமைப்பொழுங்கு மாற்றம் (change of stress pattem) இவற்றை அனுமதிக்கும் என்பதல்ல.

ஒரு கட்டம் விளைவாக்க ஒட்டுகளுக்குள் சில பிறவற்றைவிட மிகுந்த விளைவாக்கம் உள்ளதாயின் இருக்கும். விளைவாக்கத்தரம் அடிகளின் எல்லைக் கட்டுப்பாடுகளின் கண்டிப்பு என்பதற்கு இனங்கவும் அமையும். அவற்றை அளிப்பது சிரமம். ஒரு குறிப்பிட்ட வகையான புதிய சொல்லனின் தேவை, விருப்பத்தேர்வு, அழகுணர்ச்சி, எல்லைக் கட்டுப்பாடு (செவிக்கினிமை) என்பன இதன் பாற்படும்.

எல்லைக் கட்டுப்பாட்டின் கீழ்க் கோடியில் இருப்பது ஒப்புமையாக்கமாகும். இதன்படி ஒரு புதிய வடிவு மட்டும் தான் இருக்கலாம். மேல்நிலைக் எல்லைக் கட்டுப்பாடு தெளிவின்றி இருக்கிறது. ஒரு ஒட்டு எந்த அடியுடனும் இணையும் என்ற கருத்தில் எல்லைக் கட்டுப்பாடே இல்லாத சொல்லாக்கம் இருப்பது இயலாத ஒன்றாகும். ஒரு ஒட்டு பொருண்மை, தொடரியல் அல்லது ஒலியனியல் பண்புக்கூறுகளால் விளக்கத்தக்க எல்லா அடிகளுடன் பயன்படுத்தப்பட்டு வருவது முழுவிளைவாக்கமாகும். இந்த கருத்தில் கூட ஒரு செயற்பாங்கு முழு அளவில் விளைவாக்கம் உள்ளது என்று குறிப்பிட இயலும் என்பது ஐயமாகவே உள்ளது. ஏன் என்றால் ஏற்கெனவே இருக்கிற ஒரு சொல்லின் அடிக்கடி இதற்கு தடையாக அமையலாம்.

குறை விளைவாக்கம் என்று அழைக்கப்படுவது இரண்டு காரியங்களாகும். பெரும்பாலும் இது விளைவாக்கம் இல்லாதது. இதில் பொதுமையாக்கத்திற்காக (generlization) விரிவானதாக பயன்படுத்தப்பட்ட சொல்நிலையாக்க வடிவுக்குள்ளன. இன்னொன்று அருகியதாகும். குறை விளைவாக்கத்திற்குத் தனியான மதிப்பு அளிக்க இயலாது. சுருக்கமான ஒரு உருபனியல் செயற்பாடு எத்தனை புதிய சொற்கள் உருவாக்கப் பயன்படுகிறது என்பதைப் பொருத்து கூடுதல் அல்லது குறைந்த விளைவாக்கமுள்ளது என்று கூறலாம்.

5. தமிழ் உருபனியல் அமைப்பு

தமிழ் ஒரு திராவிட மொழி. இம்மொழி வினைச்சொல்லை இறுதியாகக் கொண்ட வாக்கியங்களை உடையதாகும். இம்மொழி இலக்கணச் செயற்பாங்குகளை (அதாவது இலக்கணப் பொருண்மைகளை) உருபனியல் நிலையில் வெளிப்படுத்தும் ஒட்டுக்கள் நிறைந்த மொழியாக விளங்குகிறது. இம்மொழி உள்ள ஒவ்வொரு வேர் உருபனும் ஆயிரக்கணக்கான சொற்களின் உருவாக்கத்திற்கு (அதாவது திரிபு மற்றும் ஆக்க வடிவுகளின் உருவாக்கத்திற்கு) அடிப்படையாக அமைகிறது. தமிழ் வாக்கியங்கள் எழுவாய்தொடரையும் வினையையும் கொண்ட அமைப்பாகவோ எழுவாய்த் தொடரையும் செயப்படுபொருள் தொடரையும் வினையும் கொண்ட அமைப்பாகவோ அமையும்.

5.1 பெயர்ச் சொற்களின் உருபனியல் அமைப்பு

தமிழ்ச் சொற்களை உருபனியல் அடிப்படையிலும் தொடரியல் அடிப்படையிலும் பெயர்ச்சொல், வினைச்சொல், பெயரடை, வினையடை என்ற முக்கியமான சொல் வகுப்புகளாகப் பகுப்பர். இவற்றில் பெயர்ச்சொற்கள் வேற்றுமை உருபுகளும் பன்மையை உணர்த்தும் ஒட்டும் ஏற்று வரும். மேலும் பெயர்கள் *ஆக, ஆய், ஆன* என்ற ஒட்டுக்களையும் ஏற்று வரும்.

5.1.1 பெயரின் திரிபு

பெயர்கள் வேற்றுமைக்கும் எண்ணிற்கும் திரிபுறும் எனப் பார்த்தோம். திரிபுற்ற ஒரு பெயர்ச்சொல் பெயர்ப்பகுதி, எண் மற்றும் வேற்றுமை என்ற

மூன்று உருபன்களின் ஒலியனியல் உட்படுத்தம் ஆகும். இதைப் பிவருமாறு வெளிப்படுத்தலாம்:

பெயர் (+ எண்) (+ வேற்றுமை)

ஒலியனியல் நிலையில் திரிபுற்ற பெயர் வடிவம் மேற்சொன்ன மூன்று உருபன்களையும் மெய்ப்படுத்தும் செய்யும் மூன்று உருபுகளை மட்டும் எப்பொழுதும் கொண்டிருப்பதில்லை. ஏனென்றால் பெயர்த் திரிபுன் போது இலக்கண உருபன்களை மெய்ப்படுத்தம் செய்யும் எண் மற்றும் வேற்றுமைப் பின்னொட்டுகள் தவிர சொல் அல்லது இலக்கணச் செயல்பாடில்லாத சில ஒலியனியல் ஒட்டுக்களும் வரலாம். இவ்வொலியனியல் பின்னொட்டுகள் வெற்றுருபன்கள் (Empty morpheme) எனப்படும். அதாவது அவை ஒரு உருபனை உருப்படுத்தம் செய்யாது. இலக்கண நூல்களில் இவ்வுருபனியல் பின்னொட்டுகள் சாரியைகள் (inflectional increments) எனப்படும். கட்டாய மற்றும் விருப்பு ஒலியனியல் பின்னொட்டுகள்/சாரியைகள் இவற்றுக்கிடையில் வேறுபாட்டைக் கருதலாம். நாம் கட்டாயத் திரிபு சாரியைக்ளைத் திரிபு (oblique) சாரியைகள் அல்லது திரிபு ஒட்டுகள்

என்றும் கூறலாம். விருப்பு திரிபு சாரியைகளை ஒலி நிரவல் (euphonic) சாரியை அல்லது ஒலி நிரவல் பின்னொட்டுகள் என்றும் குறிப்பிடலாம்.

உள்ளுறை அமைப்பில் இரு இலக்கண உருபன்கள் (ஒன்று எண் ஆகவும் மற்றொன்று வேற்றுமையாகவும் வரும்) பெயர் உருபனுடன் வரும். ஒலியனியல் நிலையில் நான்கு வகையான உருபுகள் (பின்னொட்டுகள்) பெயர்ப் பகுதியுடன் சேர்ந்து வரும். அவை பின்வருவனவாகும்.

1. பன்மைப் பின்னொட்டு
2. திரிபு பின்னொட்டு (சாரியை)
3. ஒலிநிரவல் பின்னொட்டு (சாரியை)
4. வேற்றுமைப் பின்னொட்டு

இந்நான்கு பின்னொட்டுகளும் பெயர்ப்பகுதியுடன் பின்வருமாறு வரும்:

1. பெயர் எண்ணுக்காகத் திரிபுறும்போது பன்மைப் பின்னொட்டு பெயர்ப் பகுதியில் சேர்க்கப்படும்.

   பெயர்ப் பகுதி + பன்மைப் பின்னொட்டு

   எ.கா.

   வீடு- கள், எலி- கள்

2. பெயர் வேற்றுமைக்காகத் திரிபுறும்போது வேற்றுமைப் பின்னொட்டு பெயர்ப் பகுதியுடன் நேரிடையகவோ திரிபுப் பகுதியுடனோ சேர்க்கப்படும்.

பெயரின் திரிபுப் பகுதி பெயருடன் திரிபு ஒட்டைச் சேர்ப்பதனாலோ நிலை மொழியின் இறுதி மெய்யொலியை இரட்டுவதாலோ உருவாக்கப்படும். ஒலி நிரவல் சாரியை *இன்* (சில நேர்வுகளில் *–அன்*) பெயர் அல்லது திரிபுப் பகுதிக்கும் வேற்றுமைப் பின்னொட்டுக்கும் இடையில் விருப்பாக வரும். இவ்வுருபன் அமைப்பொழுங்கைப் (morphotactics) பின்வருமாறு தரலாம்:

பெயர்ப்பகுதி / திரிபுப்பகுதி + (ஒலிநிரவல் சாரியை) + வேற்றுமைப் பின்னொட்டு

வீடு- கள்(-இன்)- ஐ > வீடுகளை/வீடுகளினை

கை-கள்(-இன்)- ஐ > கைகளை/கைகளினை

பெயர் அல்லது திரிபுப் பகுதியுடன் பன்மை, வேற்றுமை மற்றும் ஒலியன் ஒட்டுகளைச் சேர்க்கும்போது பல உருபொலியனியல் விதிகள் செயல்படும். எடுத்துக்காட்டாக இடைவெளியைத் (hiatus) தவிர்க்க *வ்* அல்லது *ய்* என்ற ஒலியன் வடிவு உடன்படுத்தியாகச் (glide) சொருகப்படும். இதைப்பற்றி பின்னால் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

5.1.2 பெயர்ப் பகுதி

பெயர்ப்பகுதி என்பது திரிபுப் பின்னொட்டுகள் சேர்க்கப்படாத பெயர் வடிவமாகும். இவ்வடிவில்தான் பெயர்கள் அகராதியில் பட்டியலிடப் பட்டுள்ளன. இவை எழுவாய் வடிவிலும் வரும். பெயர்ப்பகுதி தனியாகவோ கலப்பாகவோ வரலாம். பெயர்ப்பகுதி ஒரு பெயர் வேரைக் கொண்டிருக்கும் (எ.கா. *கல்*); ஒரு கலவைப் பெயர்ப்பகுதி ஒரு வேரையும் (எ.கா. ஒரு வினைப் பகுதியும்) ஒரு ஆக்க ஒட்டையும் (எ.கா. பெயராக்கப் பின்னொட்டு *ப்பு*) கொண்டிருக்கலாம்.

[பெ[வி படி] -ப்பு]

அல்லது அது ஒரு வேரையும் பால் பின்னொட்டையும் கொண்டிருக்கலாம்.

மாண-வ்-அன்>மாணவன்

மாண-வ்+இ > மாணவி

மாண-வ்-அர்> மாணவர்

தலை-வ்-அன்> தலைவன்

தலை-வ்-இ> தலைவி

தலை-வ்-அர் > தலைவர்

இதில் *-அன்* என்பது ஆண்பால் பின்னொட்டாகும். *-இ* என்பது பெண்பால் பின்னொட்டாகும். *-அர்* என்பது பலர்பால் (உயர்வுப் பன்மை) பின்னொட்டாகும். பல பெயர்ப்பகுதிகள் *அ* என்பதில் முடியும் வேரையும் பகுதியை உருவாக்கும் (stem forming) பின்னொட்டான *ம்* என்பதையும் கொண்டிருக்கும்.

மர-ம் > மரம்

பழ-ம் > பழம்

நில-ம்> நிலம்

திட்ட-ம்> திட்டம்

5.1.3 திரிபுப் பகுதி

சில பெயர்கள் பெயர்ப்பகுதியுடன் திரிபுப்பகுதி (oblique stem) என்று அழைக்கப்படும் திரிபுப் பெயர் வடிவத்தையும் கொண்டிருக்கும். சில திரிபுப் பகுதியைக் கொண்டிருக்காது. திரிபுப்பகுதிக்கு நான்கு மடங்கு செயல்பாடும் சூழல் வருகையும் இருக்கும். மேற்சொன்ன எடுத்துக்காட்டில் காட்டியுள்ளது போல் முதலாவது, இப்பெயர் வடிவத்துடன் தான் வேற்றுமைப்பினொட்டுகள் சேர்க்கப்படுகின்றன; இரண்டாவது பெயரின் வடிவம்தான் பெயர் ஒரு அடையாகக் கிழமைச் செயல்பாட்டுடன் தலைமைப் பெயருக்கு முன்னால் வரும் வடிவமாகும்; மூன்றாவது இப்பெயர் வடிவம்தான் சூட்டுப்பெயர் கட்டுமானத்தில் முதல்

பெயர்த் தனிமமாக வரும் வடிவமாகும். நான்காவது இப்பெயர் வடிவம்தான் பல பின்னுருபுகளுக்கு முன்வரும் வடிவமாகும். திரிபுப்பகுதியாக வரும். பெயர்கள் திரிபுப் பகுதியாக வருமா வராதா என்பதன் அடிப்படையிலும் திரிபு அடியாக வந்தால் அவற்றின் ஒலியனியல் வடிவம் அடிப்படியிலும் பெயர்களை நான்கு வகுப்புகளாக வேறுபடுத்திக் காட்டலாம்.

5.1.3.1. *த்து* என்ற திரிபு ஒட்டு உடைய திரிபுப் பகுதி

இவ்வகுப்பில் வரும் பெயர்கள் *அம்* என்ற இறுதி அசையைக் கொண்டிருக்கும் (எ.கா. மரம், நிலம், பழம்). இப்பெயர்கள் அவற்றின் இறுதி ஒலியனான *ம்* என்பதை *த்து* என்ற திரிபு ஒட்டால் இடம்பெயர்த்துத் திரிபுப் பகுதியை உருவாக்கும்.

மர-த்து > மரத்து, பழ-த்து>பழத்து, நில-த்து>நிலத்து, தோட்ட- த்து>தோட்டத்து

இத்திரிபுப்பகுதியின் வருகையின் நான்கு சூழல்கள் கீழே எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

1. திரிபுப் பகுதி + வேற்றுமை ஒட்டு

   தோட்ட-த்த்-இல் > தோட்டத்தில்

2. திரிபுப்பகுதி + தலைமைப் பெயர்

   தோட்ட-த்து-க் கதவு > தோட்டத்துக் கதவு

3. திரிபுப் பகுதி + பெயர் (பெயர்-பெயர் கூட்டில்)

   தோட்ட- த்து- ப் பூ > தோட்டத்துப் பூ

4. திரிபுப் பகுதி- பின்னுருபு

   தோட்ட-த்து-ப் பக்கம் > தோட்டத்துப் பக்கம்

திரிபு வடிவுகளைத் தொடர்ந்து வரும் பெயர்களின் அல்லது பின்னுருபுகளின் தொடக்க அடைப்பு ஒலிகளாக *க், ச், த், ப்* என்பனவற்றின் அடிப்படையில் முன்னர் வரும் திரிபுப் பகுதி சம்பந்தப்பட்ட அடைப்பொலிக்கு இரட்டித்த ஒலியைக் கொண்டிருப்பதை உணராலாம்.

5.1.3. 2. *அற்று* என்ற திரிபு ஒட்டுடைய திரிபுப் பகுதி

இவ்வகுப்பு ஐந்து பெயர்களைக் (மாற்றுப் பெயர்களை) கொண்டிருக்கும். இவை ஒரே திரிபு ஒட்டை ஏற்கும் என்பதன் அடிப்படையில் பொதுவான பண்பைக் கொண்டிருக்கின்றன. இவை பல, சில,அவை மற்றும் எல்லாம் என்பனவாகும். இப்பெயர்கள் அவற்றின் திரிபுப் பகுதியை *அற்று* என்ற திரிபு ஒட்டு சேர்க்கப்படும்போது உருவாக்கும். எல்லாம் என்பதில் *ம்* என்பது நீக்கப்படும். *இவை, அவை* என்பனவற்றில் *ஐ* என்பது *அ* என சுருக்கப்படும்.

பல-வ்-அற்று > பலவற்று

அ-வ்-அற்று > அவற்று

எல்லா-வ்-அற்று > எல்லாவற்று

இந்த வகையில் படும் திரிபுப் பகுதி வரும் சூழல்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

1. திரிபுப் பகுதி + வேற்றுமை ஒட்டு

   பல-வ்-அற்-ஓடு > பலவற்றோடு

2. திரிபுப் பகுதி + தலைமைப் பெயர்

   பல- வ்- அற்-இன் விலை > பலவற்றின் விலை

3. திரிபுப் பகுதி + முன்னுருபுத் தொடர்

   பல-வ்- ற்-இன் பக்கம் > பலவற்றின் பக்கம்

இவ்வகையிற்படும் பெயர்களுடன் (மாற்றுப்பெயர்களுடன்) *இன்* என்ற ஒலிநிரவல் சாரியை கட்டாயமாக அற்று என்ற திரிபு ஒட்டுக்குப் பின்னால் அவை பெயர் விசேடணமாக வரும்போதொ அல்லது பின்னுருபால் தொடரப்படும்போதோ வரும்.

5.1.3.3 மெய்யொலிகள் இரட்டிப்பால் உருவாக்கப்படும் திரிபுப் பகுதி

டு அல்லது *று* என்ற அசைகளால் இறுதியுறும் எல்லாப் பெயர்களும் இவ்வகுப்பில் அடங்கும் (எ.கா. *வீடு, நாடு, ஆறு, கிணறு*). இவ்வகுப்பைச் சார்ந்த பெயர்கள் இறுதி அசையின் மெய்யெழுத்துக்கள் இரட்ட திரிபு அடியை உருவாக்கும்.

வீடு > வீட்டு

நாடு > நாட்டு

ஆறு > ஆற்று

கிணறு > கிணற்று

இவ்வகையிற்படும் திரிபு அடியின் வருகைச் சூழல் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

1. திரிபுப் பகுதி + வேற்றுமை ஒட்டு

   வீட்- ட்-இல்> வீட்டில்

   கிணற்- ற்- இல்>கிணற்றில்

2. திரிபுப் பகுதி + தலைமைப் பெயர்

   வீட்-டு-க் கதவு>வீட்டுக் கதவு

   கிணற்- று-ச் சுவர்>

3. திரிபுப் பகுதி + பெயர்

   வீட்-டு வேலை > வீட்டுவேலை

   கிணற்-று-த் தண்ணீர் > கிணற்றுத் தண்ணிர்

4. திரிபுப் பகுதி + முன்னுருபுத் தொடர்

   வீட்-டு-ப் பக்கம் >வீட்டுப் பக்கம்

   கிணற்-று-ப் பக்கம் >கிணற்றுப் பக்கம்

மேற்சொன்ன மூன்று வகுப்பில் படாத பெயர்ச் சொற்கள் யாவும் பெயரின் நான்காவது வகுப்படிச் சாரும். இவைகள்தாம் பெயர்களில் பெரும்பான்மையாகும் பிற வகுப்பைச் சார்ந்த பெயர்கள் அவற்றின் திரிபுப் பகுதியாக வருமிடங்களில் இவை அவற்றின் பெயர்ப் பகுதியாக வரும்.

1. திரிபுப் பகுதி + வேற்றுமை ஒட்டு

   தலை-ய்-இல் > தலையில்

2. திரிபுப் பகுதி + தலைமைப் பெயர்

   தலை மயிர்

3. திரிபுப் பகுதி + பெயர்

   தலை வலி

4. திரிபுப் பகுதி + பின்னுருபு

   தலை மேல்

5.1.3 4 மாற்றுப் பெயர்களின் திரிபுப் பகுதி

மாற்றுப் பெயர்கள் பெயர்ச்சொல்லின் வகைப்பாட்டின் ஒரு அடைப்பட்ட துணைக் குழுமமாகும். மாற்றுப் பெயர்கள் பெயர்களின் துணைக்குழுமமாகக் குழுமப்படுவதின் காரணம் பெரும்பாலும் தொடரியல் சார்ந்ததாகும். எனவே மாற்றுப் பெயர்கள் தொடரியல் வகைப்பாட்டைச் சார்ந்ததாகக் கருதப்படிகின்றன. ஐந்து வகைப்படும் மாற்றுப் பெயர்களின் ஒரு வகைக்கு அதாவது மூவிட மாற்றுப் பெயர்களுக்குத் திரிபுப்பகுதி இருக்கின்றது. முதலாவது, இரண்டாவது மற்றும் நான்காவது இடமாற்றுப் பெயர்களும், மூன்றாவது இடப்பன்மை அஃறிணை மாற்றுப் பெயர்களுக்கும் திரிபுப்பகுதி இருக்கின்றது. முதலாவது, இரண்டாவது மற்றும் நான்காவது மாற்றுப் பெயர்கள் அவற்றின் திரிபுப் பகுதியை அவற்றின் மாற்றுப்பெயர்கள் வடிவின் ஒலியனியல் மாற்றத்தால் உருவாக்கின்றது. படர்க்கை இடப் பன்மை அஃறிணை மாற்றுப்பெயர்களுக்கு அற்று திரிபு ஒட்டுபெற்ற திரிபுப்பகுதி இருக்கின்றது. பின்வரும் அட்டவணை மாற்றுப் பெயர்களையும் அவற்றின் திரிபு வடிவங்களையும் காட்டும்.

இடம்	**மாற்றுப்பெயர்**	**திரிபு வடிவம்**
தன்மை ஒருமை	நான்	என் (ன்), என
முன்னிலை ஒருமை	நீ	உன் (ன்), உன்
படர்க்கை ஒருமை ஆண்பால்	இவன்/அவன்	இவன்/அவன்
படர்க்கை ஒருமை பெண்பால்	இவள்/அவள்	இவள்/அவள்
படர்க்கை ஒருமை அஃறிணை	இது/அது	இது/அது
படர்க்கை ஒருமை ஆண்பால் / பெண்பால்	இவர்/அவர்	இவர்/அவர்

தற்சுட்டு ஒருமை	தான்	தன்/தன
தன்மைப் பன்மை	நாங்கள்/நாம்	எங்கள்/ நம்(ம்), நம
முன்னிலைப் பன்மை	நீங்கள்	உங்கள்
படர்க்கைப் பன்மை ஆண்பால்/ பெண்பால்	இவர்கள்/அவர்கள்	இவர்கள்/அவர்கள்
படர்க்கை பன்மை/ அஃறிணை	இவை/அவை இவைகள்/அவைகள்	இவற்று/அவற்று இவைகள்/அவைகள்
தற்சுட்டுப் பன்மை	தாங்கள்	தங்கள்

மேற்சொன்ன அட்டவணைப்படி *நான்* என்ற தன்மைப் பெயருக்கு மூன்று திரிபுப் பகுதி வடிவங்கள் இருக்கின்றன: *என்*, *என்ன்*, *என*. *என* நான்காவது வேற்றுமைப் பின்னொட்டுக்கு முன்னும், *என்ன்* என்பது *இடம்* என்ற பின்னுருபுக்கு முன்னும், *என்* தலைமைப் பெயருக்கு முன்னும் பிற பின்னுருபுகளுக்கு முன்னும் வரும்.

1. திரிபுப் பகுதி + வேற்றுமை ஒட்டு
   என-க்கு > எனக்கு, என்ன்-இடம் > என்னிடம்
2. திரிபுப் பகுதி + தலைமைப் பெயர்
   என் வீடு
3. திரிபுப் பகுதி + பின்னுருபு
   என் பக்கம்

5.1.3 .5 எண் குறிப்பு

தமிழில் ஒருமை, பன்மை என்ற இரண்டு எண்கள் இருக்கின்றன. பன்மை ஒட்டு *-கள்/-க்கள்* என்பதால் உருப-ஒலியனியல் அடிப்படையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளது. முன்னர் கூறியபடி பன்மை ஒட்டு பெயர்ப்பகுதியுடன் சேர்க்கப்படுகிறது; பெயரின் திரிபு அடியுடன் சேர்க்கப்படுவதில்லை. பன்மை ஒட்டிற்கு *கள்*, *க்கள்* என்ற இருமாற்றுருபுகள் இருக்கின்றன. அவற்றின் வருகை பின்வருமாறு அமையும்: *க்கள்* நெட்டுயிர் இறுதியில் வரும் எல்லாப் பெயர்களுடனும் இரண்டு குற்றுயிர் உள்ள அசைகளைக் கொண்ட உ என்ற குற்றுயிரால் இறுதியுறும் பெயர்களுடனும் சேர்ந்து வரும்; பிற இடங்களில் *கள்* வரும்.

ஒருமைப் பெயர்		பன்மைப் பெயர்	ஒருமைப்பெயர்		பன்மைப் பெயர்
பூ	-	பூ- க்கள்	கண்	-	கண்- கள்
ஈ	-	ஈ- க்கள்	மரம்	-	மரங்- கள்
பசு	-	பசு- க்கள்	வீடு	-	வீடு-கள்
தெரு	-	தெரு- க்கள்	கல்	-	கற்- கள்

5.1.3.6 ஒலி நிரவல் சாரியைகள் *இன், அன்*

முன்னர் *த்து, அற்று* என்ற திரிபுச் சாரியைகளைப் பற்றிப் பார்த்தோம். இவை தவிர *இன், அன்* என்ற ஒலியனியல் பின்னொட்டுக்கள் வடிவத்திலிருக்கும் விருப்புத் திரிபுச் சாரியைகளும் இருக்கின்றன. இவை ஒலி நிரவல் முன்னொட்டுக்கள் என்று அழைக்கப்பெறும். *இன்* என்பது எல்லாப் பெயர்களுடன் மட்டும் வரும். *அன்* என்பது *இது* மற்றும் *அது* என்ற மாற்றுப்பெயர்களுடன் மட்டும் வரும். இவ்வொலி நிரவல் ஒட்டுக்களான *இன்* என்பதும் *அன்* என்பதும் வரும் சூழல்கள் கீழே தரப்பட்டுள்ளன:

1. வேற்றுமைக்காகத் திரிபுற்ற பெயர்களில் ஒலிநிரவல் பின்னொட்டு பெயர்ப்பகுதிக்கும் அல்லது திரிபுப் பகுதிக்கும் அல்லது பன்மை ஒட்டுக்கும் வேற்றுமைப் பின்னொட்டுக்கும் இடையில் வரும்.

கை(-இன்)-ஆல் > கையால்/கையினால்

அத்(-அன்)-ஆல் > அதால்/அதனால்

யுத்த-த்த்(-இன்)-ஆல் > யுத்தத்தால்/யுத்தத்தினால்

கற்-கள்(-இன்)-ஆல் >கற்களால்/கற்களினால்

2. அடையாக வரும் பெயர்களுடன் உடைமை வேற்றுமைச் செயல்பாட்டில் தன்மைப் பெயருக்கு முன் வரும்.

கை(-ய்-இன்) புத்தகம் > கையின் புத்தகம்

மர(-த்த்-இன்) கிளை > மரத்தின் கிளை

பையன்-கள்(-இன்) சட்டை > பையன்களின் சட்டை

3. ஒரு கிளமைப் பின்னொட்டுக்கு முன் விருப்பாக, சில பெயர்களுடன் கட்டாயமாகப் பெயர்ப்பகுதிக்கு அல்லது திரிபுப்பகுதிக்கு அல்லது பன்மை ஒட்டுக்குப் பின் வரும்.

சாவி(ய்-இன்) மூலம் > சாவியின் மூலம்

அத்(-அன்) மூலம் > அதன் மூலம்

மர(-த்த்(-இன்) மூலம் > மரத்தின் மூலம்

ஆணி-கள்(-இன்) மூலம் >ஆணிகளின் மூலம்

5.1.3.7. வேற்றுமை

வேற்றுமை என்பதன் ஆங்கில நிகரன் case என்பதாகும். பெயர்ச் சொல்லின் பொருளை வேறுபடுத்திச் சொல்வது வேற்றுமையாகும். பெயர்ச் சொல்லின் பெயர்ப் பொருளை வேறுபடச் சொல்வது இது. பெயர்ப் பொருள் (பெயர்ச் சொல்) எழுவாய், செயப்படுபொருள் முதலியனவாக வேறுபடும்படி செய்வது வேற்றுமை எனப்படும்.

வேற்றுமை உருபு (Case Marker)

வேற்றுமை உருபு என்பதன் ஆங்கில நிகரன் case marker என்பதாகும். இதை வேற்றுமை + உருபு = வேற்றுமை உருபு என்று பிரித்து ஆயலாம். case என்ற ஆங்கிலச் சொல்லிற்கு வேற்றுமை என்பது நிகரானச் சொல்லாகும். பெயர்ச் சொல்லின் பொருளை வேறுபடுத்திச் சொல்வது வேற்றுமையாகும். marker என்ற ஆங்கிலச் சொல்லிற்கு உருபு என்பது நிகரானச் சொல்லாகும். பெயர்ச் சொற்கள் வேறுபட்டு நிற்பதைக் காட்டும் அடையாளக் குறியாக வருபவை வேற்றுமை உருபுகள் ஆகும். இவை இடைச் சொற்கள். இவை பெயர்ச் சொல்லுடன் சேர்ந்து பயனிலையைக் கொண்டு முடியும். அவ்வாறு வரும் உருபுகள் வெளிப்படையாகவும் மறைந்தும் வரும்.

வேற்றுமைப் பொருள் (Case meaning)

வேற்றுமை பொருள் என்பதன் ஆங்கில நிகரன் case meaning ஆகும். வேற்றுமைப் பொருள் என்பதை வேற்றுமை + பொருள் = வேற்றுமைப் பொருள் என்று ஆயலாம். case என்ற ஆங்கிலச் சொல்லிற்கு வேற்றுமை என்பது நிகரானச் சொல்லாகும். பெயர்ச் சொல்லின் பொருளை வேறுபடுத்திச் சொல்வது வேற்றுமையாகும். meaning என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழ் நிகரன் 'பொருள்' ஆகும். ஒரு வாக்கியத்தில் சொல், செயல் மூலமாக உணரப்படுவது பொருள் எனப்படும். ஒரே வாக்கியத்தில் வரும் பெயர்ச் சொற்களுக்கும் அவை கொண்டு முடியும் வினைச் சொற்களுக்கும் இடையே உள்ள அடிப்படைப் பொருள் தொடர்பு வேற்றுமைப் பொருள் எனப்படும். *கண்ணன் நேற்று வந்தான்*, *கண்ணன் எனக்குப் பணம் கொடுத்தான்* என்ற வாக்கியங்களில் கண்ணன் என்பது எழுவாய் வேற்றுமையை உணர்த்தும். *நேற்று வந்தான்* போன்று எழுவாய் இல்லாது வருபவையும் வேற்றுமை இருந்து கெட்டமையைக் காட்டுவனவே. *கண்ணன் பொன்னனைப் பார்த்தான்* என்ற வாக்கியத்தில் *கண்ணன்* என்ற பெயர்ச் சொல்லுக்கும் *பார்* என்ற வினைச் சொல்லிற்கும் இடையே 'செய்பவன்-தொழில்' என்ற பொருள் தொடர்பு உள்ளது. இப்பொருள் தொடர்பு கருத்தாப் (வேற்றுமை) பொருள் எனப்படும். ஆனால் *பொன்னன்* என்பதற்கும் *பார்* என்பதற்கும் இடையே உள்ள பொருள் தொடர்பு தொழிலுக்கு ஆட்டுபவன் அல்லது ஆட்படு பொருள் - செயப்படு பொருள் தொழில் தொடர்பு எனப்படும்.

வேற்றுமை பாகுபாடு (Case classification)

வேற்றுமை பாகுபாடு என்பதன் ஆங்கில நிகரன் case classification என்பதாகும்.வேற்றுமை பாகுபாடு என்பதை வேற்றுமை + பாகுபாடு = வேற்றுமைப் பாகுபாடு என்று பிரித்து ஆயலாம். case என்ற ஆங்கிலச் சொல்லிற்கு வேற்றுமை என்பது தமிழ் நிகரனாகும். பெயர்ச் சொல்லின் பொருளை வேறுபடுத்திச் சொல்வது வேற்றுமையாகும். classification என்ற ஆங்கிலச் சொல்லிற்கு பாகுபாடு என்பது நிகரானச் சொல்லாகும்.

வேறுபாடு தெரியும் வகையில் பிரித்தலைத் தான் பாகுபாடு என்கிறோம். ஒரு மொழியின் வேற்றுமைகள், அவை உணர்த்தும் பொருள் அவற்றின் வகைப்பாடு வேற்றுமைப் பாகுபாடு எனப்படும்.

வேற்றுமை இலக்கணம் (case Grammar)

வேற்றுமை இலக்கணம் என்பதன் ஆங்கில நிகரன் case Grammar என்பதாகும். வேற்றுமை இலக்கணம் என்பதை வேற்றுமை + இலக்கணம் = வேற்றுமை இலக்கணம் என்று பிரித்து ஆயலாம். case என்ற ஆங்கிலச் சொல்லிற்கு வேற்றுமை என்பது நிகரானச் சொல்லாகும். பெயர்ச் சொல்லின் பொருளை வேறுபடுத்திச் சொல்வது வேற்றுமையாகும். grammar என்ற ஆங்கிலச் சொல்லிற்கு இலக்கணம் என்பது நிகரானச் சொல்லாகும். மொழியின் ஒலி, எழுத்து, சொல், வாக்கியம் முதலியவற்றின் அமைப்பை வழக்குகளின் அடிப்படையில் விவரிக்கும் விதிகள் இலக்கணம் எனப்படும். ஒவ்வொரு வேற்றுமையையும் அது உணர்த்தும் பொருளின் அடிப்படையில் வகைப்படுத்தி அவை வினையுடன் பெயர்களுக்குள்ள உறவைக் காட்டும் தன்மையை ஆய்வு செய்யும் இலக்கணம் வேற்றுமை இலக்கணம் எனப்படும்.

காரண வேற்றுமை (Causal case)

காரண வேற்றுமை என்ற சொல்லிற்கு causal case என்பது ஆங்கில நிகரன் ஆகும். காரண வேற்றுமை என்பதைக் காரணம் + வேற்றுமை = காரண வேற்றுமை என்று பிரிந்துப் பொருள்கொள்ளலாம். causal என்ற ஆங்கிலச் சொல்லிற்கு காரணம் என்பது நிகரானச் சொல்லாகும். ஒரு வாக்கியத்தில் உள்ள வேற்றுமைக்கு தரப்படும் விளக்கம் அல்லது காட்டப்படும் சான்று காரணம் எனப்படும். case என்ற ஆங்கிலச் சொல்லிற்கு வேற்றுமை என்பது நிகரானச் சொல்லாகும். பெயர்ச் சொல்லின் பொருளை வேறுபடுத்திச் சொல்வது வேற்றுமையாகும். காரண வேற்றுமை ஒரு செயல் நடைபெறுவதற்கு காரணத்தைக் காட்டுகிறது. எடுத்துக்காட்டு: *மழையால் பயிர் வளைந்தது.*

உடனிகழ்ச்சி வேற்றுமை (Comitative case or sociative case)

உடனிகழ்ச்சி வேற்றுமை என்ற சொல்லிற்கு ஆங்கில நிகரன் comitative case or sociative case என்பதாகும். உடனிகழ்ச்சி வேற்றுமை என்பதை உடனிகழ்ச்சி + வேற்றுமை = உடனிகழ்ச்சி வேற்றுமை என்று பிரித்து பொருள்கொள்ளலாம். comitative என்ற ஆங்கிலச் சொல்லிற்கு 'உடனிகழ்ச்சி' என்பது தமிழ் நிகரனாகும். ஒன்றுடன் ஒன்று இணைந்து ஒரு செயல் நடைபெறுவதை உடனிகழ்ச்சி என்கிறோம். case என்ற ஆங்கிலச் சொல்லிற்கு 'வேற்றுமை' என்பது தமிழ் நிகனாகும். தொழிலை ஒருவர் செய்யும் போது அதே தொழிலை

மற்றொருவரும் உடன் செய்வதைக் குறிப்பிடும் வேற்றுமை உடனிகழ்ச்சி வேற்றுமை எனப்படும். எடுத்துக்காட்டு: *இராமனோடு கண்ணன் வந்தான், பாட்டோடு குழலிசை ஒலித்தது* என்ற வாக்கியங்களில் *இராமனோடு*, *பாட்டோடு* என்பன உடனிகழ்ச்சி வேறுமைக்காக திரிபுற்றுள்ளன.

வினைமுதல் (agent)

வினைமுதல் என்ற சொல்லிற்கு agent என்பது ஆங்கில நிகரனாகும். வினை முதல் என்பதை வினை + முதல் = வினை முதல் என்று பிரித்தாய்ந்து பொருள்கொள்ளலாம். ஒரு வாக்கியத்தில் வரும் வினை உணர்த்தும் தொழிலைச் செய்யும் பெயர் வினைமுதலாகும். செய்வினை வாக்கியத்தில் இது எழுவாயாக அமையும். எடுத்துக்காட்டாக, *கலா பாட்டு பாடினாள்* என்ற வாக்கியத்தில் *கலா* என்பது வினை முதல் ஆகும்.

செயப்படுபொருள் வேற்றுமை (Accusative case)

செயப்படுபொருள் வேற்றுமை என்ற சொல்லிற்கு accusative case என்பது ஆங்கில நிகரனாகும். செயப்படுபொருள் வேற்றுமை என்பதைச் செயப்படுபொருள் + வேற்றுமை = செயப்படுபொருள் எனப் பிரித்து பொருள்கொள்ளலாம். case என்ற ஆங்கிலச் சொல்லிகுற்கு வேற்றுமை என்பது தமிழ் நிகரனாகும். வேற்றுமை என்பது மாறுபடும் தன்மைக் கொண்டது. accusative என்ற ஆங்கிலச் சொல்லிற்கு செயப்படுபொருள் என்பது என்பது தமிழ் நிகரனாகும். ஒருவர் செய்யும் செயல் ஒருவரின் மீது அல்லது ஒன்றின் மீது படுகின்ற அல்லது அச்செயலை அனுபவிக்கின்ற பொருள் நிலையை உணர்த்தும் வேற்றுமை செயப்படுபொருள் வேற்றுமை எனப்படும். ஒரு வாக்கியத்தில் வரும் வினைக்கும் செயல்படுகின்ற பொருளைக் காட்டும் பெயருக்கும் இடையே உள்ள பொருள் தொடர்பே இது. இச்சொல் 1.செயல் ஒன்றின் மீது படுகின்ற அல்லது 2.செய்யப்படுகின்ற பொருள் என்றும் பொருள்படும் நிலையில் மிக அருமையாக அமைந்துள்ளது.

கண்ணன் இராமனை அடித்தான் என்ற வாக்கியத்தில் காணப்படும் அடி(த்தல்) என்ற தொழிலைச் செயல்படுபவன் இராமன். அதாவது *இராமன்* அத்தொழிலைப் படுபவன் அல்லது அனுபவிப்பவன். இதனால் இங்கு *இராமன்* என்பது செயப்படுபொருள். செய்தலைப் படுகின்ற பொருள். இப்பொருளைக் காட்டுவது –ஐ (அய்) என்ற உருபு. இதனை இரண்டாம் வேற்றுமை என்றும் ஐ-வேற்றுமை என்றும் கூறுவர். எல்லா வினைகளும் செயப்படு பொருள் வேற்றுமையை ஏற்பதில்லை. இந்த நிலையில் வினைகளைச் செயப்படுபொருள் குன்றிய வினைகள் என்றும் (*வா*, *போ* போன்றவை) செயப்படுபொருள் குன்றா வினைகள் (*அடி, படி* போன்றவை) என்றும் கூறலாம். செயப்படு பொருள் குன்றா வினைகளே செயப்படுபொருளை ஏற்கும்.

நீங்கல் வேற்றுமை (Ablative case)

நீங்கல் வேற்றுமை என்பதன் ஆங்கில நிகரான் ablative case ஆகும். நீங்கல் வேற்றுமை என்பதை நீங்கல் + வேற்றுமை = நீங்கல் வேற்றுமை என்று பிரித்து பொருள்கொள்ளலாம். ablative என்ற ஆங்கிலச் சொல்லிற்கு 'நீங்கல்' என்பது தமிழ் நிகரனாகும். ஒரு வாக்கியத்தில் ஒன்று நீங்கிச் செல்வதைத் தான் நீங்கல் என்கிறோம். case என்ற ஆங்கிலச் சொல்லிற்கு வேற்றுமை என்பது நிகரான சொல்லாகும். வாக்கியத்தில் பெயருக்கும் வினைக்கும் உள்ள உறவைக் காட்டுவது வேற்றுமை எனப்படும். நீங்கல் வேற்றுமை ஒரு பொருளின் இயக்கத்தின் இட அல்லது நேரத் துவக்கத்தைக் குறித்து நிற்கின்றது. இவ்வேற்றுமையைக் குறிக்க தமிழில் *இலிருந்து* (இல்+இருந்து) என்ற உருபு பயன்படுத்தப்படுகிறது. இது மரபிலக்கணத்தில் ஐந்தாம் வேற்றுமை என்றும் குறிப்பிடப்படுகின்றது. எடுத்துக்காட்டாக,

வைரம் மண்ணிலிருந்து வெட்டி எடுக்கப்படுகிறது.

காலையிலிருந்து மழை பெய்கிறது.

என்ற வாக்கியங்களில் *மண்ணிலிருந்து காலையிலிருந்து* என்பன ஐந்தாம் வேற்றுமைக்காகத் திரிபுற்று நீங்கல் வேற்றுமைப் பொருளைக் காட்டி நிற்கின்றன.

வேற்றுமைக் குறியீடு

பெயர் அல்லது பெயர்த்தொடருக்கும் வினைக்கும் அல்லது இரண்டு பெயர்களுக்கும் அல்லது பெயர்த்தொடர்களுக்கும் இடையில் வரும் தொடரியல் மற்றும் பொருண்மையியல் உறவுகளை வேற்றுமை வெளிப்படுத்தும். வினைப் பயனிலைகள் ஒரு வாக்கியத்தில் கட்டாய மற்றும் விருப்புப் பங்கெடுப்பாளர்களை எடுக்கும் (எ.கா. எழுவாய்ப் பெயர்த் தொடர்கள், செயப்படுபொருள், பெயர்த்தொடர்கள், வினையடைகள்). இவ்வாறு வேற்றுமைக் குறியீடுகள் பெயர்த்தொடருக்கும் வினைப் பயனிலைக்கும் இடையிலுள்ள தொடரியல் மற்றும் பொருண்மையியல் உறவை வெளிப்படுத்துகிறது. அதாவது அவை ஒரு பங்கெடுப்பாளர் பெயர்த் தொடரின் இலக்கணச் செயன்மையைக் காட்டும் (எ.கா. எழுவாய் செயல்படு பொருள்). மேலும் அவை பயனிலையாக்கத்தில் பங்கெடுப்பாளர் பெயர்த்தொடரின் பொருண்மையியல் பங்களிப்பை வெளிப்படுத்தும் (எ.கா. ஒரு செயலின் அல்லது நிகழ்வின் காரணம், நிகழ்வு அல்லது நிலையின் இடம், இயக்கத்தின் மூலம் அல்லது இலக்கு). உடைமை வேற்றுமை இரண்டு பெயர்த்தொடருக்கு இடையில் உள்ள உறவை வெளிப்படுத்தும்.

உருபனியல், தொடரியல் அடிப்படையில் வேற்றுமைக் குறியீடு இரு வழிகளில் உருப்படுத்தம் செய்யப்படுகிறது.

1. வேற்றுமைப் பின்னொட்டுகளால்
2. பின்னுருபுகளால் (இவற்றில் சில கட்டுண்ட வடிவுகள்)

பின்னொட்டுக்களைப் பொறுத்தவைரையில் வேற்றுமைக் குறிப்பு வேற்றுமை பின்னொட்டு மற்றும் பின்னுருபு இவற்றின் ஒன்றுசேர்க்கையால் உருப்படுத்தம் செய்யப்படுகிறது. எடுத்துக்காட்டாகக் கருவியின் பொருணமைப் பங்களிப்பு *ஆல்* என்ற பின்னொட்டாலும் (எ.கா. *சாவியால்*) மூலம் என்ற பின்னுருபாலும் (எ.கா. *சாவி மூலம்*) வெளிப்படுத்தலாம் இறுதியாகக் கருவியின் பொருண்மையியல் பங்களிப்பை ஒரு வேற்றுமைப் பின்னொட்டை ஆளும் பின்னுருபால் வெளிப்படுத்தலாம். கொண்டு என்ற பின்னுருபு இரண்டாம் வேற்றுமை உருவான *ஐ*யை ஆளுகை செய்யும் (எ.கா. *சாவியைக் கொண்டு*). தற்காலத் தமிழில் ஆறு வேற்றுமைப் பின்னொட்டுகள் இருக்கின்றன.

வேற்றுமை	**பின்னொட்டுகள்**
செயப்படுபொருள்	ஐ
கொடைவேற்றுமை	(உ)க்கு
கருவி வேற்றுமை	ஆல்
உடன்நிகழ்ச்சி வேற்றுமை	ஓடு
இட வேற்றுமை	இல்
வேற்றுமை	அது

ஐந்து கட்டுண்ட பின்னுருபுகள் இருக்கின்றன.

கட்டுண்ட வேற்றுமை	**கட்டுண்ட பின்னுருபுகள்**
இடவேற்றுமை	இடம்
உடன்நிகழ்ச்சி வேற்றுமை	உடன்
மூல வேற்றுமை	இருந்து
பயனடை வேற்றுமை	ஆக

மரபு இலக்கணவியலார் வேற்றுமைப் பின்னொட்டுகளையும் *ஆக* தவிர பிற கட்டுண்ட பின்னுருபுகளையும் பல இடப் பின்னுருபுகளையும் வேற்றுமை குறிகளாக எடுத்தாண்டனர். இக்குறிகளின் அடிப்படையில் அவர்கள் எட்டு வேற்றுமைகளை வேறுபடுத்தினர். இவைகள் அவற்றின் ஒலியனியல் வடிவத்தாலோ வரிசை எண்ணாலோ அடையாளப்படுத்தப்பட்டன. வேற்றுமைக் குறியீட்டால் குறிப்பிடப்படாத விளி வேற்றுமையும் அவர்கள் சேர்த்துக்கொண்டனர். பின்னர் மேனாட்டு இலக்கணத்தார்கள் இலத்தின் அல்லது சமஸ்கிருத இலக்கணக் கலைச்சொற்களைப் பயன்படுத்தி வேற்றுமை குறியின் செயல்பாடு அடிப்படையில் எட்டு வேற்றுமைகளை புலக்குறிப்பு செய்தனர்

1. எழுவாய் வேற்றுமை

2. செயல்பாடு பொருள் வேற்றுமை
3. கொடை வேற்றுமை
4. கருவி வேற்றுமை
5. உடன்நிகழ்ச்சி வேற்றுமை
6. இட வேற்றுமை
7. நீங்கல் வேற்றுமை
8. உடைமை வேற்றுமை
9. விளி வேற்றுமை

வேற்றுமைக் குறிகளின் மேற்சொன்ன புலக்குறிப்புகள் ஒரு வேற்றுமைக் குறியின் பொருண்மையை முழுவதுமாக உருப்படுத்தம் செய்யவில்லை; ஏனென்றால் அவை அவற்றின் செயல்பாடுகளில் ஒன்றைத்தான் வெளிப்படுத்துகின்றது. எடுத்துக்காட்டாகக் கருவி வேற்றுமைப் பின்னொட்டு என்று புலக்குறிப்பு செய்யப்பட்ட *ஆல்* என்ற வேற்றுமைப் பின்னொட்டு கருவிச் செயல்பாட்டை வெளிப்படுத்துவதுடன் பிற கருத்துக்களையும் வெளிப்படுத்துகின்றன.

வேற்றுமை அடையாளக் குறியீட்டைப் பொருத்தவரையில் பின்வரும் பாகுபாட்டு அடிப்படையில் விளக்கலாம்:

1. வேற்றுமைப் பின்னொட்டு
2. கட்டுண்ட பின்னுருபுகள்
3. பின்னுருபுகள் (சுதந்திரமான வடிவுகள்)

பின்வரும் அட்டவணை வேற்றுமை உருபுகளையும் அவற்றின் வருகை முறைகளையும் அவற்றின் வெறுபட்ட செயல்பாடுகளையும் தரும்:

வேற்றுமை	**பின்னொட்டு/ பின்னுருபு**	**வருகை முறை**	**பொருள்/ செயல்பாடு**
1. எழுவாய் வேற்றுமை	-Ø		**1. எழுவாய்** எ.கா. *ராமன் வந்தான்* **2. பயனிலை** எ.கா. *குமரன் மாணவன்* **3. எழுவாய் நிரப்பி** எ.கா. குமரன் *மாணவன்* ஆவான் 4. **செயப்படுபொருள் நிரப்பி** எ.கா. குமரன் *ராமனைத்*

			தலைவன் ஆக்கினான் 5. **செயப்படுபொருள்** எ.கா. குமார் *தண்ணீர்* கேட்டான்
2. செயப்படு பொருள் வேற்றுமை	-ஐ		**1. செயப்படு பொருள்** எ.கா. ராமன் பையனை பார்த்தான்
3. கொடை வேற்றுமை	-க்கு~ -உக்கு~-கு	1. பெயர்களின் மற்றும் மாற்றுப் பெயர்களின் திரிபுப் பகுதியுடன் -க்கு வரும். எ.கா. மரத்து-க்கு பலவற்று-க்கு, ஆற்று-க்கு, என-க்கு 2. இ/ஈ/ஐ/அய் என்று முடியும் பெயரடிகளுடன் க்கு வரும் எ.கா. தம்பிக்கு, ஈக்கு, சட்டைக்கு நாய்க்கு, படிப்புக்கு 3. பிற எல்லாப் பெயரடிகளுக்குப் பின் உக்கு வரும். எ.கா. அம்மா-உக்கு, பால்- உக்கு, தெரு-வ்-உக்கு, பையன்-உக்கு, பெண்ண்-உக்கு 4. கு ஒலிநிரவல் சாரியை *இன், அன்* என்பனவற்றைத் தொடர்ந்து வரும் எ.கா. பசு+இன்+கு>	**1. அயற்செயப்படு பொருள்** எ.கா. குமார் *அப்பாவுக்கு* ஒரு படத்தைக் காட்டினான் **2. இயக்கத்தின் இலக்கு** எ.கா. குமார் *அப்பாவுக்கு* ஒரு கடிதம் கொடுத்தான் **3. கார்ணம்** எ.கா. குமார் *பணத்துக்குத்தான்* வேலை செய்கிறான் **4. அனுபவிப்பவர்** எ.கா. *குமாருக்கு* ஒரு புத்தகம் இருக்கிறது. **5. காலத்தின் கூறு** எ.கா. குமார் *ஐந்து மணிக்கு* வருவான் **6. விகிதம்** எ.கா. மருந்து ஒரு *நாளைக்கு* மூன்று வேளை சாப்பிடு **7. பகிர்ந்தளிப்புச் செயல்பாடு** எ.கா. ஆளுக்கு ஒரு டீ போடு **8. ஒப்புமை மாதிரி** எ.கா. *குமாருக்கு* இவன் நல்லவன் **9. குறிப்பிடும் இடம்** எ.கா. *மதராசுக்கு* நூறு மைல் பின்னால்

		பசுவிற்கு, அது+அன்+கு அதற்கு	
4. பயனடை வேற்றுமை	-க்கு-ஆக ~ -உக்கு-ஆக ~ -கு-ஆக	1. க்கு-ஆக எ.கா. நாய்-க்கு-ஆக 2. உக்கு-ஆக எ.கா.அவன்-உக்கு-ஆக 3. கு- ஆக எ.கா.பசுவிற்-கு-ஆக	1. **பயனடைவு** எ.கா. ராஜா தன் பையனுக்காகப் பணம் சேர்த்தான் 2. **காரணம்** எ.கா. ராஜா தன் *அப்பாவுக்காகச்* சீக்கிரம் வீட்டுக்கு வாந்தான்
5. கருவி வேற்றுமை	-ஆல்		1. **கருவி** எ.கா. குமார் கத்தியால் பழத்தை வெட்டினான் 2. **வழி** எ.கா. குமார் தன் கண்ட *அனுபவத்தால்* இதைக் துளைக்கக் கற்றுக்கொண்டான். 3. **மூலம்/ உருபொருள்** எ.கா. குமார் *மண்ணால்* இந்தப் பந்தைச் செய்தான். 4. **காரணம்-1** எ.கா. *வெயிலால்* குமார் வரவில்லை. 5. **காரணம் -2** எ.கா. *மழையால்* பயிர் நன்றாக வளர்ந்தது
6. உடனிகழ்ச்சி வேற்றுமை	-ஓடு/ -உடன்		1. **உடனிகழ்ச்சி** எ.கா. குமார் தன் *மனைவி-ய் -ஓடு/-உடன்* வந்தான் 2. **முறை** எ.கா. குமார் *அன் ப்-ஓடு/-*உடன் சிரித்தான். 3. **வழி**

			எ.கா குமார் அப்பாவின் *உதவி-ய்-ஓடு*/-உடன் இதைப் படித்தான். 4. **அதிகப்படி** எ.கா. ராஜா நான்கு *இட்லியோடு* இரண்டு தோசையும் சாப்பிட்டான். 5. **இடம்** எ.கா. குமார் *வீட்டோடு* இருக்கிறான். 6. **திசை** எ.கா. குமார் *தெருவோடு* நடந்தான் 7. **உட்படுதல்** எ.கா. சித்திரை *மாசத்தோடு* தமிழ் வருஷம் ஆரம்பிக்கிறது. 8. **வரையறை** எ.கா. இந்த ஊரில் ஒரு *கோயிலோடு* சரி
7. இட வேற்றுமை	-இல்		1. **இடத்தில் இடம்** எ.கா. *குருவி* மரத்தில் உட்காந்திருக்கிறது. 2. **காலத்தின் புள்ளியிடம்** (எதிர்காலத்துடன்) எ.கா. ராஜா *ஒரு வாரத்தில்* வருவான். 3. **கால அளவு** (இறந்த காலத்துடன்) எ.கா. ராஜ ஒருவாரத்தில் இந்த புத்தகத்தைப் படித்தான். 4. **பாங்கு** எ.கா. குமார் தமிழில்

			பேசினான் 5. **இடைபடு உறவு** எ.கா. அந்த மாம்பழங்களில் சில் மல்கோவா. அந்த மாணவர்களில் சிலர் நன்றாக படிப்பவர்கள்.
	-இடம்		1. **இயக்கத்தின் இலக்கு** எ.கா. ராஜா *அப்பாவிடம்* வந்தான். 2. **கைமாற்றத்தின் மூலம்** எ.கா. ராஜா *மந்திரியிடம்* ஒரு பரிசு வாங்கினான். 3. **உணர்ச்சியின் இலக்கு** எ.கா. ராஜா *அப்பாவிடம்* கோபப்பட்டான்.
8. நீக்கல் வேற்றுமை	-இல்/-இடம்– இருந்து, இருந்து	1. இட வேற்றுமைக்குத் திரிபுற்ற பெயரைத் தொடர்ந்து வரும் **.** எ.கா. மரத்தில் – இருந்து பையனிடம் – இருந்து 2. நேரடியாக இடப்பகுதியுடன் வரும். எ.கா. அங்க்- இருந்து மேல்- இருந்து *-இல்* என்ற இடவேற்றுமைப் பின்னொட்டிற்குத் திரிபுற்ற விலங்கினப் பெயர்களுடன் வருகையிலும் *-இடம்* என்ற இட வேற்றுமைப் பின்னொட்டிற்குத் திரிபு	1. **இயக்கத்தின் மூலம்** எ.கா. ராஜா *கோவிலிலிருந்து* வந்தான். 2. **உள்ளத்திலிருந்து பிரிதல்** எ.கா. ராஜா தன் அப்பாவை *நெருப்பிலிருந்து/ ஒரு புலியிடமிருந்து* காப்பாற்றினான். 3. **தேர்வின் மூலம்** எ.கா. ராஜா *மாணவர்களிலிருந்து* ஒரு நல்லவனைத் தேர்ந்தெடுத்தான். 4. **தொடர்ச்சியின் தொடக்கம்** எ.கா. *மந்திரியிலிருந்து* எல்லோரும் லஞ்சம் வாங்குகிறார்.

		விலங்கினப் பெயர்களுடன் வருகையிலும் *-இருந்து* அதன் செயல்பாடுகளில் (பொருள்களில்) வேறுபடும் (பார்க்க அடுத்தப்பக்கத்தில்)	
9. உடைமை வேறுமை	-இன், -உடைய, -அது, பெயர்திரிபு அடி	1. **திரிபு வடிவில் பெயர்** எ.கா. மரத்துக்கிளை 2. **பெயர் + ஒலிநிரவல் – *இன்*** எ.கா. *அரசனின்* முடி 3. **பெயர் + உடைமை வேற்றுமை *அது*** எ.கா.அரசனது முடி 4. **பெயர் + இடைநிலை சாரியை + உடைமைப் பின்னொட்டு** எ.கா. *நாயினது* வால் 5. **பெயரடைப் பின்னொட்டு உடைய** எ.கா. *நாயினுடைய* வால்	**பெயரடையாகச் செயல்படுகிறது** எ.கா. பள்ளிக்கூடம் குமாருடையது.

5.1.3 .8 வேற்றுமை உருபுகளும் சந்தி விதிகளும்

இராசேந்திரன் (Rajendran, 2000) தமது தமிழ் உருபனியல் ஆய்வி உருவாக்கதிற்கு (Tamil Morphological Analyzer) வேண்டி தமிழ்ப் பெயர்ச்சொற்களைச் சந்திவிதிகளைக் கருத்திற்கொண்டு பாகுபாடு செய்கையில் பின்வரும் சந்திவிதிகளைப் பட்டியலிடுகின்றார். (இராசேந்திரன்,1994:47-56):

1. *ஆ, ஓ, ஊ* என முடியும் பெயர்களைத் தொடர்ந்து உயிர்த் தொடக்க வேற்றுமைப் பின்னொட்டுகள் (உ.வே.பி.) வரும்போது *வ்* என்ற உடன்படுத்தி இடையில் வரும்.

-ஆ/ஓ/ஊ + உ.வே.பி→-ஆ/ஓ/ஊ- வ்- உ.வே.பி.

எ.கா.

கடா + ஐ > கடாவை

கடா + ஆல் > கடாவால்

கடா + ஓடு >கடாவோடு

கடா + உடன் > கடாவுடன்

கடா + உக்கு >கடாவுக்கு

கடா + இன் > கடாவின்

கடா + இல் > கடாவில்

2. *இ, ஈ, ஐ* என்று முடியும் பெயர்கள் -உக்கு தவிர்த்த பிற வேற்றுமைப் பின்னொட்டுகளை ஏற்கும்போது *ய்* என்ற உடன்படுத்தி ஒலி இடையில் வரும்.

-இ/ஈ/ஐ + உக்கு தவிர்த்த உ.வே.பி. (இ/ஈ/ஐ–ய்-உ.வே.பி

எ.கா.

எலி + ஐ > எலியை

எலி + ஆல் > எலியால்

எலி + ஓடு > எலியோடு

எலி + உடன் > எலியுடன்

எலி + இன் > எலியின்

எலி + இல் > எலியில்

3. *இ, ஈ, ஐ, ய்* என்று முடியும் பெயர்கள் முவரும் வேற்றுமைப் பின்னொட்டு -உக்கு என்பதன் உ கெடும்

-இ/ஈ/ஐ/ய் + உக்கு→இ/ஈ/ஐ/ய்-க்கு

எ.கா.

எலி + உக்கு > எலிக்கு

ஈ + உக்கு > ஈக்கு

யானை + உக்கு > யானைக்கு

நெய் + உக்கு > நெய்க்கு

4. உ-வில் முடியும் பெயர்களை அவற்றின் சந்திச் செயல்பாடு அடிப்படையில் நான்கு வகைகளாகப் பிரிக்கலாம்

4.1. (C)VV-ட்-உ என்ற அசை அமைப்பக் கொண்ட சொற்களைத் தொடர்ந்து உயிர்த் தொடக்க வேற்றுமைப் பின்னொட்டுக்கள் வரும்போது உ கெட, ட் இரட்டிக்கும்.

(C)VV ட் – உ + உ.வே.பி →(C)VVட்ட் – உ.வே.பி

எ.கா.

காடு+ஐ > காட்டை

காடு+ஆல் > காட்டால்

காடு+ஓடு > காடோடு

காடு+உடன் > காட்டுடன்

காடு+உக்கு > காட்டுக்கு

காடு+இன் > காட்டின்

காடு+இல் > காட்டில்

4.2. *று*-வில் முடியும் பெயர்களைத் தொடர்ந்து உயிர்த்தொடக்க வேற்றுமைப் பின்னொட்டுக்கள் வரும்போது உ கெட *ற்* இரட்டும்.

-று + உ.வே.பி → ற்ற் – உ.வே.பி.

4.3. (C)VCC-உ அல்லது (C)VVC-உ என்ற அசை அமைப்புடைய பெயர்களைத் தொடர்ந்து உயிர்த்தொடக்க வேற்றுமைப் பின்னொட்டுகள் வருகையில் உ கெடும்

(C)VCC-உ + உ.வே.பி. → CVCC-உ.வே.பி

எ.கா.

வண்டு+ஐ > வண்டை

வண்டு+ஆல் > வண்டால்

வண்டு+ஓடு > வண்டோடு

வண்டு+உடன் > வண்டுடன்

வண்டு+உக்கு > வண்டுக்கு

வண்டு+இன் > வண்டின்

வண்டு+இல் >வண்டில்

காது+ ஐ > காதை

காது+ ஆல் > காதால்

காது+ ஓடு > காதோடோடு

காது+ உடன் > காதுடன்

காது+ உக்கு > காதுக்கு

காது+ இன் > காதின்

காது+ இல் > காதில்

4.4 (C)VCV என்ற அசையமைப்பைக் கொண்டு உ-வில் முடியும் பெயர்களைத் தொடர்ந்து உயிர்த் தொடக்க வேற்றுமை ஒட்டுகள் வரும்போது *வ்* என்ற உடன்படுத்தி இடையில் வரும்.

(C)VC-உ + உ.வே.பி.→ (C)VC-உ-வ்-உ.வே.பி.

பசு+ ஐ > பசுவை

பசு+ஆல் > பசுவால்

பசு+உக்கு > பசுவுக்கு

பசு+ ஓடு > பசுவோடு

பசு+உடன் > பசுவுடன்

பசு+இன் > பசுவின்

பசு +இல் > பசுவில்

5. (C)VC என்ற அசை அமைப்புடைய *ண், ல், ள், ன்* என முடியும் பெயர்களைத் (ஓரசைச் பெயர்களை) தொடர்ந்து உயிர் தொடக்க வேற்றுமைப் பின்னொட்டுகள் வர முறையே *ண், ய், ல், ள், ன்* என்பன இரட்டும். (விதிவிலக்கு *ய்* + *உக்கு* > *ய்க்கு*. எ.கா. *நெய்* + *உக்கு* > *நெய்க்கு*)

(C)Vண்/ய்/ல்/ள்/ன் + உ.வே.பி→ (C)Vண்ண்/ய்ய்/ல்ல்/ள்ள்/ன்ன். உ.வே.பி.

கண்+ ஐ > கண்ணை

கண்+ஆல் >கண்ணால்

கண்+உக்கு > கண்ணுக்கு

கண்+ஓடு > கண்ணோடு

கண்+உடன் > கண்ணுடன்

கண்+இன் > கண்ணின்

கண்+உடைய > கண்ணுடைய

கண்+அது > கண்ணது

கண்+இல் > கண்ணில்

நெய்+ ஐ > நெய்யை

நெய்+ஆல் > நெய்யால்

நெய்+உக்கு > நெய்க்கு

நெய்+ஓடு > நெய்யோடு

நெய்+உடன் > நெய்யுடன்

நெய்+இன் > நெய்யின்

நெய் +உடைய > நெய்யுடைய

நெய்+அது > நெய்யது

நெய்+இல் > நெய்யில்

கல்+ ஐ > கல்லை

கல்+ஆல் > கல்லால்

கல்+உக்கு > கல்லுக்கு

கல்+ஓடு > கல்லோடு

கல்+உடன் > கல்லுடன்

கல்+இன் > கல்லின்

கல்+உடைய > கல்லுடைய

கல்+அது > கல்லது

கல்+இல் > கல்லில்

முள்+ ஐ > முள்ளை

முள்+ஆல் >முள்ளால்

முள்+உக்கு >முள்ளுக்கு

முள்+ஓடு >முள்ளோடு

முள்+உடன் > முள்ளுடன்

முள்+இன் > முள்ளின்

முள் + உடைய > முள்ளுடைய

முள்+அது > முள்ளது

முள்+இல் >முள்ளில்

பொன்+ ஐ > பொன்னை

பொன்+ ஆல் > பொன்னால்

பொன்+உக்கு > பொன்னுக்கு

பொன்+ஓடு > பொன்னோடு

பொன்+உடன் > பொன்னுடன்

பொன்+இன் > பொன்னின்

பொன்+உடைய > பொன்னுடைய

பொன்+அது > பொன்னது

பொன்+இல் > பொன்னில்

6. *அம்* ஈற்றுப் பெயர்களைத் தொடர்ந்து உயிர்த்தொடக்க வேற்றுமைப் பின்னொட்டுக்கள் வரும்போது *ம்* கெட *த்த்* என்ற சாரியை இடையில் வரும்.

-அம் + உ.வே.பி.→-அ-த்த்-உ.வே.பி.

மரம்+ஐ > மரத்தை

மரம்+ஆல் > மரத்தால்

மரம்+உக்கு > மரத்துக்கு

மரம்+ஓடு > பொன்னோடு

மரம்+உடன் > மரத்துடன்

மரம்+இன் > மரத்தின்

மரம்+உடைய > மரத்துடைய

மரம்+அது > மரத்தினது

மரம்+இல் > மரத்தில்

6. *அ* ஈற்றுப் பெயர்களான *பல, சில* என்பனவற்றைத் தொடர்ந்து உயிர்த்தொடக்க வேற்றுமைப் பின்னொட்டுகள் வரும்போது *அற்ற்* என்ற சாரியை இடையில் வரும்.

பல + உ.வே.பி.(பல-வ்-அற்ற்-உ.வே.பி.

பல+ ஐ > பலவற்றை

பல+ஆல் > பலவற்றால்

பல+உக்கு > பலவற்றுக்கு

பல+ஓடு>பலவற்றோடு

பல+உடன் > பலவற்றுடன்

பல+இன் > பலவற்றின்

பல + உடைய > பலவற்றுடைய

பல + அது > பலவற்றினது

பல + இல் >பலவற்றில்

8. எல்லாம் என்ற பெயரைத் தொடர்ந்து உயிர்த்தொடக்க வேற்றுமைப் பின்னொட்டுக்கள் வரும்போது *ம்* கெட *அற்ற்* என்ற சாரியை இடையில் வரும்.

எல்லாம் + உ.வே.பி.→எல்லா-வ்-அற்ற் – உ.வே.பி.

எல்லாம் + ஐ > எல்லாவற்றை

எல்லாம் +ஆல் > எல்லாவற்றால்

எல்லாம் +உக்கு > எல்லாவற்றுக்கு

எல்லாம் +ஓடு>எல்லாவற்றோடு

எல்லாம் +உடன் > எல்லாவற்றுடன்

எல்லாம் +இன் > எல்லாவற்றின்

எல்லாம் +உடைய > எல்லாவற்றுடைய

எல்லாம் +அது > எல்லாவற்றினது

9. 5.ஆம் 6- ஆம் விதிகளுக்கு உட்படாத *ண், ல், ள், ன்* மற்றும் *ர், ழ்* என முடியும் பெயர்களைத் தொடர்ந்து உயிர்த்தொடக்க வேற்றுமைப் பின்னொட்டுக்கள் வரும்போது அவை எந்தவித மாற்றமுமின்றி இணையும் (விதிவிலக்கு: *ய் + உக்கு > ய்க்கு*).

(5-ஆம், 6-ஆம் விதிக்கு உட்படாத) *-ண்/ ல்/ ள்/ ன்/ர்/ ழ்* + உ.வே.பி. (ண்/ ல்/ ள்/ ன்/ர்/ ழ் + உ.வே.பி.

எ.கா

தூண்+ ஐ > தூணை

தூண்+ஆல் >துணால்

தூண்+உக்கு > தூணுக்கு

தூண் +ஓடு >தூணோடு

தூண் + உடன் > தூணுடன்

தூண்+இன் > தூணின்

தூண்+உடைய >தூணுடைய

தூண்+அது > தூணது

தூண்+இல் > தூணில்

நாய்+ ஐ > நாயை

நாய்+ஆல்>நாயால்

நாய்+உக்கு>நாய்க்கு

நாய்+ஓடு>நாயோடு

நாய்+உடன் > நாயுடன்

நாய்+இன் > நாயின்

நாய் + உடைய > நாயுடைய

நாய் + அது > நாயது

நாய் + இல் > நாயில்.

கால் + ஐ > காலை

கால் + ஆல் > காலால்

கால் + உக்கு > காலுக்கு

கால் + ஓடு > காலோடு

கால் + உடன் > காலுடன்

கால் + இன் > காலின்

கால்+உடைய > காலுடைய

கால்+அது > காலது

கால்+இல் > காலில்.

வாள்+ ஐ > வாளை

வாள்+ஆல்>வாளால்

வாள்+ உக்கு > வாளுக்கு

வாள்+ ஓடு >வாளோடு

வாள்+ உடன் > வாளுடன்

வாள்+ இன் >வாளின்

வாள்+ உடைய > வாளுடைய

வாள்+ அது>வாளது

வாள்+ இல்>வாளில்.

மான்+ ஐ > மானை

மான்+ ஆல்>மானால்

மான்+ உக்கு >மானுக்கு

மான்+ ஓடு>மானோடு

மான்+ உடன் >மானுடன்

மான்+ இன்>மானின்

மான்+ உடைய >மானுடைய

மான்+ அது>மானது

மான்+ இல் > மானில்.

சுவர்+ ஐ > சுவரை

சுவர்+ ஆல் > சுவரால்

சுவர்+உக்கு > சுவருக்கு

சுவர்+ஓடு > சுவரோடு

சுவர்+ உடன் > சுவருடன்

சுவர்+ இன் > சுவரின்

சுவர்+ உடைய > சுவருடைய

சுவர்+ அது > சுவரது

சுவர்+இல்>சுவரில்.

இதழ்+ ஐ > இதழை

இதழ்+ ஆல்>இதழால்

இதழ்+ உக்கு >இதழுக்கு

இதழ்+ ஓடு >இதழோடு

இதழ்+ உடன் >இதழுடன்

இதழ்+ இன் >இதழின்

இதழ்+ உடைய >இதழுடைய

இதழ்+ அது>இதழது

இதழ்+ இல்>இதழில்.

10. *இன்* என்ற சாரியை ஒருமைப்பன்மைப் பெயர்ப்பகுதிகளைத் தொடர்ந்து வேற்றுமை உருபுகளுக்கு முன்னர் விருப்பாக வரும்.

எ.கா.

பசு	+	ஐ	>பசுவினை
பசு	+	ஆல்	>பசுவினால்
பசு	+	உக்கு	>பசுவினுக்கு
பசு	+	ஓடு	>பசுவினோடு
பசு	+	உடன்	>பசுவினுடன்
பசு	+	உடைய	>பசுவினுடைய
பசு	+	அது	>பசுவினது

பசு + இல் >பசுவினில்.

கணினி மூலம் பெயர்களை ஆய்வதற்காகக் கடா-வகுப்பு, எலி-வகுப்பு, ஈ-வகுப்பு, ஆறு-வகுப்பு, கண்-வகுப்பு, பொன்-வகுப்பு எனப் பெயர்கள் அவற்றின் உருபொலியனியல் நடத்தை அடிப்படையில் சில வகுப்புகளாகப் பிரிக்கப்பட வேண்டும் (பார்க்க இராஜேந்திரனின் உருபனியல் ஆய்வி உருவாக்கம் பற்றிய கட்டுரை)

தமிழ்ப் பெயர் வடிவத்திற்கான ஒழுக்கு வரைபடம்


உடன், வரைக்கும், வரையில் இல்லாமல், அல்லாமல், ஆட்டம், முதல், வடி, வழியாக
இடம், மூலம், பக்கம், அண்டை, அருகே, அருகில், கிட்ட, மேல், மேலே, கீழ், கீழே
~ஐ ~த்தை ~யை ~வை
பற்றி, குறித்து, பார்த்து, நோக்கி, சுற்றி, தாண்டி, தவிர்த்து, தவிர, ஒழிய, ஒட்டி, கொண்டு, வைத்து விட்டு, போல, மாதிரி, விட
பதிலாக, ஆக
உக்கு ~க்கு ~த்துக்கு ~வுக்கு
பிறகு, அப்புறம், அப்பால், வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு, மேல், கீழ், உள்ளே, வெளியே, அடியில், அருகில், முன், முன்னால், பின்னால், பின்பு, பிந்தி, குறுக்கெ, உள், உள்ளே, எதிரே, எதிர்க்கு, எதிரில், எதிர்த்தார்போல், இடையில், நடுவில், அடுத்தாற்போல்
இல் ~த்தில் ~யில் ~வில்
இருந்து
ஆல் ~த்தால் ~யால் ~வால்
உடன் ~ஓடு ~த்தோடு ~யோடு
அது உடைய
பெயர்ப் பகுதி
த்த்
இன்
கள்
ஆக
ஆ

5.2 வினைச்சொற்களின் உருபனியல் அமைப்பு

தமிழ் வினைகள் எல்லாம் கால இடைநிலைகளை ஏற்கும். அவைகள் வினைமுற்றுகளாகவோ வினையெச்சங்களாகவோ வரும். வினைமுற்றுகள் பின் வரும் அமைப்பைப் பெற்று வரும்:

வினையடி + கால ஒட்டு+ இடம்-எண்-பால் ஒட்டு

எ.கா.

நட-ந்த்-ஆன் > நடந்தான்

இதில் *நட* என்பது வினையடி, *ந்த்* என்பது இறந்தகாலம். இதைத் தொடர்ந்து வரும் *ஆன்* வினைமுற்று விகுதியாகும். கால ஒட்டுக்களை இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என மூன்றாகப் பகுக்கலாம். எல்லாக் கால ஒட்டுக்களும் வினையடியை ஒட்டி அதனைத் தொடர்ந்து வரும்.

தமிழ் வினைகளைக் கால ஒட்டுகள், இட-எண்-பால் மற்றும் வினையின் எச்ச வடிவை அடையாளப்படுத்தும் வேறு சிலை ஒட்டுக்களை ஏற்று வரும் சொற்களாக வர்ணிக்கலாம். பெயர்களைப் போல் வினைகளும் குறையுள்ள உருபனியலைக் கொண்ட (எல்லா வினை ஒட்டுக்களையும் ஏற்காத) பல வினைகளைக் கொண்டிருக்கும்: அவை குறைவினைகள் (defective Verbs) எனப்படும்.

5.2.1 வினைத்திரிபு

தமிழ் வினைவடிவங்களை முற்று வடிங்கள் (finite form), எச்ச வடிவங்கள் (Non-finite forms), பெயராக்கம் செய்யப்பட்ட வடிவங்கள் (nominalized forms) என வேறுபடுத்தலாம். முற்று மற்றும் எச்ச வடிவங்களின் வர்ணனை உருபனியல் அடிப்படையிலானது என்று கூறலாம். நெகிழ்வாகச் சொன்னால் முற்றுவினை வடிவங்கள் முதன்மை எச்சத் தொடரின் (Main clause) பயனிலையாக வரும். அதாவது வாக்கியத்தை முற்றுப்பெறச் செய்யும். மாறாக எச்சவினை வடிவங்கள் உட்படு எச்சத் தொடராகவோ துணைநிலை எச்சத்தொடராகவோ கூட்டுவினைக் கட்டமைப்புகளிலோ வரும்.

முற்றுவினை வடிவங்கள் வினைப்பாங்கு (mood) வகைப்பாடுகளுக்கு (அதாவது கட்டளை, வியங்கோள், உள்ளது கிளத்தல்) வேண்டி திரிபுறும். உள்ளது கிளத்தல் வினைகள் காலம், இடம், எண், பால் இவற்றின் வகைப்பாடுகளுக்காகத் திரிபுறும். எச்சவடிவங்கள் மற்றும் பெயராக்க வடிவங்கள் சில நேரங்களில் காலத்திற்கு வேண்டி திரிபுறும்; மேலும்

வினையின் துணைநிலையை அல்லது பெயர்நிலையைக் குறிப்பிடும் சார்பு வகைப்பாட்டிற்கும் (relational cotregory) திரிபுறும். மேலும் முற்று மற்றும் எச்சவினை வடிவங்கள் (எல்லா நேர்வுகளிலும் இல்லாவிட்டாலும்) நேர்வடிவங்களையும் (positive forms) எதிர்மறை வடிவங்களையும் (Negative forms) கொண்டிருக்கும்.

இவ்வாறு தமிழின் திரிபுற்ற வினை வடிவு (Inflected) பல உருபன்களின் ஒலியனியல் மெய்ப்படுத்தம் ஆகும் (எ.கா. வினை, கட்டளை, ஏவல், இடம், எண், பால் உருபன்கள், துணைநிலை ஆக்கம் செய்யும் உருபன்கள், எதிர்மறை இயக்கி). உருபன்களின் ஒலியனியல் மெய்படுத்தில் ஒரு உருபு (morph) ஒரு உருபனையோ (morpheme) பல உருபன்களையோ உருப்படுத்தம் செய்யும். எல்லா உருபுகளும் பகுதிவடிவில் தோன்றும் வினையுடன் சேர்க்கப்படும் திரிபுப் பின்னொட்டுகளாக வரும். அதைப் பின்வருமாறு உருப்படுத்தம் செய்யலாம்:



5.2.2. வினைப்பகுதி

வினைப்பகுதி என்பது திரிபு ஒட்டுக்கள் சேரக்கூடிய வினையின் வடிவமாகும். வினைப்பகுதி மேலும் முன்னிலை இடத்திற்கு ஏவல் ஒருமையாகப் பயன்படுத்தப்படும் வினைவடிவமும் ஆகும். இவ்வடிவம் தான் அகராதியில் பதிவாகத் தரப்படும் வடிவமாகும். ஒரு வினையடி தனிநிலையானதாகவோ ஆக்கப்பட்டதாகவோ இருக்கலாம். ஒரு தனிநிலை அல்லது ஆக்கப்பட்ட வினையடி உருபனியல் அடிப்படையில் கலவைத் தன்மை உடையதாக இருக்கலாம். பின்னால் காட்டியுள்ளபடி ஒரு தனிநிலை வினைப்பகுதி வினைப்பாட்டு உருபன் (voice morpheme) சேர்க்கப்பட்டதாகவும் சொல் வேர் உருபனாகவும் (lexical root morpheme) இருக்கும்.



வினைப்பாட்டு உருபன் ஒன்றுகொன்று எதிராக நிற்கும் இரு உருபன்களில் ஒன்றைக் கொண்டிருக்கும். இந்த எதிர்நிலை உறுப்பினர்களில் ஒரு உறுப்பினர் இயக்கு வினைப்பாட்டையும் (affective voice) மற்றொன்று இயங்கு வினைப்பாட்டையும் (effective voice) வெளிப்படுத்தும் (Paramasivam, 1979). ஆக்கப்பட்ட வினைப்பகுதி தன்னிலை வினைப்பகுதியையும் காணவாக்கத்தைக் குறிக்கும் ஆக்கப் பின்னொட்டையும் கொண்டிருக்கும்.



5.2.3 வினைவேர்

வினைப்பகுதியின் முதலாவது மற்றும் கட்டாயமான அலகு வினைவேர் உருபனாகும். இது வினைப்பகுதியின் சொற்பொருண்மையைத் தருகிறது. வினைவேர் வினையின் குறைக்க இயலாச் சொல் உருபன் ஆகும்.

5.2.4 இயங்கு வினைப்பாட்டு மற்றும் இயக்கு வினைப்பாட்டு உருபன்

வினைவேர் ஒரு இரண்டாவது அலகால் தொடரப்படலாம். இது வினைப்பாட்டு உருபன் ஆகும். தமிழ் வினைகளில் ஏறக்குறைய 60 விழுக்காடு அவற்றின் பகுதியில் வினைப்பாட்டு உருபனைக் கொண்டிருக்கும் (Lehmann,1933:50). இம்மாதிரியான வினைப்பாட்டு உருபன் ஒரு வினைவேர் உருபனைத் தொடர்ந்து வந்தால், அவை விருப்பாக வராமல் எப்பொழுதும் கட்டாயமாக வரும். முன்னர் கூறியபடி வினைப்பாட்டு உருபன் ஒன்றுக்கொன்று எதிரிடையாக நிற்கும் இரண்டு உருபன்களில் ஒன்றைக் கொண்டிருக்கும். எதிர் இணைகளின் ஒரு உறுப்பினர் இயக்கு வினைப்பாட்டையும் மற்றொரு உறுப்பினர் இயங்கு வினைப்பாட்டையும் வெளிப்படுத்தும் (Paramasivam 1979). ஒரு வினைவேர் இந்த எதிரிணையின் ஒரு உறுப்பினருடன் சேர்ந்து வந்தால் அது மற்ற உறுப்பினருடனும் சேர்ந்து வரும். இருப்பினும் இரண்டு உருபன்களும் இணைந்து வராது. இவ்வாறு வினைப்பாடு உருபன்களுடன் வரும் வினை வேர்கள் இரு வினைப் பகுதிகளைக் கொண்டிருக்கும்; இவற்றில் ஒரு வினைப்பகுதி இயக்கு வினைப்பாட்டின் உருபனையும் மற்ற வினைப்பகுதி இயங்கு வினைப்பாட்டின் உருபனையும் கொண்டிருக்கும்.

எ.கா.

அவனுடைய தலை திரும்பியது – இயங்கு வினைப்பாடு

அவன் தலையைத் திருப்பினான் – இயக்கு வினைப்பாடு

திரும்பு என்ற இயங்கு வினைப்பகுதி, *திருப்பு* என்ற இயக்கு வினைப்பகுதிக்கும் *திரு* என்ற வேர் உருபன் அடிப்படையாகக் கொள்ளலாம். *ம்பு* என்பதை இயங்கு வினைப்பாட்டு மாற்றுருபாகவும், *ப்பு* என்பதை இயக்கு வினைப்பாட்டு மாற்றுருபாகவும் ஆயலாம். இவை தவிர வினைப்பாட்டு உருபன்களின் இணைகளை மெய்ப்படுத்தும் பிற மாற்றுருபுகளின் இணைகளும் இருக்கின்றன. சாதாரணமாக இயங்கு மாற்றுருபு தனி அடைப்பொலியையும் இயக்கு மாற்றுரு இரட்டித்த அடைப்பொலியையும் கொண்டிருக்கும்.

இயங்கு மாற்றுருபு	**இயக்கு மாற்றுருபு**	**எடுத்துக்காட்டு**
கு	க்கு	பெருகு, பெருக்கு
ந்து	த்து	திருந்து, திருத்து
ம்பு	ப்பு	நிரம்பு, நிரப்பு
டு	ட்டு	ஓடு, ஓட்டு

ஸ்டீவர் (Stever, 1983:80) என்பவர் இதற்கு மாறுபட்ட ஆய்வைத் தருகிறார். அவரால் *திரும்பு* அல்லது *திருப்பு* போன்ற வடிவம் இரு உருபன்களாக மெய்ப்படுத்தம் பெறும் ஒரு உருபாக எடுக்கப்படுகிறது: அதாவது வேர் உருபனாகவும் வினைப்பாட்டு உருபனாகவும் எடுக்கப்படுகிறது.

5.2.5 ஆக்கப்பட்ட வினைப்பகுதி

ஆக்கப்பட்ட வினைப்பகுதி தனி வினையடிகளில் இருந்து இயக்கு ஒட்டுகளான *வி, பி, ப்பி* என்பவைகளின் சேர்க்கையால் உருவாக்கப்படலாம். தற்காலத் தமிழில் இந்த ஆக்கச் செயற்பாங்கு மிகக் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

எ.கா.

தெரி + வி = தெரிவி

அறி + வி = அறிவி

இயக்கு வினையாக்கப் பின்னொட்டு *வி* தான் பல வினையடிகளுடன் சேர்த்து வருகிறது. தனிவினைப் பகுதியிலிருந்து இயக்கு வினைப்பகுதியை ஆக்கமுடியுமா என்பதை வருவதுரைக்க இயலாது. எனவே இயக்கு வினைப்பகுதி அகராதியில் பட்டியலிடப்பட வேண்டும்.

5.2.6 மெல் வினைப்பகுதி, வல்வினைப்பகுதி, இடைவினைப்பகுதி

வினைப்பகுதி என்பது திரிபு ஒட்டுக்கள் சேர்க்க இயலும் முன்னிலை ஒருமை ஏவலாக வரும் மற்றும் அகராதியில் பட்டியலிடப்படும் வடிவமாக எடுத்துக் கொள்ளப்பட்டுகிறது. இதன்படி *தூங்கு, கேள், நட* என்பன வினைப்பகுதிகளாகும். இவை ஏவல் வடிவில் வரும் இவற்றில் திரிபு பின்னொட்டுக்கள் சேர்க்கப்படும். இருப்பினும் பல வினையடிகள் (எ. கா. *கேள், நட*) என்பன ஒரு ஒலியனாலோ ஒலியன் மயக்கத்தாலோ பெரிதாக்கப்படும். இக்கூடுதலான ஒலியனோ ஒலியன் மயக்கமோ வினையடியுடன் சேர்க்கப்படும். திரிபு ஒட்டு உயிர் ஒலியில் தொடங்கினால் தான் தோன்றும்; மெய்யொலியில் தொடங்கினால் தோன்றாது. இது சில வினைகளில் தனி அடைப்பொலியான *க்* ஆக வரும் (எ.கா. *கேள் + அ > கேட்க*); சிலவற்றுடன் இரட்டித்த அடைப்பொலியான *க்க்* ஆக வரும். (எ.கா. *நட + அ > நடக்க*). இந்த ஒலியனுக்கோ ஒலியன் மயக்கத்திற்கோ பொருண்மைச் செயல்பாடு இல்லை; ஒலியனில் செயல்பாடு இருக்கிறது. இதை ஒலியனியல் பின்னொட்டாகவோ வெற்று உருபனாகவோ (Empty Morph) ஆயலாம். உயிரொலியால் தொடங்கும் திரிபு பின்னொட்டைச் சேர்க்கும்போது இரட்டித்த அடைப்பொலி *க்க்*–ஆல் பெரிதாக்கப்படுகிற வினைப்பகுதி வல்வினைப்பகுதி எனப்படும். எடுத்துக்காட்டாக *நட* என்ற வினைப்பகுதி வல்வினைப்பகுதியாகும். இதில் உயிரொலியில் தொடங்கும் பின்னொட்டான *அ* என்ற எச்சப் பின்னொட்டு சேர்க்கப்படும் போது அது இரட்டித்த அடைப்பொலியான *க்க்* என்பதால் பெரிதாக்கப்படும் (எ.கா. *நட + அ > நடக்க*). மாறாக இறந்தகாலப் பின்னொட்டான *ந்த்* சேர்க்கப்பட்டால் வினைப்பகுதி *க்க்* ஆல் பெரிதாக்கப்படுவதில்லை (எ.கா. *நட + ந்த் + அ > நடந்த*).

தனி இடைப்பொலியான *க்* என்பதால் பெரிதாக்கப்படக்கூடிய வினைப்பகுதி நடு / இடை வினைப்பகுதியாகும். எடுத்துக்காட்டாக *கேள்* என்ற வினைப்பகுதி இடை வினைப்பகுதியாகும். உயிர் தொடக்கத் திரிபு பின்னொட்டான *அ* என்பதை இவ்வினையுடன் சேர்த்தால் வினைப்பகுதி தனி அடைப்பொலியான *க்* ஆல பெரிதாக்கப்படும் (எ.கா.*கேள் + அ > கேட்க*). மாறாக மெய்யொலி தொடக்கத் திரிபு ஒட்டு சேர்க்கப்பட்டால் வினைப்பகுதி பெரிதாக்கப்படாது (எ.கா. *கேள் + த் + ஏன் > கேட்டேன்*). உயிர் தொடக்கப் பின்னொட்டு

சேர்க்கப்படும்போது பெரிதாகாத வினைப்பகுதிகள் மெல்வினைப்பகுதி எனப்படும். எடுத்துக்காட்டாக *தூங்கு* என்பது மெல்வினைப்பகுதி ஆகும். இதில் *அ* என்ற உயிர் தொடக்க எச்சப் பின்னொட்டு சேர்க்கப்பட்டால் வினைப்பகுதி பெரிதாகாது (எ.கா. *தூங்கு* + *அ* > *தூங்க*).

தமிழ் வினைகளை எல்லாம் வல், இடை, மெல் வினைப்பகுதிக்கள் என்று பாகுபாடு செய்யலாம். பல்வேற்றுப்பட்ட திரிபுப் பின்னொட்டுக்களை விளக்குவதற்காகத் தமிழ் வினை வடிவங்களை முற்று வடிவங்கள் (finite forms). எச்ச வடிவங்கள் (non-finits forms) மற்றும் பெரயாக்கப்பட்ட வினை வடிவங்கள் என வேறுபடுத்தலாம்.

5.2.7 முற்று வினை வடிவங்கள்

முற்றுவினை வடிவங்களை வினைநோக்கு அடிப்படையில் பின்வருமாறு பிரிக்கலாம்.

1. ஏவல் வினை வடிவங்கள்
2. சுட்டு வினை வடிவங்கள்
3. வியங்கோள் வினை வடிவங்கள்

பிறவினை நோக்குகள் வினைத் திரிபுகளால் மெய்ப்படுத்தம் பெற்றுவதில்லை; துணை வினைகளால் மெய்ப்படுத்தம் பெறுகின்றன.

5.2.7.1. ஏவல் வினைவடிவங்கள்

தற்காலத் தமிழ் ஒருமை, பன்மை ஏவல் வடிவங்களை வேறுபடுத்துகிறது. ஒருமை, பன்மை வடிவங்கள் இரண்டு நேர்மறை, எதிர்மறை வடிவங்களாக வடிவமைக்கப்படும். ஏவல் வடிவங்களில் ஒரு வடிவம் இடத்தின் வகைப்பாட்டிற்காக வெளிப்படையாக அடையாளப்படுத்தப்படும். வேறுபட்ட ஏவல் வடிவங்களைப் பின்வருமாறு உள்ளுறை அமைப்பின் உருபன்களின் ஒலியனில் மெய்ப்படுத்தமாக ஆயலாம்:

வினை + ஏவல் + இடம் (+ எதிர்மறை), (+ பன்மை).

ஒருமை ஏவல் (நேர்மறை)

நேர்மறை ஒருமை ஏவல் வடிவம் வினைப்பகுதியை ஒத்திருக்கும். இதில் ஒட்டு இருக்காது.

எ.கா.

நட, கேள், தூங்கு

இது ஏவல் மற்றும் தன்மையிட உருபன் வெளிப்படையாக வெளிப்படுத்தப்படுவதில்லை என்றும் பூஜ்ய உருபனால் மெய்ப்படுத்தம் செய்யப்படும் என்றும் காட்டுகிறது.

ஒருமை ஏவல் (எதிர்மறை)

எதிர்மறை ஒருமை ஏவல் வடிவ ஆத் என்ற எதிர்மறை மாற்றுருபால் பின்னொட்டப்பட்ட வினைப்பகுதியைக் கொண்டிருக்கும். இது *ஏ* என்ற ஒலியிசைவுப் பின்னொட்டால் தொடரப்படும்.

வினைப்பகுதி + ஆத் + ஏ

எ.கா.

தூங்க + ஆத் + ஏ > தூங்காதே

கேட்க + ஆத் + ஏ > கேட்காதே

நடக் + ஆத் + ஏ > நடக்காதே

இந்த வடிவுகளின் ஏவல் மற்றும் முன்னிலை உருபன்கள் பூஜ்ய உருபனால் மெய்ப்படுத்தம் செய்யப்படும். எதிர்மறை உருபன் மட்டும் தான் ஆத் என்ற எதிர்மறை மாற்றுருபால் மெய்ப்படுத்தம் செய்யப்படும்.

பன்மை ஏவல் (நேர்மறை)

நேர்மறைப் பன்மை ஏவல் வடிவம் வினைப்பகுதி (உ)ங்கள் என்ற பன்மை ஒட்டையும் கொண்டிருக்கும்.

வினைப்பகுதி + (உ)ங்கள்

உங்கள் என்ற பன்மை ஒட்டை ஒருமை எண்ணுக்கும் உயர் நிலைக்கும், பன்மை எண்ணுக்கும் பொருள்கோள் செய்யலாம். இந்த ஏவல் வடிவை உயர்நிலையில் உள்ள தனிநபரைக் குறிப்பிடவோ ஒரு குழும தனிநபர்களைக் குறிப்பிடவோ பயன்படுத்தலாம்.

தூங்க்-உங்கள் > தூங்குங்கள்

நட-ங்கள் > நடங்கள்

கேள்-உங்கள் > கேளுங்கள்

ஏவல் மற்றும் பன்மை உருபன் *(உ)ங்கள்* என்ற உருபால் செய்ப்படுத்தம் செய்யப்படுவதாகவும் இந்த வடிவத்தில் உள்ள முன்னிலை இட உருபன் பூஜிய உருபனாக மெய்ப்படுத்தம் செய்யப்படுவதாகவும் ஆயலாம்.

பன்மை ஏவல் (எதிர்மறை)

எதிர்மறைப் பன்மை ஏவல் வடிவத்தில் வினைப்பகுதி *ஆத்* என்றஎதிர்மறை மாற்றுருபால் தொடரப்படும்: பின்னர் *ஈர்கள்* என்ற முன்னிலைப் பன்மைப் பின்னொட்டால் தொடரப்படும்.

வினைப்பகுதி +ஆத் + ஈர்கள்

எ.கா.

தூங்க் + ஆத் + ஈர்கள் > தூங்காதீர்கள்

கேட்க் + ஆத் + ஈர்கள் > கேட்காதீர்கள்

ஆத் என்ற மாற்றுருபால் எதிர்மறை ஏதிர்மறை உருபன் மெய்ப்படுத்தம் செய்யப்படும்போது முன்னிலை உருபனும் பன்மை உருபனும் *ஈர்கள்* என்ற ஒரே உருபால் மெய்ப்படுத்தம் செய்யப்படும். ஏவல் உருபன் பூஜிய உருபால் மெய்ப்படுத்தம் செய்யப்படும். நேர்மறைப் பன்மை ஏவல் வடிவு போல் மின்னிலைப் பன்மை வ்பின்னொட்டான ஈர்கள் என்பதை, ஒருமை, உயர்நிலை என்பனவற்றிற்காகவோ முன்னிலை மற்றும் பன்மைக்காகவோ பொருள்கோள் செய்யலாம்.

ஏவல் + பின்னொட்டுக்கள்

இரு வகையான பின்னொட்டுகள் ஏவல் வடிவங்களுடன் சேர்க்கப்படலாம்: இந்நேர்வில் ஒட்டுநிலையை அடைந்துள்ள *ஏன்* என்ற கேள்விச்சொல் மற்றும் பின்னொட்டுகளாக வந்து விளிக் குறிகளாகச் (address markers) செயல்படும் பலவைஅகிப்பட்ட பெயர்கள், குறிப்பாக உறவுமுறைச் சொற்கள். *ஏன்* என்ற வினாச் சொல் ஏவல் வடிவுடன் பின்னொட்டப்படும்போது ஏவலால் வெளிப்படும் கட்டளை அல்லது வேண்டல் ஒரு கருத்தாக மாற்றப்படும்.

எ.கா.

வாய் – ய் – ஏன் > வாயேன்

கேள் – உங்கள் – ஏன் > கேளுங்களேன்

அடா, அடி, ஐயா, அப்பா, அம்மா, அண்ணன், அக்கா போன்ற பெயர்கள் பலவகைக் கட்டளை வடிவுகளில் சேரும்போது தொடக்க உயிரான *அ* என்பதை இழந்து பின்னொட்டு நிலையை அடைகின்றன.

எ.கா.

ஒருமை கட்டளை வடிவத்துடன்	**பன்மை கட்டளை வடிவத்துடன்**
வா – டா > வாடா	வார் – உங்க(ள்) – டா > வாருங்கடா
வா – டி > வாடி	வார் – உங்க(ள்) – டீ > வாருங்கடீ
வாய் – ய்யா > வாய்யா	வார் – உங்க(ள்) – ம்மா > வாருங்கம்மா
வா – ம்மா > வாம்மா	
வா – ப்பா > வாப்பா	
வா – ண்ணா > வாண்ணா	
வா – க்கா > வாக்கா	

3.3.2.7.2. சுட்டுவினை வடிவுகள்

தமிழில் நேரடியான மற்றும் எதிர்மறையான சுட்டுவினை வடிவங்கள் இருக்கின்றன. நேரிடைச் சுட்டுவினை வடிவங்கள் காலம், இடம், எண், பால் மற்றும் நிலை இவற்றிற்காக அடையாளப்படுத்தப்பட்டிருக்கும். எதிர்மறைச் சுட்டுவினை வடிவங்கள் நேரிடைச் சுட்டுவினை வடிவங்களைப் போல் அடையாளப் படுத்தப்படுவதில்லை. நேரிடைச் சுட்டு வடிவங்களுக்கும் சுட்டு வடிவங்களுக்கும் ஒன்றுக்கொன்றான பொருத்தம் இல்லை.

நேரிடைச் சுட்டுவினை வடிவங்கள்

நேரிடைச் சுட்டுவினை வடிவங்கள் காலம், இடம், எண், பால், நிலை என்ற வகைப்பாடுகளுக்காக அடையாளப்படுத்தப்பட்டிருக்கும். இவ்வடிவங்கள் வினைப்பகுதி. கால உருபன் மற்றும் இடம், எண் மற்றும் பால் + நிலை இவற்றின் மூன்று உருபன்கள் என்பனவற்றைக் கொண்டு பின்வருமாறு உருப்படுத்தப்படும்:

வினைப்பகுதி + காலம் + இடம் + எண் + பால்

இந்த உருபன்களின் ஒலியனியல்சார் மெய்ப்படுத்தத்தில் கால உருபன் பல மாற்றுருபுகளால் மெய்ப்படுத்தம் செய்யப்படும். இதன் விளைவாகப் பெரும்பாலான நேரிடைச் சுட்டுவினை வடிவங்களை வினைப்பகுதியாகவும் இரு திரிபுப் பின்னொட்டுக்களாகவும் பகுக்கலாம்.

வினைப்பகுதி + கால பின்னொட்டு + எண் – இடம் – பால் பின்னொட்டு

5.2.7.3 வினைப்பகுதி

வினைப்பகுதி குறித்து முன்னர் கூறப்பட்டுள்ளது.

5.2.7.4. காலப் பின்னொட்டுக்கள்

தமிழ் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற மூன்று காலங்களை வேறுப்படுத்துகிறது. ஒவ்வொரு கால உருபனும் பல காலப் பின்னொட்டுக்களால் அல்லது மாற்றுருபுகளால் மெய்ப்படுத்தம் செய்யப்படுகின்றன. நிகழ்காலத்துக்கு *கிற், க்கிற்* என்ற மாற்றுருபுகள் இருக்கின்றன; *கின்று, க்கின்று* என்பன நடையியல் வேறுபாடுகளாகும். இறந்த காலத்துக்கு *த், ந்த், இன், இ, த்த்* என்ற ஐந்து மாற்றுருபுகள் இருக்கின்றன. ஒரு குறிப்பிட்ட வினை ஒவ்வொரு குழுமத்தின் ஒரு மாற்றுருபுடன் மட்டுமே வரும். இதற்கு விதிவிலக்காக வருபவை *ந்* மற்றும் *இ* என்ற இறந்த காலத்தின் மாற்றுருபுகள் அடிப்படியில் அதாவது ஒரு குறிப்பிட்ட வினைப்பகுதியுடன் வரும் கால மாற்றுருபு குழுமம் அடிப்படையில் தமிழ் வினைகளைப் பல வகுப்புகளாகப் பிரிக்கலாம். பல பாகுபாடுகள் இது தொடர்பான நூல்களில் தரப்பட்டுள்ளன. ஆர்டனில் (1942:144) தரப்பட்டுள்ள கிராலின் (Graul) பாகுபாடு மிகக் கூடுதலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பாகுபாடாகும் (Classification). இப்பாகுபாட்டின் படி தமிழ் வினைகள் எல்லாம் ஏழு வகுப்புகளாகப் பகுக்கப்பட்டுள்ளன. இவற்றில் இரண்டு வகுப்புகளுக்குத் துணை வகுப்புகள் இருக்கின்றன. பின்வரும் அட்டவணை ஏழு வகுப்புகளையும் அவற்றின் கால ஒட்டுக்களையும் தருகின்றது.

வகுப்பு	நிகழ்காலம்	இறந்தகாலம்	எதிர்காலம்
1.	- கிற் -	- த் -	- வ் -
2.	- கிற் -	- ந்த் -	- வ் -
3.	- கிற் -	இன்	- வ் -
4.	- கிற் -	இரட்டிப்பு	- வ் -
5.	- கிற் -	- த் –	- ப் -
6.	- க்கிற் -	- த்த் -	- ப்ப் -
7.	- க்கிற் -	- ந்த் -	- ப்ப் -

ஒன்றிலிருந்து நான்கு வகுப்புகளைச் சார்ந்த வினைகள் மெல் வினைகள் என்று ஐந்தாவது வகுப்பைச் சார்ந்த வினைகள் இடை வினைகள் என்றும் ஆறு, ஏழு வகுப்புகளைச் சார்ந்த வினைகள் வல் வினைகள் என்றும் அழைக்கப்படுகின்றன. நான்காவது வகுப்பைச்

சார்ந்த வினைகள் *டு, று* அல்லது *கு* என்ற அசையால் இறுதியுறும்; இவ்வினைகளில் இறந்தகால உருபன் காலப் பின்னொட்டால் மெய்ப்படுத்தம் பெறுவதில்லை. மாறாக *ட், ற், க்* என்பன இரட்டுவதால் மெய்ப்படுத்தம் பெறும்.

எ.கா.

போடு > போட் - ட்

பெறு > பெற் - ற்

புகு > புக் – க்

இவ்வினை வகுப்புகளின் ஒலியனியல் செயல்பாடுகளும் திரிபு அடுக்குகளும் பின்னால் விளக்கப்பட்டுள்ளன.

5.2.7.5 இட-எண்-பால் பின்னொட்டுக்கள்

கால ஒட்டுக்களைத் தொடரும் இரண்டாவது திரிபு ஒட்டு. இட–எண்– பால் பின்னொட்டாகும். இதை மூன்று உருபன்களை மெய்ப்படுத்தம் செய்யும் போர்ட்மாண்டோ உருபாக (Portmanteaumorph) ஆயலாம். இப்பின்னொட்டால் எழுவாய்ப் பெயர்த்தொடர் முற்று வினையுடன் உடன்பாடு காட்டும். பின்வரும் அட்டவணையில் இந்த உடன்பாடு தரப்பட்டுள்ளது:

மாற்றுப்பெயர்கள்	இட – எண் – பால் பின்னொட்டுக்கள்
நான்	ஏன்
நீ	ஆய்
அவன்	ஆன்
அவள்	ஆள்
அது	அது, து, உம்
அவர்	ஆர்
நாங்கள், நாம்	ஓம்
நீங்கள்	ஈர்கள்
அவர்கள்	ஆர்கள்
அவை	அ

5.2.7.6 திரிபு அடுக்குகள்

கால ஒட்டுக்கள் மற்றும் இட-எண்-பால் ஒட்டுக்கள் கொண்ட இனம் சுட்டு வினையின் (indicative verb) திரிபு நேரடியானது. ஒரு குறிப்பிட்ட வகுப்பைச் சார்ந்த வினையடி அந்த

வகுப்பிற்கென்று அனுமதிக்கப்பட்ட கால மாற்றுருபுகளின் குழுமத்தை ஏற்கும். அடைத் தொடர்ந்து இடம்-எண்-பால் ஒட்டு சேர்க்கப்படும். காலப் பின்னொட்டுக்கள் மற்றும் இடம்-எண்-பால் பின்னொட்டுக்களின் வருகை முறையில் திரிபு அடுக்கில் சீரற்ற வினை வடிவங்களும் இருக்கின்றன. கீழ்வரும் அட்டவணைகளில் ஒவ்வொரு வினை வகுப்புகளையும் சார்ந்த வினைகளின் திரிபு அடுக்குகள் தரப்பட்டுள்ளன.

வகுப்பு 1

இடம்	**நிகழ்காலம்**	**இறந்தகாலம்**	**எதிர்காலம்**
தன்மை ஒருமை	அழு-கிற்-ஏன்	அழு-த்-ஏன்	அழு-வ்-ஏன்
முன்னிலை ஒருமை	அழு-கிற்-ஆய்	அழு-த்-ஆய்	அழு-வ்-ஆய்
படர்க்கை ஒருமை ஆண்பால்	அழு-கிற்-ஆன்	அழு-த்-ஆன்	அழு-வ்-ஆன்
படர்க்கை ஒருமை பெண்பால்	அழு-கிற்-ஆள்	அழு-த்-ஆள்	அழு-வ்-ஆள்
படர்க்கை ஒருமை அஃறினை	அழு-கிற்-அது	அழு-த்-அது	அழு-ம்
படர்க்கை ஒருமை ஆண்பால் - பெண்பால்	அழு-கிற்-ஆர்	அழு-த்-ஆர்	அழு-வ்-ஆர்
தன்மைப்பன்மை	அழு-கிற்-ஓம்	அழு-த்- ஓம்	அழு-வ்- ஓம்
முன்னிலைப்பன்மை	அழு-கிற்-ஈர்கள்	அழு-த்- ஈர்கள்	அழு-வ்- ஈர்கள்
படர்க்கை பன்மை ஆண்பால் – பெண்பால்	அழு-கிற்-ஆர்கள்	அழு-த்-ஆர்கள்	அழு-வ்-ஆர்கள்
படர்க்கை பன்மை அஃறிணை	அழு-கின்ற்-அன்	அழு-த்-அன் -அ	அழு-ம்

வகுப்பு2

இடம்	**நிகழ்காலம்**	**இறந்தகாலம்**	**எதிர்காலம்**

தன்மை ஒருமை	விழு-கிற்-ஏன்	விழு-ந்த்-ஏன்	விழு-வ்-ஏன்
முன்னிலை ஒருமை	விழு-கிற்-ஆய்	விழு-ந்த்-ஆய்	விழு-வ்-ஆய்
படர்க்கை ஒருமை ஆண்பால்	விழு-கிற்-ஆன்	விழு-ந்த்-ஆன்	விழு-வ்-ஆன்
படர்க்கை ஒருமை பெண்பால்	விழு-கிற்-ஆள்	விழு-ந்த்-ஆள்	விழு-வ்-ஆள்
படர்க்கை ஒருமை அஃறினை	விழு-கிற்-அது	விழு-ந்த்-அது	விழு-ம்
படர்க்கை ஒருமை ஆண்பால் - பெண்பால்	விழு-கிற்-ஆர்	விழு-ந்த்-ஆர்	விழு-வ்-ஆர்
தன்மைப்பன்மை	விழு-கிற்-ஓம்	விழு-ந்த்- ஓம்	விழு-வ்- ஓம்
முன்னிலைப்பன்மை	விழு-கிற்-ஈர்கள்	விழு-ந்த்- ஈர்கள்	விழு-வ்- ஈர்கள்
படர்க்கை பன்மை ஆண்பால் - பெண்பால்	விழு-கிற்-ஆர்கள்	விழு-ந்த்-ஆர்கள்	விழு-வ்-ஆர்கள்
படர்க்கை பன்மை அஃறிணை	விழு-கின்ற்-அ	விழு-ந்த்-அன் -அ	விழு-ம்

வகுப்பு3

இடம்	**நிகழ்காலம்**	**இறந்தகாலம்**	**எதிர்காலம்**
தன்மை ஒருமை	தூங்கு-கிற்-ஏன்	தூங்கு-இன்-ஏன்	தூங்கு-வ்-ஏன்
முன்னிலை ஒருமை	தூங்கு-கிற்-ஆய்	தூங்கு-இன்-ஆய்	தூங்கு-வ்-ஆய்
படர்க்கை ஒருமை ஆண்பால்	தூங்கு-கிற்-ஆன்	தூங்கு-இன்-ஆன்	தூங்கு-வ்-ஆன்
படர்க்கை ஒருமை பெண்பால்	தூங்கு-கிற்-ஆள்	தூங்கு-இன்-ஆள்	தூங்கு-வ்-ஆள்

படர்க்கை ஒருமை அஃறினை	தூங்கு-கிற்-அது	தூங்கு-இன்-அது	தூங்கு-ம்
படர்க்கை ஒருமை ஆண்பால் - பெண்பால்	தூங்கு-கிற்-ஆர்	தூங்கு-இன்-ஆர்	தூங்கு-வ்-ஆர்
தன்மைப்பன்மை	தூங்கு-கிற்-ஓம்	தூங்கு-இன்- ஓம்	தூங்கு-வ்- ஓம்
முன்னிலைப்பன்மை	தூங்கு-கிற்-ஈர்கள்	தூங்கு-இன்- ஈர்கள்	தூங்கு-வ்- ஈர்கள்
படர்க்கை பன்மை ஆண்பால் - பெண்பால்	தூங்கு-கிற்-ஆர்கள்	தூங்கு-இன்-ஆர்கள்	தூங்கு-வ்-ஆர்கள்
படர்க்கை பன்மை அஃறிணை	தூங்கு-கிற்-அன்-அ	தூங்கு-இன்-அ	தூங்கு-ம்

வகுப்பு4

இடம்	**நிகழ்காலம்**	**இறந்தகாலம்**	**எதிர்காலம்**
தன்மை ஒருமை	போடு-கிற்-ஏன்	போட்-ட்-ஏன்	போடு- -வ்-ஏன்
முன்னிலை ஒருமை	போடு-கிற்-ஆய்	போட்-ட்-ஆய்	போடு-வ்-ஆய்
படர்க்கை ஒருமை ஆண்பால்	போடு-கிற்-ஆன்	போட்-ட்-ஆன்	போடு-வ்-ஆன்
படர்க்கை ஒருமை பெண்பால்	போடு-கிற்-ஆள்	போட்-ட்-ஆள்	போடு-வ்-ஆள்
படர்க்கை ஒருமை அஃறினை	போடு-கிற்-அது	போட்-ட்-அது	போட்-உம்
படர்க்கை ஒருமை ஆண்பால்-பெண்பால்	போடு-கிற்-ஆர்	போட்-ட்-ஆர்	போடு-வ்-ஆர்
தன்மைப்பன்மை	போடு-கிற்-ஓம்	போட்-ட்- ஓம்	போடு-வ்- ஓம்
முன்னிலைப்பன்மை	போடு-கிற்-ஈர்கள்	போட்-ட்- ஈர்கள்	போடு-வ்- ஈர்கள்

படர்க்கை பன்மை ஆண்பால் - பெண்பால்	போடு-கிற்-ஆர்கள்	போட்-ட்-ஆர்கள்	போடு-வ்-ஆர்கள்
படர்க்கை பன்மை அஃறிணை	போடு-கின்ற-அன்-அ	போட்-ட்-அன்-அ	போட்-உம்

வகுப்பு5

இடம்	**நிகழ்காலம்**	**இறந்தகாலம்**	**எதிர்காலம்**
தன்மை ஒருமை	கேட்-கிற்-ஏன்	கேட்-ட்-ஏன்	கேட்-ப்-ஏன்
முன்னிலை ஒருமை	கேட்-கிற்-ஆய்	கேட்-ட்-ஆய்	கேட்-ப்-ஆய்
படர்க்கை ஒருமை ஆண்பால்	கேட்-கிற்-ஆன்	கேட்-ட்-ஆன்	கேட்-ப்-ஆன்
படர்க்கை ஒருமை பெண்பால்	கேட்-கிற்-ஆள்	கேட்-ட்-ஆள்	கேட்-ப்-ஆள்
படர்க்கை ஒருமை அஃறினை	கேட்-கிற்-அது	கேட்-ட்-அது	கேட்-க்-உம்
படர்க்கை ஒருமை ஆண்பால்- பெண்பால்	கேட்-கிற்-ஆர்	கேட்-ட்-ஆர்	கேட்-ப்-ஆர்
தன்மைப்பன்மை	கேட்-கிற்-ஓம்	கேட்-ட்- ஓம்	கேட்-ப்- ஓம்
முன்னிலைப்பன்மை	கேட்-கிற்-ஈர்கள்	கேட்-ட்- ஈர்கள்	கேட்-ப்- ஈர்கள்
படர்க்கை பன்மை ஆண்பால் - பெண்பால்	கேட்-கிற்-ஆர்கள்	கேட்-ட்-ஆர்கள்	கேட்-ப்-ஆர்கள்
படர்க்கை பன்மை அஃறிணை	கேட்-கிற்-அன்-அ	கேட்-ட்-அன்-அ	கேட்-க்-உம்

வகுப்பு6

இடம்	**நிகழ்காலம்**	**இறந்தகாலம்**	**எதிர்காலம்**
தன்மை ஒருமை	படி-க்கிற்-ஏன்	படி-த்த்-ஏன்	படி-ப்ப்-ஏன்
முன்னிலை ஒருமை	படி-க்கிற்-ஆய்	படி-த்த்-ஆய்	படி-ப்ப்-ஆய்

படர்க்கை ஒருமை ஆண்பால்	படி-க்கிற்-ஆன்	படி-த்த்-ஆன்	படி-ப்ப்-ஆன்
படர்க்கை ஒருமை பெண்பால்	படி-க்கிற்-ஆள்	படி-த்த்-ஆள்	படி-ப்ப்-ஆள்
படர்க்கை ஒருமை அஃறினை	படி-க்கிற்-அது	படி-த்த்-அது	படி-க்க்-உம்
படர்க்கை ஒருமை ஆண்பால் - பெண்பால்	படி-க்கிற்-ஆர்	படி-த்த்-ஆர்	படி-ப்ப்-ஆர்கள்
தன்மைப்பன்மை	படி-க்கிற்-ஓம்	படி-த்த்- ஓம்	படி-ப்ப்- ஓம்
முன்னிலைப்பன்மை	படி-க்கிற்-ஈர்கள்	படி-த்த்- ஈர்கள்	படி-ப்ப்- ஈர்கள்
படர்க்கை பன்மை ஆண்பால் - பெண்பால்	படி-க்கிற்-ஆர்கள்	படி-த்த்-ஆர்கள்	படி-ப்ப்-ஆர்கள்
படர்க்கை பன்மை அஃறிணை	படி-க்கின்ற-அன்-அ	படி-த்த்-அன்-அ	கேட்-க்க்-உம்

வகுப்பு7

இடம்	**நிகழ்காலம்**	**இறந்தகாலம்**	**எதிர்காலம்**
தன்மை ஒருமை	நட-க்கிற்-ஏன்	நட-ந்த்-ஏன்	நட-ப்ப்-ஏன்
முன்னிலை ஒருமை	நட-க்கிற்-ஆய்	நட-ந்த்-ஆய்	நட-ப்ப்-ஆய்
படர்க்கை ஒருமை ஆண்பால்	நட-க்கிற்-ஆன்	நட-ந்த்-ஆன்	நட-ப்ப்-ஆன்
படர்க்கை ஒருமை பெண்பால்	நட-க்கிற்-ஆள்	நட-ந்த்-ஆள்	நட-ப்ப்-ஆள்
படர்க்கை ஒருமை அஃறினை	நட-க்கிற்-அது	நட-ந்த்-அது	நட-க்க்-உம்
படர்க்கை ஒருமை ஆண்பால் - பெண்பால்	நட-க்கிற்-ஆர்	நட-ந்த்-ஆர்	நட-ப்ப்-ஆர்கள்

தன்மைப்பன்மை	நட-க்கிற்-ஓம்	நட-ந்த்- ஓம்	நட-ப்ப்- ஓம்
முன்னிலைப்பன்மை	நட-க்கிற்-ஈர்கள்	நட-ந்த்- ஈர்கள்	நட-ப்ப்- ஈர்கள்
படர்க்கை பன்மை ஆண்பால் - பெண்பால்	நட-க்கிற்-ஆர்கள்	நட-ந்த்-ஆர்கள்	நட-ப்ப்-ஆர்கள்
படர்க்கை பன்மை அஃறிணை	நட-க்கின்ற-அன்-அ	நட-ந்த்-அன்-அ	நட-க்க்-உம்

5.2.7.7. வினைகளின் சீரற்றவடிவங்கள்

மேற்சொன்ன ஏழு வகுப்புகளில் அடக்க இயலாத ஒரு சிறு குழும வினைகள் இருக்கின்றன. இவ்வினைகள் பின்வரும் காரணங்களால் சீரற்ற வடிவங்களாக இருக்கின்றன.

1. அவை சீரற்ற கால ஒட்டை ஏற்கும். எடுத்துக்காட்டாகச் *சொல்* என்ற வினை ன் என்ற இறந்தகால ஒட்டை ஏற்கும் (*சொ – ன் – ஏன் > சொன்னேன்*).

2. திரிபு ஒட்டுக்கள் சேர்க்கப்படும்போது அவை தமது ஒலியன் வடிவை மாற்றுகின்றன. எடுத்துக்காட்டாகச் *சா* என்ற வினை இறந்தகாலத்திற்காகத் திரிபுறும்போது அதன் வினைப்பகுதி *செ* என்று மாறும் (*செ-த்த்-ஏன் > செத்தேன்*).

5.2.7.8 வியங்கோள் வடிவம்

வியங்கோள் வடிவம் வியங்கோள் பின்னொட்டான *க* வினைப்பகுதியுடன் சேர்க்கப்படுவதால் உருவாக்கப்படுகிறது. இப்பின்னொட்டு 6-ஆவது மற்றும் 7-ஆவது வகுப்பு வினைகளுடன் *க்க்* என்ற மாற்றுருபாக உருப்படுத்தம் பெறும்.

எ.கா

வாழ் – க > வாழ்க

வீழ் – க > வீழ்க

நட – க்க > நடக்க

கொடு – க்க > கொடுக்க

3.3.2.8 முற்றல்லா வினை வடிவங்கள்

நான்கு முற்றல்லா வினை வடிவங்களை வேறுபடுத்தலாம்:

1. செய்ய வினையெச்சம்

2. செய்து வினையெச்சம்

3. நிபந்தனை எச்சம்

4. பெயரெச்சம்

5.2.8.1 செய்ய வினையெச்சம்

இது வினையெச்சப் பின்னொட்டான *அ* வினைப்பகுதியுடன் சேர்க்கப்படுவதால் உருவாக்கப்படுகின்றது. இப்பின்னொட்டு மூன்று மாற்றுருபுகளைக் கொண்ட ஒரு உருபன் ஆகும். *அ* என்ற பின்னொட்டு ஒன்றாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் வகுப்பு வினைகளுடனும், *க* என்ற பின்னொட்டு ஐந்தாவது வகுப்பு வினைகளுடனும் *க்க* என்ற பின்னொட்டு ஆறாவது மற்றும் ஏழாவது வகுப்பு வினைகளுடன் வரும்.

அழு (வகுப்பு 1) : அழ் – அ

உட்கார் (வகுப்பு 2) : உட்கார் – அ

தூங்கு (வகுப்பு 3) :தூங்க் – அ

போடு (வகுப்பு 4) : போட் – அ

கேள் (வகுப்பு 5) : கேட் – க

படி (வகுப்பு 6) : படி – க்க

நட (வகுப்பு 7) : நட – க்க

5.2.8. 2 செய்து / செய்யாமல் வினையெச்ச வடிவம்

செய்து வினையெச்சத்திற்கு நேர்மறை மற்றும் எதிர்மறை என்ற இரண்டு வடிவங்கள் இருக்கின்றன. நேர்மறை வினையெச்ச வடிவம் வினைப்பகுதியுடன் வினையெச்ச ஒட்டைச் சேர்ப்பதால் உருவாக்கப்படும். இவ்வினையெச்ச ஒட்டுக்கள் இறந்தகாலப் பின்னொட்டுக்களின் ஒலியன் வடிவைக் கொண்டிருக்கும். இவை தவிர பிற பின்னொட்டுக்கள் உ என்ற ஒலித்துணை உயிரைக் (Enunciative vowel) கொண்டிருக்கும். இவ்வாறு *து, ந்து, த்து, இ* என்ற நான்கு ஒட்டுக்களும் நேர் வினையெச்ச ஒட்டுக்களாக வரும்.

அழு (வகுப்பு 1) : அழு – து

உட்கார் (வகுப்பு 2) : உட்கார் – ந்து

தூங்கு (வகுப்பு 3) : தூங்க் – இ

போடு (வகுப்பு 4) : போட் – டு

கேள் (வகுப்பு 5) : கேட் – டு

படி (வகுப்பு 6) : படி – த்து

நட (வகுப்பு 7) : நட – ந்து

எதிர்மறையைப் பொருத்தவரையில் இரண்டு எதிர்மறை வினையெச்ச வடிவங்கள் இருக்கின்றன. முதல் வடிவில் ஆ என்ற எதிர்மறை மாற்றுருபு வினைப்பகுதியுடன் முதலில் சேர்க்கப்பட்டு அதன் பின் *மல்* என்ற வினையெச்சப் பின்னொட்டு சேர்க்கப்படும். இவ்வாறு முதல் எதிர்மறை பெயரெச்ச வடிவத்தின் அமைப்பு புன்வருமாறு அமையும்.

வினைப்பகுதி + ஆ – மல்

இரண்டாவது வடிவத்தில் வினைப்பகுதியைத் தொடர்ந்து ஆத் என்ற எதிர்மறை மாற்றுருபு சேர்க்கப்பட்டு அதைத் தொடர்ந்து உ என்ற ஒலித்துணை உயிரொலி சேர்க்கப்படும். இவ்வாறு இரண்டாவது எதிர்மறை வினையெச்ச வடிவம் பின்வருமாறு அமையும்:

வினைப்பகுதி + ஆத் – உ

எ.கா.

அழு (வகுப்பு 1)	: ஆழ் – ஆ – மல்	ஆழ் – ஆது
உட்கார் (வகுப்பு 2)	: உட்கார் – ஆ – மல்	உட்கார் – ஆது
தூங்கு (வகுப்பு 3)	: தூங்க் – ஆ – மல்	தூங்க் – ஆது
போடு (வகுப்பு 4)	: போட் – ஆ – மல்	போட் – ஆது
கேட் (வகுப்பு 5)	:கேட் – க் – ஆ – மல்	கேட் - க் – ஆது
படி (வகுப்பு 6)	: படி – க்க - ஆ – மல்	படி – க்க – ஆது
நட (வகுப்பு7)	: நட –க்க – ஆ – மல்	நட – க்க – ஆது

3.3.2.8.3. நிபந்தனை வடிவங்கள்

மூன்றாவது காலம் காட்டாத முற்றல்லா வடிவம் நிபந்தனை வடிவம் ஆகும். இது எதிர்மறை வடிவத்திலும் நேர்மறை வடிவத்திலும் வரும். நேர்மறை வடிவம் வினைப்பகுதியுடன் பொருத்தமுடைய இறந்தகால மாற்றுருபை ஒக்கும். ஒலியன் கூறையும் அதைத் தொடர்ந்து *ஆல்* என்ற நிபந்தனைப் பின்னொட்டையும் பெற்றுவரும். நிபந்தனை வினை வடிவத்தின் அமைப்பு பின்வருமாறு அமையும்:

வினைப்பகுதி + பொருத்தமான இறந்தகால ஒட்டை ஒக்கும் ஒலியன் கூறு + ஆல்

இறந்தகால ஒட்டை ஒக்கும் ஒலியன் கூறு நிகழ்கால மாற்றுருபுடனோ எதிர்கால மாற்றுருபுடனோ முரண்படாது. இதற்குப் பொருண்மை செயற்பாடு இல்லை. அதாவது இது இறந்தகாலத்தை உணர்த்தாது.

அழு (வகுப்பு 1) : ஆழ் – த் – ஆல்

உட்கார் (வகுப்பு 2) : உட்கார் – ந்த்– ஆல்

தூங்கு (வகுப்பு 3) : தூங்க் – இன் – ஆல்

போடு (வகுப்பு 4) : போட் – ட் – ஆல்

கேட் (வகுப்பு 5) : கேட் – ட் – ஆல்

படி (வகுப்பு 6) : படி – த்த் – ஆல்

நட (வகுப்பு7) : நட –ந்த் – ஆல்

எதிர்மறை நிபந்தனை வினை வடிவம் வினைப்பகுதியுடன் ஆ என்ற எதிர்மறை உருபையும் அதைத் தொடர்ந்து *விட்டால்* என்ற நிபந்தனை ஒட்டையும் சேர்க்கப்படும் போது பெறப்படும்.

விழு (வகுப்பு 1) : விழ் – ஆ – விட்டால்

உட்கார் (வகுப்பு 2) : உட்கார் – ஆ – விட்டால்

தூங்கு (வகுப்பு 3) : தூங்க் – ஆ – விட்டால்

போடு (வகுப்பு 4) : போட் – ஆ – விட்டால்

கேட் (வகுப்பு 5) :கேட் – க் – ஆ – விட்டால்

படி (வகுப்பு 6) : படி – க்க - ஆ – விட்டால்

நட (வகுப்பு7) : நட –க்க – ஆ – விட்டால்

5.2.8.4. பெயரெச்ச வடிவங்கள்

பெயரெச்ச வடிவம் காலத்தை வேறுபடுத்தும் எச்ச வடிவமாகும். பெயரெச்ச வடிவம் இறந்தகாலப் பெயரெச்சம், நிகழ்காலப் பெயரெச்சம், எதிர்கால பெயரெச்சம் எனப்படும். இவற்றுடன் காலங்காட்டாத எதிர்மறைப் பெயரெச்சமும் சேரும். இறந்தகாலப் பெயரெச்ச வடிவமும் நிகழ்காலப் பெயரெச்ச வடிவமும் வினைப்பகுதியுடன் மொத்தமான இறந்தகால மாற்றுருபையோ நிகழ்கால மாற்றுருபையோ சேர்த்தும் அதைத் தொடர்ந்து பெயரெச்ச பின்னொட்டான *அ* என்பதை சேர்த்தும் உருவாக்கப்படும்.

அழு (வகுப்பு 1) : அழு – த் – அ அழு – கிற் - அ

உட்கார் (வகுப்பு 2) : உட்கார் – ந்த்– அ உட்கார் – கிற் - அ

தூங்கு (வகுப்பு 3) : தூங்க் – இ – அ தூங்கு – கிற் - அ

போடு (வகுப்பு 4) : போட் – ட் – அ போடு – கிற் - அ

கேட் (வகுப்பு 5) : கேட் – ட் – அ கேட் – கிற் - அ

படி (வகுப்பு 6) : படி – த்த் –அ படி – க்கிற் - அ

நட (வகுப்பு7) : நட –ந்த் – அ நா – க்கிற் – அ

எதிர்கால பெயரெச்ச வடிவம் *உம்* என்ற ஒட்டை வினைப்பகுதியுடன் சேர்ப்பதால் பெறப்படும். *உம்* என்ற என்ற ஒரு போர்ட்மாண்டோ உருபாகும்; இது எதிர்கால உருபனையும் பெயரெச்ச உருபனையும் மெய்ப்படுத்தம் செய்யும்.

அழு (வகுப்பு 1) : அழ் – உம்

உட்கார் (வகுப்பு 2) : உட்கார் – உம்

தூங்கு (வகுப்பு 3) : தூங்க் – உம்

போடு (வகுப்பு 4) : போட் – உம்

கேட் (வகுப்பு 5) :கேட் – க் – உம்

படி (வகுப்பு 6) : படி – க் - உம்

நட (வகுப்பு7) : நட –க் – உம்

எதிர்மறைப் பெயரெச்ச வடிவம் எதிர்மறை பெயரான ஆத் என்பதையும் அதைத் தொடர்ந்து பெயரெச்ச ஒட்டான *அ* என்பதையும் வினைப்பகுதியுடன் சேர்த்துப் பெறப்படும்.

அழு (வகுப்பு 1) : அழ் – ஆத் - அ

உட்கார் (வகுப்பு 2) : உட்கார் – ஆத் - அ

தூங்கு (வகுப்பு 3) : தூங்க் – ஆத் - அ

போடு (வகுப்பு 4) : போட் – ஆத் - அ

கேள் (வகுப்பு 5) :கேட் – க் – ஆத் - அ

படி (வகுப்பு 6) : படி – க்க் - ஆத் - அ

நட (வகுப்பு7) : நட –க்க் – ஆத் - அ

5.2.9 பெயராக்கப்பட்ட வினை வடிவங்கள் / தொழிற்பெயர்கள்

தொழிற்பெயர்களைக் காலக்குறி பெற்றவை, காலக்குறி பெறாதவை என இரண்டு வகைகளாக வேறுபடுத்தலாம். காலக்குறி பெறாத தொழிற்பெயர்கள் வினைப்பகுதியும் அதைத் தொடர்ந்து பெயராக்க ஒட்டையும் பெற்றிருக்கும். இவ்வகையிற்படும் தொழிற்பெயர்கள் மூன்று வேறுபட்ட பெயராக்க ஒட்டுக்களைப் பெற்று வரும்:

1. வினைப்பகுதி + ஆல்

செய் (வகுப்பு 1) : செய் – ய் – அல்

படி (வகுப்பு 6) : படி – க்க் – அல்

2. வினைப்பகுதி + தல்

செய் (வகுப்பு 1) : செய் – தல்

படி (வகுப்பு 6) : படி - த்தல்

3. வினைப்பகுதி + கை

செய் (வகுப்பு 1) : செய் – கை

படி (வகுப்பு 6) : படி – க்கை

காலக்குறி பெற்ற தொழிற்பெயர்களைப் பொறுத்தவரையில் அவை வினைப்பகுதியுடன் மூன்று கால மாற்றுருபுகளையும் அதைத்தொடர்ந்து *அது* என்ற பெயராக்க ஒட்டையும் பெற்று வரும். எதிர்மறைக்குறி பெற்ற தொழிற்பெயர்கள் ஆத் என்ற எதிர்மறை ஒட்டையும் அதைத் தொடர்ந்து *அது* என்ற பெயராக்க ஒட்டையும் பெற்று வரும்.

வினைப்பகுதி + இறந்தகால / நிகழ்கால / எதிர்கால / ஒட்டு + பெயராக்க ஒட்டு – அது

எ.கா.

செய் (வகுப்பு 1) : செய் – த் – அது

செய் – கிற் – அது

செய் – வ் – அது

செய் – ய் – ஆத் – அது

படி (வகுப்பு 6) : படி – த்த் – அது

படி – க்கிற் – அது

படி – ப்ப் – அது

படி – க்க் – ஆத் – அது

5.2.9.1 வினையாலணையும் பெயர்கள் மற்றும் பெயரடைப் பெயர்கள்

வினையாலணையும் பெயர்களைப் பின்வருமாறு ஆயலாம்:

வினைப்பகுதி + கால ஒட்டு / எதிர்மறை ஒட்டு + படர்க்கை இடச்சேய்மைச் சுட்டு மாற்றுப்பெயர்கள்.

எ.கா.

செய் – த் – அவன்	செய் – ப் – அவன்
செய் – த் – அவள்	செய் – ப் – அவள்
செய் – த் – அது	செய் – ப் – அது
செய் – த் – அவர்	செய் – ப் – அவர்
செய் – த் – அவர்கள்	செய் – ப் – அவர்கள்
செய் – த் – அவை	செய் – ப் – அவை
செய் – கிற் – அவன்	செய் – ய் - ஆத் – அவன்
செய் – கிற் – அவள்	செய் – ய் - ஆத் – அவள்

செய் – கிற்– அது செய் – ய் - ஆத் – அது

செய் – கிற் – அவர் செய் – ய் - ஆத் – அவர்

செய் – கிற் – அவர்கள் செய் – ய் - ஆத் – அவர்கள்

செய் – கிற் – அவை செய் – ய் - ஆத் – அவை

5.2.10 குறைவினைகள்

சில வினைகள் எல்லாக் கால வகுப்புகளையும் எல்லா இடம்-எண்-பால் ஒட்டுக்களையும் முற்றல்லா எச்ச வடிவங்களையும் பெறாது வரும். இவ்வாறு குறை திரிபுற்ற வினைகள் குறை வினைகள் எனப்படும். பின்வருவன தற்கால தமிழில் உள்ள குறை வினைகள் ஆகும்: *மாட்டு, உள், இல், வேண்டு, போது, தகு, முடி, தெரி, புரி, பிடி, கிடை, வலி, பசி, கூசு, கச.*

1. *மாட்டு* என்ற வினை துணை வினையாக இட-எண்- பால் ஒட்டுக்கள் பெற்று முற்று வினையாக மட்டும் வரும் (*மாட்டேன்*, *மாட்டாள்*, *மாட்டான்*).

3. *உள்* என்ற வினை சொல் வினையாகவும் துணை வினையாகவும் வரும். இது முற்று வடிவிலும் ஒரு எச்ச வடிவிலும் வரும். அதாவது *உண்டு* என்ற முற்று வடிவிலும் உள்ள என்ற எச்ச வடிவிலும் வரும்.

4. *இல்*, *அல்* என்ற எதிர்மறை வினைகள் காலக் குறிப்பின்றி படர்க்கையிடப் பன்மை எண் மற்றும் அஃறிணைப்பால் என்பதற்குத் திரிபுற்று முறையே *இல்லை*, *அல்ல* என்ற வடிவங்களில் வரும். எதிர்மறைப் பெயரெச்ச வடிவங்களில் அதாவது *இல்லாமல்*, *அல்லாமல்* அல்லது *இன்றி*, *அன்றி* எனவும் வரும்.

5. *வேண்டு*, *போது*, *தரு* என்பன ஒரு முற்று வடிவில் எதிர்காலப் படர்க்கையிட ஒருமை என்பதற்குத் திரிபுற்று *வேண்டும்*, *போதும்*, *தகும்* என வரும். இவற்றிற்கு இணையான எதிர்மறை வடிவிலும், அதாவது *வேண்டாம்*, போதாது, *தகாது* என்றும் வரும். இவ்வினைகள் பின்வரும் வாக்கிய அமைப்பில் வரும்:

நான்காம் வேற்றுமைத்தொடர் + முதல் வேற்றுமைத்தொடர் + வினை

எ.கா.

குமாருக்குப் பணம் வேண்டும்

ராதைக்குத் தண்ணீர் வேண்டாம்

6. *முடி, தெரி, புரி, பிடி, கச* என்ற வினைகள் முற்றுப்பெறா வினைகள் வடிவிலும் முற்றுப்பெற்ற வினை வடிவிலும் மூன்று காலத்துக்கும் படர்க்கை இடத்துக்கும் ஒருமை பன்மை எண்ணுக்கும் அஃறிணை பாலுக்கும் திரிபுற்று வரும். *முடி* துணைவினையாகவும் பிறவினைகள் சொல் வினைகளாகவும் வரும். அவை பின்வரும் வாக்கிய ஒழுங்கமைப்பில் வரும்.

நான்காம் வேற்றுமைத் தொடர் + இரண்டாம் வேற்றுமைத்தொடர் + வினை

எ.கா.

ராதைக்குப் பாட்டு பிடிக்கும்

5.2.11.வினைத் திரிபாக்கம் (Conjugation)

வினைத் திரிபாக்கம் என்ற சொல்லிற்கு **Conjugation** என்பது ஆங்கி நிகரன். வினைத் திரிபாக்கம் என்பதை வினை + திரிபு + ஆக்கம் = வினைத் திரிபாக்கம் என்று வழங்கப்படுகிறது. வினைகள், காலம், எண், இடங்களுக்கு ஏற்ப மாறும் தன்மையின் அடிப்படையில் அவற்றை வகைப்படுத்துதல் வினைத் திரிபாக்கம் எனப்படும்.

வினையாற்று காலவகை (aspect)

வினையாற்று காலவகை என்பதன் ஆங்கில நிகரன் aspect என்பதாகும். வினையாற்று காலவகை என்பதை வினையாற்று + காலம் + வகை = வினையாற்று காலவகை என்று பிரித்து ஆயலாம். ஒரு வினை நிகழும் காலத்தின் தன்மையைக் கூறும் வினை வடிவம். இது வினையின் தொடர்ச்சியையும், முற்றுப்பெற்ற தன்மையையும் காட்டும். எடுத்துக்காட்டு

1) *அவன் படித்துக் கொண்டிருக்கிறான்.*
2) *அவள் படித்துக் கொண்டிருக்கிறாள்.*
3) *அவன் படித்துக் கொண்டிருப்பான்.*
4) *அவன் படித்திருப்பான்.*

முதல் மூன்றுன் தொடர் வினையாற்றுக் காலவகையைக் (continuous aspect) காட்டும். நான்காவது முற்று வினையாற்றுக் காலவகையைக் (perfect aspect) காட்டும்.

தமிழில் காலமும் வினையாற்றுவகையும் வினைநோக்கும் (காலமும் வினைப்பாங்கும் மனப்பாங்கும்)

வ. எண்	**வினைவடிவு மற்றும் பொருள்**		**எடுத்துக்காட்டு**
அ.1.	வினை + இறந்தகாலம் + இடம்-எண்-பால்	விகுதி இறந்தகாலம் குறிக்கும்.	அவன் கடிதம் எழுதினான்.
அ.2.1.	வினை+நிகழ்காலம்+இடம்-எண்-பால் விகுதி	நிகழ்காலம் குறிக்கும்.	அவன் இப்பேது கடிதம் எழுதுகிறான்.
அ.2.2.	வினை+நிகழ்காலம்+இடம்-எண்-பால்	விகுதி (அன்றாட) வழக்கத்தை வெளிப்படுத்தும்.	அவள் தினமும் இரவில் படுக்கும் முன் பல் துலக்குகிறாள். அவன் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராக வேலை செய்கிறான்.
அ.2.3.	வினை+நிகழ்காலம்+இடம்-எண்-பால் விகுதி	எதிர்காலம் மற்றும் முன்னறிவிப்பு குறிக்கும்.	உட்காருங்கள் நான் இதோ வருகிறேன். நான் சென்று வருகிறேன்.
அ.2.4.	வினை+நிகழ்காலம்+இடம்-எண்-பால் விகுதி	நிச்சயிக்கப்பட்ட எதிர்காலம் குறிக்கும்.	அவன் நாளை சென்னையிலிருந்து மும்பை செல்கிறான்.
அ.3.1.	வினை+எதிர்காலம்+இடம்-எண்-பால் விகுதி	எதிர்காலம் குறிக்கும்.	அவன் கடிதம் எழுதுவான். நான் கடிதம் எழுதுவேன்.
அ.3.1.	வினை+எதிர்காலம்+இடம்-எண்-பால் விகுதி	எதிர்காலம் மற்றும் விருப்பம் குறிக்கும். willingness	நான் நாளை திரைப்படம் பார்ப்பேன்.
அ.3.2.	வினை+எதிர்காலம்+இடம்-எண்-பால் விகுதி	எதிர்காலம் மற்றும் விருப்பம் (மென்மையான விருப்பத்துணிவு) குறிக்கும்.	நீ என்னை மன்னிப்பாயா? கடவுள் என்னை மன்னிப்பார்.

		[Willingness (weak volition)]	
அ.3.3	வினை+எதிர்காலம்+இடம்-எண்-பால் விகுதி	எதிர்காலம் மற்றும் விருப்பம் (இடைத்தரப்பட்ட விருப்பத்துணிவு) குறிக்கும். தன்மையிடம் பேசுபவராக வர விருப்பத்தைத் தெரிவிக்கும். [Intention on the part of the speaker only in 1st person (intermediate volition)]	நாங்கள் உங்களிடம் எங்கள் தீர்மானத்தைத் தெரிவிப்போம்.
அ.3.4.	வினை+எதிர்காலம்+இடம்-எண்-பால் விகுதி	எதிர்காலம் மற்றும் வலியுறுத்தல் குறிக்கும். (வலிமையான விருப்பத்துணிவு) [Insistence (strong volition)]	நீங்கள் சொல்வதை அவன் செய்வான்.
அ.3.5.	வினை+எதிர்காலம்+இடம்-எண்-பால் விகுதி	காலங்கரந்த முன்னறிவிப்பை வெளிப்படுத்தும். [Timeless prediction]	எண்ணை தண்ணீரில் மிதக்கும்.
அ.3.6.	வினை+எதிர்காலம்+இடம்-எண்-பால் விகுதி	எதிர்காலம் மற்றும் அன்றாட நிகழ்வைக் குறிப்பிடும்.முன்னறிவிக்கும். [Habitual prediction]	சந்தர்ப்பம் கொடுத்தால் அவன் (எப்பொழுதும்) மணிக்கணக்கில் பேசுவான்.
ஆ.1.	"செய்து"	வினைமுடிவுறு காலத்தை	அவள் சமையல்

	வினையெச்சம்+ஆயிற்று	வெளிப்படுத்தும். இயக்கு வினைகளுடன் மட்டும் சோ;ந்து வரும். வினையின் முடிபு எதிர்பாக்கப்பட்டதைக் குறிப்பிட்டு நிற்கும். [Past perfect aspect]	செய்தாயிற்று. (எதிர்பாத்தபடி நடத்தல்) நான் வாடகைக் கொடுத்தாயிற்று. (எதிர்பாத்தபடி நடத்தல்)
ஆ.2.	"செய்து" வினையெச்சம்+இரு+இறந்த காலம்+ இடம்-எண்-பால் விகுதி	நிலைப்பிலா/இருப்பிலா வினைகள் இறந்தகால முற்று வினையாற்று வகையைக் குறித்து நிற்கும். [Past perfect aspect]	கண்ணன் அந்தப் புத்தகத்தைப் படித்திருந்தான். எனவே கேட்ட கேள்விகளுக்கு விடையளிக்க முடிந்தது.
ஆ.2.1.	“செய்து" வினையெச்சம் + இரு + நிகழ்காலம் + இடம்-எண்-பால் விகுதி	முதன்மை வினை குறிப்பிடும் செயல் நிகழ்ந்துவிட்ட பிறகு ஏற்படும் நிலையைத் தொpவிக்கும். இருப்பிலா வினைகள் நிகழ்கால முற்று வினையாற்று வகையைக் குறித்து நிற்கும். [Present perfect aspect]	கண்ணன் அந்த புத்;தகத்தைப் படித்திருக்கிறான். குடை கிழிந்திருக்கிறது. பயிர் நன்றாக வளர்ந்திருக்கிறது.
ஆ.2.2.	”செய்து" வினையெச்சம் + இரு + நிகழ்காலம் + இடம்-எண்-பால் விகுதி	முதன்மை வினை குறிப்பிடும் செயல் அல்லது நிலை முன்னர் ஒரு முறையாவது நிகழ்ந்திருக்கிறது அல்லது ஏற்பட்டிருக்கிறது	நான் எத்தனையோதடவை ஊட்டிக்குச் சென்றிருக்கிறேன்.

		என்பதைக் குறிப்பிடும்.	
ஆ.2.3.	"செய்து" வினையெச்சம் + இரு + எதிர்காலம் + இடம்-எண்-பால் விகுதி	முதன்மை வினை குறிப்பிடும் செயல் நடக்கவில்லை என்றாலும் நடந்ததாக எடுத்துக்கொள்வதைக் குறிப்பிடும்.	நீ நேற்று வந்திருந்தால் பணம் கிடைத்திருக்கும். அவன் தேர்வுக்கு படிக்கவில்லை என்றால் தோற்றிருப்பான்.
ஆ.2.4.	செய்து" வினையெச்சம் + இரு + எதிர்காலம் + இடம்-எண்-பால் விகுதி	“பேசுபவரின் எதிர்பார்ப்பை அல்லது முன்னறிவிப்பைக் குறித்து நிற்கும். குறிப்பிட்ட முன்னறிவிப்பு [Specific prediction, prediction]	விளையாட்டு இந்நேரம் முடிந்திருக்கும். நேற்று மழை பெய்திருக்கும். அவன் இப்பொழுது படுக்கையிலிருந்து எழுந்திருப்பான்.
ஆ.2.5.	“செய்து” வினையெச்சம் + இரு+ நிகழ்காலம் + இடம்-எண்-பால் விகுதி	நிலைப்பு/இருப்பு வினைகளுடன் தொடர் வினையாற்றுவகையைக் குறித்து நிற்கும். [Progressive aspect]	கண்ணன் நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறான்.
ஆ.2.6.	“செய்து”வினையெச்சம் + இரு + நிகழ்காலம் + இடம்-எண்-பால் விகுதி	நிலைப்பின்மைக் கருதப்பட்டால் முற்று வினையாற்றுவகையைக் குறித்து நிற்கும்.	கண்ணன் இரவு பன்னிரண்டு மணிவரைப் படித்திருக்கிறான். எனவேதான் காலை எழவில்லை.
ஆ.2.7.	“செய்து” வினையெச்சம் + இரு + இறந்தகாலம் + இடம்-எண்-பால் விகுதி	தொடர்வினையாற்றுவ கையைக் குறிக்கும். நிலைப்பின்மை கருதப்பட்டால் முற்று வினையாற்றுவகையைக்	கண்ணன் (வெகுநேரம); நாற்காலியில் உட்கார்ந்திருந்தான்.

		குறித்து நிற்கும்.	
ஆ.2.7.	எதிர்மறை வினையெச்சம் + இரு + காலம் + இடம்-எண்-பால் விகுதி	தொடர்வினையாற்றுவ கையை அல்லது தொடர் முற்று வினையாற்றுவகையைக் குறித்து நிற்கும். [Progressive aspect, Perfect progressive aspect]	கண்ணன் வேலை செய்யாமல் இருக்கிறான். கண்ணன் ஒரு மாதமாக ஒரு கடிதமும் எழுதாமல் இருக்கிறான்.
ஆ.3.1.	"செய்து" வினையெச்சம் + விடு + காலம் + இடம்-எண்-பால் விகுதி	பேசுபவரை நோக்கிய அல்லது பிறரை நோக்கிய செயலின் முடிவை உறுதிப்படுத்தவோ நிச்சயப்படுத்தவோ செய்யும்.	ஆறுமாதத்தில் குழந்தை நன்றாக வளர்ந்து விட்டது. உட்காருங்கள் அவர் வந்து விடுவார்.
ஆ.3.2.	"செய்து" வினையெச்சம் + விடு + இறந்த காலம் + இடம்-எண்-பால் விகுதி	ஒரு செயலோ நிகழ்வோ ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவுற்றதை வெளிப்படுத்தும். முற்று வினையாற்றுவகை. [Past perfect aspect]	கண்ணன் இந்த புத்தகத்தைப் படித்து விட்டான். கண்ணன் வீட்டிற்குப் போய் விட்டான்.
ஆ.3.3.	"செய்து" வினையெச்சம் + விடு + காலம் + இடம்-எண்-பால் விகுதி	முற்று வினையாற்று வகையை வெளிப்படுத்துவதோடு பேசுபவர் முதன்மை வினையின் நிகழ்வை எதிர்பாராதையும் வெளிப்படுத்தும்.	கண்ணன் உமாவைப் பார்த்து விட்டான் (எதிர்பாராமல்)

ஆ.3.4.	“செய்து” வினையெச்சம் + விடு + எதிர்காலம் + இடம்-எண்-பால் விகுதி	செயலோ நிகழ்வோ நிறைவுறுவதை வெளிப்படுத்தும். பேசுபவர் செயலோ நிகழ்வோ நிச்சயமாக நிகழ்வுறும் என்பதை வெளிப்படுத்தப் பயன்படுத்தப்படும். [Definiteness of the occurrence]	கண்ணன் தேர்வில் தோற்று விடுவான்.
ஆ.3.5.	“செய்து” வினையெச்சம் + விட்டு + வினை+ காலம் + இடம்-எண்-பால் விகுதி	ஒரு நிகழ்வு முடிந்தபின்னர் அடுத்த நிகழ்வு நிகழ்வுறுவதை வெளிப்படுத்தும். கண்ணன் படித்துவிட்டு தூங்கினான்.	
ஆ.4.	“செய்து” வினையெச்சம் + முடி + காலம் + இடம்-எண்-பால் விகுதி	முதன்மை வினையின் செயல் நிறைவுறுவதைக் குறித்து நிற்கும்.	அவள் கடிதம் எழுதி முடித்து விட்டாள். அவன் இன்று இரவுக்குள் அந்த வேலையைச் செய்து முடிப்பான்.
ஆ.5.1.	”செய்து” வினையெச்சம் + கொண்டிரு + நிகழ்காலம் + இடம்-எண்-பால் விகுதி	முதன்மை வினை நிலைப்பையோ நிlைலப்பின்மையோ குறித்து வந்தாலும் தொடர் வினையாற்றுவகையை வெளிப்படுத்தும். [Present progressive]	கண்ணன் அறையில் தூங்கிக் கொண்டிருக்கிறான்.
ஆ.5.2.	“செய்து” வினையெச்சம் +	[Past progressive aspect]	நேற்று நான் வந்தபோது

	கொண்டிரு+ இறந்தகாலம் + இடம்-எண்-பால் விகுதி		கண்ணன் அறையில் தூங்கிக் கொண்டிருந்தான்.
ஆ.5.3.	"செய்து" வினையெச்சம் + கொண்டிரு+ எதிர்காலம் + இடம்-எண்-பால் விகுதி	செயல் வழக்கமாக நிகழ்வதையோ முறையாக நிகழ்வதையோ பேசுபவர் நினைப்பதையோ வெளிப்படுத்தும். [Future progressive aspect]	காலையில் கண்ணன் படித்துக் கொண்டிருப்பான்.
ஆ.6.	"செய்து" வினை + வா+ காலம் + இடம்-எண்-பால் விகுதி	ஒரு செயல் கடந்த காலத்தில் அல்லது அதற்கு முன் தொடங்கப்பட்டுக் குறிப்பிட்ட கால எல்லைவரை தொடர்வதையும் அல்லது இனியும் தொடரும் என்பதையும் காட்டும். மேலும் ஒரு செயல் பன்முறை நிகழ்வதையோ தொடர்ந்து நிகழ்வதையோ வழக்கமாக நிகழ்வதையோ வெளிப்படுத்தும். [Iterrative, Durative, Habitual]	அவன் தந்தை சொல்படி கேட்டு வந்தான். நான் நீண்ட நாட்களாகவே இந்தி படித்து வருகிறேன். அவர் சொல்ல அவன் மொழிபெயர்த்து வந்தான். அவள் தினமும் இறைவனை வழிபட்டு வந்தாள்.
ஆ.7.	"செய்து" வினை +	ஒரு செயல் தொடர்ந்து	அவன் குறட்பாக்களைத்

	கொண்டுவா + காலம்+ இடம்-எண்-பால் விகுதி	நிகழ்வதை வெளிப்படுத்தும். Iterrative,	தப்பில்லாமல் சொல்லிக்கொண்டுவந்தான்.
ஆ.8.	செய்து" வினை + கிட+ காலம் + இடம்-எண்-பால் விகுதி	பேசுபருக்கு முதன்மை வினை காட்டும் நிகழ்வின் மீதுள்ள எதிரிடையான மனப்பாங்கை வெளிப்படுத்தும்.	கடை பூட்டிக் கிடந்தது. பூக்கள் கொட்டிக் கிடந்தன.
ஆ.9.	செய்து" வினை + கிழி+ காலம் + இடம்-எண்-பால் விகுதி	முதன்மை வினை குறிக்கும் நிகழ்வு நிகழ்வுறத் தக்கதல்ல அல்லது நிகழவுற இயலாதது என்பதை வெளிப்டுத்துவதோடு பேசுபவருக்கு எழுவாய் மீதிருந்த எதிரிடையான மனப்பாங்கையும் வெளிப்படுத்தும்.	அவன் அந்த வேலையைச் செய்து கிழிப்பான்.
ஆ.9.	செய்து" வினை + தள்ளு+ காலம் + இடம்-எண்-பால் விகுதி	முதன்மை வினைக் குறிப்பிடும் நிகழ்வு வேகத்துடன் நிறைவேறுவதைத் தெளிவுபடுத்தும்.	அவள் பல குழந்தைகள் பெற்;றுத் தள்ளினாள். அவன் பக்கம் பக்கமாக எழுதித் தள்ளினாள்.
ஆ.10.	செய்து" வினை + தீர் + காலம் + இடம்-எண்-பால் விகுதி	எழுவாய் முதன்மைச் செயலைச் செய்து முடித்து விட்டதையும் அதனால் உணர்ச்சிகளுக்கு ஒரு வடிகால் கிடைத்தது	அவன் அவளைத் திட்டித் தீர்த்தான்.

		என்பதையும் உணர்த்தும்.	
ஆ.11.	செய்து" வினை + தொலை+ காலம் + இடம்-எண்-பால் விகுதி	பேசுபவருக்கு அல்லது எழுவாய்க்கு முதன்மை வினை காட்டும் நிகழ்வின்மேல்லிருந்த ஆழ்ந்த வெறுப்பைப் புலப்படுத்தும்.	வழவன் தன் மாட்டை விற்றுத் தொலைத்தான்.
ஆ.12.	செய்து" வினை + போ + காலம் + இடம்-எண்-பால் விகுதி	ஒரு நிலை மாற்றத்தை குறிப்பிடும். அந்நிலை மாற்றம் வரவேற்கத் தக்கதல்ல, மோசமானது, விரும்பத்தகாதது, எதிர்பாராதது என்பது போன்ற மனப்பாங்கை வெளிப்படுத்தும்.	அவள் தோற்றுப் போனாள். சட்டை கிழிந்து போயிற்று.
ஆ.13.	செய்து" வினை + போடு + காலம் + இடம்-எண்-பால் விகுதி	எழுவாய்க்கு முதன்மை நிகழ்வின் மீதிருந்த உதாசீனத்தை வெளிப்படுத்தும் வகையில் பேசுபவரால் பயன்படுத்தப்படும்.	அவள் அவனைக் கட்டிப் போட்டாள். அவன் கதவை திறந்து போட்டான்.
ஆ.14.	செய்து" வினை + அழு+ காலம் + இடம்-எண்-பால் விகுதி	முதன்மை வினைச் செயல்பாட்டிலிருந்த வெறுப்பபை வெளிப்படுத்தும்.	அவள் அவனுக்கு பணம் கொடுத்து அழுதாள்.
ஆ.15.	"செய்து" வினை + கொடு + காலம் + இடம்-எண்-பால் விகுதி	ஒருவர் நன்மைக்காகச் செயல்படுவதை உணர்த்தும். [Benefaction]	அவள் கண்ணனுக்கு வேலை செய்து கொடுத்தாள்.
ஆ.16.1	செய்து" வினை + கொள் +	செயல் தானாக	கதவு தானே திறந்து

	காலம் + இடம்-எண்-பால் விகுதி	நிகழ்வதையோ செயலில் எழுவாய்க்கிருந்த விருப்பத்தையோ செயலின் விளைவு எழுவாய்க்குப் போய்சேருவதையோ உணர்த்தும். Volition, willingness, reflexive	கொண்டது. கண்ணன் தன் குழந்தையை தன் மடியில் இருத்திக்கொண்டான். கண்ணன் தன்னைத்தானே மெச்சிக்கொண்டான்.
ஆ.16.2.	செய்து" வினை + கொண்டு + வினை + காலம் + இடம்-எண்-பால் விகுதி	செயல் உடன்நிகழ்வு நிலையைக் குறிக்கும்.	அவள் பாடிக்கொண்டு ஆடினாள்.
ஆ.17.	செய்து" வினை + பார் + காலம் + இடம்-எண்-பால் விகுதி	முயற்சியை வெளிப்படுத்தும்.	அவள் படம் வரைந்து பார்த்தாள்.
ஆ.18.	"செய்து" வினை + வை + காலம்+ இடம்-எண்-பால் விகுதி	ஒன்றை எதிர்பார்த்து செயல்படுவதையோ ஒருவர் நன்மைக்காக செயல்படுவதையோ உணர்த்தும். [Anticipated consequence]	அவள் காற்றுக்காகக் கதவைத்திறந்து வைத்தாள். அவள் அவனுக்கு வேண்டி சோறு சமைத்து வைத்தாள்.
இ.1.	"செய்ய" வினையெச்சம் இரு+நிகழ்காலம்+ இடம்-எண்-பால் விகுதி	ஒரு செயலைச் செய்யும் எண்ணம் அல்லது விருப்பம் இருப்பதை வெளிப்படுத்தும்.	நாங்கள் அடுத்தமாதம் மும்பை போக இருக்கிறோம். பேராசிரியர் வெளிநாடுகளுக்குப் போக இருக்கிறார்.
இ.2.1.	"செய்ய" வினையெச்சம் +வேண்டும்	செயல் நிகழ்வதில் பேசுபவரின் விருப்பத்தை	அவனுக்கு அவசரமாக வீட்டுக்குப்

		அல்லது செயல் நிகழ்வதன் கட்டாயத்தை வெளிப்படுத்தும். Obligation: internal obligation	போகவேண்டும்.
இ.2.2.	”செய்ய" வினையெச்சம் +வேண்டும்	கடமையைக்குறித்து நிற்கும். desideration: duty	நான் என் குழந்தைகளுக்கு ஒரு நல்வாழ்க்கை அமைத்துக் கொடுக்க வேண்டும்.
இ.3.	“செய்ய" வினையெச்சம் +வேண்டும்	புத்திமதியைக் குறித்து நிற்கும். desideration: advice	அவன் தினமும் காலையில் எழுந்து உடற்பயிற்சி செய்ய வேண்டும்.
	“செய்யது" வினையெச்சம் +இருக்க+ வேண்டும்	முன்னறிவித்தல். Prediction: specific prediction	விளையாட்டு இன்நேரம் முடிந்திருக்க வேண்டும்.
இ.4.	“செய்ய" வினையெச்சம் +வேண்டாம்	முதன்மைச் செயல் நிகழக்கூடாது என்பதைக் குறித்து நிற்கும். Obligation: negation of external obligation	நீ நாளை முதல் கல்லூரிக்குப் போக வேண்டாம்.
இ.5.	“செய்யது" வினையெச்சம் + இருக்க+ வேண்டாம்.	முதன்மை வினை உணர்த்தும் செயலின் தேவையின்மையை வெளிப்படுத்தும். Logical necessity	அவன் அவளுடன் சண்டைபோட்டிருக்க வேண்டாம். அவள் சென்னைக்குப் போயிருக்க வேண்டாம்.
இ.6.	செய்ய" வினையெச்சம் + வேண்டிவரும்	முதன்மை வினை உணர்த்தும் செயலின் கட்டாயத்தை வெளிப்படுத்தும். Obligation: external	அவனுக்கு நாளை மந்திரியைச் சந்திக்க வேண்டிவரும்.

		obligation	
இ.7.	செய்ய" வினையெச்சம் + வேண்டி இருக்கிறது	செயல் நிகழ்வதின் கட்டாயத்தை வெளிப்படுத்தும். Obligation: external obligation	அவனுக்கு நாளை அமைச்சரைச் சந்திக்க வேண்டி இருக்கிறது.
இ.8.	”செய்ய" வினையெச்சம் + கூடும்	செயல் நிகழ்வதில் பேசுபவருக்குள்ள நம்பிக்கையை அல்லது நிகழ்வதன் சூழ்நிலைச் சாத்தியத்தை வெளிப்படுத்தும். Possibility: circumstantial possibility	அவள் நாளை வரக் கூடும். மழை பெய்யக் கூடும்.
இ.9.	“செய்து" வினையெச்சம் + இருக்கக் + கூடும்	செயல் நிகழ்வதில் பேசுபவருக்குள்ள நம்பிக்கையை அல்லது நிகழ்வதன் சூழ்நிலைச் சாத்தியத்தை வெளிப்படுத்தும்.	அவர் லஞ்சம் வாங்கியிருக்கக் கூடும். அவள் நேற்றே வந்திருக்கக் கூடும்.
இ.10.1.	“செய்ய" வினையெச்சம் + கூடாது	முதன்மைச் செயல் நிகழ்வதில் பேசுபவரின் விருப்பமின்மையை அல்லது அச்செயல் நிகழக்கூடாததன் கட்டாயத்தை வெளிப்படுத்தும்.	அவன் சென்னை போகக் கூடாது.
இ.10.2.	“செய்ய" வினையெச்சம் + கூடாது	புத்திமதியையோ விதியையோ கட்டாயத்தையோ	இரவில் அதிக நேரம் கண்விழித்துப் படிக்கக் கூடாது.

		அனுமதியின்மையையோ வெளிப்படுத்தும். Negative desideration, negative obligation or negative permission.	சாலையின் நடுவில் நடக்கக் கூடாது. இங்கு குளத்தில் குளிக்கக்கூடாது.
இ.11.1.	“செய்ய" வினையெச்சம் + முடிந்தது /முடிகிறது/முடியும்/இயலும்	நெறிபடுத்தும் வினை. செயல்படுவர் முதன்மை வினைக் குறிப்பிடும் செயல் செய்ய வல்லமை உள்ளவர் என்பதைக் குறிப்பிடும். Ability	என்னால் இப்பொழுது புத்தகம் படிக்க முடிகிறது. அவனால் ஆங்கிலம் பேச முடியும்/இயலும்.
இ.11.2.	“செய்ய" வினையெச்சம் + முடியும்	சூழ்நிலைச் சாத்தியத்தைக் குறிப்பிடும். Possibility: circumstantial possibility	இந்த சாலையில் வாகனங்கள் செல்ல முடியும்.
இ.12.	“செய்ய" வினையெச்சம் + முடியாது/இயலாது	முதன்மை வினைக் குறிப்பிடும் செயல் செய்ய இயலாமையை வெளிப்டுத்தும்.எழுவாய் பேசுபவராய் வருகையில் முதன்மைச் செயலில் எழுவாயின் விருப்பமின்மையும் காட்டும். Inability	அவனால் ஆங்கிலம் பேச முடியாது/இயலாது. என்னால் இங்கு பேச முடியாது/இயலாது.
இ.13.1.	“செய்ய" வினையெச்சம் + அட்டும்	வியங்கோளை வெளிப்படுத்தும். Hortative: third person	கண்ணன் அங்கே போகட்டும். அவன் அதிகாலையில்

		hortative. Optative: third person optative	எழுந்து படிக்கட்டும். அவன் விரைவில் குணமாகட்டும்.
இ.13.2.	“செய்ய" வினையெச்சம் + அட்டும் –ஆ	தன்மை மற்றும் படர்க்கை இடம் எழுவாயாய் வர கேள்வி வடிவில் உத்தவு எதிர்பார்பை குறிக்கும். Desideration	நான் உள்ளே வரட்டுமா? அவன் வெளியே போகட்டுமா?
இ.14.	“செய்ய" வினையெச்சம் + போ + காலம் + இடம்-எண்-பால் விகுதி	முதன்மை வினை உணர்த்தும் செயல் நடக்கவிருப்பதை உணர்த்தும். Intention	கண்ணன் உமாவை மணக்கப் போகிறான்.
இ.15.	“செய்ய" வினையெச்சம் + வா + நிகழ்காலம் + இடம்-எண்-பால் விகுதி	Intention (with restricted set of verbs)	கண்ணன் உமாவை கேட்க வருகிறான்.
இ.15	“செய்ய" வினையெச்சம் + படு+ காலம் + இடம்-எண்-பால் விகுதி	Passive	அவன் கண்ணனால் கொல்லப்பட்டான்.
இ.16.	“செய்ய" வினையெச்சம் + வை+ காலம் + இடம்-எண்-பால் விகுதி	Causation	அவள் தன் குழந்தையைத் தூங்க வைத்தாள்.
இ.17.	செய்ய" வினையெச்சம் + செய்/பண்ணு+ காலம் + இடம்-எண்-பால் விகுதி	Causation	அவன் தன் வண்டியை ஓடச் செய்தான்.
இ.18.	“செய்ய" வினையெச்சம் + பார்+ காலம் + இடம்-எண்-பால் விகுதி	Assessment	அவள் புதிய சேலையை உடுத்திப் பார்த்தாள்.
இ.19.	“செய்ய" வினையெச்சம் +	Negation	அவள் தன் வீட்டிற்குப்

	இல்லை		போகவில்லை.
இ.20.	செய்ய" வினையெச்சம் + மாட்டு + இடம்-எண்-பால் விகுதி	அன்றாட வழக்கத்தை குறிப்பிடும். முதன்மைச் செயலை மறுக்கும். Negation	அவள் வேலைக்குப் போகமாட்டாள். அவன் படிக்கமாட்டான்.
ஈ.1.	"செய்யல்" வினைப்பெயர் + ஆகு + இடம்-எண்-பால் விகுதி	செயல் தொடக்க வினையாற்று வகையை வெளிப்படுத்தும். Inceptive aspect	உமா பாடலானாள்.
ஈ.2.1.	செய்யல்" வினைப்பெயர் + ஆம்	"எதிர்காலத்தை வெளிபடுத்துவதோடு சூழ்நிலை அல்லது ஊகம் அடிப்படையிலான சாத்தியத்தை வெளிப்படுத்தும். [Inherent future reference, circumstantial possibility, conjectural possibility]	அவன் மலையில் ஏறலாம். அவள் இப்பொழுது வீட்டிற்குச் செல்லலாம்.
	"செய்யல்" வினைப்பெயர் + ஆம்	உத்தரவு தருதலை வெளிப்படுத்தும். Permission	இக்குளத்தில் குளிக்கலாம். இங்கு சாலையைக் கடக்கலாம்.
ஈ.2.2.	"செய்யல்" வினைப்பெயர் + ஆம்	வற்புறுத்தலையோ பகுதி சட்ட விதியையோ குறித்து நிற்கும்.	நான் சொல்லுகிறபடி செய்யலாம். அவன் தண்டிக்கப் படலாம்.
	"செய்யல்" வினைப்பெயர் + ஆம்	பேசுபவர் முன்னிலையிடமாகவோ படர்க்கையிடமாகவோ வர விருப்பத்தை	அவன் வங்கியில் பணம் பெறலாம். நீ விரும்புவது போல் செய்யலாம்.

		வெளிப்படுத்தும்.	
ஈ.3.	“செய்யல்” வினைப்பெயர் + ஆகாது	முதன்மை வினை நிகழக்கூடாமையை வலியுறுத்தவோ உத்தரவின்மையை வெளிப்படுத்தவோ செய்யும். Obligation: negative obligation Negation of permission	மது அருந்தல் ஆகாது. இந்த அறையில் புகைபிடிக்கலாகாது.
உ.1.	"செய்தது/செய்கிறது/செய்வது" வினைப்பெயர் + இல்லை	முதன்மை வினைகாட்டும் செயல் இதுவரை நிகழ்ந்ததில்லை என்பதை வெளிப்படுத்தும்.	நான் மும்பை போனதில்லை. அவள் மேடையில் பாடினதில்லை.
உ.2.	"செய்கிறது/செய்வது" வினைப்பெயர் + இல்லை		நான் இப்போது மேடையில் பாடுவதில்லை. அவள் தற்போது கல்லூரிக்குச் செல்கிறதில்லை.

5.3. சொல்லாக்கம்

கூட்டாக்கம்

கூட்டாக்கங்களை மரப்பிலக்கணப்படி தொகையாக்கம் எனக் கூறலாம். பொதுவாகக் கூட்டாக்கங்களை அவை வாக்கியத்தில் பங்குபெறும் செயற்பாடுகள் அடிப்படையில் பெயர்கள், வினைகள், பெயரடைகள், வினையடைகள் என வகைப்படுத்தல்லாம். கூட்டுகளின் உள்வகைப்பாடுகள் பல வழிகளில் செய்யப்படுகின்றன:

- கூட்டுகளை உருவாக்கப் பயன்படுத்தப்படும் சொற்களின் வடிவ வகுப்புகளின் அடிப்படையில்
- பொருண்மை வகுப்புகள் அடிப்படையில்

- கூட்டுகளாக வரும் சொற்களை இணைப்பவைகளாகப் கருத்தப்படும் சூழ்நிலை இயக்கிகள் அடிப்படையில்
- ஆழ்நிலை தொடரியல் செயற்பாடுகள் அடிப்படையில்.
- உருப ஒலியனியல் அடிப்படையில்
- மற்றும் பிற வழிகளில்

தமிழில் பெரும்பான்மையான கூட்டாக்கங்கள் பெயர்களாகும். அதற்கு அடுத்தபடியாக வினைகள் அமையும். இரண்டிற்கு அதிகமான சொற்களைக் கொண்ட கூட்டாட்டங்களை ஈரிணையான கூட்டாங்களாகப் பகுப்பாய்வு செய்யலாம்.

கூட்டுப் பெயர்கள்

பெயர் + பெயர்

உள்வட்டக் கூட்டுகள்

பொதுப் பெயர் + பொதுப் பெயர்

திரைப் படம், பகல் கனவு, இதய நோய்

சிறப்புப் பெயர் + பொதுப் பெயர்

அண்ணாநடை, காந்திவழி

நேரியயைபு கூட்டுகள்

பெண் வழக்கறிஞர், பெண் மருத்துவர்

உம்மைத் தொகைக் கூட்டுகள்

மரஞ்செடிகொடிகள், புல்பூண்டுகள், ஆடுமாடுகள்

வெளிவட்டக் கூட்டுகள்

கால்நடை, பள்ளிக்கூடம், வேலைப்பாடு.

வினை + பெயர் > பெயர்

பெயர் + வினை > பெயர்

இடைச் சொல் + பெயர்

வினையடை + பெயர் > பெயர்

தொடர் கூட்டுகள்

பாறாங்கல், கூழாங்கல், பழிக்குப் பழி, ஆயிரத்தில் ஒருவன், முடிசூடா மன்னன்

இரட்டு கூட்டுகள்

அரிசிகிரிசி, புலிகிலி, காப்பிகீப்பி

கூட்டுவினைகள்

பெயர் + வினை > வினை

வெள்ளையடி, போராடு

வினை+வினை > வினை

ஒப்புக்கொள், சொல்லிக்கொடு, கண்டுபிடி

ஒட்டாக்கம்

முன்னொட்டாக்கம்

அசுத்தம், அநியாயம், அசாதாரணம்

பின்னொட்டாகம்

1.பெயராக்கம்

1.1 பெயரிலிருந்து பெயர்

பெயர்+ கார்-அர்/அன்//இ

வேலைக்காரர், வேலைக்காரன், வேலைக்காரி

1.2. வினையிலிருந்து பெயர்

தொழிற் பெயர்

ஓட்டம், வரவு

வினையாலணையும் பெயர்

படித்தவன், படிக்காதவன்

மாற்றம்

ஒரு சொல் வகுப்பு எந்தவித வடிவ மாற்றமும் அடையாமல் வேறு ஒரு சொல் வகுப்பாக மாற்றம் அடைவது மாற்றமாகும்.

அடி, உதை,

பின்னாக்கம் (Back-formation)

ஆங்கிலத்தில் editor என்ற பெயரிலிருந்து edit என்ற வினையும் contraception என்ற பெயரிலிருந்து contracept என்ற வினையும் ஆக்கப் பெறுவதைப் பின்னாக்கம் (back-formation) என்பர். தமிழில் இத்தகைய பின்னக்கங்கள் இல்லையென்றாலும் சமஸ்கிருதத்திலிருந்து கடன்வாங்கப்பட்ட சில பெயர்களிலிருந்து வினைகள் ஆக்கப்பெறுவது ஒருவித பின்னாக்கத்தை வெளிப்படுத்தும்.

எ.கா.

விசாரணை > விசாரி

போதனை > போதி

கத்திரிப்பாக்கம் (Clipping)

ஒரு அகராதிச் சொல் (தனி அல்லது கலப்பு) குறுகி அதே சமயம் அதன் பொருண்மையும் வடிவ வகுப்பும் மாறாது வருவது கத்திரிப்பாக்கமாகும்.

ஆங்கில எடுத்துக்காட்டு:

mimeograph> mimeo, pornography> porno, professor> prof

தமிழில் இம்மாதிரி கத்திரிப்பாக்கங்கள் இல்லை என்றாலும் எளிமை கருதிய பல எளிமையாக்கங்களைக் காணலாம்.

1. ஆட்சியாளர் > ஆட்சியர், முதலமைச்சர் > முதல்வர், செயலாளர் > செயலர், உயிரினங்கள் > உயிரிகள்

2. புதுக்கோட்டை > புதுவை, புதுச்சேரி > புதுவை, திருநெல்வேலி > நெல்லை, கோயம்புத்தூர் > கோவை.

கலப்பாக்கம்

ஒரு சொல்லின் ஒரு பாகமும் மற்றொரு சொல்லின் ஒரு பாகமும் சேர்ந்து ஒரே சொல்லாக ஆக்கம் பெறுவது கலப்பாக்கமாகும்.

ஆங்கில எடுத்துகாட்டு:

baloon + parachute > balute, break-fast + lunch > brunch

தமிழில் இத்தகைய கலப்பாக்கம் இல்லை. ஆனால் ஆங்கிலம் அல்லது சமஸ்கிருதச் சொல்லும் தமிழ்ச் சொல்லும்/விகுதியும் சேர்ந்து ஆக்கப் பெறும் கடன் கலப்புகள் தமிழில் காணப்படுகின்றன.

எ.கா.

ரயில் நிலையம், போலீசார், பிரதமர்

தலைப்பெழுத்தனாக்கம் (Acronym)

ஒரு தலைப்பு அல்லது தொடரில் வரும் சொற்களின் முதல் எழுத்துகளைக் கொண்டு ஆக்கப்பெறும் சொல்லைத் தலைப்பெழுத்தன் என்பர்.

எ.கா. திராவிட முன்னேற்றக் கழகம் > திமுக, ஐக்கிய நாடுகள் > ஐநா, கிறிஸ்து பிறந்த பின் > கி.பி.

ஆங்கிலத் தலை பெழுத்தன்கள் தமிழிலும் பயன் படுத்தப்படுகின்றன.

எ.கா. யுனஸ்கோ, டிவி, கிமீ

தமிழில் சொல்லாக்கங்களில் மிகவும் பரவலானவை கூட்டாக்கமும் பின்னொட்டாக்கமும் ஆகும். பல புதிய சொற்கள் கூட்டாக்கங்களால் பெறப்படுகின்றன. பெயர் + பெயர் கூட்டக்கங்கள் விளைவாகமாகும். புதிய வினைகள் பெயர்+ வினை(யாக்கி) என்ற கூட்டக்கத்தால் பெறப்படுகின்றன. பல நுண்மைப் பெயராக்கங்களுக்குப் வினையடிகள் காரணமாகின்றன.

வினையடையாக்கி (adverbializer)

வினையடையாக்கி என்பதன் ஆங்கில நிகரன் adverbializer என்பதாகும். வினையடையாக்கி என்பதை வினையடை + ஆக்கி = வினையடையாக்கி என்று பிரிந்த்து ஆயலாம். ஒரு பெயரை வினையடையாக மாற்றப் பயன்படுத்தப்படும் ஒட்டு வினையடையாக்கி எனப்படும். எடுத்துக்காட்டு: வேகமாக (வேகம் + ஆக) என்பதில் ஆக என்ற பின்னொட்டு வினையடை ஆக்கியாகும் ஆங்கிலத்தில் quckly (quick+ly) என்பதிலுள்ள -ly வினையடை ஆக்கியாகும்.

வினையடை ஆக்கியாகும் பெயரடை ஆக்கி (adjectivalizer)

adjectivalizer என்ற சொல்லுக்கு நிகரான சொல் பெயரடை + ஆக்கி > பெயரடை ஆக்கி என்பதாகும். எடுத்துக்காட்டாக அழகான (அழகு + ஆன) என்பதில் -ஆன என்ற பின்னொட்டு பெயரடை ஆக்கியாகும். .

பெயராக்கம் (formation of nouns)

தமிழ்ப் பெயர்களைப் பலவிதமாகப் பகுப்பர். பெயர்ச் சொற்களை ஆய்கையில் சில சொற்கள் பிற சொற்களிலிருந்து ஆக்கமுற்றவையாகவும் சில சொற்கள் பிற சொற்களிலிருந்து ஆக்கப்பெறாதவையாகவும் தோன்றும். ஆக்கமுற்ற சொற்களை அவை எச்சொற்களிலிருந்து ஆக்கமுற்றவை என்பதன் அடிப்படையில் பின்வருமாறு பகுக்கலாம்.

1. பெயரிலிருந்து ஆக்கப்பெற்ற பெயர்ச் சொற்கள்

2. வினையிலிருந்து ஆக்கப்பெற்ற பெயர்ச் சொற்கள்

3. பெயரடையிலிருந்து ஆக்கப்பெற்ற பெயர்ச் சொற்கள்

4. பிற சொற்கூறுகளிலிருந்து ஆக்கப்பெற்ற பெயர்ச் சொற்கள் சொற்கள் பலவிதமாக ஆக்கப்பெறுவதை சொல்லாக்க வகைப்பாடு என்ற கட்டுரையில் விவரிக்கப்பட்டுள்ளது. தமிழ்ச் சொற்களின் ஆக்கங்களை முக்கியமாக இருவகையான ஆக்கங்களாகக் காணலாம்.

ஒட்டாக்கம்

நல்ல + அவன் > நல்லவன் படி + ப்பு > படிப்பு

1. கூட்டாக்கம்

மின் + விசறி > மின்விசறி

பனி + கட்டி > பனிக்கட்டி

ஒட்டாக்கத்தை முன்னொட்டாக்கம் (எ.கா. அ+ சாதாரணம்> அசாதாரணம்), பின்னொட்டாக்கம் (எ.கா. பெரிய + து> பெரியது) என ஒட்டு வருமிடம் கருதி இரண்டாகப் பகுக்கலாம். இதில் பின்னொட்டாக்கம் தான் தமிழில் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றது.

பெயரிலிருந்து பெயர்

பல ஒட்டுகளும் கட்டுருபன்களும் பெயரிலிருந்து பெயர் பெறும் ஆக்கத்திற்குத் துணை புரிகின்றன. ஒட்டுக்களுக்கும் விகுதியாக வரும் கட்டுருபன்களுக்ககும் செயற்பாடு அளவில் வேறுபாடு இல்லாத காரணத்தால் இரண்டையும் ஒன்றெனக் கொள்ள இயலும். பின்வரும் ஒட்டுக்களும் கட்டுருபன்களும் முக்கியமான பெயராக்கிகளாகும்.

பின்னொட்டாக்கம் பல ஒட்டுக்கள் பெயர் முன் வந்து பெயராக்கம் செய்ய வல்லன. அவற்றுள் சில ஒட்டுக்கள் பெயருக்கென்றே உரியன, சில பெயர் அல்லாத பிற சொல் முன் வந்தும் பெயராக்கம் செய்வன.

காரன்/காரி/காரர்

காரன், காரி, காரர் என்பன பெயருடன் சேர்ந்து பெயராக்கம் செய்யும் விகுதிகளாகும். ஒரு குழுவில் படும் இம்மூன்று விகுதிகளும் முறையே ஆண்பால், பெண்பால், இருபாற்பொதுப் பெயர்களை ஆக்க வந்த மிகுந்த விளைவாக்கம் உள்ள பெயராக்கிகளாகும். இவை 'நபர்' என்ற பொருளில் இது சோ;ந்து வரும் பெயருக்கு ஏற்ப உடைமை, உரிமை, உறவு அல்லது தொடர்பு, தொழில் அல்லது ஆகுதல் ஆகியவற்றைக் குறிப்பீடு செய்யும் (மறைமலை 1984:83).

வீடு + காரர் > வீட்டுக்காரர் (உடைமை)

கட்சி + காரர் > கட்சிக்காரர் (உறவு அல்லது தொடர்பு)

காவல் + காரர் > காவற்காரர் (தொழில்)

ஆளர்/ஆள்/ஆளி ஆளர், ஆள், ஆளி

என்ற விகுதிகளும் முன்னர் கண்ட மூவிகுதிகள் போன்று பெயர்களுடன் சோ;ந்து பெயராக்கம் செய்ய வல்லன. ஆனால் இவை மூன்றுமே இருபாற் பொதுப்பெயர்களை ஆக்க வல்லன. இவை சோ;ந்து வரும் பெயருக்குத் தகுந்தவாறு செய்தல், செயலாற்றல், பணியாற்றல், கையாளுதல், இயக்குதல், உரிமை, உடைமை இவற்றைக் குறிப்பீடு செய்யும்.

செயல் + ஆளர் > செயலாளர்

கண்காணிப்பு + ஆளர் > கண்காணிப்பாளர்

காசு + ஆளர் > காசாளர்

பொருள் + ஆளர் > பொருளாளர்

பொறி + ஆளர் > பொறியாளர்

உரிமை + ஆளர் > உரிமையாளர்

பண்பு + ஆளர் > பண்பாளர்

பெரும்பாலும் *ஆளர்* உயர்நிலைப் பணியாளர்களைக் குறிக்கவும் *ஆள்* தாழ்நிலைப் பணியாளர்களைக் குறிக்கவும் பயன்படுகின்றன.

கை + ஆள் > கையாள்

காவல் + ஆள் > காவலாள்

ஒரே பெயருடன் *ஆளர்*, *ஆள்* விகுதிகள் சேர்க்கப்பட்டாலும் *ஆள்* தாழ்நிலைப் பணியாளர்களை குறிக்கவும் *ஆளர்* உயர்நிலைப் பணியாளர்களைக் குறிக்கவும் பயன்படுத்தப்படுகின்றன.

பெயர் + ஆளர் **பெயர் + ஆள்**

உதவி+ஆளர் > உதவியாளர் : உதவி + ஆள் > உதவியாளர்

காப்பு + ஆளர் > காப்பாளர் : காப்பு + ஆள் > காப்பாள்

மேல் + ஆளர் > மேலாளர் : மேல் + ஆள் > மேலாள்

மறைமலை (1984:87) குறிப்பிட்டது போன்று ஆளர் உயர்நிலைப் பணியாளர்களை வரையறை செய்யவும், ஆள் தாழ்நிலைப் பணியாளர்களையும் வரையறை செய்யவும் ஆளி உயர்நிலை, தாழ்நிலை என்ற சிக்கல் எழாத பொதுத்தன்மை வாய்ந்த பெயர்ச் சொற்களை உருவாக்கவும் பயன்படுத்தப்படுகின்றன.

குற்றம் + ஆளி > குற்றவாளி

கொலை + ஆளி > கொலையாளி

முதல் + ஆளி > முதலாளி

நோய் + ஆளி > நோயாளி

தார்/தாரர்/தாரி

தார், தாரி என்ற விகுதிகளும் 'நபர்; என்ற பொருளில்தான் வருகின்றன. இவை இரண்டும் இஸ்லாமியர் தொடர்பால் தமிழை வந்தடைந்தவை.

ஜமீன் + தார் > ஜமீன்தார்

தாசில் + தார் > தாசில்தார்

வேடம் + தாரி > வேடதாரி

பட்டம் + தாரி > பட்டதாரி

தார் என்பது தமிழ் *அர்* விகுதி பெற்று *தாரர்* என ஆயிற்று.

பங்கு + தாரர் > பங்குதாரர்

பாத்தியம் + தாரர் > பாத்தியதாரர்

மனு + தாரர் > மனுதாரர்

விண்ணப்பம் + தாரர் > விண்ணப்பதாரர்

ஞர்

ஞர் என்ற ஒட்டும் 'நபர்' என்ற பொருளில் வரும். இது ஐ, இ என முடியும் பெயர்ச்சொற்களுடன் சோ;ந்து பெயராக்கம் செய்யும்.

கலை + ஞர் > கலைஞர்

கவி + ஞர் > கவிஞர்

இ

இவ்வொட்டு ஒருசில சூழலில் ஒருகுழுவில் வரும் பெயர்ச்சொல்லோடு சேர்ந்து பெண்பாற் பெயராக்கம் செய்யும்.

குருடு + இ > குருடி

மலடு + இ > மலடி

அரசு + இ > அரசி

இத்தகைய ஒட்டுகளால் ஆக்கப்பெற்ற எல்லாப் பெண்பாற் பெயர்களும் சொல்நிலையாக்கம் பெற்றவையாய் தோன்றுகின்றது. எனவே பெண்பாற் பெயராக்க ஒட்டாய் *இ* விளைவாக்கமின்றி வருவதாய்த்தான் தெரிகின்றது. வேறுசில சூழலில் *இ* ஒருகுழுவிலடங்கும் பெயர்ச்சொற்களுடன் பெண்பால் பெயராக்கம் செய்யாது, 'நபர்' என்ற பொருளில் வரும் பெயர்களை ஆக்கம் செய்யும்.

நிர்வாகம் + இ > நிர்வாகி

பயணம் + இ > பயணி

பதில் + இ > பதிலி

இயல்

இயல் என்ற உருபன் தனி வருகை நிலையிழந்து கட்டுருபனாக, ஒரு பின்னொட்டாக பெயருடன் சோ;ந்து 'கல்வி' என்ற பொருளில் பெயராக்கம் செய்கின்றது. இவ்விகுதி மிகுந்த விளைவாக்கம் உள்ளதாய்த் தொpகின்றது.

அறிவு + இயல் > அறிவியல்

புவி + இயல் > புவியியல்

மொழி + இயல் > மொழியியல்

இயற்பு + இயல் > இயற்புயல்

அகம்

அகம் என்ற உருபனும் தன் தனிவருகை நிலையிழந்து கட்டுருபனாக, ஒரு பின்னொட்டாக 'இடம்' என்ற பொருளில் பெயருடன் இணைந்து பெயராக்கம் செய்கின்றது.

அச்சு + அகம் > அச்சகம்

நூல் + அகம் > நூலகம்

உணவு + அகம் > உணவகம்

தூதர் + அகம் > தூதரகம்

இவ்விகுதி இடங்கள், நிறுவனங்கள், செயலகங்கள் இவற்றிற்கான பெயர்களை பெயராக்கம் செய்ய பயன்படுகின்றது. இது விளைவாக்கமுள்ள விகுதியாகும்.

மம்

மை ஒட்டாக்கப் பண்புப்பெயர்களின் (எ.கா. உரிமை, குடிமை, தனிமை, நுண்மை, பெருமை) அடிகளுடன் மம் சோ;ந்து பெயராக்கம் செய்யும். மம் என்பதற்குப் பொதுப்பொருள் தருவது எளிதல்ல. சில இடங்களில் 'தன்மை' என்ற பொருள் தந்து பெயராக்கம் செய்யும்.

உரி + மம் > உரிமம்

குழு + மம் > குழுமம்

தனி + மம் > தனிமம்

நுண் + மம் > நுண்மம்

மம் கலைச்சொல்லாக்கத்திற்கு துணைபுரியும் விளைவாக்கமுள்ள ஒட்டாகும். இவ்வொட்டு பெயர்களுடன் மட்டுமன்றி கட்டுருபுச் சொற்களுடனும்; வினைகளுடனும் சேர்ந்து பெயராக்கம் செய்ய வல்லது.

மின்+ மம் > மின்மம்

கனி + மம் > கனிமம்

கரை + மம் > கரைமம்

பாடு

படு என்ற வினையிலிருந்து பெயராக்கம் செய்யப்பெற்ற *பாடு*, தன் தனித்தன்மை இழந்து கட்டுருபன் (அதாவது விகுதி) போலச் செயலாற்றுகின்றது. இது பெயர்ச்சொற்களுடன் சோ;ந்து பெயராக்கம் செய்கின்றது. இதற்குப் பொதுப்பொருள் தருவது சிரமமானது.

இடர் + பாடு > இடர்பாடு

உடன் + பாடு > உடன்பாடு

கடன் + பாடு > கடன்பாடு

பயன் + பாடு > பயன்பாடு

இவ்வாக்கங்களை இவற்றோடு தொடர்புடைய கூட்டு வினைகளிலிருந்து பெறப்பெற்ற ஆக்கங்களாகவும் கொள்ள இயலும்.

இடர்படு > இடர்பாடு

உடன்படு > உடன்பாடு

கடன்படு > கடன்பாடு

பயன்படு > பயன்பாடு

ஈடு

இடு என்ற வினையிலிருந்து பெயராக்கம் செய்யப்பெற்ற ஈடு தன் தனித்தன்மையை இழந்து கட்டுருபன் போலச் செயலாற்றுகின்றது. இதுவும் பாடு போன்று பெயர்ச்சொற்களுடன் சேர்ந்து பெயராக்கம் செய்கின்றது.

குறிப்பு + ஈடு > குறிப்பீடு

வெளி + ஈடு > வெளியீடு

குறுக்கு + ஈடு > குறுக்கீடு

மதிப்பு + ஈடு > மதிப்பீடு

இவ்வாக்கங்களையும் இவற்றோடு தொடர்புடைய கூட்டு வினைகளின் பெயராக்கங்களாகக் கொள்ள இயலும்.

குறிப்பிடு > குறிப்பீடு

வெளியிடு > வெளியீடு

குறுக்கிடு > குறுக்கீடு

மதிப்பிடு > மதிப்பீடு

தனம்

தனம் என்ற கட்டுருபன் சில பெயர்ச்சொற்களுடன் சோ;ந்து மறுபெயராக்கம் செய்ய வல்லது. இது குணம் அல்லது தன்மை என்ற பொருளை ஆக்கப் பொருண்மையாகத் தரவல்லது.

மடம் + தனம் > மடத்தனம்

போக்கிரி + தனம் > போக்கிரித்தனம்

முட்டாள் + தனம் > முட்டாள்தனம்

இது விளைவாக்கமுள்ள ஒட்டாகத் தோன்றாவிடினும் அவசரத்தேவைகளுக்கு ஆக்கவிகுதியாகக் கைகொடுக்கின்றது.

ரவுடி + தனம் > ரவுடித்தனம்

குரங்கு + தனம் > குரங்குத்தனம்

முன்னொட்டாக்கம்

முன்னொட்டாக்கம் தமிழில் இல்லை என்றும் சமஸ்கிருதத்திலிருந்து கடன் வாங்கப்பெற்ற சொல்நிலையாக்கம் பெற்ற ஒரு சில சொற்களில் முன்னொட்டு இருப்பதாயும் (எ.கா. அ+ நாகரீகம் > அநாகரீகம், அ+ நீதி > அநீதி) ஆனால் வழக்கிழந்துவிட்டது என்றும் கருதலாம். இடைச்சொற்கள் என்றும் பெயரடை என்றும் அகராதியில் குறிப்பிடப்பட்ட சில கட்டுருபன்கள் பெயர் முன் வந்து மறுபெயராக்கம் செய்ய வல்லன. இக்கட்டுருபன்களின் பட்டியலில் முன், (முற்), பின் (பிற்), மேல் (மேன் மேம் மே), கீழ், நல் (நன் நற்), தன் (தற்) புத் (புது), போன்ற சொற்கள் அடங்கும். முன், பின், மேல், கீழ் என்பன அடிப்படையில் பெயர்களாகும். நல், தன், புது என்பன அடிப்படையில் பெயரடைகளாகும். இவை ஒட்டுக்கள் போலவே செயல்பட்டு பல புதிய சொற்களை ஆக்கவல்லன.

முன் + எச்சரிக்கை > முன்னெச்சரிக்கை

முன் + பகல் > முற்பகல்

பின் + பலம் > பின்பலம்

பின் + பட்டோர் > பிற்பட்டோர்

மேல் + அதிகாரி > மேலதிகாரி

மேல் + மக்கள் > மேன்மக்கள்

மேல் + பாலம் > மேம்பாலம்

மேல் + நிலை > மேநிலை

கீழ் + மட்டம் > கீழ்மட்டம்

நல் + ஊர் > நல்லூர் நல் + தமிழ் > நற்றமிழ்

தன் + காலம் > தற்காலம்

தன் + புகழ்ச்சி > தற்புகழ்ச்சி

தன் + நிறைவு > தன்னிறைவு

புது + ஆண்டு > புத்தாண்டு

புது + பெண் > புதுப்பெண்

முன், பின், மேல், கீழ் என்பன வினை முன் வந்து புதிய வினையாக்கத்திற்குத் துணை புரிகின்றன. இச்சொற்களை முன்னொட்டுகளாகக் கொள்ளவியலும் என்று மறைமலை (1984:69-76) வாதாடுகிறார். ஆனால் இவற்றில் சில தனியாக வரவல்லன, மட்டுமன்றி இவை பல சொல்லாக்கங்களுக்குப் பகுதியாக வரவல்லன.

முன் + ஆல் > முன்னால்

பின் + ஆல் > பின்னால்

கீழ் + ஏ > கீழே

நல் + மை > நன்மை

தன் + ஆல் > தன்னால்

புது + மை > புதுமை

எனவே இச்சொற்களால் ஆக்கப்பெற்ற முற்காலம், முற்பகல் போன்ற ஆக்கங்களை முன்னொட்டாக்கங்களாகக் கொளவதா அல்லது கூட்டாக்கமாகக் கொள்வதா என்பதைத் தீர்மானிக்க இயலவில்லை. இவ்வாக்கங்கள் சொல்நிலையாக்கம் பெற்றுவிட்டமையால் அகராதியில் பட்டியலிடப்பட்டுள்ளன. 'சிறப்பு' என்று பொருள் தரும் *திரு* என்ற சொல்லையும் மேற்சொன்ன பட்டியலில் சேர்க்க இயலும் என்று தோன்றுகின்றது.

திரு + நீறு > திருநீறு

திரு + மறை > திருமறை

திரு + மனசு > திருமனசு

திரு + பாதம் > திருப்பாதம்

அல் என்ற சொல்லையும் வ.சுப. மாணிக்கம்; போற்றோர் (முத்துவீரப்பன், 1982) முன்னொட்டு போல் சொல்லாக்கம் செய்கின்றனர்.

அல் + சங்கநடை > அல்சங்கநடை

அல் + தமிழர் > அல்தமிழர் அல் + நாகரீகம் > அல்நாகரீகம்

அல் + நெறி > அல்நெறி

கூட்டாக்கம் பெயரையும் பெயரையும் இணைத்து புதுப் பெயராக்கம் செய்வது மிகப்பரவலான விளைவாக்கமுள்ள பெயராக்கமாகும்.

தேன் + அடை > தேனடை

கடல் + மீன் > கடல்மீன்

பால் + மாடு > பால்மாடு

கரும்பு + சாறு > கரும்புச்சறு

கூட்டுப்பெயராக்கம் பற்றி கூட்டுப்பெயராக்கம் என்ற கட்டுரையில் விரிவாகக்காண்போம்.

வினையிலிருந்து பெயர்

வினையிலிருந்து ஆக்கப்பெறும் பெயர்ச்சொற்களை பெயராக்கவிகுதிகள் எவ்வடிவ வினைகளுடன் இணைக்கப்பட்டுப் பெயராக்கம் செய்யப்படுகின்றன என்பதன் அடிப்படையில் வகைப்பாடு செய்யலாம். பெயராக்க விகுதிகள் பொதுவாக திரிபுறாத வினையடியுடனோ பெயரெச்ச வடிவில் வரும் வினையுடனோ சேர்க்கப்பட்டுப் பெயராக்கம் செய்யும். முந்ததைய ஆக்கத்தை வினையடிப்பெயராக்கம் என்றும் பிந்தைய பெயராக்கத்தை பெயரெச்சவடிப் பெயராக்கம் என்றும் கூறலாம்.

படி + ப்பு > படிப்பு

படி + த்தல் > படித்தல்

படித்த + அது > படித்தது

படித்த + அவன் > படித்தவன்

வினையடிப்பெயராக்கம்

கால மற்றும் எதிர்மறை ஒட்டேற்காத வினையடிகளுடன் பல பெயராக்க விகுதிகள் சோ;ந்து பெயராக்கம் செய்யும்.

தோல் + வி > தோல்வி

பார் + வை > பார்வை

துடி + ப்பு > துடிப்பு

நினை + வு > நினைவு

படி + த்தல் > படித்தல்

படி + க்கல் > படிக்கல்

படி + க்கை > படிக்கை

மேற்கண்ட பெயராக்க ஒட்டுக்களை ஆய்கையில் சில ஒட்டுகள் எல்லா வினைகளுடனும் சோ;ந்து பெயராக்கம் செய்ய வல்லனவாகவும் சில ஒட்டுகள் ஒரு குறிப்பிட்ட குழுவில் வரும் வினைகளுடன் மட்டுமே இணைந்து பெயராக்கம் செய்வதையும் காணலாம். எடுத்துக்காட்டாக வி என்ற பெயராக்க ஒட்டை எடுத்துக்கொண்டால் அது பார், துடி, படி, நினை என்ற வினைகளுடன் சோ;ந்து பார்வி, துடிவி, படிவி, நினைவி என்ற பெயர்களை ஆக்குவதில்லை. அது போல் ப்பு என்பது தோல், பார் என்பனவற்றுடன் இணைந்து தோற்பு, பார்ப்பு என்ற பெயர்களை ஆக்கம் செய்வதில்லை. ஆனால் *(த்)தல், (க்க்)அல், (க்)கை* என்பன எல்லா வினைகளுடனும் இணைந்து பெயராக்கம் செய்ய வல்லன.

தோல் + தல் > தோற்றல்

தோல் + கல் > தோற்கல்

தோல் + கை > தோற்கை

பார் + த்தல் > பார்த்தல்

பார் + க்கல் > பார்க்கல்

பார் + க்கை > பார்க்ககை

துடி + த்தல் > துடித்தல்

துடி + கல் > துடிக்கல்

துடி + கை > துடிக்கை

நினை + த்தல் > நினைத்தல்

நினை + க்கல் >நினைக்கல்

நினை + க்கை > நினைக்கை

மேற்கண்ட பெயராக்கச் செயற்பாடுகள் வினையடிப் பெயராக்க விகுதிகளை இரண்டாகப் பகுக்கத் தூண்டும். பரமசிவம் (1971), கமலேஸ்வரன் (1974) ஆகியோர் ப்பு வகையிற்படும் பெயராக்கிகளால் ஆக்கப்பெற்ற பெயர்களை ஆக்கப்பெயர் என்றும் தல் வகையிற்படும் பெயராக்கிகளால் ஆக்கப்பெற்ற பெயர்களை வினைப்பெயர் என்றும் பிரித்து வகைபாடு செய்கின்றனர். வினைப்பெயராக்கங்கள் உருபனியல், தொடர்பியல், பொருண்மையில் அடிப்படையில் வரைமுறைப் படுத்தத்தக்கனவாகவும், ஆக்கப்பெயராக்கங்கள் உருபனியல், தொடர்பியல், பொருண்மையில் அடிப்படையில் வரைமுறைப் படுத்தத்தகாதனவாகவும் அமையும். கீழே தரப்பட்டுள்ள ஆக்கப்பெயர்களுக்கும் வினைப்பெயர்களுக்கும் உள்ள வேறுபாடுகள் மேற்சொன்ன கருத்தை தெளிவுபடுத்தும்.

1. ப்பு வகைப் பெயராக்கிகளால் ஆக்கப்பெற்ற ஆக்கப்பெயர்களை பெயரடை, பெயரெச்சம், எண்ணுப்பெயர்கள், சுட்டுக்கள் இவற்றால் வருணனை செய்யலாம், ஆனால் தல் வகைப் பெயராக்கிகளால் ஆக்கப்பெற்ற வினைப்பெயர்களை இவற்றால் வருணனை செய்ய இயலாது.

   பெயரடை + பெயர்

   நல்ல ஆட்டம் *நல்ல ஆடுதல்

பெயரெச்சம் + பெயர்

முடிந்த ஆட்டம் *முடிந்த ஆடுதல்

எண்ணுப்பெயர் + பெயர்

ஒரு ஆட்டம் *ஒரு ஆடுதல்

2. தல் வகைப் பெயராக்கிகளால் ஆக்கப்பெற்ற வினைப்பெயர்கள் முன் அவற்றோடு தொடர்புடைய எழுவாய் எழுவாய்வேற்றுமை வடிவில் வரும். ஆனால் *ப்பு* வகைப் பெயராக்கிகளால் ஆக்கப்பெற்ற ஆக்கப்பெயர்கள் முன் அவற்றோடு தொடர்புடைய எழுவாய் திரிபு அடி வடிவில் வரும்.

நீ ஆடுதல் கூடாது

*உன் ஆடுதல் கூடாது

உன் ஆட்டம்

*உன் ஆடுதல்

3. தல் வகைப் பெயராக்கிகளால் ஆக்கப்பெற்ற வினைப்பெயர்களை வினையடையால் வருணனை செய்யலாம், ஆனால் *ப்பு* வகைப் பெயராக்கிகளால் ஆக்கப்பெற்ற ஆக்கப்பெயர்களை அவ்வாறு வருணனை செய்ய இயலாது. மெதுவாக ஆடுதல் *மெதுவாக ஆட்டம்.*

4. வினைப்பெயர்களைத் தொடர்ந்து *கூடும், முடியும், வேண்டும்* என்ற துணை வினைகள் வினைநோக்கு உணர்த்த வரும், ஆனால் ஆக்கப்பெயர்களைத் தொடர்ந்து அவை வினைநோக்கு உணர்த்த வராது.

அவள் ஆடுதல் கூடும்

அவள் ஆடுதல் முடியும்

அவள் ஆடுதல் வேண்டும்

அவள் ஆடல் ஆனாள் அவள் ஆடலாம் (<ஆடல் + ஆம்)

*அவள் ஆட்டம் கூடும்

*அவள் ஆட்டம் முடியும்

*அவள் ஆட்டம் வேண்டும்

*அவள் ஆட்டம் ஆனாள்

*அவள் ஆட்டம் ஆம்

("*" என்ற குறியீடு முன்னால் இடப்பட்ட வாக்கியங்களும் தொடர்களும் தவறானவை அல்லது பொருத்தமற்றவை என்பனை உணர்த்தி நிற்கும்.)

5. வினைப்பெயர்கள் அவற்றின் மூலவினைகள் ஏற்கும் பங்காளிகளை ஏற்றுவரவல்லன, ஆனால் ஆக்கப்பெயர்கள் அவற்றின் மூலவினைகள் ஏற்கும் பங்காளிகளை ஏற்றுவரா. வினைப்பெயர்கள் அவற்றின் மூல வினைகளின் பண்புகளை கொண்டிருப்பதும், ஆனால் ஆக்கப்பெயர்கள் அவற்றின் மூல வினனகளின் பண்புகளை இழந்து விடுவதும் இதன் காரணமாகும். அவள் தினமும் கோயிலில் எட்டுமணிக்கு ஆடுதலை வழக்கமாகக் கொண்டிருந்தாள் *அவள் தினமும் கோயிலில் எட்டுமணிக்கு ஆட்டம்

6. *தல்* வகையில் படும் வினைப்பெயராக்கிகள் உருபஒலியனியல் அடிப்படையில் ஒருவித ஒழுங்கு முறையைக் கொண்டிருக்கும். அதாவது வினைப்பெயராக்கிகள் வினையடிகளுடன் இணைகையில் மெல்வினை, இடைவினை, வல்வினை என்ற பாகுபாட்டின் அடிப்படையில்; உருபஒலியன் மாற்றம் பெற பெயராக்கம் செய்யும்.

வாழ் + அல் > வாழல்

வாழ் + தல் > வாழ்தல்

வாழ் + கை > வாழ்கை

கல் + அல் > கற்கல்

கல் + தல் > கற்றல்

கல் + கை > கற்கை

படி + அல் > படிக்கல்

படி + தல் > படித்தல்

படி + கை > படிக்கை

ஆனால் *ப்பு* வகையில் படும் ஆக்கப்பெயராக்கிகள் அத்தகைய ஒழுங்கு முயையைக் கொண்டிருக்காது. எடுத்துக்காட்டாக அல் என்ற பெயராக்கி இருவகையில் உருபஒலியனியல் மாற்றம் ஏற்படுத்தும். அல் விகுதி தல் வகையில்படும் வரைமுறை செய்யத்தக்க பெயராக்கியாக வருகையில் செய் எனும் வினையுடன் இணைந்து செய்யல் என்ற வடிவில் பெயராக்கம் செய்யும், ஆனால் அல் விகுதி ப்பு வகையில் படும் வரைமுறை செய்யத்தகாத பெயராக்கியாக வருகையில் செயல் என்ற வடிவில் பெயராக்கம் செய்யும். மேற்கண்ட எடுத்துக்காட்டு தல் வகையில்படும் பெயராக்கிகளும் *ப்பு* வகையில் படும் பெயராக்கிகளும் உருபஒலியனியல் அடிப்படையில் வேறுபடும் என்பது தெரியவரும். கீழ்க்கண்ட அட்டவணை இதனைத் தெளிவுபடுத்தும்.

வினைகள்	**விகுதிவகைகள்**	**ஆக்கமுற்ற பெயர்**	**வருணனை**
செய்	*அல்* (*தல்* வகை)	*செய்யல்*	*அல்* விகுதி *தல்* வகையில்படும் வரைமுறை செய்யத்தக்க பெயராக்கியாக வருகையில் *செய்* எனும் வினையுடன் இணைந்து *செய்யல்* என்ற வடிவில் பெயராக்கம் செய்யும்.
செய்	*அல்* (*ப்பு* வகை)	செயல்	*அல்* விகுதி *ப்பு* வகையில் படும் வரைமுறை செய்யத்தக்க ஒட்டாக வருகையில் *செயல்* என்ற வடிவில் பெயராக்கம் செய்யும்.
சமை	*அல்* (தல் வகை)	*சமைக்கல்*	*அல்* விகுதி *தல்* வகையில்படும் வரைமுறை செய்யத்தக்க பெயராக்கியாக வருகையில் *சமை* எனும் வினையுடன் இணைந்து *சமைக்கல்* என்ற வடிவில் பெயராக்கம் செய்யும்.

சமை	அல் (*ப்பு* வகை)	சமையல்	*அல்* விகுதி *ப்பு* வகையில் படும் வரைமுறை செய்யத்தக்க ஒட்டாக வருகையில் சமையல் என்ற வடிவில் பெயராக்கம் செய்யும்

7. *தல்* வகைப் பெயராக்கிகளால் ஆக்கப்பெற்ற வினைப் பெயர்கள் பொருண்மை அடிப்படையிலும் ஒருவித ஒழுங்கை வெளிப்படுத்தும். அவைகள் மூலவினையின் பொருண்மையை வெளிப்படுத்தும் பெயராக அமையும். அதாவது மூலவினையில் செயலைக் குறிப்பிடும் பெயராக அமையும். *ப்பு* வகைப் பெயராக்கிகளால் ஆக்கப்பெற்ற ஆக்கப்பெயர்கள் செயலைக் குறிப்பிடுவதாகவோ செய்பவரைக் குறிப்பிடுவதாகவோ கருவியைக் குறிப்பிடுவதாகவோ விதத்தைக் குறிப்பிடுவதாகவோ இருப்பிடத்தைக் குறிப்பிடுவதாகவோ செயப்படுபொருளைக் குறிப்பிடுவதாகவோ காரணத்தைக் குறிப்பிடுவதாகவோ அமையும். பின்வரும் அட்டவணை இதைத் தெளிவுபடுத்தும்.

வினை	**விகுதி வகை**	**ஆக்கமுற்ற பெயர்**	**பொருண்மை வகை**
பாடு	தல் (தல் வகை)	பாடுதல்	செயல்
ஓடு	அம் (ப்புவகை)	ஓட்டம்	செயல்
திருடு	அன் (*ப்பு* வகை)	திருடன்	செய்பவர்
அள	வி (ப்பு வகை)	அளவி	கருவி
நட	ஐ (ப்பு வகை)	நடை	விதம்
படு	*க்கை* (ப்பு வகை)	படுக்கை	இருப்பிடம்

8. *தல்* வகையில் படும் பெயராக்கிகளால் ஆக்கப்பெற்ற வினைப்பெயர்கள் பன்மை விகுதியான கள் ஏற்காது, ஆனால் ப்பு வகையில் படும்; பெயராக்கிகளால் ஆக்கப்பெற்ற ஆக்கப்பெயர்கள் பன்மை விகுதியான கள் ஏற்று வரும்.

பெயர்	**பெயர் + கள்**
போகல்	*போகல்கள்
போதல்	*போதல்கள்
போகை	*போகைகள்
ஆட்டம்	ஆட்டங்கள்
இருப்பு	இருப்புகள்

நடை நடைகள்

9. *ப்பு* வகையில் படும் பெயராக்கிகளால் ஆக்கப்பெற்ற ஆக்கப்பெயர்கள் *ஆன, ஆக ஆகிய* உருபுகள் பெற்று முறையே பெயரடையாக்கத்திற்குள்ளாகவோ வினையடையாக்கத்திற்குள்ளாகவோ செய்யும். ஆனால் தல் வகையில் படும் பெயராக்கிகளால் ஆக்கப்பெற்ற வினைப்பெயர்கள் *ஆன, ஆக ஆகிய* உருபுகள் பெற்று முறையே பெயரடையாக்கத்திற்குள்ளாகவோ வினையடையாக்கத்திற்குள்ளாகவோ செய்யாது.

பெயர்	**பெயர் + ஆக/ஆன**
வழங்கல்	*வழங்கலான, *வழங்கலாக
வழங்குதல்	*வழங்குதாலான, *வழங்குதாலாக
வழங்குகை	*வழங்குகையான, *வழங்குகையாக
வழக்கம்	வழக்கமான, வழக்கமாக
தெளிவு	தெளிவான, தெளிவாக
பொருத்தம்	பொருத்தமான, பொருத்தமாக

இவ்வாறு உருபஒலியனியல் அடிப்படையிலும், தொடரியல் அடிப்படையிலும் பொருண்மை அடிப்படையிலும் வேறுபடும் இருவகையான பெயராக்க ஒட்டுகளை வேறுபடுத்திக்காண வேண்டி வருகின்றது. வகைப்பாடு எளிமை கருதி *தல்* வகைப்படும் பெயராக்கிகளால் வினைப்பெயராக்கம் செய்வதை ஒழுங்கான வினையடிப் பெயராக்கம் என்றும் *ப்பு* வகையில் படும் பெயராக்கிகளால் வினைப்பெயராக்கம் செய்வதை ஒழுங்கற்ற வினையடிப் பெயராக்கம் என்றும் குறிப்பிடலாம்.

ஒழுங்காகன வினையடிப் பெயராக்கம்

தல் வகைப் பெயராக்கிகளில் *அல், தல், கை* என்ற மூன்று விகுதிகள் அடங்கும். முன்னர் கூறியபடி மெல்வினைகள், இடைவினைகள், வல்வினைகள் என்பதன் அடிப்படையில் இவை உருபஒலியனியல் மாற்றமுறும். அல் என்பது அல், கல், க்கல் என வேறுபடும். தல் என்பது தல், த்தல் என வேறுபடும். கை என்பது கை, க்கை என வேறுபடும்.

ஆர்டனின் வினை வகைப்பாடு அடிப்படையில் இம்மூவகை விகுதிகளின் வருகை முறை பினவருமாறு அமையும்.

விகுதிகளும் அவற்றின் வேற்று வடிவுகளும்	**வேற்று வடிவுகளின் வருகை முறை**	**எடுத்துக்காட்டுகள்**
அல் கல் க்கல்	க்கல் 6-ஆவது மற்றும் 7-ஆவது வினை வகுப்பு வினைகளின் பின்னர் வரும். கல் 5-ஆவது வகுப்பு வினைகளின் பின்னர் பின் வரும். அல் பிற வகுப்பு (1, 2, 3, 4, வகுப்புகள்) வினைகளைத் தொடர்ந்து வரும்.	பார்க்கல், நடக்கல் கற்கல் செய்யல், ஓடல்
தல் த்தல் த்தல்	6-ஆவது, 7-ஆவது வகுப்பு வினைகள் பின்னரும் தல் பிற வகுப்பு (1-5 வகுப்புகள்) வினைகள் பின்னரும் வரும்.	பார்த்தல், நடத்தல் கற்றல் செய்தல், ஓடுதல்
கை க்கை க்கை	6-ஆவது, 7-ஆவது வகுப்பு வினைகள் பின்னரும் கை பிற வகுப்பு (1-5 வகுப்புகள்) வினைகள் பின்னரும் வரும்.	பார்க்கை, நடக்கை கற்கை செய்கை, ஓடுகை

இம்மூவகைப் பெயராக்கங்களும் செயலைக் குறிப்பிடும் பெயர்களை ஆக்கினாலும் இவை தொடரியல் வருகை முறையில் வேறுபடுகின்றன.

1. அல்-ஆக்கப்பெயர்களைத் தொடர்ந்து ஆகு, ஆம், வேண்டும் என்ற துணை வினைகள் வந்து வேறுபட்ட வினைநோக்குகளை உணர்த்தி நிற்கும்.

அவள் தொடர்ந்து கல்லூரிக்கு வரலானாள் (<வரல் + ஆனாள்).

அவள் இன்று கல்லூரிக்கு வரல் ஆகும்.

இன்று மழை பெய்யலாம் (< பெய்யல் + ஆம்).

இன்று அவன் மதுரை போகல் வேண்டும்.

*அவள் தொடர்ந்து கல்லூரிக்கு வரலானாள் (<வரல் + ஆனாள்).

*அவள் இன்று கல்லூரிக்கு வரல் ஆகும்.

*இன்று மழை பெய்யலாம் (< பெய்யல் + ஆம்).

*இன்று அவன் மதுரை போகல் வேண்டும்.

*அவள் தொடர்ந்து கல்லூரிக்கு வருகையானாள் (<வருகை + ஆனாள்).

*அவள் இன்று கல்லூரிக்கு வருகை ஆகும்.

*இன்று மழை பெய்கை ஆம். *இன்று அவன் மதுரை போகை வேண்டும்.

2. தல்-ஆக்கப்பெயர்கள் சமன்பாட்டு வாக்கியங்களில் எழுவாயாக வரவல்லன.

காலையில் ஏழுந்து குளிர்ந்த நீரில் குளித்தல் நல்லது.

*காலையில் ஏழுந்து குளிர்ந்த நீரில் குளிக்கல் நல்லது.

*காலையில் ஏழுந்து குளிர்ந்த நீரில் குளிக்கை நல்லது.

3. கை-ஆக்கப்பெயர்கள் இல்வேற்றுமை உருபு ஏற்று வினைத்தொடராக வந்து தலைமை வாக்கிய வினையும் உட்படு வாக்கிய வினையும் ஒரே காலத்தில் நடைபெறுவதை உணர்த்தி நிற்கும்.

அவள் உறங்குகையில் அவன் அவளைப் பார்த்தான்.

*அவள் உறங்கலில் அவன் அவளைப் பார்த்தான்.

*அவள் உறங்குதலில் அவன் அவளைப் பார்த்தான்.

தல்பெயராக்கம்

தல் பெயராக்கி *தல், த்தல்* என வடிவவேறுபட்டு துணைநிலை வருகை முறையில் வருவது முன்னர் கூறப்பட்டது. ஐந்தாம் வகுப்பில் வரும் வினைகளில் ல் ஈற்று வினைகள் பின்னர் தல் என்பது றல் எனவும், ள் பின்னர் டல் எனவும் புணர்ச்சி மாற்றம் அடையும்.

கல் + தல் > கற்றல்

கேள் + தல் > கேட்டல்

தல்லாக்கப் பெயர்கள் பல பொருண்மை மாற்றத்தால் சொல்நிலைபேறாக்கம் அடைந்து அகராதிப்படுத்தப்பட்டுள்ளன.

தேர் + தல் > தேர்தல்

ஆறு + தல் > ஆறுதல்

தல் பெயராக்கியை அதன் உருபஒலியனியல் மாற்றங்கருதி *தல்* வகையில் படும் ஒழுங்கான பெயராக்கி என்றும், ப்பு வகையில் படும் ஒழுங்கற்ற பெயராக்கி என்றும் இருவகைப் படுத்தலாம். ஒழுங்கான தல் பெயராக்கம் ஒழுங்கற்ற தல் பெயராக்கத்திலிருந்து வேறுபடுவதை புணர்ச்சி மாற்றம் வெளிப்படுத்தும்.

ஒழுங்கான தல் பெயராக்கம்	ஒழுங்கற்ற தல் பெயராக்கம்
அலை + தல்> அலைதல்	அலை + தல் > அலைச்சல்
புகைதல் + தல் > புகைதல்	புகை + தல் > புகைச்சல்

அல்பெயராக்கம்

அல் பெயராக்கிகள் *அல், கல், க்கல்* என்ற மூன்று வேற்றுவடிவுகளில் வரும் என முன்னர் கூறப்பட்டது. *அல்* ஆக்கப்பெயர்கள் பல பொருண்மை மாற்றத்தால் சொல்நிலைபேறாக்கம் அடைந்து அகராதிப்படுத்தப்பட்டுள்ளன.

ஆடு + அல் > ஆடல்

பாடு + அல் > பாடல்

அல் பெயராக்கியும் *தல்* பெயராக்கியைப் போல் இருவகையாகச் செயலாற்றும். ஒழுங்கான அல் பெயராக்கம் ஒழுங்கற்ற அல் பெயராக்கத்திலிருந்து வேறுபடுவதை புணர்ச்சி மாற்றம் வெளிப்படுத்துவதை முன்னர் பார்த்தோம் (*செய்யல், செயல். சமைக்கல், சமைக்கல்*).

கைபெயராக்கம்

கை பெயராக்கி *கை, க்கை* என்று இரு வேறுபட்ட வடிவில் வருவது கூறப்பட்டது. கையாக்கப்பெயர்கள் பொருண்மை மாற்றத்தால் சொல்நிலைபேறாக்கம் அடைந்து அகராதிப்படுத்தப்பட்டுள்ளன.

செய் + கை > செய்கை

வரு + கை > வருகை

இரு + கை > இருக்கை

படு + கை > படுக்கை

படுக்கை என்று படுக்குமிடத்தை குறிப்பிடும் வினைப்பெயராக்கச் சொல்லை படுக்கை என்று படுக்கும் வினையைக் குறிப்பிடும் வினைப்பெயராக்கச் சொல்லிலிருந்து வேறுபடுத்த வேண்டுமானால் படுக்குமிடத்தை குறிப்பிடும் வினைப்பெயரை ஆக்கும் கை பெயராக்கியை வினையைக் குறிப்பிடும் வினைப்பெயரை ஆக்கும் கை பெயராக்கியிலிருந்து வேறுபடுத்த வேண்டும். முந்தைய கை, ப்பு வகைப் பெயராக்கிகளைச் சார்ந்தது, பிந்தைய கை, தல் வகைப் பெயராக்கிகளைச் சார்ந்தது. *கை* பெயராக்கியை அதன் உருபஒலியனியல் மாற்ற வேறுபாடு கருதியும் தல் வகையில் படும் ஒழுங்கான பெயராக்கி என்றும், *ப்பு* வகையில் படும் ஒழுங்கற்ற பெயராக்கி என்றும் இருவகைப் படுத்தலாம். ஒழுங்கான *கை* பெயராக்கம் ஒழுங்கற்ற *கை* பெயராக்கத்திலிருந்து வேறுபடுவதை புணர்ச்சி மாற்றம் வெளிப்படுத்தும். கீழ்க்கண்ட அட்டவணை இதனைத் தெளிவுபடுத்தும்.

வினைகள்	**விகுதிவகைகள்**	**ஆக்கமுற்ற பெயர்**	**வருணனை**
வாழ்	கை (தல் வகை)	வாழ்கை	*கை* பெயராக்கி தல் வகையில்படும் ஒழுங்கான பெயராக்கியாக வருகையில் வாழ் எனும் வினையுடன் இணைந்து

			வாழ்கை என்ற வடிவில் பெயராக்கம் செய்யும்.
வாழ்	கை (ப்பு வகை)	வாழ்க்கை	*கை* பெயராக்கி ப்பு வகையில் படும் ஒழுங்கற்ற பெயராக்கியாக வருகையில் *வாழ்க்கை* என்ற வடிவில் பெயராக்கம் செய்யும்.
உவ	கை (தல் வகை)	உவக்கை	*கை* பெயராக்கி தல் வகையில்படும் ஒழுங்கான பெயராக்கியாக வருகையில் வாழ் எனும் வினையுடன் இணைந்து *உவக்கை* என்ற வடிவில் பெயராக்கம் செய்யும்
உவ	கை (ப்பு வகை)	உவகை	*கை* பெயராக்கி ப்பு வகையில் படும் ஒழுங்கற்ற பெயராக்கியாக வருகையில் *உவகை* என்ற வடிவில் பெயராக்கம் செய்யும்.

கை பெயராக்கி *தல்* வகையில்படும் ஒழுங்கான பெயராக்கியாக வருகையில் வாழ் என்னும் வினையுடன் இணைந்து வாழ்கை என்ற வடிவில் பெயராக்கம் செய்யும்; இதுபோன்று *உவ* எனும் வினையுடன் இணைந்து *உவக்கை* என்ற வடிவில் பெயராக்கம் செய்யும். *கை* பெயராக்கி *ப்பு* வகையில் படும் ஒழுங்கற்ற பெயராக்கியாக வருகையில் *வாழ்க்கை, உவகை* என்ற வடிங்களில் பெயராக்கம் செய்யும். *நடிக்கை-நடிகை, ரசிக்ககை-ரசிகை* என்ற எடுத்துக்காட்டுகளும் கை பெயராக்கியை இரண்டாக வேறுபடுத்தும்.

ஒழுங்கற்ற வினையடிப்பெயராக்கம்

தமிழில் கலைச் சொல்லாக்கம்

டாக்டர் சாமுவேல் ஃபிராங்கிளின் அவர்களை அறிவியல் தமிழின் தந்தை எனலாம். தமிழ்க் கலைச் சொல்லாக்கத்திற்குத் திட்டமிடும் அளவில் பல மகநாடுகளும் கருத்தரங்குகளும் நடந்தன. இதற்கு என்று உருவாக்கப்பட்ட குழுக்கள் பல விவாதத்திற்குப் பின்னர் சில தீர்மானங்களுக்கு வந்து கலைச்சொல்லாக்கக் கொள்கைகளைச் முன்வைத்தன. தமிழக அரசு பல திட்டங்களை வகுத்துக் கலைச் சொல் ஆக்கத்திற்குத் துணை புரிகின்றது. இதற்கென்று

அரசு ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. தமிழ் வளர்ச்சித்துறையும் தமிழ்பல்கலைகழகமும் இதற்கு என்று பெரும் முயற்சி எடுத்துக்கொண்டு செயல் ஆற்றி வருகின்றன. ஆட்சிசொல் அகராதி இதன் பயனாய் உருவானது. தமிழ்பல்கலைக் கழகம் பல துறைகளுக்கான கலைச் சொல் அதிகாரிகளை உருவாக்கி வெளியிட்டு உள்ளது.

பலர் தமிழில் கலைச் சொல்லாக்கம் குறித்து கட்டுரைகளும் நூல்களும் எழுதியுள்ளனர். போராசிரியர் இராம சுந்தரம் அவர்கள் கலைச் சொல்லாக்கம் குறித்து பல கட்டுரைகள் எழுதியுள்ளார். போராசிரியை இராதா செல்லப்பன் அவர்கள் கலைச்சொல்லாக்கம் என்ற தலைப்பில் ஒரு நூல் வெளியிட்டுள்ளார்கள். முனைவர் ச. இராசேந்திரன் அவர்களின் தமிழில் சொல்லாக்கம் என்ற நூல் தமிழ்ப் பல்கலைகழகத்தால் வெளியிடப்பட்டுள்ளது. தமிழில் கலைச்சொல் ஐந்து முறைகளில் உருவாக்கப்படுகின்றது:

1. பழஞ்சொற்களைப் பயன்படுத்தல் (use of old words)

2. சொற்பொருள் விரிவு (Extension of meaning)

3. புதுச் சொல் படைப்பு (Word formation)

4. மொழிபெயர்ப்பு (translation)

5. கடன் பெறல் (borrowing)

பழஞ்சொற்களைப் பயன்படுத்தல்

எழுத்து வழக்கிலோ பேச்சு வழக்கிலோ உள்ள சொற்களைப் பயன்படுத்தல்:

> எ.கா. மருத்துவர், மருந்து, காய்ச்சல், வரலாறு, பொறி, ஊர்தி, வலவன், வானவூர்தி, கோவில் அறங்காவலர், நினைவுக்கிடங்கு

சொற்பொருள் விரிவு

சொல்லுக்கான பொருளைச் சிறிது விளக்கிப் புதிய கருத்துப் படிவம் ஒன்றை விளக்கல். வேற்றுமை உருபைக் குறித்த உருபு இன்று மொழியில் கலைச்சொல்லான உருபு என்பதைக் குறிக்கும் சொல்லாக பொருள் விரிபு பெற்றுள்ளது. மின், மின்சாரம், துறை என்பன இவ்வகைச் சொல்லாக்கப் பொருள் விரிவு பெற்றுள்ளது.

புதுச்சொல்லாக்கம்

ஒரு கருத்துப் படிமத்தை விளக்கப் புதுச்சொல் படைக்கிறோம். இயற்றல் (Invention), புனைதல் (Innovation), புதிய கருத்துக்கள் (new concepts) உருவாகவும் புதிய சொற்கள் படைக்கப்படுகின்றன. புதிய சொல் படைப்பப்படும் போது மொழிமரபும் சொல்லாக்க விதிகளும் பின்பற்றப்பட வேண்டும். புதிய சொற்களைத் தனிச் சொற்களாகவோ தொகை சொற்களாகவே உருவாக்குதல், முன்னொட்டு, பின்னொட்டு வரையறுத்தல்,புதிய விகுதிகளைச் சோ;த்துச் சொல்லாக்குதல் என்பன புதிய சொற்படைப்பில் குறிப்பிடத்தக்க கூறுகளாகும். முன்னொட்டாக்கம் (**Prefixation**)

Hydro + X : Hydro-logy,Hydro-statics

தொலை+ X: தொலை - தொலை-பேசி, தொலை-அச்சு

பின்னொட்டாக்கம் (**Prefixation**)

X -மானி ஒளி-மானி

X -பகுப்பு மின்-பகுப்பு

X - + --ism commmun-ism

x- + -logy Anthropo-log

கலப்பு முறையாக்கம்

(1) ஆங்கிலம் + தமிழ்

ரயில் தொடர்

பலுன் மீன்

(2) சமஸ்கிருதம் + தமிழ்

மிருகக்காட்சி சாலை

மொழிப்பெயர்ப்பு (Translation)

கலைச்சொல்லாக்கத்தில் மொழிப்பெயர்ப்புதான் பெரும் பங்கு வகிக்கின்றது. தமிழில் கலைச்சொற்களெல்லாம் ஆங்கில மொழிபெயர்ப்பாகும். மொழிப்பெயர்ப்பு முறை பற்றி ஆங்காங்கு கூறப்பட்டுள்ளது. ஒரு கருத்தமைவைச் சுட்டத் தகுந்த சொல் இல்லாத போது அக்குருத்தமைவைத் தாங்சி நிற்கும் பிற மொழிச் சொற்களை மொழிபெயர்க்கலாம். இதை கடன் மொழி பெயர்ப்பு (loan translation) என்று கூறுவர்.

Telephone - தொலைபேசி, University-- பல்கலைக்கழகம்

கடன்பெறல் (Brorrowing)

தகுந்த கலைச்சொல் இல்லாதபோதும் புதுச்சொல்லை ஆக்குவதில் சிரமம் ஏற்படும்போதும் மொழிபெயர்ப்பு சரியாக அமையாத போதும் பிற மொழிச் சொல்லை அதே கருத்தமைவுடன் கடன்வாங்கிக் கொள்ளலாம். நமது மொழியில் தத்சமம், தத்;பவம் என்ற அடிப்படையில் வடமொழிச் சொற்களைச் தமிழில் வழங்குவதுபற்றி நன்னுல் விரிவாகப் பேசுகிறழது. ஒரு மொழி மற்றொரு மொழியு[டன் தொடர்பு கொள்வது தவிர்க்க இயலாத வரலாற்றுக் கட்டாயமாகும்.

magnetic - மாக்னெடிக், crystal -கிரிஸ்டல்

ஒலிபெயர்ப்பு (Transliteration)

கலைச்சொற்களை ஆரம்பகால கட்டங்களில் ஒலி பெயர்ப்பு செய்யப்பட்டது. மொழி பெயர்ப்பும் அதற்கிணையாகச் செய்யப்பட்டது. கலைச் சொல்லாக்க முயற்சி பெருமளவில் பெருகப் பெருகத் தரப்படுத்தல் நிலை மேற்கொள்ளப்பட்டது. கலைச் சொல்லாக்க முதல் முயற்சி ஒலி பெயர்ப்பு எனின் மிகையாகாது.

Oxygen - ஆக்ஸிஜன், ஆக்சிசன், ஆக்ஸிசன்

தரப்படுத்தல் (Standardisation)

கலைச்சொல்லாக்கத்தில் கருத்தமைவுக்கு (உடிஇஉநிவ) தான் முக்கியத்துவம் தரப்பட வேண்டும். ஒரு கருத்தமைவைக் குறிக்கப் பல கலைச்சொற்கள் எழும்போது, வல்லுநர்களின் உதவியுடன் பொருத்தமான சொல்லை வரையறுப்பதைத் தரப்படுத்துதல் என்பர்.

1.ஆக்ஸிஜன், பிராணவாயு, உயிர்வளி

2.அணுசக்தி, அணுஆற்றல்

3.இரயில், புகைவண்டி, தொடர்வண்டி

பொருத்தமுடைமை (Appropriateness/efficiency)

ஒரு கருத்தமைவுக்குப் பல கலைச்சொற்களில் பொருத்தமான ஒன்றைத் தோ;ந்தெடுத்தல்.

Anatomy - சரீர இயல், உடலமைப்பியல், உடலியல், உடல் கூறு இயல்

ஏற்புடைமை (Adaptabllity)

கலைச்சொல்லில் பெருவழக்கினதாகக் கருதப்படுபவற்றை ஏற்றுக் கொள்ளலாம்.

joint action - கூட்டு நடவடிக்கை

joint statement - கூட்டு அறிக்கை

joint account - கூட்டு கணக்கு

சொற்சொட்டு, எளிமை (Economy/simpllcity)

சொற்கள் உச்சரிக்க எளிமையானவையாகவும் கேட்பதற்கு இனிய ஒசையுடையனவாகவும் இருக்க வேண்டும்.

மின்சார வாரியம் >மின்வாரியம்

மின்சாரத் தடை >மின்தடை

அஞ்சல் நிலையம் >அஞ்சலகம்

ஒருமைப்பாடு (Uniformity)

கலைச்சொற்களைத் தரப்படுத்தும்போதும் ஒருமைப்பாட்டைக் கவனிக்க வேண்டும்.

Anti biotic - உயிர்ப்பகை நோய், உயிர்முறி நுண்ணுயிரெதிலி

Anti body - முரணுடலி

பல்துறை நோக்கு (Inter disciplinary)

துறைக்கேற்பக் கலைச் சொல்லின் மொழியாக்கம் மாறுவதுண்டு.

Sub soil - அடி மண் (பொறியியல்)

sub collector - துணை ஆட்சியர் (நிர்வாகம்)

மொழித்தூய்மை (Language purity)

கலைச் சொல்லாக்கத்தில் மொழித்தூய்மைக்கு இடமில்லை என்பாருமுளர். சமஸ்கிருதச் சொல்லை நீக்கல மொழித்தூய்மையாகக் கருதப்படுகிறது.

பௌதீகம் >இயற்பியல்,

ரசாயனம் >வேதியியல்,

பிராணவாயு > உயிர்வளி,

சர்வகலாசாலை > பல்கலைக்கழகம்

உபஅத்யட்சகர் >துணைவேந்தர்

தற்போது ஆங்கிலச் சொல்லை நீக்கித் தமிழ்ச்சொல் இடம் பெறுவதும் உண்டு.

கவர்னர் > ஆளுநர்

கலெக்டர் > மாவட்ட ஆட்சியர்.

7. உருபொலியனியல் (Morphophoemics)

உருபொலியனியல் மாற்றம் (Morphophoemic Change)

உருபொலியனியல் என்பதற்கு morphophoemics என்பது ஆங்கில நிகனாகும். உருபொலியனியல் மாற்றம் என்பதை உருபொலியனியல் + மாற்றம் = உருபொலியனியல் மாற்றம் என்று பிரித்து பொருள்கொள்ளலாம். change என்ற ஆங்கிலச் சொல்லிற்கு மாற்றம் என்பது நிகரானச் சொல்லாகும். மாற்றம் என்பது உருபன்களில் ஏற்படுகிறது. உருபன்கள் ஒன்றோடொன்று சேர்ந்து பல்வேறு உருபனியல் அமைப்புகள் உருவாகின்றன. இவ்வாறு

சேரும் போது அவற்றிடையே மாற்றம் நிகழ்வது, அந்த சேர்க்கையால் பெறப்படும் வடிவத்தின் மூலம் தெரிகின்றது. இத்தகைய மாற்றங்கள் நிகழ்வதற்கு அவ்வுருபன்களில் இடம்பெறும் சில ஒலியன்கள் காரணமாவதோடு, அத்தகைய ஒலியன்கள் மாற்றத்திற்கும் உள்ளாகின்றன. இம்மாற்றங்களையெல்லாம் முறைபடுத்தியும் வரையறை செய்தும் விதிகளாக்கி விளக்கும் இயலே உருபொலியனியல் எனப்படும். உருபொலியனியல் மாற்றம் மூன்று வகைகளில் ஏற்படுகிறது.

1. புதிதாக ஒலியன் அல்லது ஒலியன்கள் மிகுதல்

2. உருபன்களில் இடம்பெற்றுள்ள ஒலியன் அல்லது ஒலியன்கள் குன்றல்

3. இடம்பெற்றுள்ள ஒலியன் அல்லது ஒலியன்களுக்கு மாற்றாக வேறொரு ஒலியன் அல்லது ஒலியன்கள் இடம்பெறல்

இத்தகைய மாற்றங்கள் உருபன்களுக்கு இடையேயும் தொடர்கள் அல்லது சொல் அமைப்புகளுக்கு இடையேயும் நிகழும். எடுத்துக்காட்டாக,

அ. பூ + கொத்து > பூங்கொத்து (-ங்- என்ற ஒலியன் புதிதாக மிகுந்து வந்துள்ளது)

மரம் + வோ; > மரவோ; (-ம் என்ற ஒலியன் நீக்கப்படுகிறது)

மண் + குடம் > மட்குடம் (இதில் -ண்- என்பது -ட்- எனப் பிரிதாகிறது)

ஆ. உருபன்கள் சோ;க்கையின் போது நிகழும் மாற்றம்

படகு + துறை > படகுத்துறை (-த்- மிகுந்து வருகிறது)

இ. தொடர் / சொல் அமைப்புச் சோ;க்கையின் போது நிகழும் மாற்றம்

வர + சொன்னான் > வரச் சொன்னான் (இதில் -ச்- என்பது மிகுந்து வருகிறது)
அவனை + கேட்டேன் > அவனைக் கேட்டேன் (இதில் -க்- என்பது மிகுந்து வந்துள்ளது)

புணர்ச்சி (Sandhi)

சொற்களின் எல்லைகளுக்கிடையிலும் உருபன்களின் எல்லைகளுக்கிடையிலும் ஏற்படக்கூடிய பரந்த ஒலிமாற்றங்கள் புணர்ச்சி அல்லது சந்தி எனப்படும். இம்மாற்றங்கள்

ஒலிகளின் சேர்க்கையை உட்படுத்தும். ஒலிமாற்றம் அடுத்துவருகின்ற ஒலி மூலமோ இலக்கண செயல்பாடு மூலமோ ஏற்படும். புணர்ச்சி பல மொழிகளில் ஏற்படுகின்றது; குறிப்பாக இந்திய மொழிகளின் ஒலியனியல் அமைப்பிலும் (சிறப்பாக சமஸ்கிருத மொழியில்) ஜெர்மானிக் மொழியின் ஒலியனியல் அமைப்பிலும் நிகழ்கின்றது. புணர்ச்சியை அகப்புணர்ச்சி அல்லது அகச்சந்தி, புறப்புணர்ச்சி புறச்சந்தி என வகைப்படுத்தலாம்.

அகப்புணர்ச்சி (Internal Sandhi)

அகப்புணர்ச்சி என்பதை அகம் + புணர்ச்சி = அகப்புணர்ச்சி என்று பிரித்து ஆயலாம். அகப்புணர்ச்சி என்பதன் ஆங்கில நிகரன் internal sandh என்பதாகும். சொற்களில் உள்ள உருபன் எல்லைகளில் ஏற்படும் ஒலிமாற்றம் அகச்சந்தி எனப்படும். இரண்டு உருபன்கள் அல்லது ஒரு சொல்லும் உருபனும் ஒன்றோடொன்று சேரும் பொழுது ஏற்படும் மாற்றமே அகப்புணர்ச்சி ஆகும். எடுத்துக்காட்டு: *பழம் + அத்து + ஐ > பழத்தை, கல் + ஆல் > கல்லால், ஓடு + இன் + ஆன் > ஓடினான்.* இவற்றில் இடம் பெற்றுள்ளவை ஒட்டுகள் யாவும் உருபன்களே; அதாவது தனிச்சொற்கள் அல்ல. எனவே இத்தகைய புணர்ச்சி அகப்புணர்ச்சி எனப்படும். இதில் இடம் பெறும் விதிகள் அகப்புணர்ச்சி விதிகளாகும்.

புறப்புணர்ச்சி (External Sandhi)

புறப்புணர்ச்சி என்பதை புறம் + புணர்ச்சி = என்று பிரித்து ஆயலாம். புறப்புணர்ச்சி என்பதற்கு external sandhi என்பது ஆங்கில நிகரனாகும். சொற்களின் எல்லகளில் ஏற்படும் உருபொலியனியல் மாற்றம் புறப்புணர்ச்சி எனப்படும். இது ஒரு சொல்லுடன் ஒரு சொல் அல்லது ஒரு தொடருடன் ஒரு தொடர் இணையும் போது ஏற்படும். எடுத்துக்காட்டாக, *படித்து + கிழித்தான் > படித்துக்கிழித்தான், சொல்லி + கொடுத்தான் > சொல்லிக்கொடுத்தான், வர + பார் > வரப்பார், அதனை + சொன்னான் > அதனைச் சொன்னான், அவனை + பார்த்தான் > அவனைப் பார்த்தான்.* இவற்றில் மேற்குறிப்பிட்டவாறு புணர்ச்சியால் உருபொலியன் மாற்றங்கள் எற்படுகின்றன.

இவ்விரண்டு புணர்ச்சிப் பிரிவுகளிலும் ஏற்படும் மாற்றங்களை விளக்க விதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

தோன்றல் விதி (Rule of Addition)

தோன்றல் விதி என்பதைத் தோன்றல் + விதி = தோன்றல் விதி என்று பிரித்து ஆயலாம். தோன்றல் விதி என்பதற்கு rule of addition என்பது ஆங்கில நினராகும். addition என்பது 'தோன்றல்' எனப் பொருள்கொள்ளப்படும். ஒரு சொல்லில் புதிதாக ஒன்று தோன்றுவதைத் தான் தோன்றல் என்கிறோம். rule என்ற ஆங்கிலச் சொல்லிற்கு 'விதி' என்பது நிகரான சொல்லாகும். வரையறுக்கப்பட்ட ஒன்றைத் தான் விதி என்கிறோம். புணர்ச்சியால் புதிய ஒலி தோன்றுவது தோன்றல் உருபொலியனியல் மாற்றமாகும். எடுத்துக்காட்டு: பூ + கொத்து > பூங்கொத்து, அப்பா + ஐ > அப்பாவை.

கெடுதல் விதி (Rule of Deletion)

கெடுதல் விதி என்பதற்கு 'rule of deletion' எனபது ஆங்கில நிகரனாகும். deletion என்பதற்கு 'கெடுதல்' தமிழ் நிகரனாகும். ஒரு சொல்லில் ஒன்று நீங்கி செல்வதைத் தான் கெடுதல் என்கிறோம். rule என்ற ஆங்கிலச் சொல்லிற்கு 'விதி' என்பது தமிழ் நிகரனாகும். வரையறுக்கப்பட்ட ஒன்றை தான் விதி என்கிறோம். புணர்ச்சியால் ஒலி கெடுவது கெடுதல் உருபொலியனியல் மாற்றமாகும். எடுத்துக்காட்டாக பின்வரும் அகப்புணர்ச்சியில் ஒலிகள் கெடும்.

கெடுதல் விதி 1: ம் > Ø

மரம் + வேர் > மரவேர்

பணம் + வேட்கை > பண்வேகை

கெடுதல் விதி2: உ > Ø

தண்டு + இல் > தண்டில்

வண்டு + ஐ > வண்டை

பேச்சுத் தமிழில் புறப்புணர்ச்சியில் பின்வரும் கெடுதல் விதிகள் வருவதைக் காணலாம்:

கெடுதல் விதி: ள் > Ø/ - #

எங்கள் + மகள் > எங்க மகள்,

கெடுதல் விதி: ல் > Ø/-#

வந்தால் + வருவேன் > வந்தா வருவேன்.

திரிதல் விதி (displacement rule)

திரிதல் விதி என்பதன் ஆங்கில நிகரன் 'displacement rule' ஆகும். rule என்ற ஆங்கிலச் சொல்லிற்கு 'விதி' என்பது தமிழ் நிகரனாகும். வரையறுக்கப்பட்ட ஒன்றைத் தான் விதிகள் என்கிறோம். இரண்டு சொற்கள், உருபன்கள் போன்றவை ஒன்றோடொன்று இணையும் நிலையில் அவற்றிலுள்ள சில ஒலியன்கள் மாற்றம் பெறுகின்றன. அதாவது, ஒன்றிற்கோ இரண்டிற்கோ பதிலாக வேறு ஒரு ஒலியனோ சில ஒலியன்களோ வந்தமைகின்றன. இதைத் திரிதல் என்கிறோம். மெய்யொலியனே திரிந்து வழங்குவதால் இதனை மெய்பிரிதாதல் என்கிறோம். பிவரும் விதிகள் திரிதல் விதிகளாகும்.

திரிதல் விதி: ன் > ற்/-த்

பொன் + தொடி > பொற்றொடி,

திரிதல் விதி: ந்த் > ண்ட்/-ள், கெடுதல் விதி: ள் > Ø/-ண்ட்

புரள் + ந்த் + ஆன் > புரள்-ண்ட்-ஆன் > புரண்டான்

ஓரினமாதல் (Assimilation)

ஓரினமாதல் என்பதற்கு ஆங்கில நிகரன் assimilation என்பதாகும். உருபன்கள் ஒன்றோடொன்று சேரும் போது அவற்றில் இடம்பெறும் ஓர் ஒலியனோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஒலியன்களோ அதற்கு முன்னரும் பின்னரும் வரும் ஒலியனைத் தாக்கத்திற்கு உள்ளாக்கி, அதனுடைய ஒலியன் பண்பைப் பெறச் செய்யுமானால் அத்தகைய மாற்றத்தை ஓரினமாதல் என்கிறோம். தமிழி மொழியில் காணப்படும் மெய்பிரிதாதல், திரிதல் போன்ற மாற்றங்கள் ஓரினமாதல் முறையில் அமைவதைக் காண்கிறோம். எடுத்துக்காட்டாக, *பொன்* + *குடம்* > *பொற்குடம்* என்ற உருபொலியனையல் மாற்றத்தில் *-ன்* > *-ற்* என மாற்றம் பெறுகிறது. இதற்குக் காரணம் வருமொழியிலுள்ள வல்லின எழுத்தாகும். இதன் தாக்கத்தால் நிலை மொழியிலுள்ள '*ன்*' என் மூக்கொலியன் 'ற்'என்ற வல்லொலியனாக மாற்றம் பெறுகிறது. இதுபோன்று *உருள்* + *ந்த்* + *அது* > *உருண்டது* என்ற உருபொலினியல் மாற்றத்தில் *-ந்த்-* என்பது *–ண்ட்-* என மாற்றம் பெறுகிறத. இதற்குக் காரணம் நிலை

மொழியிலுள்ள *'ள்'* என்ற வளைநா மருங்கொலியனாகும். இதன் தாக்கத்தால் *-ந்த்-* என்ற பல்லொலியன்களின் சேர்க்கை *–ண்ட்-* என்ற வளைநா ஒலியன்களாக மாற்றம் பெறுகின்றன.

ஓரினமாக்கத்தை முன்வழி ஓரினமாக்கம், பின்வழி ஓரினமாக்கம் இருவகையாகப் பிரிக்கலாம்.

முன்வழி ஓரினமாக்கம்

ஒரு முன்னால் வருகின்ற ஒலியன்களுக்கு ஏற்ப பின்னால் வரும் வேரொரு ஒலியன் வேறுபடுமாயின் அது முன்வழி ஓரினமாக்கம் எனப்படும்.

எ.கா.: கண்+த்+ஆன் >கண்டான், பெறு + த் +அன் >பெற்றான்.

கண்+த்+ஆன் எடுத்துக்காட்டில் த் என்ற இறந்தகால உருபு பல் அடைப்பொலியாகும். இது அதற்கு முன் வரும் ண் என்ற வளைந்நா மூக்கொலியால் ட் என்ற வளைநாஒலியாக மாறும். இதுபோன்றே பெறு + த் +அன் என்பதில் முன்னர் வரும் ற் என்ற ஈற்று அடைப்பொலியால் த் என்ற பல் அடைப்பொலி ஈற்று அடைப்பொலியாக மாறும். இவ்வாறு முன்வரும் ஒலியனால் பின்வரும் ஒலியன் பெறும் மாற்றத்தை முன்வழி ஓரினமாக்கம் எனலாம்.

பின்வழி ஓரினமாக்கம்

ஒரு பின்னால் வருகின்ற ஒலியன்களுக்கு ஏற்ப முன்னால் வரும் வேரொரு ஒலியன் வேறுபடுமாயின் அது பின்வழி ஓரினமாக்கம் எனப்படும்.

கேள்+ப்+ஆன் >கேட்பான், வேள்+ப்+ஆன்

கேள்+ப்+ஆன், வேள்+ப்+ஆன் என்பவற்றில் பின்னால் வரும் ஈரிதழ் அடைப்பொலி முன்னால் வரும் வளைநா ஒலியான ள் என்பதை ட் என்ற அடைப்பொலியாக மாற்றும். இவ்வாறு பின்வரும் ஒலியனால் முன்வரும் ஒலியன் பெறும் மாற்றத்தை பின்வழி ஓரினமாக்கம் எனலாம்.

பரஸ்பர ஓரினமாக்கம்

ஒலியன்கள் ஒன்றையொன்று ஓரினமாக்கம் செய்தால் அதுபர்ஸ்பர ஓரினமாக்கம் எனப்படும். அதாவது முன்னால் வரும் ஒலியன் பின்னால் வரும் ஒலியனையும் பின்னால்

வரும் ஒலியன் முன்னால் வரும் ஒலியனையும் ஒரு நேர்வில் மாற்றம் செய்தால் அது பரஸ்பர் ஓரினமாக்கம் எனப்படும்.

எ.கா. கல்+தாழை > கற்றாழை, கல் + தூண் > கற்றுன்

முன்னால் வரும் ல் என்ற அண்பல் ஒலியன் பின்னால் வரும் த் என்ற பல்லொலி ற் என்ற அண்பல் ஒலியனாக முன்வழி ஓரினமக்கத்தால் மாற்றும். இந்த ற் என்ற அண்பல் ஒலியன் முன்னர் வரும் ல் என்ற அண்பல் ஒலியனை ற் என்ற என்ற அண்பல் ஒலியனாக பின்வழி ஓரினமாக்கத்தால் மாற்றும். இவ்வறு ஒலியன்கள் ஒன்றையொறு ஓரினமாக்கும் செயற்பாங்கு பரஸ்பர ஓரினமாக்கம் எனப்படும்.

தொடர்வழி ஓரினமாக்கம்

அத்தடுத்து வருகின்ற ஒலியன்களின் ஓரினமாக்கம் தொடர்வழி ஓரினமாக்கம் எனப்படும்.

நன்+செய்> நஞ்செய், புன்+செய்> புன்செய்

ன் என்பது ச் என்பது அடுத்து வந்து அதாவது தொடர்ந்து வந்து ஓரினமாக்கதிற்கு ஆளாவதால் இது தொடர்வழி ஓரினமாக்கம் எனப்படும்.

சேய்மைவழி ஓரினமாக்கம்

சில நேர்வுகளில் ஒலியன்கள் தூரத்தில் அதாவது சேய்மையில் வந்து ஓரினமாக்கம் செய்யும். இத்தகைய ஓரினமாக்கம் சேய்மைவழி ஓரினமாக்கம் எனப்படும்.

ORuss. to per'voe > toper' > Russ. teper' 'now'

OFr. sercher (loaned into E. as search) > Fr. Chercher

பழம் ரஷ்ய மொழிச் சொல் toper' என்பது teper என மாறுவது சேய்மைவழி ஓரினமாக்கமாகும். இதில் சேய்மையில் வரும் e அதற்கு முந்திய அசையில் வரும் o என்பதை e என மாற்றுகின்றது. இது போன்று பழம் பிரஞ்சு மொழிச் சொல் searcher என்பது Chercher என மாறுவது சேய்மைவழி ஓரினமாக்கமாகும். இதில் இரண்டாம் அசையில் வரும் ch என்ற மெய்யொலி s என்ற மெய்யொலியை ch என மாற்றுவதும் சேய்மைவழி ஓரினமாக்கமாகும்.

முழு ஓரினமாக்கமும் பகுதி ஓரினமாக்கம்

ஓரினமாக்கத்தின் அளபு அடிப்படையில் அதை முழு ஓரினமாக்கம், பகுதி ஓரினமாக்கம் எனப் பிரிக்கலாம். முழு ஓரினமாக்கதில் ஓரினமாக்கம் செய்யும் ஒலியன் ஓரினமாக்கப்படும் ஒலினை முற்றிலும் தன்னைப் போன்று மாற்றும். இத்தகைய ஓரினமாக்கம் எனப்படும். எடுத்துக்காட்டாக கண் + நீர் >கண்ணீர் என்பதில் ண்+ந் > ண்ண என மாறுவதும், பொன்+தாமரை > பொற்றாமரை என்பதி ன் + த் > ற்ற் என மாறுவதும் முழு ஓரினமாக்கமாகும்.

பகுதி ஓரினமாக்கத்தில் ஓரினமாக்கம் செய்யும் ஒலியன் ஓரினமாக்கப்படும் ஒலியனை முற்றிலும் தன்னைபோன்று மற்றாமல் பகுதி மாற்றும் ஓரினமாக்கம் பகுதி ஓரினமாக்கம் எனப்படும். எடுத்துக்காட்டாக மரம் + கள் > மரங்கள் என்பதில் போது ம் > ங் என மாறுவது பொன் +காசு >பொற்காசு என்பதில் ன் > ற் என மாறுவதும் பகுதி ஓரினமாக்கமாகும்.

வேறினமாதல் (**Dissimilation**)

வேறினமாதல் என்பதற்கு நிகரானச் ஆங்கிலச் சொல் dissimilation என்பதாகும். இரண்டு உருபன்கள் ஒன்றோடொன்று சேரும் போது அவற்றில் இடம் பெறும் ஒலியனோ அல்லது ஒலியன்களோ அவற்றிற்கு முன்னரும் பின்னரும் வரும் ஒலியன்களின் தாக்கத்திற்கு உள்ளாகாமல் வேற்றினமாக மாறி அமையும். இதனையே வேறினமாதல் என்கிறோம். எடுத்துக்காட்டு: *முள் + தீது > முஃறீது கல் + தீது > கஃறீது.* (ஆழ + புழா) ஆழப்புழா என்பது ஆலப்புழா (ஆழ + புழா) என மறுவதும் வேறினமாதல் ஆகும்.

உருபன்களின் அமைப்பொழுங்கு (morphotactics)

morphotactics என்ற ஆங்கிலக் கலைசொல்லுக்குத் தமிழ் நிகரன் உருபன்களின் அமைப்பொழுங்கு என்பதாகும். ஒரு சொல்லில் வரும் உருபன்களின் வரிசை அமைப்பு உருபன்களின் அமைப்பொழுங்கு எனப்படும். தமிழில் பெயர்ச்சொற்களில் உருபன்களின் அமைப்பொழுங்கு பின்வருமாறு அமையும்:

பெயர் (+ எண்) (+வேற்றுமை)

எ.கா. கை-கள்-ஐ, மரங்-கள்-ஐ

வினைமுற்றுக்களில் உருபன்களின் அமைப்பொழுங்கு பின்வருமாறு அமையும்:

வினை + காலஒட்டு + வினைமுற்று விகுதி

எ.கா. படி-த்த்-ஆன், செய்-த்-ஆன்

ஒவ்வொரு மொழியும் தனித்தன்மையான உருபனியல் அமைப்பொங்கைக் கொண்டிருக்கும்.

பகுநிலை மொழி (Analytic language)

பகுநிலை மொழி என்பதைப் பகுநிலை + மொழி = பகுநிலை மொழி என்று பிரித்துப் பொருள்கொள்ளலாம். பகுநிலை மொழி என்பதற்கு analytic language என்பது ஆங்கில நிகரனாகும். analytic என்ற ஆங்கிலச் சொல்லிற்கு 'பகுநிலை' என்பது நிகரான சொல்லாகும். ஒரு வாக்கியத்தை பகுதியாக பிரித்தலைத் தான் பகுநிலை என்கிறோம். language என்ற ஆங்கிலச் சொல்லிற்கு 'மொழி' என்பது நிகரானச் சொல்லாகும். கருத்தையும் உணர்வையும் வெளிப்படுத்துவதற்கு உதவும் ஒலிக் குறியீட்டுத் தொகுதி மொழி எனப்படும். தொடரியல் உறவுகள் பயன்பாட்டுச் சொற்களாலும் சொல் வரிசை முறையினாலும் காண்பிக்கப்படும் மொழி பகுநிலை மொழி எனப்படும். எடுத்துக்காட்டு: சீனமொழி.

5.8.சொல் வகுப்புகள் (Word classes)

சொல் வகுப்புகள் என்பதன் ஆங்கில நிகரன் 'Word classes' ஆகும். = சொல் வகுப்புகள் என்பதை சொல் + வகுப்புகள் = சொல் வகுப்புகள் எனப் பிரித்தறியலாம். இதை மரபு ஆங்கில இலக்கணங்கள் parts of speech என்றும் கூறும். மரபு இலக்கணங்கள் பெரும்பன்மையும் சொல்வகுப்புகளை பொருண்மை (meaning) மற்றும் செயல்பாடு (function) அடிப்படையில் விளக்கும். எடுத்துக்காட்டாக, பெயர் என்பதை ஒரு இடம், நபர் அல்லது பொருளின் பெயர் என்று விளக்கும் (இவ்விளக்கம் பொருண்மை அடிப்படையிலானதாகும்; பெயரடை என்பதி ஒரு பெயரை அடைசெய்யும் சொல் என்று விளக்கும் (இது செயல்பாடு அடிப்படையிலானதாகும்); வினை என்பதை செயலை உணர்த்தும் சொல் என விளக்கும் (இது பொருண்மை அடிப்படையிலானதாகும்); வினையடை என்பதை ஒரு வினையை, பெயரடையை அல்லது மற்றொரு வினையடையை அடைசெய்யும் சொல் என விளக்கும் (இது செயல்பாடு அடிப்படையிலானதாகும்).

மொழியியலில் சொற்கள் வடிவம் (form) மற்றும் செயல்பாடு (function) அடிப்படையில் வகுப்புகளாகப் பகுக்கப்படும். பொருண்மைக்கும் இலக்கணவகுப்புகளுக்கும் இடையில் உள்ள தொடர்பு முக்கியம் என்றாலும் பெருண்மைக் வகுப்புகளுக்கும் இலக்கணவகுப்புகளுக்கும் இடையேயுள்ள தொடர்பு குறைபாடானது. என்வே சொற்களை அவற்றின் வடிவம் மற்றும்

செயல்பாடு அடிப்படையில் வகைபாடு செய்து பின்னர் வடிவுக்கும் பொருண்மைக்கும் உள்ள தொடர்பை ஆய்வது சிறத்ததாகும்.

ஆங்கிலத்தில் பெயர் என்று அழைக்கப்படும் வகுப்பு பின்வருமாறு அடையாளப்படுத்தப்பட்டிருக்கும்:

1. பன்மைக்கான திரிபு: cats, dogs, etc. - உருபனியல் வடிவங்கள்
2. உடைமை வேற்றுமைக்கான திரிபு: Kannan's, Kumar's, etc.-உருபனியல் வடிவங்கள்
3. சில எடுத்துக்காட்டான ஆக்க ஒட்டுக்கள்: agree-ment, nobi-lity, etc.- உருபனியல் வடிவங்கள்
4. அசை அழுத்த அமைப்பொழுங்கு: 'object (noun) - ob'ject (verb), 'permit (noun) - pe'rmit (verb), etc. - ஒலியன் வடிவங்கள்
5. வினைக்கு முன்பான இருப்பிடம் - தொடரியல் செயல்பாடு
6. அடைகொளி அடைகள் (determiner) என்ற ஒரு வகுப்பு சொற்களுக்குப் பின்னர் வருதல்: a book, this book, etc. -தொடரியல் செயல்பாடு
7. எழுவாய்க்கும் பயனிலைக்கும் இடையிலான உடன்பாட்டு அமைப்பொழுங்கு. தொடரியல் செயல்பாடும்

பொருளடக்கச் சொற்களுக்கும் (content words) செயல்பாட்டுச் சொற்களுக்கும் (function words) வேறுபாடு காணவேண்டும். பெருளடக்கச் சொற்களுக்கு சொல்சார் பொருண்மைகள் (lexical meaning) இருக்கும்; ஆனால் செயல்பாட்டுச் சொற்கள் இலக்கண உறவுகளைச் (grammatical relationships) சுட்டிக்காட்டும். பெயர்கள், பெயரடைகள், வினையடைகள் என்பன யாவும் பொருளடக்கச் சொற்களாகும்; மாறாகப் பெயர்ச்சொல் அடைகொளி அடைகள் (determiners), துணைவினைகள் (auxiliaries), மிகைபடுத்திகள் (intensifiers) (very, மிக), வினாச் சொற்கள் (question words or interrogators), இணைப்பான்கள் (co-ordinators) (மற்றும், அல்லது), முன்னுருபுகள் (preposition) (in, on, under), பின்னுருகள் (postpositions) (முன், பின், அடியில்), உட்படுத்திகள் (subordinators), வாக்கியப் பிணைப்பானகள் (sentence lingkers) (however, therefore) என்பன செயல்பாட்டுச் சொற்களாகும்.

பின்வருவன போன்ற சட்டகங்களைச் சொற்களை வகைப்பாடு செய்வதற்குப் பயன்படுத்தலாம்: ஆங்கிலத்தில் 'the …is/was good' என்ற சட்டகத்தைப் பெயர்சொற்களைக் கண்டுகொள்ளப் பயன்படுத்தலாம்.

தரப்பட்ட சொல்வகுப்பில் உள்ள சொற்களை மேலும் துணை வகைப்பாடுகளாகப் பாகுபடுத்தலாம். எடுத்துகாட்டாக ஆங்கிலத்தில் வினை என்ற வகுப்பைச் செய்படுபொருள்

குன்றிய வினைகளாகவும் (intransitive verbs) செயப்படுபொருள் குன்றாத வினைகளாகவும் (transitive verbs) பாகுபாடு செய்யலாம்.

வினையைப் போன்று பெயர்களையும் மேலும் எண்ணக்கூடியவை (countable), எண்ண இயலாதவை (uncountable) என்ற துணைவகுப்புகளாகப் பாகுபாடு செய்யலாம். பொருண்மை அடிப்படையில் பெயர்களை அருவப் பெயர்கள் (abstract nouns), பருமைப் பெயர்கள் (concrete nouns) எனப் பாகுபாடு செய்யலாம். ஆங்கிலத்தில் வினையடைகளை -ly (slowly, quickly, highly) என்பதால் இறுதியுறும் வினையடைகள், -ly என்பதால் இறுதியுறாதவை (fast, high), எனப் பாகுபடுத்தலாம்.

சொல்வகுப்புகளைப் பின்வருமாறு காட்டலாம்:

பெயர்	**வினை**	**பெயரடை**	**முன்னுருபு**	**இணைப்புக் கிளவி**	**மாற்றுப் பெயர்**	**அடைகொளி அடை**
பையன்	செய்	நல்ல	பின்னால்	மற்றும்	அவன்	அந்த
பெண்	வை	கெட்ட	முன்னால்	அல்லது	அவள்	இந்த
குழந்தை	எடு	சிறிய	அடியில்	ஆனால்	அவர்	
நாய்	பிடி	பெரிய	கீழே		நாம்	
மேசை	பேசு	சூடான	மேலே		நீ	

வாக்கியங்களைப் பின்வருமாறு சொல்வகுப்புகளின் வரிசையாக அமைத்துக் காட்டலாம்.

பெயர் மாற்றுப் +பெயர் + வினை: குமார் அவனைப் பார்த்தான்

அந்த பையன் அந்தப் பெட்டிகளை அந்த சிறிய மேசையில் வைத்தான்: அடைகொளி அடை +பெயர் + அடைகொளி அடை + பெயர் + அடைகொளி அடை + பெயர்

இவ்வாறு வாக்கியங்களை உருவாக்க பல வாய்பாடுகளை உருவாக்கலாம்.

முற்சுட்டு (Anaphora)

முற்சுட்டு என்பதற்கு ஆங்கில நிகரன் anaphora ஆகும். இரட்டிப்பைத் தவிர்ப்பதற்காக பெயரைச் சுட்டிவரும் சொல் முற்சுட்டு எனப்படும். எடுத்துக்காட்டு *இராமன் தன்*

மனைவியுடன் கானகம் சென்றான். இங்கு *தன்* என்ற சொல் *ராமன்* என்பதைச் சுட்டி நிற்பதால் முற்சுட்டு எனப்படும்.

பெயர்

பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் ஆகும். உருபனியல் அடிப்படையில் வேற்றுமை உருபுகளையும், பால்-எண்-இட உருபுகளையும் ஏற்று வரும். தொடரியல் அடிப்படையில் ஒரு தொடரின் எழுவாயாக இருக்கும். பெயர்ச்சொல்லை ஒன்பது வகையாகப் பிரிக்கலாம். அவையாவன:

1. பொதுப்பெயர்
2. இயற்பெயர்/சிறப்புப் பெயர்
3. சினைப்பெயர்
4. முறைப்பெயர்
5. விரவுப்பெயர்
6. சுட்டுப்பெயர்
7. வினாப்பெயர்
8. மூவிடப் பெயர்
9. எண்ணுப்பெயர்
10. தொழிற்பெயர்

பொதுப்பெயர்: பொதுப்பெயர் பொதுவான பண்பு உடையது. ஒருமை,பன்மை பாகுபாடு உடையது.

எ.கா.

வேப்ப மரம், பாம்பு, புளிய மரம்

சிறப்புப் பெயர்: ஒரு குறிப்பிட்ட பெயரைச் சுட்டும். ஒருமை, பன்மை பாகுபாடு கிடையாது.

எ.கா.

கண்ணன், கங்கை, காவிரி, மதுரை

சினைப்பெயர்:சினைப்பெயர் என்பது உறுப்பின் பெயர். இதற்கு கிளை, கை, கால் ஆகியன தக்க சான்றுகளாகும்.

எ.கா.

செங்கால் நாரை, சிறுகண் யானை, மலைத்தோள்

முறைப்பெயர்: உறவைக் குறிக்கின்ற பெயர்கள் முறைப் பெயர்களாகும். பன்மை உருபைப் பெற்றுவரும்.

எ.கா.

அண்ணன்மார், தம்பிமார், தாய்மார்

விரவுப்பெயர்: விரவுப்பெயரைப் பொதுப்பெயர் என்றும் அழைப்பர். விரவுப்பெயர் உயர்திணைக்கும், அஃறிணைக்கும் பொதுவாக வரும். மூவிடத்துக்கும் பொதுவாக வரும் விரவுப்பெயர்களும் உண்டு.

எ.கா.

அண்ணன் வந்தான் - உயர்திணை

அண்ணன் வந்தது - அஃறிணை

சுட்டுப்பெயர்: ஒரு பொருளைச் சுட்டிக்காட்டப் பயன்படுவது சுட்டுப்பெயர்கள். அகரம், இகரம், உகரம் ஆகியவை சுட்டுக்கள் ஆகும்.

அகரம்- தூரத்திலுள்ள பொருளையும்

இகரம்- அண்மையிலுள்ள பொருளையும்

உகரம்- நடுவிலுள்ள பொருளையும் சுட்டும்.

இவற்றில் உகரம் வழக்கிழந்து விட்டது. இவை மரபிலக்கணங்களில் மட்டுமே கூறப்பட்டுள்ளது. தற்பொழுது அவன், இவன் என்பவை மட்டும் சுட்டுப் பெயர்களாகக் குறிப்பிடப்படுகின்றது.

வினாப்பெயர்கள்: இப்பெயர்கள் எ, ஏ, யா என்ற அடிச்சொற்களிலிருந்து உருவாகின்றன. எடுத்துகாட்டாக யார், யாது, எவன், எது போன்ற சொற்கள்வினாப்பெயர்களாகும்.

மூவிடப்பெயர்கள்

ஒரு பெயருக்கு நேர் பெயராக அமையாமல் அவற்றிற்குப் பதிலாக நின்று பெயரை உணர்த்தும் சொற்களும் உண்டு. அவற்றை இடப்பெயர்கள் அல்லது பதிலிடுப்பெயர்கள் எனலாம். எடுத்துக்காட்டாக,

கண்ணன் வந்தான். அவன் நாளைக்கு ஊர் திரும்புகிறான்.

இவ்வாக்கியத்தில் கண்ணன் என்ற பெயருக்குப் பதிலாக அவன் என்ற பெயர் இடம்பெறுகிறது. இவற்றைத் தன்மை, முன்னிலை, படர்க்கை என்று மூவகையாகப் பிரிக்கலாம். தன்மை மற்றும் முன்னிலை இடப்பெயர்கள் ஒருமை, பன்மை மாறுபாடு மட்டுமே உண்டு. இவையிரண்டும் பால் காட்டுவதில்லை. வேற்றுமை உருபு ஏற்கும் பொழுது இவற்றின் வடிவம் திரியும்.

தன்மை பெயர்

தன்மை ஒருமை: நான், யான், என், எம்

தன்மைப் பன்மை: நாம், நாங்கள், நம், எங்கள்

முன்னிலைப் பெயர்

முன்னிலை ஒருமை நீ , நீயிர், நும்

முன்னிலை ஒருமைத் திரிபு: உன், உம்

முன்னிலைப் பன்மை: நீங்கள்

முன்னிலைப் பன்மை திரிபு: உங்கள்

படர்க்கைப் பெயர்

அ, இ என்ற சுட்டுகளுடன் -அன், -அள், -அர், -து, -வை போன்ற பால், எண் காட்டும் உருபுகள் சேர படர்க்கைப் பதிலிடுப்பெயர்கள் உருவாகின்றன.

ஆண்பால் ஒருமை

அவன்

இவன்

பெண்பால் ஒருமை

அவள்

இவள்

பலர்பால்

அவர்

இவர்

பலவின்பால்

அவை

இவை

ஒன்றன் பால்

இது

அது

இவை தவிர தான், தாம், தாங்கள் போன்றவையும் படர்க்கைப் பதிலிடுப் பெயர்களாகப் பயன்படுத்தப்படுகின்றன.

எ.கா.

அவன் தன்னைப் பற்றிப் பெருமையாகக் குறிப்பிட்டான்.

அவர்கள் தங்களுக்கு தெரிந்ததைச் சொன்னார்கள்.

அவர் தமது வீட்டிற்குச் சென்றார்.

இன்றைய வழக்கில் தாங்கள் என்பது முன்னிலைப் பொருண்மையிலும் பயன்படுத்தப்படுகிறது. இத்தகைய பயன்பாடு குறிப்பிட்ட சமுதாயச் சூழலில் மட்டும் காணப்படுகிறது.

எ.கா.

தாங்கள் தான் இதனைப் பார்த்துச் செய்யவேண்டும்.

தாங்கள் வீட்டிற்கு வருகிறீர்களா?

எண்ணுப்பெயர்கள்

எண்ணுப்பெயர்கள் இரண்டு வகைப்படும். ஒன்று எண்ணல் அளவைப்பெயர், மற்றொன்று எண்ணுமுறைப்பெயர். எடுத்துக்காட்டாக, ஒன்று, இரண்டு, மூன்று என எண்ணுவதற்கு உரியவை எண்ணல் அளவைப்பெயர்கள்.

ஒன்றாவது ஒன்றாம்

இரண்டாவது இரண்டாம்

மூன்றாவது மூன்றாம்

என வருபவை எண்ணுமுறைப் பெயர்கள். அவை அடையாகப் பெயர்ச்சொற்களுக்கு முன்னர் வரும்.

எ.கா.

ஒன்றாவது வீடு

மூன்றாம் வீடு

தொழிற்பெயர்

வினையை அடிச்சொல்லாகக் கொண்டு சில பெயராக்க உருபன்கள் அவற்றோடு சேரும் போது பெறப்படுபவை தொழிற்பெயர்களாகும். மொழிகளில் இது போன்ற பெயராக்க உருபன்கள் பல உள்ளன. எடுத்துக்காட்டாக, தமிழ் மொழியில் -அல், -தல், -அம், -வி, -ப்பு, -வை, -கை, -தி போன்றவை வினையடிகளோடு சேரும்போது தொழிற்பெயர்கள் உருவாகின்றன. அவை பின்வருவன போன்றவையாகும்.

செய்+அல் > செயல்

சா+தல் > சாதல்

ஓடு+அம் > ஓட்டம்

கேள்+வி > கேள்வி

செய்+கை > செய்கை

பார்+வை > பார்வை

மற+தி > மறதி

வினையாலணையும் பெயர்

தமிழ் போன்ற மொழிகளில் உடன்பாட்டு மற்றும் எதிர்மறைப் பெயரெச்ச அமைப்போடு படர்க்கைப் பதிலிடுப் பெயர்களான அவன், அவள், அவர், அவர்கள், அது, அவை போன்றவற்றைச் சேர்க்கும் நிலையில் உருவாகும் பெயர்கள் வினையாலணையும் பெயர்கள் எனப்படுகின்றன. பின்வருவன வினையாலணையும் பெயர்களாகும்.

1. உடன்பாட்டு அமைப்பு

படித்த + அவன் > படித்தவன்

ஓடுகிற + அவன் > ஓடுகிறவன்

2. எதிர்மறை அமைப்பு

ஆடாத + அவன் > ஆடாதவன்

நடக்காத + அவர் > நடக்காதவர்

மாற்றுப்பெயர்கள் அல்லது பதிலீட்டுப் பெயர்கள்

பதிலிடுப் பெயர்கள் மொழிகளின் அடிப்படைச் சொற்களாகக் கருதப்படும். ஒரு மொழியின் வரலாற்றில் இவை மிக முக்கியமான இடத்தைப் பெறும். பதிலிடுப்பெயர்கள் பொதுவாகச் சிறப்புப் பெயர்களைப் போலவே உள்ளன. சிறப்புப்பெயர்கள் குறிப்பிட்ட ஒருவரை அல்லது ஒன்றைக் குறிப்பது. பதிலிடுப் பெயர்கள் பெயரடைகளை ஏற்று வருவதில்லை. பெரிய நான், பெரிய நீ, பெரிய அவன் என்று கூற முடியாது. இதைப் போன்றே, என்னுடைய அவன், என்னுடைய நீ, பெரிய அவன் போன்று கூற முடியாது. ஐந்து அவன், ஐந்து நீ போன்றவையும் இத்தகையது.

அஃறிணைப் பெயர்: அஃறிணைப் பெயர் என்பது உயர்திணை அல்லாத உயிரற்ற பொருள்களைக் குறிப்பதாகும். இது, அது போன்றவை அஃறிணைப் பெயர்கள் ஆகும்.

உயர்திணைப்பெயர்: ஆண்பால், பெண்பால், பலர்பால் ஆகிய மூன்றுக்கும் பொதுவானது உயர்திணைப் பெயராகும். எ.கா. அவன், அவள், அவர்

உயிர்ப்பெயர் (**Animate noun**)

உயிர்ப்பெயர் என்பதன் ஆங்கில நிகரன் '**animate noun**' ஆகும். உயிர்ப்பெயர் என்பதை உயிர் + பெயர் = உயிர்ப்பெயர் என்று பிரிந்து அறியலாம். animate என்ற ஆங்கிலச் சொல்லிற்கு உயிர் என்பது நிகரானச் சொல்லாகும். noun என்ற ஆங்கிலச் சொல்லிற்கு 'பெயர்' என்பது நிகரான சொல்லாகும். ஒருவரிடமிருந்து மற்றொருவரை அல்லது ஒன்றிலிருந்து மற்றொன்றை வேறுபடுத்தித் தெரிந்து கொள்ளவும் பேச்சில் குறிப்பிடவும் பயன்படுத்தும் அடையாளச் சொல் பெயர் எனப்படும். உயிருள்ள ஒருவரை அல்லது ஒன்றைக் குறிக்கும் சொல் உயிர்ப்பெயர் எனப்படும். எடுத்துக்காட்டு *மன்னன், வேங்கை, மயில்.*

தொகுதிப்பெயர் (**Collective noun**)

தொகுதிப்பெயர் என்பதன் ஆங்கில நிகரன் 'Collective noun' என்பதாகும். தொகுதிப்பெயர் என்பதைத் தொகுதி + பெயர் = தொகுதிப்பெயர் என்று பிரித்து அறியலாம். 'Collective' என்ற ஆங்கிலச் சொல்லிற்கு 'தொகுதி' என்பது நிகரான சொல்லாகும். தொகுத்து உருவாக்கப்பட்டதைத் தான் தொகுதி என்கிறோம். noun என்ற ஆங்கிலச் சொல்லிற்கு பெயர் என்பது நிகரான சொல்லாகும். ஒருவரிடமிருந்து மற்றொருவரை அல்லது ஒன்றிலிருந்து மற்றொன்றை வேறுபடுத்தித் தெரிந்து கொள்ளவும் பேச்சில் குறிப்பிடவும் பயன்படுத்தும் அடையாளச் சொல் பெயர் எனப்படும். பலரின் அல்லது பலவற்றின் தொகுதியைக் குறிக்கும் பெயர் தொகுதிப்பெயர் எனப்படும். எடுத்துக்காட்டு மந்தை, படை.

பொதுப்பெயர் (**Common noun**)

பொதுப்பெயர் என்பதன் ஆங்கில நிகரன் '**Common noun**' என்பதாகும். பொதுப்பெயர் என்பதைப் பொது + பெயர் = பொதுப்பெயர் என்று பிரித்து ஆயலாம். **Common** என்ற ஆங்கிலச் சொல்லிற்கு 'பொது' என்பது நிகரான சொல். பெரும்பாலானவற்றுக்கு பொருந்துவதாக அமைவது பொது எனப்படும். **noun** என்ற ஆங்கிலச் சொல்லிற்கு 'பெயர்' என்பது நிகரான சொல்லாகும். ஒருவரிடமிருந்து மற்றொருவரை அல்லது ஒன்றிலிருந்து மற்றொன்றை வேறுபடுத்தித் தெரிந்து கொள்ளவும் பேச்சில் குறிப்பிடவும் பயன்படுத்தும் அடையாளச் சொல் பெயர் எனப்படும். ஒருவரை அல்லது ஒன்றைக் குறிப்பிட்டுக் கூறாது பொதுவாகக் கூறும் பெயர் பொதுப்பெயர் எனப்படும். எடுத்துக்காட்டு *சிறுவன், பசு.*

நுண்மைப் பெயர்ச்சொல் (Abstract noun)

நுண்மைப் பெயர்ச்சொல் என்பதன் ஆங்கில நிகரன் 'abstract noun' என்பதாகும். நுண்மைப் பெயர்ச்சொல் என்பதை நுண்மை + பெயர்ச்சொல் = நுண்மைப் பெயர்ச்சொல் என்று பிரித்து அறியலாம். abstract என்ற ஆங்கிலச் சொல்லிற்கு 'நுண்மை' என்பது நிகரான சொல்லாகும். கண்ணுக்குப் புலப்படாத வகையில் மிகச் சிறியதாக இருப்பது நுண்மை எனப்படும். noun என்ற ஆங்கிலச் சொல்லிற்கு பெயர்ச்சொல் என்பது நிகரான சொல்லாகும். நுண்மைப் பொருட்களைக் குறிப்பிடும் பெயர்ச்சொல் நுண்மைப் பெயர்ச்சொல் எனப்படும். எடுத்துக்காட்டு: *மகிழ்ச்சி, பகை.*

குறிப்புப் பெயர் (Appellative noun)

குறிப்புப் பெயர் என்பதன் ஆங்கில நிகரன் 'appellative noun' என்பதாகும், குறிப்புப்பெயர் என்பதைக் குறிப்பு + பெயர் = குறிப்புப்பெயர் என்று பிரித்து அறியலாம். appellative என்ற ஆங்கிலச் சொல்லிற்கு 'குறிப்பு' என்பது நிகரான சொல்லாகும். சுருக்கமான சான்றை குறிப்பு என்கிறோம். noun என்ற ஆங்கிலச் சொல்லிற்கு பெயர் என்பது நிகரான சொல்லாகும். ஒருவரிடமிருந்து மற்றொருவரை அல்லது ஒன்றிலிருந்து மற்றொன்றை வேறுபடுத்தித் தெரிந்து கொள்ளவும் பேச்சில் குறிப்பிடவும் பயன்படுத்தும் அடையாளச் சொல் பெயர் எனப்படும். ஒருவரின் பண்பு, உடைமை போன்றவற்றை அடியாகக் கொண்டு பிறக்கும் பெயர் குறிப்புப்பெயர் எனப்படும். எடுத்துக்காட்டு: *நல்லவன், சேவற்கொடியோன்.*

மாற்றுப்பெயர் (Pronoun)

மாற்றுப்பெயர் என்பதன் ஆங்கில நிகரன் 'pronoun' ஆகும். மாற்றுப்பெயர் என்பதை மாற்று + பெயர் = மாற்றுப்பெயர் என்று பிரித்துப் பொருள்கொள்ளலாம். ஒரே பெயரின் மாற்று வடிவங்கள் மாற்றுப்பெயர் எனப்படும். எடுத்துக்காட்டு *மாயவரம், மயிலாடுதுறை* என்பனவற்றை அது என்று குறிப்பிடுவது. இது தன்மை மாற்றுப்பெயர் (நான், நாங்கள்), முன்னிலை மாற்றுப் பெயர் (நீ, நீங்கள்) முன்னிலை மாற்றுப் பெயர் (அவன், அவள், அவர்).

குறிப்புவினைப் பெயர் (Conjugated noun)

குறிப்புப்பெயர் என்பதன் ஆங்கில நிகரன் 'Conjugated noun' ஆகும். குறிப்புப்பெயர் என்பதை குறிப்பு + பெயர் = குறிப்புப்பெயர் என்று பிரித்து அறியலாம். கால இடைநிலைகள் எதையும் ஏற்காமல் குறிப்பாகக் காலம் காட்டும் வினை குறிப்பு வினை எனப்படும். **noun** என்ற ஆங்கிலச் சொல்லிற்கு பெயர் என்பது நிகரான சொல்லாகும். ஒருவர் செய்யும் தொழிலின்

அடிப்படையில் பிறக்கும் பெயர் குறிப்பு வினைப்பெயர் எனப்படும். ஒருவரிடமிருந்து மற்றொருவரை அல்லது ஒன்றிலிருந்து மற்றொன்றை வேறுபடுத்தித் தெரிந்து கொள்ளவும் பேச்சில் குறிப்பிடவும் பயன்படுத்தும் அடையாளச் சொல் பெயர் எனப்படும். எடுத்துக்காட்டு *இயக்குநர், நடத்துநர்.*

4 **வினை**

பெயருக்கு அடுத்தபடியான சொல்வகைப்பாடு வினையாகும். வினை முற்றுவினை, செய்து வினையெச்சம், செயவென் எச்சம், நிபந்தனை எச்சம், பெயரெச்சம் என அவற்றின் உருபனியல் அமைப்பு அடிப்படையில் வகைபாடு செய்யலாம்

வினை முற்று

வினை என்பது ஒரு செயல் அல்லது தொழில் நிகழ்வை பால், எண், இடம் ஆகியவற்றுடன் உணர்த்துவது வினைமுற்று ஆகும். சில வினைகள் குறிப்பாகவும் உணர்த்தும்.

எ.கா.

அவன் வந்தான்.

செய்து வினையெச்சம்

எ.கா.

செய்து, வந்து, நடந்து, சென்று

செயவென் எச்சம்

எ.கா,

செய்ய, வர, நடக்க, செல்ல

நிபந்தனை எச்சம்

எ.கா.

செய்தால், வந்தால், நடந்தால், சென்றால்

பெயரெச்சம்

செய்கிற, வருகிற, நடக்கிற, செல்கிற

வினைகள் அவற்றின் பொருள்கோள் அடிப்படையில் முதன்மை வினை என்றும் துணை வினை என்றும் பகுக்கப்படும்.

முதன்மை வினை (Manin Verb)

செய்துகொண்டிருந்தான் என்ற வினைத் தொடரில், செய் என்பது முதன்மை வினையாகும். கொண்டிரு என்பது துணைவினையாகும். வினை முதன்மைப் பொருளை உணர்த்தினால் அது முதன்மை வினையாகும்; வினை ஆற்றல், வினை நோக்கு ஆகிய துணைப் பொருளை உணர்த்தி நின்றால் அவை துணை வினையாகும்.

எ.கா.

வந்து விட்டான் என்பதில் வா (வந்து) என்பது முதன்மை வினாயாகும். விடு (விட்டான்) என்பது துணை வினையாகும்.

துணை வினை

முதன்மை வினையின் இறந்த கால வினையெச்சத்தோடோ அல்லது செயவென் எச்சத்தோடோ இணைந்து வந்து வழங்குவதோடு அவ்வினைக்குப் பொருள் அமைப்பில் துணையாகச் செயல்படும் வினை துணைவினையாகும். இது தொடர்ச்சிப் பொருள், முற்றுப்பொருள், தடுத்தல், வேண்டல், மறுத்தல் போன்ற பொருள்களை வெளிப்படுத்தும்.

1. தொடர்ச்சிப் பொருள்
வந்து+கொள்+இரு

வந்துகொண்டிருக்கிறான்

2. முற்றுப்பொருள்

வந்து+ஆயிற்று

அவர் வந்தாயிற்று

3. தடுத்தல்

வர+ வேண்டாம்

நீ வர வேண்டாம்

4. வேண்டும்

படிக்க+ வேண்டும்

நிற்க+ வேண்டும்

காரண வினை/இயக்கு வினை (Causative verb)

காரணவினை/இயக்குவினை என்பதன் ஆங்கில நிகரன் '**Causative verb**' என்பதாகும். காரணவினை/இயக்குவினை என்பதை காரணம் + வினை = காரணவினை/ இயக்கு + வினை = இயக்குவினை என்று பிரிந்து அறியலாம். **Causative** என்ற ஆங்கிலச் சொல்லிற்கு காரணம்/இயக்கு என்பது நிகரான சொல்லாகும். ஒரு செயலுக்கு தரப்படும் விளக்கம் அல்லது காட்டப்படும் சான்று காரணம் எனப்படும். ஒரு செயலை இயங்கச்செய்வது இயக்கு என்பதால் குறிப்பிடப்படும். verb என்ற ஆங்கிலச் சொல்லிற்கு வினை என்பது நிகரான சொல்லாகும். ஒரு தொழிலை உணர்த்தி காலம் காட்டும் சொல் வகை வினை எனப்படும். ஒருவர் காரணமாக இருந்து மற்றொருவரைக் கொண்டு ஒரு தொழிலைச் செய்யச் செய்வதைக் குறிக்கும் வினை காரண வினை அல்லது இயக்கு வினை எனப்படும். எடுத்துக்காட்டாக, *குமார் கண்ணனை ஓடச் செய்தான்* என்ற வாக்கியதின்படி "கண்ணன் ஓடுகிறான்", "கண்ணனை ஓடச்செய்வது அல்லது இயக்குவது குமார்". வாக்கியத்தின் எழுவாயாக இருக்கும் குமார் அடிப்படை வினையாக உள்ள ஓடுதலைச் செய்யவில்லை என்பதும் ஓடுவது கண்ணன் என்றும் அவன் ஓடுவதற்குக் காரணமாகவே குமார் உள்ளான் என்பதும் ஓடச்செய் என்பது காரண வினை/இயக்குவினை என்பதும் *செய்* என்பது காரணம் காட்டும் (அல்லது இயக்குவதைக் குறிக்கும்) துணை வினை என்பதையும் அறியாலாம். *செய்* என்பதைப் போன்றே இன்றைய தமிழில் *வை, பண்ணு* ஆகிய துணை வினைகளும் காரணம்காட்டுவனவாக (இயக்குவதைக் காட்டுவனவாகப்) பயன்படுகின்றன. எடுத்துக்காட்டு: *கண்ணன் இராமனை ஓடச் செய்தான்/ வைத்தான்/ பண்ணினான்* போன்றவற்றில் இப்பண்பு உள்ளது.

செய்வினை (Active verb)

செய்வினை என்பதன் ஆங்கில நிகரன் 'active verb' எனபதாகும். செய்வினை என்பதை செய் + வினை = செய்வினை என்று பிரித்தறியலாம். active என்ற ஆங்கிலச் சொல்லிற்கு 'செய்' என்பது நிகரான சொல்லாகும். இது ஒரு செயலில் ஈடுபட்டிருப்பதைக் குறிக்கிறது. **verb** என்ற ஆங்கிலச் சொல்லிற்கு வினை என்பது நிகரானச் சொல்லாகும். ஒரு தொழிலை உணர்த்தி காலம் காட்டும் சொல் வகை வினை எனப்படும். ஒரு வினையைச் செய்வது போன்று கூறுவது செய்வினை எனப்படும். *கண்ணன் மணியை அடித்தான்* என்பதில்

அடி என்பது செய்வினை. கண்ணன் அடித்தல் தொழிலைச் செய்வது போன்று கூறுவது இது (செய்பவன் தொழில்). செய்வினை வாக்கியத்தில் எழுவாய் செய்பவன், பயனிலை என்ற தொடர்புடன் இருக்கும். செய்பவன் எழுவாயாக இருக்கும்.

குறிப்பு வினை (Appellative verb)

குறிப்பு வினை என்பதன் ஆங்கில நிகரன் appellative verb என்பதாகும். குறிப்பு வினை என்பதை குறிப்பு + வினை = குறிப்பு வினை என்று பிரித்து அறியலாம். appellative என்ற ஆங்கிலச் சொல்லிற்கு 'குறிப்பு' என்பது நிகரான சொல்லாகும். சுருக்கமான சான்றை குறிப்பு என்கிறோம். verb என்ற ஆங்கிலச் சொல்லிற்கு வினை என்பது நிகரானச் சொல்லாகும். வாக்கியத்தில் பயனிலையாக வருவதும் செயலைக் குறிப்பிடுவதும் அதற்கு ஏற்ற காலம் காட்டும் உருபை ஏற்பதுமான சொல் வகை வினை எனப்படும். காலத்தையும், தொழிலையும் காட்டாது பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறின் அடிப்படையில் தோன்றும் வினைமுற்று குறிப்பு வினை எனப்படும். எடுத்துக்காட்டு *வளையினள், மதுரையான், செங்கண்ணன், நல்லன், கொடியன்*. இவை பழந்தமிழிலும் இடைக்காலத் தமிழிலும் காணப்படுகின்றன.

கூட்டு வினை (Compound Verb)

கூட்டு வினை என்பதன் ஆங்கில நிகரன் **Compound Verb** என்பதாகும். கூட்டு வினை என்பதை கூட்டு + வினை = கூட்டு வினை என்று பிரித்து அறியலாம். compound என்ற ஆங்கிலச் சொல்லிற்கு 'கூட்டு' என்பது நிகரான சொல்லாகும். இரு சொற்கள் இணைந்து ஒரு புதிய சொல்லை உருவாக்குவது கூட்டு எனப்படும். verb என்ற ஆங்கிலச் சொல்லிற்கு 'வினை' என்பது தமிழ் நிகரனாகும். ஒரு தொழிலை உணர்த்தி காலம் காட்டும் சொல் வகை வினை எனப்படும். இரண்டோ அல்லது அதற்கு மேலோ சொற்கள் இணைந்து நின்று வினைச் சொல்லாக வருமானால் அது கூட்டு வினை எனப்படும். எடுத்துக்காட்டாக *விசாரணைசெய், சமையல்செய் அச்சடி, வீணடி* என்பன கூட்டுவினைகளாகும். இவற்றில் *விசாரணை, சமையல் அச்சு, வீண்* என்பன பெயர்களாகும். *செய், அடி* என்பன வினையாக்க வினை அல்லத் வினையாக்கிகள் ஆகும்.

துணைவினை (Auxiliary verb)

துணைவினை என்ற சொல்லிற்கு auxiliary verb என்பது ஆங்கில நிகரனாகும். துணைவினை என்பதைத் துணை + வினை = துணைவினை என்று பிரித்து அறியலாம். ஒரு தலைமை வினையை அடுத்துத் துணையாக வரும் வினை துணைவினை எனப்படும். Auxiliary என்ற ஆங்கிலச் சொல்லிற்கு 'துணை' என்பது நிகரான சொல்லாகும். ஒரு வாக்கியத்தில் வினையை அடுத்து வருவது துணை எனப்படும். verb என்ற ஆங்கிலச் சொல்லிற்கு 'வினை' என்பது நிகரான சொல்லாகும். வாக்கியத்தில் பயனிலையாக வருவதும் செயலைக் குறிப்பிடுவதும் அதற்கு ஏற்ற காலம் காட்டும் உருபை ஏற்பதுமான சொல் வகை வினை எனப்படும். எடுத்துக்காட்டு, *செய்ய வேண்டும்*. இந்தத் தொடரில் *செய்* என்பது வினை தலைமை வினை; *வேண்டும்* என்பது துணைவினை.

அடை (Attribute)

அடை என்பதற்கு attribute என்பது ஆங்கில நிகரனாகும். பெயருக்கும் வினைக்கும் முன்வரும் சொற்கள் அடை எனப்படும். எடுத்துக்காட்டு: பின்வரும் எடுத்துக்காட்டுகளில் வரும் *ஒரு, அந்த, அழகிய* போன்றவை.

ஒரு பையன் வந்தான்.

அந்த பைபனைப் பார்த்தேன்.

ஒரு அழகிய பெண்ணைக் கண்டேன்.

அடைசெய்யும் சொல்வகைப்பாடு அடிப்படையில் அடை பெயரடை, வினையடை எனப் பகுக்கப்படும். வினையடையடைகள் அவை உணர்த்தும் பொருள் அடிப்படையில் கால வினையடை, இட வினையடை, முறை வினையடை என்று பகுக்கப்படும்.

சுட்டடை: உயர்திணைப் பெயர்களையும், அஃறிணைப் பெயர்களையும் சுட்டிக்காட்டுவது சுட்டடை அல்லது சுட்டுப் பெயரடையாகும்.

சுட்டுப்பெயரடை

சுட்டுப்பெயரடை இரு வகைப்படும். அவை

1. அண்மைச்சுட்டுப் பெயர் - அந்த, அது

2. சேய்மைச் சுட்டுப்பெயர் - இந்த, இது

1.2 பெயரடை

பெயருக்கு அடையாக வருவது பெயரடை ஆகும். தமிழ் மொழியில் பல வகையான பெயரடைகள் உள்ளன.

பெயரடை அடிகள்

பெயரே பெயருக்கு அடையாக வருவதுண்டு. எடுத்துகாட்டாக *கருநிறம், பெருமணல், சிறுவீடு, நல்வாழ்வு, சிறுசேமிப்பு, செந்நிறம், வெண்ணிறம், இனிய* ஆகியவை பெயரடை அடிகளாக இடம் பெறுகின்றன. பின்வருவன பெயரை அடியிலிருந்து தருவிக்கப்பட்ட பெயரடைகளாகும்.

இயல்புப் பெயரடை

நல்ல, பெரிய, சிறிய, செவ்விய, உயரிய

பெயர்+அ

எ.கா.

அழகு + இய> அழகிய

பெயர்+ஆன

அழகான, தாராளமான, அருமையான, கவர்ச்சிகரமான, செல்லமான, உயரமான, வறுமையான, இனிமையான, கசப்பான

பெயர்+ஆன பெயரடைகள் தமிழ் மொழியில் மிக அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. பெயரே பெயரடையாக வருவதும் உண்டு.

எ.கா.

சிவப்புச் சட்டை, பச்சைக் காய்கறிகள், சிவப்புத் தொப்பி

பெயரெச்சப் பெயரடை

சில பெயரடைகள் பெயரெச்சங்களிலிருந்து சொல்நிலைபேறால் பெயரடையாகச் செயல்படும். இவை காலத்தை உணர்த்தாது பெயரடைகள் பேன்றே செயல்பாடு செய்யும்.

எ.கா.

அடர்ந்த (காடு), குளிர்ந்த (வீடு), உயர்ந்த (வீடு), நீண்ட (கூந்தல்), ஆழ்ந்த (பள்ளத்தாக்கு)

சில பெயரடைகள் அடுக்கி வந்து பன்மையைக் காட்டும்.

எ.கா.

சின்ன சின்ன வீடுகள்

நல்ல நல்ல பிள்ளைகள்

பெரிய பெரிய புத்தகங்கள்

சில பெயரடைகள் இரட்டித்து வரும்.

. எ.கா.

சின்னஞ்சிறிய குருவி, செக்கச்சிவந்த மலர்

எண்ணடை

எண்ணுப்பெயர்களுக்கு அடையாக வருவது எண்ணுப்பெயரடை ஆகும்.

எ.கா.

பத்து மாடு, ஐந்து புத்தகம்

அளவையடை

பல, சில என்பவை அளவைக் குறிக்கும் பெயர்களாக வரும்.

தொடரடை (Adjunct)

தொடரடை சொல்லிற்கு adjunct என்பது ஆங்கில நிகரனாகும். தொடரடை என்பதைத் தொடர் + அடை = தொடரடை என்று பிரித்து அறியலாம். ஒரு வாக்கியத்தின் முக்கிய கூறாக அமையாதது ஒரு சொல்லின் அல்லது தொடரின் பொருளை விரிவுபடுத்த பயன்படுத்துகின்ற சொல் அல்லது தொடர்கூறு தொடரடை எனப்படும். எடுத்துக்காட்டு: *அவர் எப்போதும் கடுமையாக உழைக்கிறார்*. இதில் கடுமையாக என்பது தொடரடை ஆகும்.

விளக்கும் அடை (Appositive)

விளக்கும் அடை சொல்லிற்கு appositive என்பது நிகரானச் சொல்லாகும். விளக்கும் அடை என்பதை விளக்கும் + அடை = விளக்கும் அடை என்று பிரிந்து உணரலாம். ஒரு பெயருக்குக் கூடுதலான விவரம் கூறி விளக்குவது விளக்கும் அடை எனப்படும். எடுத்துக்காட்டு: *கணித பேராசிரியர் இராமானுசம்*. இத்தொடரில் *கணிதப் பேராசிரியர்* என்ற அடை *இராமானுசம்* என்ற பெயருக்கு கூடுதலான ஒரு விவரம் கூறி விளக்குகிறது.

வினையடை (Adverb)

வினையடை என்பதன் ஆங்கில நிகரன் adverb என்பது ஆங்கில நிகரனாகும். வினையடை என்பதை வினை + அடை = வினையடை என்று பிரித்து ஆயலாம். வினையைச் சிறப்பிக்க வரும் சொல்வகை அல்லது வினைச் சொல்லுக்கு அடையாக வரும் சொல் வினையடை எனப்படும். ஒரு தொழிலை உணர்த்தி காலம் காட்டும் சொல்வகை வினை எனப்படுகிறது. ஒரு பெயர்ச்சொல்லுக்கு அல்லது வினைச் சொல்லுக்கு முன் வந்து அதை விவரிக்கும் சொல் அடை எனப்படும். ஒரு வினையை விளக்கும் அல்லது அடைசெய்யும் சொல் வினையடையாகும். எடுத்துக்காட்டாக, *அவன் வேகமாக வந்தான்* என்பதில் *வேகமாக* என்பது வினையடை ஆகும். வினையடைகள் அவை உணர்த்தும் பொருண்மை அடிப்படையில் இட வினையடை, கால வினையடை, முறை அல்லது பாங்கு வினையடை என்று பகுக்கப்படும்.

1.3 **வினையடை**

வினைக்கு அடையாக வருவது வினையடையாகும். இது வினையின் தன்மையைக் குறிப்பதாகும். இதில் பல வகையான வடிவங்கள் உள்ளன. அவையாவன:

1. தனி வினையடைகள்

எ.கா.

அவன் மெல்ல நடந்தாள்.

அவன் வீட்டின் அருகில் சென்றான்.

2. வினையெச்ச வினையடை

எ.கா.

விரைந்து சென்றான்.

ஆசிரியர் கடிந்து கூறினார்.

3.பெயர்+ஆக

எ.கா.

அவன் வேகமாக வந்தான்.

அவன் இனிமையாகப் பேசினான்.

4. நேரப்பெயர் / இடப்பெயர் + தோறும்

எ.கா.

நாள்தோறும் / மாவட்டந்தோறும்

ஆண்டுதோறும் / ஊர்கள் தோறும்

5. பெயர்+இல்

சில சமயங்களில் பெயர்ச்சொல்லுடன் இல் உருபு சேர்ந்து வினையடையாக வருவதுண்டு.

எ.கா.

அவன் அந்த வேலையை <u>எளிதில்</u> முடித்தான்.

இதில் எளிது என்ற சொல் சீக்கிரமாக என்ற சூழ்நிலையை உருவாக்கித் தருகிறது.

6. பெயர்+பெயர்+ஆக

இரண்டு பெயர்ச்சொல்லுடன் ஆக என்ற உருபு சேர்ந்து வந்து வினையடையை உணர்த்துகின்றது.

எ.கா.

அவன் வீடு வீடாகச் சென்றான்.

7. வினையடை+வினையடை

சில நேரங்களில் வினையடைச் சொல்லுடன் இன்னொரு வினையடைச் சொல்லும் சேர்ந்து வருவதுண்டு.

எ.கா.

அவள் மெல்ல மெல்ல நடந்தாள்.

அவர் திரும்பத் திரும்ப (மறுபடி) வந்தார்.

8. முறைமை எண் +ஆக

எண்ணுப்பெயர்களுடன் ஆக என்ற உருபு சேர்ந்து வந்து வினையடையை உணர்த்துகிறது.

எ.கா.

அவன் வகுப்பில் முதலாவதாக வந்தான்.

தொழில் வளர்ச்சியில் ஜப்பான் முதலிடம் வகிக்கிறது.

வினையடை உணர்த்தும் பொருள்கள்

வினையடைகள் பலவேறு பொருள்களை உணர்த்தி வரும்.

1. வினையடையின் பண்பு

அவன் கோபமாகப் பேசினான்.

அவர் கடுமையாக எச்சரித்தார்.

அவர் அன்பாக நடந்து கொண்டார்.

2. வினையின் விளைவு

அவன் காலை இரண்டாக வெட்டினான்.

அவன் வயிறு நிறைய உண்டான்.

3. நிரப்பியப் பொருள்

அவள் இளவரசியாகப் பிறந்தாள்.

அவன் மன்னனாக முடிசூடினான்.

அவன் மாணவனாக நடந்துகொள்ள வில்லை.

நல்ல பழமாக வாங்கு.

4. ஒப்புமைப் பொருள்

கண்ணீர் அருவியாக ஓடியது.

அவள் மயில் போன்று ஆடினாள்.

5. வினை நடக்கும் நேரம்/ இடம்

அவன் சாயங்காலமாக வந்தான்.

அவன் காலையில் வந்தான்.

அவன் ஓரமாக ஒதுங்கினான்.

அவன் இடப்பக்கமாகச் சென்றான்.

6. உடனிகழ்ச்சி

கணவனும் மனைவியுமாக ஊருக்குப் போனார்கள்.

அரண்மனை பொன்னும் மணியுமாக நிரம்பியது.

7. எண்களின் மடங்கு

பணம் கோடிக்கணக்கில் செலவாயிற்று.

மரங்கள் நூற்றுக்கணக்கில் அழிந்தன.

8. கால அளவு

அவன் ஒரு வாரமாக காத்திருக்கின்றான்.

நான் எட்டு ஆண்டுகளாக இங்கே இருக்கிறேன்.

9. அதிக எண்ணிக்கை

தயிர் சாதம் நிறைய உப்பாக இருந்தது.

10. பகிர்வு

அவன் பழங்களை ஒவ்வொன்றாக எடுத்தான்.

எதைப் பார்த்தாலும் இரண்டு இரண்டாகத் தெரிந்தது.

11. உணர்வு

எனக்கு பசியாக இருக்கிறது.

எனக்கு குளிராக இருக்கிறது.

12. ஒரே செயலைத் திரும்பத் திரும்பச் செய்வது

அவன் கடைக்கும் வீட்டுக்குமாக அலைந்தார்.

அவன் குறுக்கும்நெடுக்குமாகக் கோடு போட்டான்.

கால வினையடை

ஒரு செயல் நடைபெறும் காலத்தைக் குறிப்பிடுவது கால வினையடையாகும்.

எ.கா.

நேற்று, இன்று, நேற்றைக்கு, அப்பொழுது, நாளை, இன்று, இப்பொழுது, எப்பொழுது, என்று ஆகியவை கால வினையடையாகும்.

இட வினையடை

ஒரு நிகழ்ச்சி நடைபெறுகின்ற இடத்தைக் குறிப்பதற்காகப் பயன்படுத்தப்படுகிறது.

தூரம், தொலைவு ஆகியவையும்; அங்கு, இங்கு, எங்கு ஆகியவை இட வினையடைகள் ஆகும்.

இட வினையடை (Adverb of place)

இட வினையடை என்ற கலைச் சொல்லின் ஆங்கில நிகரன் adverb of place என்பதாகும். இடவினையடை என்பதை இடம் + வினையடை = இடவினையடை என்று பிரித்து அறியலாம். place என்ற ஆங்கிலச் சொல்லிற்கு 'இடம்' என்பது நிகரான தமிழ்ச் சொல்லாகும். ஏதேனும் ஒன்றின் பகுதியைக் குறிப்பது இடம் எனப்படும். adverb என்ற ஆங்கிலச் சொல்லிற்கு 'வினையடை' என்பது நிகரான தமிழ்க் கலைச் சொல்லாகும். வினைச் சொல்லுக்கு அடையாக வரும் சொல் வினையடை எனப்படும். ஒரு வினை நிகழும் காலத்தைச்

சுட்டுவதற்குப் பயன்படும் ஒரு வினையடை வகை இட வினையடை எனப்படும். எடுத்துக்காட்டு: *மாலதி இங்கே பாடினாள்*. இதில் வரும் *இங்கே* என்பது இட வினையடை ஆகும்.

கால வினையடை (Adverb of Time)

கால வினையடை அல்லது நேர வினையடை என்ற கலைச் சொல்லிற்கு adverb of time என்பது ஆங்கில நிகரனாகும். கால வினையடை என்பதைக் காலம் + வினை + அடை = கால வினையடை என்று பிரித்து ஆயலாம். time என்ற ஆங்கிலச் சொல்லிற்குக் 'காலம்' என்பது நிகரானச் சொல்லாகும். கால அளவைக் குறிப்பது நேரம் எனப்படும். adverb என்ற ஆங்கிலச் சொல்லிற்கு 'வினையடை' என்பது நிகரான தமிழ்க் கலைச் சொல்லாகும். வினைச் சொல்லுக்கு அடையாக வரும் சொல் வினையடை எனப்படும். ஒரு வினை நிகழும் காலத்தைச் சுட்டுவதற்குப் பயன்படும் ஒரு வினையடை கால வினையடை அல்லது நேர வினையடை எனப்படும். எடுத்துக்காட்டாக,

கண்ணன் *நேற்று* வந்தான். (காலம்).

கண்ணன் *சீக்கிரம்* வந்தான் (கால அளவு).

கண்ணன் *தினந்தோறும்* வந்தான். (வழக்கம்),

கண்ணன் *இரண்டு தடவை* வந்தான். (தடவை)

கண்ணன் முன்னர் வந்தான். (கால எல்லை)

என்ற வாக்கியங்களில் காணப்படும் கால வினையடைகள் தொழில் நடைபெறும் குறிப்பிட்ட காலம் (*நேற்று*), கால அளவு (*சீக்கிரம்*), வழக்கம் (*தினந்தோறும்*), தடவை (*இரண்டு தடவை*) கால எல்லை (*முன்னர்*) போன்றவற்றைக் காட்டுவதால் இவை கால அல்லது நேர வினையடை எனக் கருதப்படுகின்றன.

பாங்கு/முறை வினையடை (Adverb of manner)

பாங்கு வினையடை அல்லது முறை வினையடை என்பதன் ஆங்கில நிகரன் adverb of manner என்பதாகும். பாங்கு வினையடை என்பதைப் பாங்கு + வினையடை = பாங்கு வினையடை என்று பிரித்து அறியலாம். adverb என்ற ஆங்கிலச் சொல்லற்கு 'வினையடை' என்பது நிகரான தமிழ்ச் சொல்லாகும். manner என்ற ஆங்கிலச் சொல்லிற்குப் 'பாங்கு'

என்பது நிகரான தமிழ்ச் சொல்லாகும். செயலை செய்யும் விதம் பாங்கு எனப்படும். வினைச் சொல்லுக்கு அடையாக வரும் சொல் வினையடை எனப்படும். ஒரு செயல் நிகழும் பாங்கைச் சிறப்பித்துக் கூறும் ஒரு வகை வினையடை பாங்கு வினையடை எனப்படும். எடுத்துக்காட்டு: *காற்று வேகமாக வீசியது* என்பதில் *வேகமாக* என்பது பாங்கு வினையடை ஆகும்.

ஒப்பு அடை (Comparative degree)

Comparative degree என்ற ஆங்கிலச் சொல்லிற்கு ஒப்பு அடை என்பது நிகரானச் சொல்லாகும். ஊடிஅpயசயவiஎந என்ற ஆங்கிலச் சொல்லிற்கு ஒப்பு என்பது நிகரானச் சொல்லாகும். ஒன்றை செய்வதற்கு அல்லது ஏற்பதற்கு இணங்குதல் ஒப்பு எனப்படும். ஒரு பெயர்ச்சொல்லுக்கு அல்லது வினைச் சொல்லுக்கு முன் வந்து அதை விவரிக்கும் சொல் அடை எனப்படும். ஒன்றோடு ஒன்றை ஒப்பிட்டு ஒன்றைவிட மற்றொன்றை உயர்வாகவோ தாழ்வாகவோ கூறுவது ஒப்பு அடை எனப்படும். எடுத்துக்காட்டு: *அது தாஜ்மகாலை விட அழகாக இருந்தது.*

பெயரெச்சம் (Adjectival participle)

பெயரெச்சம் என்பதன் ஆங்கில நிகரன் adjectival participle என்பதாகும். பெயரெச்சம் என்பதை பெயர் + எச்சம் = பெயரெச்சம் என்று பிரித்து ஆயலாம். பெயர் கொண்டு முடியும் எச்சவினை வடிவம் பெயரெச்சம் எனப்படும். எடுத்துக்காட்டு: *நேற்று பெய்த மழை*. இதில் *பெய்த* என்பது பெயரெச்சம் எனப்படும்.

தமிழ்ச் சொல்வகைப்பாடுகள்

ஒரு மொழியின் சொற்கள் சொல்லியல் அடிப்படையிலும், தொடரியல் அடிப்படையிலும், வகைப்பாடு செய்யப்படலாம். சொற்கள் எந்த இலக்கணக் கூறுக்காகத் திரிபுறும் வாக்கியத்தில் எங்கு, எவ்வாறு இடம் பெறுகின்றன. அவற்றின் செயற்பாடுகள் யாவை என்பதன் அடிப்படையில் அவை ஒரு சொல் வகுப்பைச் சார்ந்தன என நிர்ணயிக்கலாம். ஆங்கிலத்தில் “Part of speech tag” என்றும், இதன் படி சொற்களை எட்டு வகுப்புகளாகப் பிரிப்பர்.

1. பெயர் - Noun

2. பெயரடை - Adjective

3. மாற்றுப்பெயர்	-	Pronoun
4. வினை	-	Verb
5. வினையடை	-	Adverb
6. முன்னுருபு	-	Proposition
7. இணைப்புக்கிளவி	-	Conjunction
8. வியப்புச்சொல்	-	Interjection

தற்காலத் தமிழ் இலக்கணத்தை ஆங்கில இலக்கண கண்ணோட்டத்தோடு நோக்கும் இலக்கண நூல்களில் ஆங்கிலச் சொல்வகைப்பாட்டின் தாக்கத்தினைக் காணலாம். பழந்தமிழுக்காக எழுதப்பட்ட மரபிலக்கணங்களில் சொல் வகைகள் தற்காலத் தமிழுக்காக மாற்றியமைக்கப்பட வேண்டும் என மொழியியல் அறிஞர்கள் கருதுகின்றனர். இருப்பினும் தற்காலத் தமிழுக்கு எத்தனை சொல் வகுப்புகள் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்பதில் அவர்களிடையே ஒருமித்த கருத்து இல்லை.

மரபிலக்கணங்கள் தமிழ்ச் சொற்களை பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நான்கு வகுப்புகளாக கொண்டு, பெயரும்,வினையும் முக்கியமானதாகவும் இடையும்,உரியும் துணை வகுப்புகளாகவும் கொள்ளப்படுகின்றது. காலம் காட்டாமல் வேற்றுமை உருபுகளை ஏற்கும் சொற்கள் பெயர்ச் சொற்களாகவும், வேற்றுமை உருபுகளை ஏற்காது காலம் காட்டும் சொற்களை வினைச்சொற்களாகவும் கொண்டுள்ளனர். தனித்து இயங்கும் ஆற்றலின்றிப் பெயர்களையும்,வினைகளையும் இடமாகக் கொண்டு அவற்றின் முன்னும், பின்னும் வரும் வேற்றுமை உருபுகள், விகுதிகள், சுட்டெழுத்துகள், வினாவெழுத்துக்கள் ஆகியனவும் இடைச்சொல் எனப்பட்டன. பெயர்ச்சொல், வினைச்சொல் போல் தனித்து நின்று பொருளை உணர்த்தாமல் பெயர்ச்சொல்லையோ, வினைச்சொல்லையோ சார்ந்து நின்று அவற்றின் குணத்தை “மிகுதி” என உணர்த்த வல்லன உரிச்சொல்.

மரபிலக்கணத்தார் சொற்பகுப்பை ஆராய்ந்தால் சொற்களைப் பெயர்ச்சொல், வினைச்சொல் என்ற இரு பெரும் பிரிவுகளாகவும், அவற்றைச் சார்ந்து வரும் மூன்றாவது பிரிவுச்சொற்களை இடைச்சொல்,உரிச்சொல் என்று பிரித்தனர். மரபிலக்கணங்கள் உரிச்சொற்களைப் பெயர், வினை இவற்றிற்கு அடையாகக் கொள்கின்றனர். இவ்வாறு மரபிலக்கணங்கள் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், அடைச்சொல் என நான்கு வகைச் சொல் வகைகளை அடையாளம் காட்டுகின்றன. முற்காலத்தமிழை மரபிலக்கண வழி ஆய்கையில் இந்நான்கு வகை சொல் பகுப்புகள் போதுமானதாக இருந்தது.

தற்காலத் தமிழுக்கான சொல்வகுப்புகள் பற்றி இராசேந்திரன் அவர்கள் தமது கட்டுரையில் விரிவாகப் பேசுகிறார். அவர்கருத்துகள் இங்குத் தொகுக்கப்பட்டுத் தரப்பட்டுகின்றன். தற்காலத் தமிழ் புதிய இலக்கணக் கூறுகளை தன்னகத்தே வளர்த்துக் கொண்டுள்ளமையால் சொற்களை புதிதாக வகைப்படுத்த மொழியியல் அறிஞர்கள் வாதிட்டும், வகைப்படுத்தியும் உள்ளனர். [Asher:1982, லேமன்:1989, Lehman:1989]

லேமன் சொல் வகைகளைப் பற்றி விரிவாக ஆராய்கிறார். [Lehman,1989, 911] தற்காலத் தமிழ் மொழியில் எல்லா அகராதி அல்லது வேர் உருபுகளை நான்கு வகைகளாகப் பிரித்து அவைகளை 1.பெயர் வேர்கள் 2. வினை வேர்கள் 3. வினையடை வேர்கள் 4. பெயரடை வேர்கள் எனக்கொள்கிறார். இவற்றில் பெரும்பாலான வேர்கள் பெயர், வினை வேர்களில் அடங்கும். பெயர்கள் பெயர் வேர்களையும், வினைகள் வினை வேர்களையும் கொண்டிருக்கும். ஆனால் பின்னுருபுகள் பல வினையடைகள், அளவையடைகள், இணைப்புச் சொற்கள் என்பனவற்றை வடிவ அடிப்படையில் பெயர் அல்லது வினை வேர்களின் திரிபுற்ற அல்லது திரிபுறா வடிவங்களாகக் கொள்ளலாம். பழந்தமிழில் சொல் வகுப்புகள் குறைந்த காரணத்தினால் பல திரிபுற்ற அல்லது திரிபுறாத பெயர், வினை மற்றும் பெயரடை வேர்கள் தற்காலத் தமிழில் பின்னுருபுகள், வினையடைகள், பெயரடைகள், அளவையடைகள் போன்ற பல சொல் வகுப்புகளாக மீள்ளாய்வு செய்யப்பெற்றன. நாம் அறிந்தபடி தற்காலத் தமிழில் இரண்டு சொல் வகுப்புகள் தான் திரிபுகளை ஏற்கவல்லது. அவை பெயரும் வினையும் ஆகும். பெயர்கள் வேற்றுமையுருபு, எண் இவற்றிறகாகத் திரிபுறும். வினைகள் காலம், எண், பால், இடம் மற்றும் சிலவற்றிற்காகவும் திரிபுறும். சொல் வகுப்புகளில் பெயர்கள் சொல்லாக்கத்தை காட்டுகின்றன. பெயர்களை வினைகளிலிருந்து பெறலாம்.

ஆஷர் [1982:101,102] ‘Operational definitions for word classes’ என்ற தலைப்பில் தமிழ்ச் சொற்களை ஆறு வகையாகப் பிரிக்கிறார்: 1. பெயர்ச்சொல் (Noun), 2. மாற்றுப்பெயர் (Pronoun), 3. வினைச்சொல் (Verb), 4. பெயரடை (Adjective), 5. பின்னுருபு (Post position), எண், அளவையடை, 6. இடைச்சொற்கள் (Particles)

இதையே கோதண்டராமன் (1989) தனியே இயங்க வல்ல சொற்களைத தலைமை இலக்கணக் கூறுகளாகக் கொண்டு பத்து வகுப்புகளாகப் பிரிக்கிறார். அவையாவன: 1. பெயர், 2. வினை, 3. பெயரடை, 4. வினையடை, 5. வல்லடை, 6. இணைப்பான், 7. உணர்ச்சி வெடிப்புச்சொல், 8. உணர்வு குறிப்புச்சொல், 9. விளிப்புச்சொல், 10. விளி ஏற்புச்சொல்

மேலும் “விகுதி”, “ஒட்டு” முதலானச் சார்புநிலைக் கிளவிகளைத் துணைமை இலக்கணக் கூறுகளாகக் கொண்டு அவற்றின் “வடிவுக்கும் இயல்புக்கும் ஏற்ப” 1. விகுதி (Suffix), 2.

சொல்லுருபு (postposition), 3. வினைசார் கிளவி (Verb Participle), 4. ஒட்டு (Clitic), 5. சாரியை அல்லது நிரப்பி (Fillers) என ஐந்தாக வகைப் படுத்துகிறார்.

லேமன்(1989:9) உருபனியல் மற்றும் தொடரியல் இலக்கண இயல்புகள் அடிப்படையில் தமிழ்ச்சொற்களை 1. பெயர்கள் (Nouns), 2. வினைகள் (Verbs), 3. பெயரடைகள் (Adjectives), 4. வினையடைகள் (Adverbs), 5. பின்னுருபுகள் (Post position), 6. அளவையடைகள் (qantifiers), 7. வரையறு அடைகள் (Determiners), இணைப்புக் கிளவிகள் (Conjunctions) என எட்டாக சொல் வகுப்புகளைப் பிரிக்கிறார்.

இவ்மூவறிஞர்களும் பெயர், வினை, பெயரடை என்ற சொல் வகுப்புகளைத் தேர்ந்தெடுப்பதில் உடன்படுகிறார்கள். கோதண்டராமனும், லேமனும் வினையடையைச் சொல்வகுப்பாகக் கொண்டு ஆக்ஷரிடமிருந்து வேறுபடுகின்றனர். இணைப்பான் என்று கோதண்டராமனும், இணைப்புக்கிளவி என்று லேமனும் குறிப்பிடும் சொல்வகுப்பை ஆஷர் சொல்வகுப்பாகக் கொள்ளவில்லை. ஆஷரும், லேமனும் பின்னுருபுகளைச் சொல்வகுப்பாகக் கொள்ள கோதண்டராமன் பின்னுருபுகளைச் சொல்லுருபுகள் எனக்குறிப்பிட்டு சார்நிலைக்கிளவியாக வகைப்படுத்துகிறார்.

பெயர்ச்சொல்

ஆஷர் பெயர்ச்சொல் பிரிவை உருபனியல் மற்றும் தொடரியல் அடிப்படையில் சொல் வகுப்பாக நிறுவுகிறார். பெயர்ச்சொற்கள் உருபனியல் அடிப்படையில் வேற்றுமை ஒட்டுகளையும், பன்மை ஒட்டு "கள்" என்பதையும் ஏற்கும். தொடரியல் அடிப்படையில் பெயர்கள் பின்னுருபுத்தொடரின் தலைச் சொல்லாகவும், ஒரு வாக்கியத்தின் எழுவாயாகவோ, செயப்படு பொருளாகவோ செயல்படும். எழுவாயாக வரும் பெயர்ச்சொல்லின் இடம், எண், பாலுக்கு தகுந்தாற்போல் வினையின் இடம், எண், பால், ஒட்டின் தேர்வும் அமையும். வேற்றுமை உருபுகளையும் ஆக,ஆன கிளவிகளை ஏற்பனவும், எழுவாயாகவும், பயனிலையாகவும் செயல்பட வல்லன பெயர்கள் என்று கோதண்டராமன் குறிப்பிடுகிறார். லேமன் வேற்றுமை பின்னொட்டுகளையும் ஆக,ஆய் பின்னொட்டுகளையும் ஏற்பன பெயர்கள் என்று விளக்குகிறார். மேலும் குறை உருபனில் உள்ள பல பெயர்கள் எல்லா வேற்றுமை பின்னொட்டுக்களையும் ஏற்காது என்பதையும் சுட்டுகிறார். பெயர்ச்சொல் வகுப்பில் மூவருக்கும் அடிப்படை பேதம் இருப்பதாகத் தெரியவில்லை. லேமன் மாற்றுப்பெயர், அளவுப்பெயர், எண்ணுப்பெயர் இவற்றை பெயர்ச்சொல்லின் துணைப்பிரிவாகக் கொள்கிறார்.

மாற்றுப்பெயர்

பெயர்ச்சொல்லுக்குப் பதிலாக அல்லது மாறாக வரும் சொல் மாற்றுப்பெயர் எனப்படும். இப்பெயர் முக்கியமாகப் பொருட்குறிப்பு (Signification) அடிப்படையில் பெயரிலிருந்து வேறுப்படும். ஒன்றையோ, பெயர்ச்சொல்லையோ குறிக்கும். ஆனால் மாற்றுப்பெயருக்குத் தக்கவாறு வெவ்வேறு ஆட்களையோ, பொருளையோ குறிக்கும். இதன் காரணமாய் ஒரு மொழியின் பெயர்ச்சொல்லின் எண்ணிக்கை ஏராளமாயிருந்தாலும், மாற்றுப்பெயர்கள் குறைவாகவே உள்ளது.

ஆஷர் மாற்றுப்பெயர்களைத் தனிச்சொல் வகுப்பாகக் கையாள்கிறார். பெயர் சொல்லின் வரையறைகளில் பல இயல்புகளைக் கொண்ட ஒரு நெருங்கிய குழுமத்தைச் சார்ந்திருப்பவை மாற்றுப்பெயர்கள். பெயர்ச்சொற்கள் ஏற்கும் அதே வேற்றுமைப் பின்னொட்டுகளை அவற்றுடன் சேர்க்கலாம். ஆவை பின்னுருபுத் தொடரின் தலைச் சொல்லாக அல்லது எழுவாயகவும், செயப்படுப்பொருளாகவும் செயற்படலாம். ஒரு வாக்கிய அமைப்பில் வினையின் இடம், எண், பால் ஒட்டைத் தேர்வு செய்யும்.

லேமன் பெயர்த் தொடரில் அடை எடுக்காது தனித்து வரும் பெயர்களை மாற்றுப் பெயர்களாகக் கொள்கிறார். மாற்றுப்பெயர்களைத் தனிநிலை மாற்றுப்பெயர்கள், [எ.கா.நான், அவன்] , ஆக்க மாற்றுப்பெயர்கள் [எ.கா.யாரோ, யாரும்] என்றும் வகைச் செய்கிறார். மூவிடப்பெயர்கள் [Personal Pronoun], சுட்டுப்பெயர்கள் [Demonstrative Pronouns], வினாப்பெயர்கள் [interrogative Pronouns], தன்வயப்பெயர்கள் [Reflexive Pronoun] என பலவகையாகப் பிரிக்கப்படுகிறது. மூலவகையான மாற்றுப்பெயர்களைக் குறிப்பு (Referential), உறுதி (Definiteness), குறிப்பீடு (Specificity) என்ற பொருண்மைக் கருத்துகள் அடிப்படையில் வனைப்பாடு செய்யலாம்.

லேமன் ,1989:93



மூவிடப்பெயர்கள் காலத்தோடும், இடத்தோடும் தொடர்பு கொண்டிருக்கும். பேசுபவசைத் தன்மை இடம் என்றும், கேட்பவரை முன்னிலை இடம் என்றும், பேசப்படுபவரைப் படர்க்கை இடம் என்றும் செய்யலாம். சுப்ல கூடுதலான பாகுபாடுகளைக் கொண்டு படர்க்கையிடம், தன்மை, முன்னிலை இடங்களிலிருந்து வேறுபடுகின்றது. தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்றும் அடிப்படையில் ஒருமை, பன்மை என வேறுபடுகின்றது. முன்னிலை இடங்களும், படர்க்கை இடங்களும் தகுதி அடிப்படையில் உயர்வு, உயர்வின்மை என வேறுபடும். படர்க்ளை இடப்பெயர்கள் மட்டுமே பால் அடிப்படையில் ஆண், பெண் என்றும், சுட்டு அடிப்படையில் அண்மை, சேய்மை என வேறுபடும்.

இதற்கான அமைப்பை கீழே அட்டவணை மூலம் காணலாம்

இடம்	ஒருமை	பன்மை
தன்மை	நான்	நாம்,நாங்கள்
முன்னிலை	நீ,நீர்	நீங்கள்
படர்க்கை	அவன்,இவன்,அவள்,இவள், அவர்,இவர்,அது,இது	அவர்கள்,இவர்கள் /அவை,அவைகள் இவை,இவைகள்

தான், நாம், தாங்கள் என்ற தன்வயப்பெயர்கள் நான்காவது இடத்தைச் சாரும். எழுவாயால் வரும் படர்க்கைச் சொல்லுக்கு மாறாய் அல்லது பதிலாய் தன்வயப்பெயர்கள் வரும்.

வினாப்பெயர்களுக்குத் தீர்மானிக்கப்பட்ட குறிப்பு இல்லை. வினாப்பெயர்களைக் குறிப்பீடு பெற்ற (Specified) வினாப்பெயர். குறிப்பீடு பெறாத (non specified) வினாப்பெயர் எனப்பிரிக்கலாம். அவை உயர்திணை, அஃறிணை வேறுபாட்டை வடிவத்தில் காட்டுகின்றன. (எ.கா. *யார்*, *என்ன*) குறிப்பீடுப்பெற்ற வினாப்பெயர்கள் படர்க்கையிடம் எண், பால் இவற்றின் வேறுபாட்டை வடிவத்தில் காட்டுகின்றன. (எ.கா. எவன், எவள், எவர், எது, எவை) உம் என்ற குறைச்சொல் சேர்ந்த வினாப்பெயர்களுக்கு எடுத்துக்காட்டுகளாகும். குறைச்சொல் ஒ-சேர்ந்த வினாப்பெயர்களான யாரோ, ஏதோ, என்னவோ என்பன குறிப்பீடு பெறாத உறுதியற்ற மாற்றுப்பெயர்களுக்கு எடுத்துக்காட்டுகளாய் அமையும்.

அளவுப்பெயர்

சில, பல, எல்லாம், எல்லோரும் என்ற பெயர்கள் அளவுப்பெயர்கள் பிரிவைச் சாரும். இவை பெயர் அடைகளாகச் செயல்பட வல்லன (எ.கா. சில மனிதர்கள்). பெயர்களுக்குப் பின்னால் வந்து வேற்றுமை ஒட்டுகள் எடுக்க வல்லன (எ.கா. பேனாக்கள் சிலவற்றை வாங்கினேன்). சில, பல என்பவைகளைப் பெயரடைகளாகக் கொண்டு முறையே சிலவை, பலவை என்பனவற்றை மாற்றுப் பெயரொட்டாக்கம் பெற்ற பெயர்களாக ஆயலாம் (எ.கா. சில+அவை=சிலவை)

எண்ணுப்பெயர்

எண்ணுப்பெயர்கள் ஆதார எண் (Cardinal Number), முறைமை எண் (Ordinal number) என இருவனைப்படும். முறைமை எண் ஆதார எண்ணிலிருந்து ஆவது அல்லது ஆம் என்ற குறைச்சொல்லின் (Clitics)சேர்க்கையால் ஆக்கப்படும். ஆதார எண்களிலிருந்து மாற்றுப் பெயரொட்டாக்கம் பெற்ற எண்ணுப்பெயர்களை (Pronominalzed Cardinal Number) பெறலாம். (எ.கா. ஒருவன், ஒருத்தி, ஒருவர்)

வினை

வினையைச் சொல்வகுப்பாகக் கொள்வதில் மொழியியல் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு இல்லை. வினைகள் காலப்பின்னொட்டுகளையும், இடம் - எண் - பால் பின்னொட்டுகளையும் பிற பின்னொட்டுகளையும் எடுக்க வல்லன் சில வினைகள் குறை உருபனியலை உடையன. அதாவது எல்லா வினைப்பின்னொட்டுகளையும் அவை ஏற்பதில்லை. இணைப்பு வாக்கியங்கள் (Copular Sentences) (எ.கா. அவன் மாணவன்) தவிர்த்த பிற வாக்கியங்களில் கட்டாயமாக வரும் பகுதி வினையாகும். வினைகளை உருபனியல், பொருண்மையியல் இவற்றின் அடிப்படையில் வெவ்வேறு வகையாய் பாகுபாடு

செய்யலாம். காலம் மற்றும் பிறவினைப் பின்னொட்டுகளுடன் சேரும்போது ஏற்படும் உருப ஒலியனியல் மாற்றங்கள் அடிப்படையில் வினைகளை மெல்வினை, இடைவினை, வல்வினை என்ற மூன்று வகைகளாகவும் அதற்கு மேற்பட்ட வனைகளாகவும் பிரிக்கலாம். வடிவ மற்றும் செயற்பாடு அடிப்படையில் வினையை முற்றுவினை (finite verb) (எ.கா. வந்தான்) மற்றும் எச்சவினை (non-finite berb) (எ.கா. வந்த, வந்து) என்று பிரிக்கலாம். எச்சவினை பெயரின் அடையாக வருமா அல்லது வினையின் அடையாக வருமா என்பதன் அடிப்படையில் பெயரெச்சம் (Adjectival or relative participle form) (எ.கா. வந்த பையன்) என்றும், வினையெச்சம் (adverbial or verbal participle form) (எ.கா.வந்து போனான்) என்றும் வகைப்படுத்தலாம். தன்வினை (எ.கா.ஆடு) பிறவினை (எ.கா. ஆட்டு) என்ற பாகுபாடு பொருண்மையியல் அடிப்படையில் அமைந்தது. வினையினை தான் செய்யின் தன்வினை என்றும், பிறர் செய்யின் அது பிறவினை என்றும் விளக்கப்பட்ட பொருண்மை வேறுபாடு அவ்வளவு பொருத்தமானதல்ல. (பரமசிவம்,1983:2-3) அடிப்படையிலான வினைகளைத் தனவினைகள் என்றும், (எ.கா. ஓடு, காண்) அவற்றினின்றும் ஒட்டாக்கத்தால் ஆக்கப்பெற்ற வினைகளை (எ.கா. ஓட்டு, காட்டு) பிற வினைகள் என்றும் கொள்ளலாம். வாக்கியத்தில் பயன்படுத்துகையில் செயப்படுபொருளை எடுக்குமா? என்பதன் அடிப்படையில் வினைகள் செயப்படுபொருள் குன்றியவினை (எ.கா. போ, வா), செயப்படுபொருள் குன்றாவினை (எ.கா. படி, அடி) எனப்பாகுப்படுத்தலாம். பெயருக்கும் வினைக்கும் உள்ள காரக உறவுகளை (Case Relations)கொண்டும், இணைதிறன் (Valency))கொண்டும் வினைகளை வகைப்பாடு செய்யலாம்.

பின்னுருபுகள்

ஆசுஷர் பின்னுருபைச் சொல்வகுப்புகளில் ஒன்றாகக் கூறுகின்றார். வேற்றுமைப் பின்னொட்டுகளால் திரிபுற்ற பெயர்களுக்குப் பின்வந்து பின்னுருபுத் தொடராக வினையுடன் ஒரு செயற்பாட்டு உறவில் நிற்கும் என்பது சொல் பின்னுருபு என்று தொடரியல் விளக்கம் தரலாம். பின்னுருபுகள் இந்நிலையில் தனித்து நிற்கும் என்பதிலிருந்து கட்டுப்பட்டே நிற்கும் என்பது பலதரப்பட்ட அங்கங்கள் சேர்ந்த சொல்வகுப்பாகும். கோதண்டசாமன்(1989) சாஹ்நிலைக் கிளவி வகை என்ற துணைமைச்சொல் வகையின் கீழ் பின்னுருபைச் சொல்லுருபு எனக் குறிப்பிட்டு வகைபாடு செய்கிறார். பெயர்ச்சொல்லும், வினைச்சொல்லும் காலப்போக்கில் வேற்றுமைப் பின்னொட்டுகள் போல் சொல்லுருபுகளாய் பயன்படுத்தப்படுகின்றன. லேமனும்(1989) பின்னுருபுகளைத் தனிச்சொல் வகுப்பாகக் கொள்கிறார். திரிபுற்ற மற்றும் திரிபுறாத பெயாவடிவுகளும் வினையெச்ச வடிவுகளும் தான் பின்னுருபுகளாகும். எடுத்துக்காட்டாக, தமிழ் பல இடப்பொருள் செயற்பாடுகளைக் குறிப்பிட,

இடத்தைக் குறிக்கும் பெயர்களைத் தான் பயன்படுத்துகின்றது. (எ.கா. இல், உள், முன், மேல், கீழ், அடியில்) ஒரு குறிப்பிட்ட சொல்லைப் பெயராகக் கருதுவதா, பின்னுருபாகக் கருதுவதா என்பதில் ஒருமித்த கருத்தில்லை. பின்னுருபுகளாக எடுத்தாளப்படும் பெயர்கள் எல்லாம் உருபனியல் அடிப்படையில் குறை உள்ளவை. அதாவது அவை எல்லா வேற்றுமை உருபுகளையும் எடுப்பதில்லை. பல பின்னுருபுகளாய் வரும் பெயர் வடிவுகள் தொடரியல் அடிப்படையில் குறைப்பாடுள்ளவை. அதாவது அவை வாக்கியத்தில் பெயர் வரும் எல்லா இடங்களிலும் வருவதில்லை. எல்லாப் பெயர்களைப் போலவும் அவற்றின் இலக்கணச் செயற்பாடுகள் வருவதில்லை. எடுத்துக்காட்டாக, நடு, இடை என்ற பெயர்கள் 'மையம்' என்ற பொருளில் இல் என்ற இடவேற்றுமை பின்னொட்டு எடுத்து நடுவில், இடையில் என பின்னுருபுகளாக மட்டும் வருகின்றன. ஆனால் அவை எழுவாயாகவோ, செயப்படுபொருளாகவோ, பயனிலையாகவோ வருவதில்லை. இப்பெயர் வடிவங்களில் மிகப் பெரும்பான்மையானவையாய் வரும் நெருங்கிய பெயர் மற்றும் வினை வடிவங்களின் குழுமம் பெயர்த் தொடருக்கப் பின்வந்து பின்னுருபுத் தொடராய் அமையும். பின்னுருபாய் வரும் பல பெயர், வினை வடிவங்கள் முறையே தங்கள் பெயர், வினை தொடரியல் இயல்புகளை இழந்து விடுகின்றன. பின்னுருபுகளை அவற்றின் வடிவ மற்றும் அவை எந்தப் பெயர்த் திரிபுக்குப் பிறகு வருகின்றன என்பதில் அடிப்படையில் வனைப்பாடு செய்யலாம். எடுத்துக்காட்டாக, இல் ஒட்டு எடுத்து வரும் நடுவில்,இடையில் என்பன – உக்கு வேற்றுமைக்குப் பின்னர் வரும். (எ.கா. அவர்களுக்கு நடுவில்,இடையில்) வினைவழிப் பின்னுருபுகளை இறந்தகால வினை எச்ச வடிவில் வருவன. (எ.கா. இல்லாமல்,அல்லாமல்) காலங்காட்டா வினையெச்ச வடிவில் வருவன. (எ.கா. தவிர, போல, விட) என வகைப்படுத்தலாம்.

பெயரடைகள்

ஆக்ஷர், லேமன், கோதண்டராமன் ஆகிய மூவருமே பெயரடையை ஒரு சொல் வகுப்பாகக் கொள்கின்றனர். பெயரடையை ஒரு சொல் வகுப்பாகக் கொள்வதில் மொழியியல் அறிஞர்களிடையே ஒருமித்த கருத்து இல்லை. பெயரடைக்கு ஒரு செயல்முறை வரையறை செய்வது எளிதானதல்ல. பெயரடை தொடரியல் அடிப்படையிலான ஒரு சொல் வகையாகும். பெயரடை, பெயர்த்தொடரில் தலைப்பெயருக்கு முன்னதாக அதன் அடையாக வரும் (எ.கா. பெரிய மரம்), வரையறு அடை (Determiner) பெயரடைக்கு முன் வரலாம். (எ.கா. இந்தப் பெரிய வீடு) பயனிலை இடத்தில் பெயரடை வருவதானால் அது மாற்றுப்பெயர் ஒட்டாக்கம் பெற்று வர வேண்டும்.(எ.கா. அந்த மாளிகை பெரியது) சொல் வகுப்புகளில் பெயரடை குறைச்சொல் எடுப்பதில்லை. பெயரடைகளைத் தனிநிலைப் பெயரடை (எ.கா.நல்ல, பெரிய, கெட்ட, சிறிய), கூட்டுநிலைப் பெயரடை மற்றும் ஆக்கப்பெயரடை (derived adjective) (எ.கா.

அழகான, உயரமான) என வகைப்படுத்தலாம். தனிநிலைப் பெயரடைகள் மரபிலக்கணத்தில் குறிப்புப் பெயரெச்சங்களாகக் கொள்ளப்படுகின்றன. பெயருக்கு பின் வந்து அவற்றைப் பெயரடைகளாகச் செயலாற்றச் செய்யும் ஆன, உள்ள, அற்ற, இல்லாத (எ.கா.அழகான, அழகற்ற, அழகில்லாத) என்ற பின்னுருபுகளைப் பெயரடையாக்கப் பின்னொட்டுகளாகக் கொள்வதா? அல்லது பெயரெச்சங்களாகக் கொள்வதா? என்பது இலக்கணப் பிரச்சனை. பெயரடைகளும் (தெரிநிலை) பெயரெச்சத் தொடர்களும் செயற்பாடு அடிப்படையில் பெயருக்கு அடையாய் வருவன (எ.கா. அந்த நல்ல பையன், அந்த படித்தப் பையன்) ஆனால் (தெரிநிலை) பெயரெச்சங்கள் உடன், பின், பிறகு, போது, முன், மட்டும், வரைக்கும் முதலான உருபுகளுடன் வினையடைத் தொடர்புகளை உருவாக்கும். (எ.கா. வந்தவுடன், வந்தபின், வரும்முன், கூடியமட்டும்) பெயரடைகள் (குறிப்புப் பெயரெச்சங்கள்) இவ்வாறு செயல்படுவதில்லை. (பரமசிவம் (1983:194)) பரமசிவம் மரபிலக்கணங்கள் பெயரெச்சங்கள் எனக் குறிப்பிடும் தெரிநிலைப் பெயரெச்சம் (எ.கா. பாடின பெண்) குறிப்புப் பெயரெச்சம (எ.கா.நல்ல பெண்), எதிர்மறைப் பெயரெச்சம் (எ.கா. படிக்காத பெண்) என்ற மூன்றையும் ஆன ஒட்டாக்காப் பெயரடைகளையும் (எ.கா.அழகான பெண.) பெயரடைகளாகக் கொண்டு அவற்றில் தெரிநிலைப் பெயரெச்சத்தையும், எதிர்மறைப் பெயரெச்சத்தையும் தொடர் என்று குறிப்பிட்டு ஒரு வகையாகவும், குறிப்புப் பெயரெச்சத்தையும் ஆன ஒட்டாக்கப் பெயரடையையும் தனிச்சொல்லாகக் கொண்டு மற்றொரு வகையாகவும் பிரிக்கிறார்.

வினையடைகள்

ஆஷர் (Asher, 1982:101-102) 'Operational Definition for Word Classes' என்ற தலைப்பின் கீழ் சொல் வகுப்புகளில் ஒன்றாக வினையடையைத் தராவிடிலும் சொல்லாக்க உருபனியலைப் பற்றிப் பேசுகையில் அவர் (Asher, 1982:199-205) விடையடைகளின் ஆக்கம் பற்றிக் குறிப்பிடுகிறார். வாக்கியத்தில் அவை இடம் பற்றிக் கூறுகையில் இடவாக்கியங்கள் (Locative Sentences) மற்றும் உள்ளமை வாக்கியங்கள் (existential Sentences) அல்லாத பிற வாக்கியங்களில் வினையடை பொதுவாக எழுவாய் மற்றும் அயல் செயப்படுபொருளைத் தொடர்ந்தோ நேர்ச் செயப்படுபொருளுக்கு முன்னரோ வரும் என்று குறிப்பிடுகிறார். ஒரே வாக்கியத்தில் வேறுபட்ட வினையடைகள் வந்தால் அவை வரும் நிரலைச் சரியாகக் கூறமுடியாது. பொதுவாக, கால வினையடைகள், இட வினையடைகளுக்கு முன்னர் வரும். இடவாக்கியங்கள் இவற்றில் வினையடை எழுவாய் முன்னர் வரும். கோதண்டராமனும், லேமனும் வினையடையைச் சொல் வகுப்பாகக் கொள்கின்றனர். வினையடைகளைத் தனிநிலை வினையடை (Simple adverbs) (எ.கா.நன்கு, உரைக்க) கூட்டுநிலை வினையடை அல்லது ஆக்க வினையடை (எ.கா. அழகாக, அழகாய்) எனப்பகுக்கலாம். திரிபுற்ற அல்லது

திரிபுறாத பல பெயர்ச்சொல் மற்றும் வினைச்சொல் வடிவங்களை தொடரியல் அடிப்படையில் நெருங்கிய ஒரு குழு வினையடையாக மீள் ஆய்வு செய்யலாம். பின்னுருபுகளாக வரும் பல சொல் வடிவுகள் வினையடைகளாகவும் வரலாம். (எ.கா. முன்னர், முன்னால், பிறகு) திரிபுறாத ஆனால் குறைச்சொல் ஏ -ஐ விருப்பாக ஏற்றுவரும். பெயர்ச்சொல் வடிவுகள் (எ.கா. அப்பாலே, உள்ளே, அப்புறம்) இடவேற்றுமைக்காகத் திரிபுற்ற பெயர்ச்சொல் வடிவுகள் (எ.கா. பார்த்து, பிந்தி, முந்தி) என்பன வினையடைகளாகவும், பின்னுருபுகளாகவும் செயல்பட வல்லன. பெயரல்லாத வேறுசில சொல்வடிவுகளும் வினையடையாகச் செயல்பட வல்லன. எடுத்துக்காட்டாகச் சுட்டு மற்றும் வினாச் சுட்டுரபுகள் கொண்ட அப்படி, எப்படி, அப்போது, எப்போது, இங்கு, எங்கு, இன்று, என்று என்பனவற்றையும், பொதுவாக வினையடைகளாகக் கொள்ளலாம். சில இடங்களில் இவை வினையடையல்லாது பெயர்போல் செயற்பாடு செய்யலாம். (எ.கா. இன்று நல்ல நாள்) பல திரிபுற்ற மற்றும் திரிபுறாத பெயர் மற்றும் வினை வடிவங்கள் தொடரியல் அடிப்படையில் வாக்கியநிலை வினையடைகள் அல்லது வினையடை இணைப்பான்கள் என மீள் ஆய்வு செய்யப்படலாம். இவை வாக்கியத்தின் முன்னிடத்தில் வந்து இரண்டு வாக்கியங்களின் பொருண்மை உறவைக் கூறி நிற்கின்றன. எ.கா. அவன் நன்றாய்ப் படித்தான், ஆனால் வெற்றிபெறவில்லை. அப்படியும், ஆனால், இருந்தாலும், எதற்கும் என்பன வாக்கியநிலை வினையடைகளாகும்.

பெயர்ச்சொல்லுடன் ஆகு என்ற வினைச் சொல்லின் காலமிலா வினையெச்ச வடிவான ஆக அல்லது ஆய் சேர்ந்து கிடைக்கும் சொல் வடிவங்களை ஆக்ஷரும், கோதண்டராமனும் வினையடைகளாகக் கொள்கின்றனர். ஆனால் லேமன் ஆக,ஆய் என்பது வினையடையாக்கம் செய்வது மட்டுமன்றி பிற செயற்பாடுகளிலும் வருவதைச் சுட்டிக்காட்டி ஆக,ஆய் என்பதை கட்டுநிலைப் பின்னுருபு அல்லது குறைச்சொல் என்று ஆயலாம் என்கிறார்.

பொருண்மை அடிப்படையில் வினையடைகளைப் பின்வருமாறு பகுக்கலாம்:

1. கால வினையடைகள் (எ.கா.இன்று, நாளை)
2. இட வினையடைகள் (எ.கா.இங்கு, அங்கு)
3. முறைமை வினையடைகள் (எ.கா.மெல்ல, நன்கு)
4. செயல்தொடர் வினையடைகள் (எ.கா.அடிக்கடி, மறுபடியும்)
5. அளவு வினையடைகள்

ஆனால் லேமனும், ஆஷ்ரும் அளவு வினையடைகளை ஒரு தனி வகுப்பாகக் கொள்கின்றனர். பரமசிவம்(1983) வினையெச்சங்களையும் ஒருவகை வனையடையாகக் கொள்கின்றார். வினையெச்சங்கள் காலக்குறிப்பினைக் கொண்டு விளங்குவதால் இவற்றை வினையடைகளாக எல்லோரும் கொள்வதில்லை.

அளவயடைகள்

ஆஷரும், லேமனும் அளவயடைகளைச் சொல் வகுப்பாகக் கொள்கின்றனர். அளவடைகளுக்கு உருபனியல் அடிப்படையில் ஒட்டு மொத்தமான வரையறை தர இயலாது. நெருங்கிய ஒரு குழுமச் சொல்வடிவுகள் (எ.கா. சற்று, முழு, கொஞ்சம், இத்தனை, அத்தனை, இவ்வளவு, அவ்வளவு, எவ்வளவு, நிரம்ப, நிறைய, மிகவும்) பெயர் அடையாக வர வல்லன. ஆனால் இவை வருமிடங்கள் ஒன்றானதல்ல. முழு என்ற அளவடை எப்பொழுதும் தலைப்புப் பெயருக்கு முன் அதனை அடுத்து வரும். (எ.கா.சற்று நேரம்), பெயருடன் ஆக,ஆன, இல்லாத, உடைய சேர்ந்த சொல் வடிவங்களின் முன்னர் மிகவும் வரும். (எ.கா. மிகவும் அழகாக, மிகவும் அழகான, மிகவும் அழகில்லாத) பிற அளவடைகள் பெயரடைரூபெயர் என்ற தொடரின் முன்வரும். (எ.கா.கொஞ்சம்,பெரிய,பாத்திரம்) முழு, இத்தனை, அத்தனை, எத்தனை, மிகவும், தவிர்த்த பிற அளவடைகள் வினையின் அடையாக வினை முன்னிடத்தில் வரும். எ.கா. சற்று மறந்தான், நிறைய சாப்பிட்டான்). மிகவும் என்பன பெயரடையின் அடையாக வந்து பெயரடைத் தொடரில் காணப்படும். (எ.கா கொஞ்சம் சின்னக் கை) கோதண்டராமன் மிகவும் என்பதை பெயர், வினை, பெயரடை, வினையடை ஆகிய நான்கினுக்கு முன் அடையாக வரும். சொற்களை வல்லடை என்ற தனிச்சொல் வகுப்பில் அடக்குகின்றார். (எ.கா. மிகவும் கறுப்பு, மிகவும் நல்ல, மிகவும் வேகமாக, மிகவும் பிடிக்கும்).

வரையறை அடைகள்

பெயருக்குப் பின்னர் வரும் இந்த, அந்த என்ற சுட்டுப்பெயரடைகள் சரையறை அடைகளாகும். ஆவை சுட்டப்படும் பொருள் அல்லது குறிப்புப்பொருள் (referent) பேசுபவர்களிடமிருந்து எவ்வளவு அண்மைப்பட்டு அல்லது சேய்மைபட்டு இருக்கின்றது என்பதைக் குறிக்கவல்லன. (எ.கா இந்தப் பையன், அந்தப் பெண்) கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதியில் இவை சுட்டுப் பெயரடைகள் என்று குறிப்பிடப்படுள்ளன.

இணைப்பான்கள்

கோதண்டராமனும், லேமனும் இணைப்பான்களைச் சொல்வகுப்பாகக் கொள்கின்றனர். "இரண்டு சொற்றொடர்களை அல்லது சொற்களை இணைப்பதாகவும் ஒரு முழுத்தொடரைத் தன்னோடு இணைப்பதாகவும் அமைந்த சொற்கள் இணைப்பான்கள்" எனக் கோதண்டராமன் விளக்குகின்றார். தமிழில் பொதுவாக குறைச்சொற்கள் (clitics) இருப்பினும் பலவினை வடிவங்களை தொடரியல் அடிப்படையில் இணைப்புச சொற்களாகக் கொள்ளலாம். (எ.கா. ஆனால், அல்லது, இல்லையென்றால்) இணைப்புச் சொற்கள் இருபெயரடைகளையோ, பெயர்களையோ இணைக்கப் பயன்படும். (எ.கா. பழைய ஆனால்

நல்ல புத்தகம், ரேக்ஷ்மா இல்லையென்றால் கலா வருவாள். கிரியாவின் தற்காலத் தமிழகராதி இவற்றை இணைப்பு இடைச்சொற்கள் என்று குறிப்பிடுகின்றது.

குறைச்சொற்கள்

குறைச்சொற்கள் பற்றி ஆரோக்கியநாதன் (1982) விரிவாக ஆராய்ந்துள்ளார். கோதண்டராமன் குறைச்சொற்களைத துணைமைச்சொல் வகுப்பாகச் சார்புநிலைக்கிளவி வகையின் கீழ் **'ஒட்டு'** என்று குறிப்பிட்டு வகைப்படுத்துகிறார். அவர் "தொடரில் பல்வேறு இடங்களில் நின்று தொடர்ப் பொருளில் நிலைமாற்றம் செய்யும் மற்றும் பெயர் விகுதியாகவோ, வினைவிகுதியாகவோ" கொள்ள இயலாத தான், உம், ஆ முதலான கிளவிகளை ஒட்டுகள் என்று குறிப்பிடுகின்றார். லேமன் குறைச் சொற்களைப் பற்றிப் பேசும் போது உருபனியல் அடிப்படையில் அல்லாமல் இலக்கணத்தின் ஒலியனியல் விதிகளின்படி சொறகளுள் ஒட்டப்பெறும் கட்டு வடிவங்கள் குறைச்சொற்கள் எனக் குறிப்பிடுகின்றனர். அவை திரிபு அல்லது ஆக்கக் கூறுகளின் பிரதிபலிப்பல்ல. திரிபு அல்லது ஆக்கப் பின்னொட்டுகளைப் போல் அவை ஒரு குறிப்பிட்ட சொல் வகுப்பை மட்டும் சார்ந்து வருவன அல்ல. தமிழில் எல்லாக் குறைச்சொற்களும் பின் குறைச் சொற்களாகும். பெயரடை அல்லது பெயரின் அடையாய் செயல்படும் பெயர்கள் தவிர பிற தொடரியல் வகைப்பாடுகளின் தலைமைச் சொற்களுடன் குறைச் சொற்கள் ஒட்டப்பெறலாம். ஒரு குறிப்பிட்ட ஒலியனியல் வடிவம் கொண்ட குறைச்சொல்லுக்குப் பல பொருண்மைச் செயல்பாடுகள் இருக்கும். உம், ஓ, ஏ, தான், ஆ என்பன குறைச்சொல் வகுப்பின் பாற்படும். ஆக்ஷர் ஏ, தான் ஆகிய தேற்றச் குறிகளையும் (emphatic markers) ஆக என்ற வினாக் குறியையும் (interrogative marker) உம், ஓ ஆகிய இணைப்பான்களையும் பலதரப்பட்ட முக்கியமான வாக்கிய உறுப்புகளுடன் ஒட்டத் தகுந்த மாற்றம் கொள்ளாத கட்டு வடிவங்கள் எனக் குறிப்பிட்டு அவற்றை இடைச்சொற்கள் (Particles) என்ற சொல் வகுப்பில் அடக்குகின்றார். கிரியாவின் தற்காலத் தமிழகராதி இவற்றை இடைச்சொற்கள் எனக் குறிப்பிடுகின்றது.

வினைசார் கிளவி

கோதண்டராமன் வந்தபின், வந்தபோது, வந்த உடன் ஆகியவற்றில் காணும் பின், போது, உடன் ஆகிய கிளவிகளை வினைசார் கிளவி என துணைச்சொல் வகையாகச் சார்புநிலைக் கிளவி வகையின் கீழ் தருகின்றார். "பெயர்த்தன்மை திரிந்து பெயரெச்சத்தின் பின் விகுதி போல நின்று வினை எச்சங்களை அமைக்கும் கிளவிகளும், வினைசார் கிளவிகள்" என்று குறிப்பிடுகின்றார். செய்யத்தக்க, செய்யக்கூடிய, செய்ய வேண்டிய முதலான கூட்டுநிலைப் பெயரெச்சஆகளில் காணும் தக்க, கூடிய, வேண்டிய என்பனவற்றையும் வினைசார் கிளவிகளாகக் கொள்ளத்தகும் என்கிறார். கிரியாவின் தற்காலத் தமிழகராதி

இயற்றையும் இடைச்சொல் என்றே குறிப்பிடுகின்றது. வேற்றுமைப் பின்னொட்டுகளையும் (எ.கா. ஐ, ஆல், கு) அன், ஆன், அள், ஆள் முதலான பால் இட ஒட்டுகளையும் ஆன, ஆக என வரும் பெயரடை, வினையடை விகுதிகளையும் இந்த வகுப்பில் அடக்குகின்றார்.

சாரியை அல்லது நிரப்பி

"தமக்கென்று அகராதிப் பொருளோ, இலக்கணப் பொருளோ இல்லாதனவாய் சொற்கள் ஒன்றோடொன்று சேரும்போது சொற்சேர்க்கைக்கு இசைவாக நின்று சொல் அமைப்புக்கு உதவுவனவாய் அமைந்த கிளவிகள் சாரியை அல்லது நிரப்பி என்று பெயர்பெறும்" என்று கோதண்டராமன் இச்சொல் வகுப்பை வரையறை விளக்கம் செய்கிறார். வீட்டடினை, ஊரினை என்பனவற்றிலுள்ள இனை என்பதையும், வந்தனன், சென்றனன என்பனவற்றிலுள்ள அன் என்பதையும் சாரியை கிளவிக்கு எடுத்துக்காட்டுகளாகக் காட்டுகின்றார்.

சொல் வகுப்புகளைப் பொறுத்தமட்டில் இலக்கணம் எழுதுபவர் அவர்கள் கைக்கொள்ளும் இலக்கண நெறிகளை அடிப்படையாகக் கொண்டு சொற்களைச் சொல் வகுப்புகளாகப் பாகுபாடு செய்து இலக்கண விளக்கம் தருகின்றனர். ஒரு வகைப் பாகுபாட்டில் இருக்கும் சொல்வகுப்பு மற்றொரு வகைப்பாகுபாட்டில் இல்லாதிருப்பது இக்காரணத்தால் தான். இக்காரணத்தால் தான் ஒருவகைப் பாகுபாட்டில் உள்வகுப்பாக இருக்கும் சொல் வகுப்பு மற்றொரு வகைப் பாகுபாட்டில் தனி வகுப்பாகக் கொள்ளப் படுகிறது; ஒரு சொல் வகுப்பு மற்றொரு வகைப்பாகுபாட்டில் ஒர் உயர்மட்டச் சொல்வகுப்பின் கீழ் அடக்கப்படுகின்றது. கோதண்டராமன் சொல்வகைகளை அல்லது இலக்கணக் கூறுகளை இரு வகைகளாகத் தலைமை இலக்கணக் கூறு, துணைமை இலக்கணக்கூறு என்று பிரித்து விடுவதால் அவர் வகைபாட்டின் படி பின்னொட்டுகளையும் (விகுதிகளையும்) சாரியை அல்லது நிரப்பி என்பவைகளையும் சார்நிலைக் கிளவி வகையின்கீழ் தருவது பொருந்தும். பெயரடை, வினையடை என்பவைகளைச் சொல் வகுப்புகளாகக் கொள்வதில் தகுந்த இலக்கண நியாயங்கள் இருக்கின்றன. ஆனால் (தெரிநிலை) பெயரெச்சய்களையும் (தொpநிலை) வினையெச்சங்களையும் முறையே பெயரடை, வினையடை என்ற வகுப்புகளில் அடக்குவதில் பிரச்சினை வருகிறது. எச்சங்களை அடை வகுப்புகளாகக் கொள்வதனால் காலத்துடன் கூடிய எச்ச ஒட்டுகளைச் சொல்லாக்க ஒட்டுகளாகக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால் திரிபு ஒட்டுகளான கால எச்ச ஒட்டுகளை ஆக்க ஒட்டுகளாக எடுக்க வேண்டி வரும். திரிபு ஒட்டுகள் பெற்ற சொல் வடிவுகளைச் சொல் வகுப்பு மாறாத திரிபு வகுப்புகளாகக் கொள்வது தான் உருபனியால் அடிப்படைக்கு உகந்தது. எனவே திரிபு ஒட்டுகள் பெற்ற எச்ச வடிவுகளை

வினை வகுப்பின் கீழ் வினைகளின் திரிபு வடிவங்களாகக் கொள்வது தான் நல்லது. அகராதிச் சொல் வகுப்புகளின் அடிப்படைக்கும் இது ஏற்புடையது. கோதண்டராமன் குறிப்பிடும் உணர்ச்சி வெடிப்புச் சொல், உணர்வு குறிப்புச் சொல், விளிப்புச்சொல், உணர்வு குறிப்புச் சொல், விளிப்புச்சொல், விளி ஏற்புச் சொல் என்பன தற்காலத் தமிழுக்குத் தேவைப்படும் சொல் வகுப்புகளாகும். பரமசிவத்தின் (1983:98) பின்வரும் கூற்று சிந்தனைக்குரியது. "சொற்களைப் பாகுபாடு செய்வதற்குரிய திட்டவட்டமான அடிப்படைக் கொள்கை இன்னும் உருவாகவில்லை. இலக்கண நூலாரின் முறையைப் பின்பற்றினாலும் சில விதிவிலக்குகள் அமையும். விதிவிலக்குகளே தோன்றாத வகையில் சொற்களைப் பாகுபாடு செய்வதற்கேற்ற அடிப்படைக் கொள்கை இன்னும் உருவாகவில்லை. இனியேனும் உருவாகுமா என்பது ஐயப்பாடாகவே இருக்கிறது. "சொல்" (word) என்பதைச் சரியாக வரையறை செய்வது பிரச்சனைக்கூரியதாய் இருப்பது போல் சொற்களை வகுப்புகளாகச் சரியாகப் பாகுபடுத்துவதும் பிரச்சனைக்குரியதாய் இருப்பதில் ஆச்சரியமில்லை. பயன்படுத்தும் வகையில் அல்லது தேவைக்குத் தகுந்த வகையில் சொல் வகுப்புகளை வரையறை செய்து சொல் பாகுபாடு செய்யலாம்.

சொல்வகைப்பாடின் பயன்பாடு

மொழி ஆய்வில் சொல் வகைப்பாட்டின் (Parts of Speech) முக்கியத்துவம் என்னவென்றால் இது சொல்லைப் பற்றியும் அவற்றை அடுத்து வரும் சொற்கள் பற்றியும் செய்திகளை விரிவாகத் தருகின்றது. இவை முக்கிய வகைப்பாடுகளுக்கு (வினை-பெயர்) மட்டுமின்றி பல நுட்பமான வேறுபாடுகளுக்கும் உண்மையாகும். எடுத்துக்காட்டாக, இந்த அடையாளக் குழுமங்களில் உடைமை மாற்றுப் பெயர்களுக்கும் (என்னுடைய, உன்னுடைய, அவனுடைய, அவருடைய, அதனுடைய) மூவிடப் பெயர்களுக்கும் (நான், நீ, அவன், அவள் அது) வேறுபாட்டைக் காட்டுகின்றன. ஒரு சொல் உடைமை மாற்றுப் பெயரா அல்லது மூவிடப் பெயரா என்பதை அறிந்து கொண்டு எம்மாதிரியான சொற்கள் அதன் பக்கத்தில் வர இயலும் என்பதைக் கூற இயலும். இதைப் பேச்சுத் தெரிந்து கொள்ளுதல்(Speech Recognition) என்பதற்கான மொழி மாதிரியில் (Language Model) பயன்படுத்தலாம்.. சொல் வகைப்பாடு தகவல் மீட்டலுக்கான (Information Retrieval) வேர்ச்சொல்லைக் கண்டுபிடித்தலில் (Stemming) பயன்படுகிறது.

சொல் வகைப்பாட்டை (Part of Speech) அறிவதால் அவை எந்த உருபனியல் ஒட்டுக்களை ஏற்கும் என்பதை அறியலாம். அவை பனுவலில் இருந்து பெயர்களையோ முக்கியச் சொற்களையோ அறிய உதவுவதால் தகவல் மீட்டல் பயன்பாட்டிற்குப் பயன்படும்,

தானியங்கிச் சொல் வகைப்பாட்டு அடையாளப்படுத்திகள், சொல் மயக்க நீக்கி வழியமைப்பு முறை (Word-Sense disambiguation Algorithms), சொல் வகைப்பாட்டு அடையாளப்படுத்திகள் (Parts of Speech Taggers=POS Taggers), வகுப்பு அடிப்படையிலான N grams (Class Based N-grams) போன்ற முன்னேறிய பேச்சு அறிதல் (Advanced Speech Recognition-(ASR) மொழி மாதிரிகளில் பயன்படுகின்றது. சொல் வகைப்பாடுகள் தகவல் பிரித்தெடுப்பு பயன்பாடுகளிலும் (Information Extraction Applications) பயன்படுகிறது.

நோக்கீட்டு நூல்கள்

அகத்தியலிங்கம், ச. 1979. மொழியியல்; சொல்லியல் 1; பெயரியல், அண்ணாமலைநகர்: அனைத்திந்திய தமிழ் மொழியியற் கழகம்.

அகத்தியலிங்கம், ச. 1982. மொழியியல்; சொல்லியல் 2; வினையியல், அண்ணாமலைநகர்: அனைத்திந்திய தமிழ் மொழியியற் கழகம்.

இராசேந்திரன், ச. 2004. தமிழில் சொல்லாக்கம். தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

இராசேந்திரன், ச. 2021. பொதுமொழியியல். Language in India www.languageinindia.com ISSN 1930-2940 Vol. 21:1 January 2021

கருணாகரன், கி. ஷ வ. ஜெயா. 1997. மொழியியல். குமரன் பதிப்பகம் சென்னை

கோதண்டராமன், பொன். பொது மொழியியல். பூம்பொழில் சென்னை.

பரமசிவன்.கு. 1984. இக்கால மொழியியல் அறிமுகம். சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம். சென்னை.

முத்துச்சண்முகம். 1989. இக்கால மொழியியல் மதுரை பப்ளிஷிங் உறவுஸ் மதுரை. மூன்றாம் பதிப்பு.